நவமணி

அ.மா.சாமி

19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்

(108 படங்கள்)

19 ஆம் நூற்றாண்டுத்
தமிழ் இதழ்கள்

காலத்தின் கட்டாயம்

கோப்பாய் சிவம் எழுதிய "இலங்கையில் தமிழ்ப்பத்திரிகைகள் - சஞ்சிகைகள்" என்ற நூலுக்கு (1985) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தமிழ் துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி (முனைவர்) அ. சண்முகதாசன் அளித்துள்ள அணிந்துரையின் முதல் பத்தியை எடுத்துக்காட்டுவது தமிழ் நாட்டுக்கும் பொருத்தமாக இருக்கும். அது -

> "நூல்கள் எரிந்து போகின்ற ஒரு காலக் கட்டத்தில் வாழுகின்ற நாம் நம்முடைய பல்வேறு நிலைப்பட்ட வரலாற்றுத் தரவுகளையும் செய்திகளையும் ஆவணப்படுத்திவைப்பது மிக முக்கியமான கடமையாகும். எம்முடைய நாட்டிலே தோன்றிய தமிழ்ப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவைப் பற்றி எமது எதிர்காலத்துச் சந்ததியினர் அறிந்துகொள்ள அவற்றை நூலகங்களிலே சேகரித்து வைக்க வேண்டும். அவற்றைச் சேகரித்து வைக்க முடியாவிட்டாலும், அவற்றைப் பற்றிய தகவல்களை ஒன்றுதிரட்டி சேர்ப்பதாவது பயன்தரும்".

19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்

ஆதித்தனார் மாணவன்
அ.மா. சாமி

நவமணி பதிப்பகம்,
12, 2ஆவது பெருஞ்சாலை,
நகர வளர்ச்சிக் குடியிருப்பு,
சென்னை – 600 004.
தொலைபேசி : 74161

◆ முதல் பதிப்பு : 1.11.1992 ("தினத்தந்தி" பொன்விழா நாள்).

19th CENTURY TAMIL JOURNALS

A.Ma. SAMY

Disciple of Si.Pa. ADITHANAR

விலை ரூ. 75

வெளி நாடுகள் US. $ 12

NAVAMANI PATHIPPAKAM
MADRAS - 600 004
S. INDIA
Phone : 74161

TYPESETTING: DVR TYPESETTERS, MADRAS.



பொன்மனச் செம்மல்
என் மனத் தெய்வம்
எல்லாருக்கும் பாரி
எனக்கு சடையப்ப வாரி
வணக்கத்துக்குரிய
எங்கள் அய்யா
பா. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு
இந்நூலைக்
காணிக்கையாகப்
படைக்கிறேன்!

அ.மா. சாமி

பொருளடக்கம்

1. விளக்கேற்றி வைக்கிறேன்!

தமிழ் இதழியல் வரலாற்றை எழுதும் முதல் முயற்சியாகத் "தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி" என்ற நூலை 1987 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டேன். அதன் பின்னும் கிடைத்த விவரங்களைச் சேகரித்துக் கொண்டே வந்தேன்.

19 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ் இதழ்களைப் பார்த்ததும், "அடேயப்பா! இத்தனை இதழ்களா!" என்று வியந்தேன். அந்த இதழ்களின் பெயர்களை மட்டும் தொகுத்து, எங்கள் "ராணி முத்து"வில் 1989 ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய இரு இதழ்களிலும் தொடர்ந்து வெளியிட்டேன்.

பிறகும் என் தாகம் அடங்கவில்லை. புதிது புதிதாகக் கிடைத்த விவரங்கள் என் ஆர்வத்துக்கு நீராக - நிறைந்த உரமாக அமைந்தன. ஐநூறுக்கு மேற்பட்ட இதழ்களைப் பற்றிய விவரங்கள் கிடைத்தன. அந்த விவரங்களைத் தொகுத்து இந்நூலை வெளியிடுகிறேன். ஆனால், இது வெறும் பெயர்ப்பட்டியல் அல்ல. வரலாற்றுச் சுருக்கம். பல புதிய வரலாறுகளுக்கு முன்னோடியாக அமையக்கூடியது. பழைய தவறுகளும் திருத்தப்பட்டுள்ளன.

1812 இல் வெளிவந்த "மாசத்தினச் சரிதை"தான் தமிழில் முதல் இதழ் என்றும், 1887 இல் வெளிவந்த "லலிதப் பிரசோனதயா"தான் தமிழில் முதல் நாளிதழ் என்றும், "தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி" என்ற எனது நூலில் தகுந்த ஆதாரங்களுடன் நான் எழுதியிருந்தேன். இருந்தும், அதன்பின் வந்த நூல்களில்கூட 1831 இல் வந்த "தமிழ் மேகசின்"தான் முதல் தமிழ் இதழ் என்றும், 1900 இல் நாளிதழாக மாறிய "சுதேசமித்திரன்"தான் முதல் தமிழ் நாளிதழ் என்றும் எழுதியிருக்கிறார்கள். "தமிழ் மேகசி"னுக்கு முன்பே "அரசாங்க வர்த்தமானி" (1802), "மாசத்தினச் சரிதை" (1812), "திருச்சபை இதழ்" (1815), "புதுவை அரசிதழ்" (1823), "சுஜநரஞ்சனி" (1829) ஆகிய ஐந்து இதழ்கள் வந்துள்ளன. "சுதேசமித்திர"னுக்கு முன்பாகவும் பல நாளிதழ்கள் வெளிவந்திருக்கின்றன. எனவே இனி நூல் எழுதுகிறவர்களாவது இந்த உண்மையை உணர்ந்து எழுதுவார்களாக.

முதல் தமிழ் இதழ் தோன்றி 180 ஆண்டு ஆகிவிட்டது. ஆனால், தமிழ் இதழியல் வரலாறு இன்னும் முழுமையாக எழுதப்படவில்லை. முறையாக எழுதுவதற்கு யாரும் முயற்சி செய்யக்கூட இல்லை. தமிழுக்கு என்று தனியே ஒரு பல்கலைக்கழகம் இருந்தும், அவர்கள்கூட முயற்சி எடுக்கவில்லை. இரு நூற்றாண்டு ஆகியும் தமிழ் இதழியல் வரலாறு இன்றும் (1992) இருண்டு கிடக்கிறது. அந்த இருட்டறையில் நான் ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்றி வைக்கிறேன். இருட்டறைக்குள் செல்லுகிறவர்கள் தட்டுத்தடுமாறாமல் இருக்கவும், எது எது எங்கே இருக்கிறது என்பதைக் காணவும் இது பயன்படும் என்று கருதுகிறேன். அரைத்த மாவையே அரைத்துக்கொண்டு இராமல், ஆய்வு செய்து தமிழ் இதழியல் வரலாற்றை எழுத முன் வருவோர்க்கு இந்நூல் ஒளியாக - வழியாக அமையும் என்று நம்புகிறேன்.

"பொன் மலர் நாற்றமுடைத்து" என்பதுபோல, இந்நூலுக்குச் சிறப்பூட்டப் பழைய இதழ்களின் படங்களையும் சேர்த்திருக்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழக நூலகர் முனைவர் பி.ஏ.மோகனராசன் அவர்கள் இந்நூல் எழுத எனக்கு மிகவும் உதவினார். நான் கேட்ட நூல்களையெல்லாம் உடனுக்குடன் கொடுத்ததுடன், 'இந்தெந்த நூல்களில் விவரம் கிடைக்கக்கூடும்' என்று வழிகாட்டவும் செய்தார். வரலாற்று ஆதாரங்களை இப்பொழுது பயன்படுத்திப் புதுப்பிக்காவிட்டால் அழிந்துபோய்விடுமே என்ற ஆற்றாமையுடன், பயன்படுத்திக்கொள்ள முன்வந்த எனக்கு உதவி, ஊக்கப்படுத்தினார்.

சென்னை மறைமலையடிகள் நூலக இயக்குநர் இரா. முத்துக்குமார சாமி அவர்கள் அந்நூலகத்தில் உள்ள, தொட்டாலே அப்பளம் போல நொறுங்கிவிடக்கூடிய பழைமையான இதழ்களைப் பார்வையிட எனக்கு அன்புடன் வசதி செய்துகொடுத்ததுடன், தேவையான இதழ்களை நகல் எடுத்துக்கொள்ள அனுமதியும் அளித்தார். அந்நூலக நூலகர்கள் இராம கிருட்டினன், கீதஜெயந்தி, சுதாமதி ஆகியோர் மிகுந்த ஆர்வத்துடன் இதழ் களையும், நூல்களையும் எனக்கு எடுத்துக் கொடுத்து உதவினார்கள்.

குளித்தலை இளமுருகு பொற்செல்வி தம்பதிகள் அவர்களின் தமிழ் கா.சு.நூல் நிலையத்தை எனக்குத் திறந்துவிட்டு விட்டதுடன், தேவையான இதழ்களைத் தாங்களே நகல் எடுத்தும் கொடுத்தார்கள். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பண்பாளர்களான அவர்கள், எனக்கு விருந்தும் அளித்துத் திக்குமுக்காடச் செய்துவிட்டார்கள்.

ஒரு நாள் காலையில் கோட்டையூர் ரோசா முத்தையா அவர்களின் முன்னே போய் திடீர் என்று நின்றேன். முதுமையும், உடல்நலக் குறைவும், தான் அரும்பாடு பட்டுச் சேர்த்து வைத்திருக்கும் விலையில்லாக் கரு வூலத்தைத் தனக்குப் பின்னே காக்க யாரும் இல்லையே என்ற ஏக்கமும் அவரைத் தாக்கிக்கொண்டிருந்த வேளையிலும், நான் வந்திருக்கும் காரணத்தைச் சொன்னதும், புத்துணர்ச்சி பெற்று, காலை முதல் இரவு வரை நான் கேட்டதற்கும் மேலேயே ஏராளமான இதழ்களையும் நூல்களையும் எடுத்துக் கொடுத்து உதவியதுடன், இதழ்கள் பற்றித் தனது நினைவில் இருந்த செய்திகளையும் தெரிவித்தார். "முதுமை என்பது உடலுக்குத்தான்; உள்ளத்துக்கு அல்ல" என்று பெரிய அய்யா ஆதித்தனார் அவர்கள் சொல்லும் உண்மையை அன்று ரோசா முத்தையா அவர்களிடம் நேரில் காண முடிந்தது. கரும்பு தின்னக் கூலி கொடுப்பதுபோல, அங்கே வருகிறவர்களுக்கு எல்லாம் சாப்பாடும் வழங்குகிறார். செட்டிநாடு விருந்தோம்பல் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமா! நான் அங்கு சென்ற ஒவ்வொரு முறையும் இதே ஒத்துழைப்புக் கிடைத்தது. எனக்குத் தேவையான நூல்களையும், இதழ்களையும் நகல் எடுத்துக்கொள்ள அனுமதித்தார். அதற்கு நேரமில்லாத பொழுது, "சென்னைக்கே எடுத்துப் போங்களேன்" என்று கொடுத்தனுப்பினார். இந்நூல் வெளிவரும் வேளையில் அந்த ஊருணி இல்லையே என்று நெஞ்சம் கனக்கிறது.

உவமைக்கவிஞர் சுரதா அவர்கள் ஒரு கலைக்களஞ்சியம். ஏராளமான இதழ்களையும், ஏடுகளையும் சேகரித்து வைத்திருக்கிறார். அவற்றைப் பார்க்கவும், தேவையானவற்றை நகல் எடுத்துக் கொள்ளவும்

பரிவுடன் அனுமதி தந்தார்.

கன்னிமாரா நூலகம், தமிழ்த்தாத்தா உ.வே.சா. நூலகம், அடையாறு பிரம்மஞானசபை நூலகம், சென்னை நூலகச் சங்கம், சென்னை இலக்கியச் சங்கம், அண்ணா அறிவாலய நூலகம் முதலிய இடங்களுக்கு நண்பர் கவிஞர் ஏறு மாணிக்கவாசகம் அவர்கள் சென்று, குறிப்புகளும் இதழ்களும் கொண்டுவந்து உதவினார்.

சென்னை நூலகச் சங்க நினைவுமலரை (1940) அச்சங்கத் தலைவி திருமதி.சுசிலா குமார் அவர்கள் என் பார்வைக்குக் கொடுத்ததுடன், எனக்குத் தேவையான கட்டுரையை நகல் எடுத்தும் தந்தார்.

சென்னையில் உள்ள அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் காப்பாச்சியாளர் எஸ்.சவுந்தரபாண்டியன் அவர்கள் அந்நூலகத்தில் உள்ள ஏடுகளையும் இதழ்களையும் பார்வையிடவும், நகல் எடுத்துக்கொள்ளவும் வசதி செய்து கொடுத்தார். கன்னிமாரா நூலகர் ஆவுடையப்பனும் இதுபோன்று உதவினார்.

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்திலும், அதன் நூலகத்திலும் உள்ள ஆவணங்கள், இதழ்களைப் பார்வையிடவும், நகல் எடுத்துக்கொள்ளவும் அதன் ஆணையர் வி.சந்திரலேகா இ.ஆ.ப. அவர்கள் அன்புடன் அனுமதி அளித்தார். நூலகர் ப.ப.இராமசாமி அவர்கள், ஆராய்ச்சி அதிகாரி விஜயேந்திரன் அவர்கள் என் தேவையறிந்து அனைத்து ஆவணங்களையும், இதழ்களையும் எடுத்துக் கொடுத்து உதவினார்கள்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள பழமையான இதழ்களைப் பார்வையிடவும், நகல் எடுத்துக்கொள்ளவும் துணைவேந்தர் முனைவர் சி.பாலசுப்பிரமணியம் அவர்கள் அனுமதி அளித்தார். நூலகர் பத்மநாபன் அவர்கள் உடன் இருந்து எனக்கு எல்லா உதவியும் செய்தார்.

இலண்டன் அருங்காட்சியகத்தில் தமிழ்நாட்டில் காணக்கிடைக்காத தமிழ் இதழ்கள் பல உள்ளன. அவற்றைப் பெற சென்னைப் பல்கலைக்கழக நூலகர் முனைவர் மோகனராசன் அவர்கள் எனக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்தார். இலண்டனில் உள்ள பிரிட்டிசு நூலகத் துணை இயக்குநர் ஜி.டபிள்யூ. ஷா அவர்கள், திராவிட மொழிகள் பிரிவுக் காப்பாளர் மீரா டவுசன் அவர்கள் நகல்கள் பெற உதவினார்கள்.

நண்பர்கள் பாரிசு ஜமால் அவர்கள், ப.சண்முகசுந்தரம் அவர்கள் பாரிசில் இருந்து அரிய தகவல்களைப் பெருமுயற்சி எடுத்துத் திரட்டி அனுப்பியதுடன், அங்குள்ள நூலகங்களில் இருந்து தமிழ் இதழ்களை நகல் எடுத்து அனுப்பியும் உதவினார்கள்.

புதுவை ரோமன் ரோலந்து நூலகத்தில் உள்ள இதழ்களைப் பார்க்கவும், படி எடுத்துக் கொள்ளவும் நூலகர் அன்பழகன் அவர்கள் உதவினார்.

புதுவை நண்பர்கள் மு.பழனியப்பன் அவர்களும், தசரதன் (பாரிசு) அவர்களும் புதுவை இதழ்களைப் பெறத் துணை நின்றார்கள். இனிய நண்பர் பழனியப்பன் அவர்கள் இப்பொழுது இல்லையே என்பது மிகவும் வருத்தத்தைத் தருகிறது.

பெங்களூரில் உள்ள ஒன்றிய கிறித்துவக் குருகுலத்தில் பழமையான

இதழ்கள் பல இருக்கின்றன. அவற்றைப் பார்வையிட 5.3.1992 அன்று அங்கு போயிருந்தேன். அன்று அங்கு மெல்லிய மாரடைப்பு ஏற்பட்டு, அங்கேயே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். உடன் இருந்த நண்பர் பா.சு.மணி ("தினச்சுடர்"), என் அண்ணன் மகன் விஜயகுமார் இருவரும் மிகவும் பரிவோடும் பாசத்தோடும் உதவினார்கள். ஒரு திங்கள் அங்கு இருந்துவிட்டு, சென்னைக்குத் திரும்பி, இங்கும் இரண்டு திங்கள் ஓய்வெடுக்க வேண்டியதாகிவிட்டது. தொடர்ந்து அலையமுடியாத நிலை. கவிஞர் மாணிக்கவாசகம் அவர்கள் அலைந்து உதவினார்.

நெல்லையில் இருந்து வெளிவரும் "பாலியர் நேசன்" முதல் இதழ் எவ்வளவோ முயற்சித்தும் பெற முடியவில்லை. அண்ணாச்சி வழக்கறிஞர் ஐ.உத்திர பாண்டியன் அவர்கள் நேரில் சென்று வாங்கி அனுப்பினார். "பிரசங்கக் குறிப்புகள்", "மாதர் மகிழ்ச்சி", "சுவிசேச பிரபல்ய வர்த்தமானி" ஆகிய இதழ்களையும் (இப்பொழுது (1992) வந்து கொண்டிருப்பவை) அனுப்பி வைத்தார்.

ஏ. ரெங்கசாமி அவர்களின் "இந்தியச் செய்தி இதழ்கள்" என்ற ஆங்கில நூல் எங்கும் கிடைக்கவில்லை. பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் கிடைப்பது அறிந்து, அங்குள்ள என் தமையனார் அ.மாரிச்சாமி அவர் களுக்கு எழுதினேன். அவர் அந்நூலைத் தட்டச்சு செய்தும், அழகாகக் கட்டிடம் செய்தும் அனுப்பி வைத்தார்.

இதழியல் ஆர்வம் மிகுந்த திருச்சி இளைஞர் ம.சரவணன் அவர்கள் அவரிடமுள்ள பழமையான இதழ்களையும், ஏடுகளையும் நகல் எடுத்துக் கொடுத்தார். நாகர்கோவில் "மாலைமுரசு" செய்தியாளர் டி. ரெங்க நாதன் அவர்கள் "திருவாங்கூர் அபிமானி", "தேசோபகாரி" பற்றிய விவரங்களைக் கொடுத்து உதவினார். அவ்விதழ்களைப் படியெடுத்தும் அனுப்பி வைத்தார். நண்பர்கள் மா.சு.சம்பந்தம் அவர்களும், பெ.சு.மணி அவர்களும் தேனீபோலச் சுற்றித் திரிந்து அரிதில் திரட்டியச் செய்தி களை எனக்குக் கொடுத்து உதவினார்கள்.

அன்புத் தம்பி முனைவர் ஆங்காங் அ.அய்யூப் அவர்கள் எனது முந்தைய நூலான "தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி"யை வெளியிட்டு தமிழுலகம் அறியச் செய்தது போன்றே இந்நூலையும் வெளியிடுகிறார். இதில் அவருக்கு ஆதாயம் எதுவும் இல்லை. ஒரு தமிழ்ப்பணியாகவே இதனைச் செய்கிறார். இலண்டன் அருங்காட்சியகத்திலும், ஆக்சுபோர்டு நூலகத்திலும் நகல்கள் பெற பிரிட்டீசு பவுன் தேவைப்பட்டது. ஆங்காங்கில் இருந்து தேவையான பவுன்களை இலண்டனுக்கு அனுப்பி வைத்தும் முனைவர் அய்யூப் உதவினார். கொழும்பு தேசிய சுவடிக் கூடத்திலுள்ள தமிழ் இதழ்களின் நகல்களைப் பெற்றுக்கொடுத்தவரும் தம்பி அய்யூப்தான்.

இந்நூலுக்குச் சிறப்பான வெளியீட்டு விழா ஒன்றையும் அவர் நடத்தினார். விழா ஏற்பாடுகளை உடன்பிறவாச் சகோதரர் ஏ.நடராசன் அவர்கள் (இயக்குநர், சென்னைத் தொலைக்காட்சி) பொறுப்பேற்று சிறப்பாகச் செய்து கொடுத்தார். தம்பி அய்யூப்பின் தந்தையார், நீடூர் பெரியவர் - நீடூர் பஞ்சாயத்துத் தலைவர் அப்துல் மஜீது அவர்கள் முதல் படியை வாங்கிச் சிறப்பித்தார்.

விளக்கு ஏற்றத் தீக்குச்சிகளாகப் பயன்பட்ட இவர்கள் எல்லாருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை விரைவில் எழுதி முடிக்க வேண்டும் என்பதில் என்னைவிட என் மனைவிக்கு அதிக ஆர்வம். இனி தமிழ் இதழியல் வரலாற்றை எழுதப்போகும் எல்லாருக்கும் இந்நூல் முதல் நூலாக விளங்கும் என்பதில் அவர்களுக்குக் கொள்ளைப் பெருமை. இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, தமிழின் சிறப்பையும், என்பெயரையும் உலகம் முழுக்க அறியச் செய்ய வேண்டும் என்ற பேராசையும் உண்டு!!

வணக்கத்துக்குரிய எங்கள் அய்யா பா.சிவந்தி ஆதித்தன் அவர்கள், கம்பருக்கு ஒரு சடையப்ப வள்ளல் போன்று, எனக்கு எப்பொழுதும் எல்லா வகையிலும் உதவி செய்து வருகிறார்கள். இந்த விளக்கை ஏற்றி வைக்க அவர்கள் அளித்த ஆக்கமும் ஊக்கமும் எனக்கு உறுதுணையாக அமைந்தன. இந்த விளக்குக்கு எண்ணெயும் திரியும் அவர்களே! எனக்கு விளக்கும் ஒளியும் அவர்களே! அய்யா அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

என் தாய்வீடான "தினத்தந்தி" பொன்விழாக் கொண்டாடும் நாளில் **(1.11.1992)** *இந்நூல் வெளிவருவதில் எனக்கு இரட்டை மகிழ்ச்சி!*

1.11.1992. அ.மா.சாமி.

சென்னை.

குறிப்பு : பெரும்பாலானவர்கள் முன்னுரைகளைப் படிப்பதில்லை. எனவே, எனது முன்னுரையை முதல் அதிகாரமாக எழுதிவிட்டேன்!

2. ஒளி பரவட்டும்!

இந்தியா ஒரு தேசம் அல்ல; ஒரு துணைக் கண்டம்.

"ஒரு மொழி - ஒரு நாடு" என்பதுதான் இயற்கையின் கோட்பாடு. ஆனால், இந்தியாவிலோ எண்ணற்ற மொழிகள். ஒவ்வொரு மொழிக்காரர்களுக்கும் ஒரு வரலாறு, தனியான பண்பாடு.

எனவே, இந்திய வரலாற்றை - இந்த வரலாற்றுக்குரிய மக்களைப் பற்றி, அம்மக்களின் மொழி, பண்பாடு, பழக்கங்கள் பற்றி ஒரே நூலாக எழுதிவிட முடியாது. எழுதினால், அது முழுமையாக இருக்காது. நுனிப்புல் மேய்ந்த கதையாகத்தான் இருக்கும். ஒவ்வொரு மொழிக் கூட்டத்தாரைப் பற்றியும் தனித்தனியே எழுதினால்தான் அது சரியான வரலாறாக அமையும்.

இந்திய இதழியல் வரலாற்றுக்கும் இது பொருந்தும்.

இதுவரை எழுதப்பட்டுள்ள இந்திய இதழியல் வரலாற்று நூற்களைப் பார்த்தாலே இந்த உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளத் தெளிவாகத் தெரியவரும். பொது வரலாற்றைப் பெரிதாக எழுதிவிட்டு, "தமிழ் இதழ்கள்", "தெலுங்கு இதழ்கள்", "மலையாள இதழ்கள்" என்று தனித்தனியே தொட்டுக் காட்டுவார்கள். அதில் ஆழமும் இருக்காது - அகலமும் இருக்காது. ஆய்வும் இருக்காது. மொழிவழியாக எழுதினால் தான் முழுமையாக இருக்கும்.

தமிழ்நாட்டில் தொடங்கவேண்டும்

இந்திய இதழியல் வரலாற்றைக் கல்கத்தாவில் இருந்து தொடங்கு வார்கள். அதற்குக் காரணம், அன்று கல்கத்தாதான் இந்தியாவின் தலைநகராக விளங்கியது. அங்கேதான் இந்தியாவின் முதல் இதழும் முளைவிட்டது. அங்கே வாழ்ந்த ஆங்கிலேயர்தான் முதன் முதல் இந்திய இதழியல் வரலாற்றை எழுதி வைத்தார்கள். இந்தியர்களும் இன்றுவரை அதை அப்படியே பின்பற்றிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, தாங்களாகச் சொந்தமாக ஓர் இதழியல் வரலாறு எழுதவேயில்லை!

உண்மையில் இந்திய இதழியல் வரலாறு, தமிழ்நாட்டில் இருந்து எழுதப்பட வேண்டும்.

அச்சு இதழ்கள் தோன்றி வளர அச்சகங்களே அடிப்படை. இந்திய மொழிகளில் முதன் முதல் அச்சுக்கண்ட மொழி, தமிழே!

இந்தியாவில் அச்சுக்கலையை தோற்றுவித்தவர்கள் கிறித்துவர்கள். அக்கிறித்துவர்களுக்கு இந்தியாவுடன் ஏற்பட்ட முதல் தொடர்பு, மேற்குக் கடற்கரையில்தான். இன்று 'கேரளா' என்று கூறப்படும் மேற்குக் கடற்கரை அன்று தமிழ்நாடாகவே (சேர நாடு) திகழ்ந்தது.

ஏசுநாதரின் பன்னிரு மாணவர்களில் ஒருவரான புனித தோமா, மேற்குக் கடற்கரைக்கு வந்து ஏசுவின் அறிவுரைகளைப் பரப்பினார் என்பது வரலாறு. அவரைப் பற்றிய பாடல் ஒன்றில் "திருச்சிலுவையி லிருந்து தெய்வக் குருதி எண்ணெய் பெற்று, இந்தியாவின் காரிருளை மாற்றி, அதனைச் சுடர் ஒளிமயமாக்கினீர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



1578-ஆம் ஆண்டில் கொல்லத்தில் அச்சிடப்பட்ட 16 பக்கம் உள்ள "தம்பிரான் வணக்கம்" நூலின் முகப்புப் படம்.

1498 இல் வாசுகோடகாமா சேர நாட்டில் உள்ள கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். 1550 இல் அம்பலக்காட்டில் திருச்சபை அமைக்கப் பட்டது. அங்கு பயன்படுத்த 1554இல் இலிச்பனில் (போர்த்துக்கல்) "லூசே தமிழ் வினா விடை" என்ற 38 பக்கத் தமிழ் நூல் அச்சாயிற்று. தமிழில் அச்சேறிய முதல் நூல், இதுதான். (ஆனால், தமிழ் எழுத்து களைப் பயன்படுத்தவில்லை. 'அம்மா' என்பதை AMMA என்று உரோமன் எழுத்துகளில் அச்சிட்டார்கள்!)

இந்தியாவின் முதல் அச்சகம் 1556இல் கோவாவில் அமைந்தது. அது எதிர்பாராதது. போர்த்துக்கல்லில் இருந்து அச்சுப் பொறிகளுடன் சில திருத்தந்தையர் அபிசீனியாவுக்குக் கப்பலில் சென்று கொண்டிருந் தார்கள். அதற்குள், கிறித்துவர்களுக்கு ஆதரவாக இருந்த அபிசீனியா மன்னர் எதிர்ப்பாக மாறவே, கப்பல் கோவாவுக்குத் திருப்பப் பட்டது. அச்சுப்பொறியும் அங்கேயே இறக்கப்பட்டது. இச்செய்தி அம்பலக் காட்டில் இருந்த தந்தையருக்குத் தெரியவர, அவர்கள் கேட்டுக் கொண்டபடி, 1577இல் "தம்பிரான் வணக்கம்" என்ற தமிழ் நூல் கோவாவில் அச்சிடப்பட்டது.

1577இல் கொல்லத்துக்கு ஓர் அச்சகம் வந்து சேர்ந்தது. அங்கு 1578 ஆம் ஆண்டு மீண்டும் "தம்பிரான் வணக்கம்" அச்சாயிற்று. பாதுகாப்பை முன்னிட்டு அந்த அச்சகம் கொச்சிக்கு மாற்றப்பட்டது. இங்கு 1579இல் மீண்டும் "கிரீசித்தியானி வணக்கம்," என்ற பெயரில் 'தம்பிரான் வணக்கம்' அச்சேறியது. தமிழ் மொழி அச்சுக் கண்டதால், தமிழ் இனத்தவருக்கு உலகிலே பெரும் புகழ் உண்டாகிறது என்று இந்நூலின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பின்பு, அண்டிறீக் பணியாற்றிய புன்னைக் காயலில் ஓர் அச்சகம் அமைக்கப்பட்டது. "அடியார் வரலாறு" (1586) "பாவசங்கீர்த்தனம்" முதலிய நூல்கள் இங்கு அச்சேறின.

"மலபார்", "மலபாரிகள்"

இங்கே ஒரு விளக்கம் தெரிவிப்பது நல்லது.

இந்நூற்கள் "மலபார்" மொழியில் அச்சிடப்பட்டவை என்ற குறிப்பு இந்நூற்களில் இருக்கிறது. இதைக்கொண்டு, இந்நூற்கள் மலையாள மொழியில் அச்சிடப்பட்டவை என்ற தவறான கருத்து ஒரு காலத்தில் இருந்தது. ஆனால், இந்நூற்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு இவை தமிழ் நூற்களே என்பது உறுதியாகிவிட்டது.

அரேபியர் வழியாகத்தான் தமிழ்நாட்டுடன் ஐரோப்பியருக்குத் தொடர்பு ஏற்பட்டது. மலைவளம் நிறைந்த சேர நாட்டை அரேபியர் தங்கள் மொழியில் "மலபார்" (மலைநாடு) என்றார்கள்.[1] (அரபு, பாரசீக மொழிகளில் "பார்" என்றால் "நாடு" என்று பொருள்). அதை பின்பற்றி ஐரோப்பியரும் தமிழை "மலபார்" மொழி என்றும், தமிழர்களை "மலபாரி"கள் என்றும் குறிப்பிட்டார்கள். சேரநாட்டில் தமிழ் — வடமொழிக்கலப்பால் உண்டான புதிய மொழியை "மலையாள மொழி" என்று 19 ஆம் நூற்றாண்டு முதல்தான் ஐரோப்பியர் குறிப்பிடத் தொடங்கினார்கள்.

---

1. "மலபார் கெசட்டர்"

16 ஆம் நூற்றாண்டில் சேர நாட்டில் தமிழ்தான் மக்கள் மொழியாக வழங்கியது. இதற்கு "லூசே தமிழ் வினா விடை", "தம்பிரான் வணக்கம்" ஆகிய நூல்கள் எடுத்துக்காட்டு. மேற்குக் கடற்கரைக்கு வந்த புனித சேவியர், 1541இல் சேசு சபைக்கு ஓர் அஞ்சல் எழுதினார். அதில் அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். "நான் இலத்தீனில் பேசுகிறேன். மக்கள் தமிழில் பேசுகிறார்கள். இதனால் நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியவில்லை". [2]

பேராசிரியர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களின் குறிப்பு ஒன்றை இங்கே எடுத்துக்காட்டுவதும் பொருத்தமாக இருக்கும். அது -

"முனைவர் பி.ஜே.தாமஸ் என்பவர் 'கேரளத்தில் கிறித்துவ சாகித்தியம்' என்னும் நூலை மலையாளத்தில் எழுதியிருக்கிறார். அந்நூலில் 'கிறித்துவ வணக்கம்' என்னும் நூலைப்பற்றி எழுதியிருப்பதாவது - "பாரிசு நகரத்தில் உலகப் புகழ்பெற்ற சோர்போன் பல்கலைக்கழக நூலகத்தில் கி.பி. 1579 இல் மலையாள தேசத்தில் அச்சிட்ட ஒரு வேத உபதேச நூல் இருப்பதாக அறிந்தேன். உடனே, அந்நூலின் ஒன்றிரண்டு பக்கங்களை புகைப்படம் எடுத்து அனுப்பும்படி தந்தை ஒஸ்தன் வழியாக ஏற்பாடு செய்தேன். அப்படம் வந்து சேர்ந்ததும், அதைப் பார்த்தபோது, அந்நூல் தமிழ் எழுத்துகளால் அச்சிடப்பட்டது என்று அறிந்தேன். சேர மண்டலத்திலும், சோழ மண்டலத்திலும் பயன்படும் பொருட்டு அச்சிடப்பட்டதாக அதில் எழுதப்பட்டிருந்தது கொண்டு, அக்காலத்தில் இங்கு (கேரளாவில்) தமிழ் மொழிக்கு முதன்மையளிக்கப்பட்டிருந்தது என்பது தெரிந்தது". [3]

1578இல் கொல்லத்தில் அச்சான "தம்பிரான் வணக்கம்" நூல் அமெரிக்காவில் ஆர்வர்டு பல்கலைக்கழக நூலகத்தில் இருக்கிறது. அதன் படம் "ஆர்வர்டு பல்கலைக்கழக சிற்றிதழ்" என்ற இதழில் 1952இல் (தொகுதி - 6, பகுதி - 2) வெளிவந்திருக்கிறது. இதுதான் அந்நூல் தமிழ் தான் என்பதை முதலில் உறுதிப்படுத்தியது. "தம்பிரான் வணக்கம்", "கிரீசித்தியானி வணக்கம்" ஆகிய இரு நூல்களையும் "வணக்கம்" என்ற ஒரே பெயரில் அருள் தந்தை முனைவர் ச.இராசமாணிக்கம் அவர்கள் விளக்கக் குறிப்புகளுடன் 1963இல் மீண்டும் வெளியிட்டுள்ளார்.

1586இல் "அடியார் வணக்கம்" என்ற தமிழ் நூல் தூத்துக்குடியை அடுத்த புன்னைக்காயலில் அச்சாயிற்று. "தமிழ் அச்சுத்தந்தை" என்று போற்றப்படும் திருத்தந்தை அண்டிறீக் எழுதி அச்சிட்டத் தமிழ் நூல், இது. இந்நூலுக்கு அண்டிறீக் எழுதியுள்ள முன்னுரையின் முதல் வரியே, "முத்துக்குளித்துறையில் வாழும் மலபார் கிறித்துவ மக்களுக்காக அச்சிடப்படுவதால், இந்நூல் முழுவதும் தமிழ் என்று அவர்கள் சொல்லும் மலபார் மொழியில் அச்சிடப்பட்டிருக்கிறது" என்றுதான் தொடங்குகிறது.

முன்னுரையின் முடிவில் "யேசு சபை அண்டிறீக் அண்டிறீக் அடிகளார் மலபார் மொழியில் மொழி பெயர்த்த சில புனிதர்களின்

---

2. "தமிழுக்கு ஐரோப்பிய அறிஞர்களின் கொடை" முனைவர் க.மீனாட்சி சுந்தரம்.

3. "கிறிஸ்துவமும் தமிழும்".

வாழ்க்கை வரலாறுகளைக் கொண்ட இந்நூலில் கீழ்க்கண்ட புனிதர்களின் வரலாறுகள் வருகின்றன" என்ற குறிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

"அடியார் வணக்கம்" என்ற இத்தமிழ் நூலைப் போப்பாண்டவரின் நூலகத்தில் 1954இல் திருத்தந்தை தனி நாயக அடிகள் கண்டெடுத்தார். 668 பக்கமுள்ள இந்நூலை அருள்தந்தை முனைவர். ச.இராசமாணிக்கம் அவர்கள் 1967இல் மீண்டும் அச்சிட்டு வெளியிட்டார். "மலபார்" என்பது தமிழையே குறிக்கும் என்பதற்கு இந்நூலும் சான்று ஆகும்.

தாள்–மை

தமிழ்மொழி அச்சுக் கண்டது மட்டுமல்ல; இந்தியாவில் முதன் முதல் அச்செழுத்து வார்ப்புத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது, தமிழ் நாட்டில்தான். இந்தியாவின் முதல் தாள் ஆலை நிறுவப்பட்டதும், தமிழ் நாட்டில்தான். முதன் முதலில் அச்சுமை தயாரிக்கப்பட்டதும், தமிழ் நாட்டில்தான்!

1577 இல் கோவாவில் "தம்பிரான் வணக்கம்" என்ற நூல் அச்சிட சுவான் கொன்சால்வசு என்ற இசுபானியர்[1] தமிழ் எழுத்துகளை வார்த்தார். ஆம், 1577 ஆம் ஆண்டிலேயே தமிழ் அச்செழுத்துகள் வார்க்கப்பட்டன. "தமிழ் கிறித்துவ நூல்கள்" என்ற பட்டியலில் (1901) ஜான் மர்டாக் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.[2] பிரிட்டீசு நூலக (இலண்டன்) துணை இயக்குநர் (கீழ்நாட்டுத் தொகுப்பு) கிரகாம் சாவும் இதை உறுதிப்படுத்துகிறார். "நியூரெவியூ" இதழில் "இந்தியாவில் முதல் அச்சகம்" என்ற கட்டுரையில், "கோவாவில் 1577இல் சுவான் கொன்சால்வசு என்ற இசுபானியர் தமிழ் எழுத்துகளை முதன் முதலில் வார்த்தார். அதில் 'தம்பிரான் வணக்கம்' அச்சிடப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.[3]

மீண்டும் 1578இல் கொல்லத்தில் "தம்பிரான் வணக்கம்" அச்சான பொழுது சான் பரியா என்ற தந்தை தமிழ் எழுத்துகளை புதிதாக வார்த்தார். பரியா அச்சுக்களை செதுக்கி, வார்த்த விவரத்தை தந்தை சூசா 1582லேயே எழுதி வைத்திருக்கிறார். "தந்தை பரியா தமிழ் எழுத்துகளை செதுக்கி வார்த்தார்" என்று தந்தை சூசா குறிப்பிட்டுள்ளார்.[4]

கொல்லத்தில் அச்சான "தம்பிரான் வணக்கம்" நூலில் "கோவையில் உண்டாக்கிய எழுத்து", "கொல்லத்தில் உண்டாக்கிய எழுத்து" என்று எழுத்துகளின் அடங்கல் கொடுக்கப்பட்டுள்ளது. செதுக்கிய எழுத்து என்றால், இப்படி அடங்கல் கொடுக்க வேண்டியது இல்லை. கல்லிலும், கனி மரத்திலும் எழுத்துகளை செதுக்கும் வழக்கம் ஆயிரம் ஆயிரம்


---

1. இவர் ஒரு கருமான். அரசு வேலையை விட்டுவிட்டு திருச்சபையில் சேர்ந்தார். இவர் காலமானபொழுது "தமிழ் அச்சுகளை சிறந்த முறையில் வார்த்துக் கொடுத்தவர்" என்று பாராட்டப்பெற்றார். (ரோமன் கத்தோலிக்க சேசுசபை ஆவணம்–31, கோவா)

2. ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு மலர் – 1981. டி.பாக்கியமுத்து கட்டுரை.

3. தொகுதி – 2, பக்கம் – 323 (1935 அக்டோபர்), எழுதியவர் – லியோ புரோசெர்பியோ.

4. "இந்தியாவில் தொடக்ககால அச்சும் பதிப்பும்" – முனைவர் பி.ஏ. மோகனராசன்.


Esta letra, se fez, e Goa: no ano de lxxvii.

Letra Tamul: feita e Coulã: ano de lxxviii.

Soli DEO honor, & gloria. Amen.

1578இல் கொல்லத்தில் அச்சிடப்பட்ட நூலின் இறுதி (16ஆம்) பக்கத்தில் அந்நூலில் பயன்படுத்திய எழுத்துகளின் அடங்கல் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதுதான் இது. 1577இல் கோவாவில் வார்க்கப்பட்ட எழுத்துகள் "கோவையில் உண்டாக்கின எழுத்து" என்ற தலைப்பின் கீழ் அகர வரிசையில் ஏழு வரிகளில் தொகுத்துக் கொடுக்கப்பட்டு உள்ளன. அதன்கீழ் 1578இல் "கொல்லத்தில் உண்டாக்கின எழுத்து" என்ற தலைப்பின் கீழ் 12 வரிகளில் கொல்லத்தில் வார்த்த எழுத்துகள் தொகுத்துத் தரப்பட்டு இருக்கின்றன. கோவாவில் உனடாக்கின எழுத்துகளில் "ஈ" என்பது "கீ" போன்று மேற்கொம்பு சுழிக்கப்பட்டு இருப்பது காண்க.

ஆண்டு காலமாகத் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. மேலும், செதுக்கிய எழுத்துகள் ஒன்றுபோல இருப்பதற்கு இல்லை. எழுத்துகள் வார்க்கப் பட்டதுதான் புதுமை. எனவேதான், இந்த அடங்கல் கொடுக்கப்பட் டிருக்கிறது. வார்க்கப்பட்டதால்தான் "உண்டாக்கிய எழுத்துகள்" என்று குறிப்பிட்டார்கள்.

தமிழ் அச்சக வரலாற்று முன்னோடியான மா.சு.சம்பந்தம் அவர்களும் "கோவாவிலும் கொல்லத்திலும் தமிழ் அச்சு எழுத்துகள் உலோகத்தில் வார்க்கப்பட்டன" என்று உறுதி செய்கிறார்.[1]

தமிழில் முதன் முதலில் அச்சான "தம்பிரான் வணக்கம்" "கிரீசித்தியானி வணக்கம்", "அடியார் வரலாறு" முதலிய நூல்களை புகைப்பட நகல் எடுத்து மீண்டும் அச்சிட்டு வெளியிட்டுள்ள அருள் தந்தை ச.இராசமாணிக்கம் அவர்கள், "அடியார் வரலாறு" முன்னுரை யில், "1577லேயே தமிழுக்கு அச்செழுத்துகள் வந்துவிட்டன. அவை உலோகத்தால் ஆனவை" என்று குறிப்பிட்டுள்ளார். அச்சு வார்க்கா மல் 668 பக்கமுள்ள "அடியார் வரலாறு" போன்ற பெரிய நூல்களை எப்படி அச்சிட முடியும்?

அடுத்த அச்சு வார்ப்படத் தொழிற்சாலையும் தமிழ்நாட்டில்தான் அமைந்தது. அமைத்தவர், சீகன் பால்கு என்ற கிறித்துவத் துறவி. "நற்செய்தி"யை (பைபிள்) முதன் முதலில் தமிழ்ப்படுத்தியவர் இவர். அதை அச்சிட எழுத்துகளும், தாளும் செர்மனியில் இருந்து வந்தன.[2] அந்த எழுத்துகள் பெரிதாக இருந்ததால், 1713இல் தரங்கம்பாடி யில் புதிய தமிழ் எழுத்துகள் வார்க்கப்பட்டன. தாள் தீர்ந்துவிட்டதால், 1715இல் தாள் ஆலை ஒன்றையும் சீகன் பால்கு அமைத்தார். இதுதான் இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் தாள் ஆலை.[3] அதே காலத்தில் அச்சுமைத் தொழிற்சாலை ஒன்றையும் அவர் நிறுவினார். இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் அச்சுமை ஆலையும் இதுவே!

முதல் இதழும் தமிழே!

ஓர் இதழ் வெளியிட அச்சகம் வேண்டும், அச்சு எழுத்துகள் வேண்டும், தாள் வேண்டும். மை வேண்டும். இந்தியாவில் அச்சுக் கண்ட முதல் மொழி தமிழே. அச்சேறிய முதல் இந்திய மொழி நூல், தமிழே. இந்திய மொழிகளில் தமிழில்தான் முதன் முதலில் அச்செழுத்துகள் வார்க்கப் பட்டன. தமிழ்நாட்டில்தான் முதல் தாள் ஆலை நிறுவப்பட்டது. தமிழ் நாட்டில்தான் முதல் அச்சுமை ஆலையும் அமைக்கப்பட்டது. இவ்விதம் அச்சுத்துறை முழுவதிலும் முதன்மையாக விளங்கிய தமிழ் மொழியில்

1. "அச்சும் பதிப்பும்"

2. செர்மனியில் உள்ள, ஆலே நகரில் ஏற்கனவே தமிழ் எழுத்துகள் வார்க்கப்பட்டு, 1710இல் "விசுவாசப் பிரமாணம்", "நம்பிக்கை அங்கீகாரம்" ஆகிய நூல்கள் அச்சிடப்பட்டு, தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டன. அதற்கு முன்பே 1678இல் ஆம்ஸ்டர்டாமில் "தமிழ்நாட்டுத் தாவரங்கள்" என்ற நூல் அச்சிடப்பட்டது. அதில் செடி கொடிகளின் பெயர்கள் தமிழில் அச்சிடப்பட்டன. அதற்காக அங்கு தமிழ் எழுத்துகள் வார்க்கப்பட்டன.

3. இந்திய அச்சு - பதிப்பு வரலாறு (முதல் தொகுதி) பி.எசு . கேசவன். "தரங்கை திருச்சபை வரலாறு" - பாஸ்டர் ஜே.எப்.பங்கர் - ஆங்கிலம் - 1842. மறுபதிப்பு 1906.

தான் முதல் இந்திய மொழி இதழ் வெளிவந்திருந்தால் ஆச்சரியப் படுவதற்கு இல்லையல்லவா? அதுதான் உண்மையுங்கூட!

"மாசத் தினச் சரிதை" என்ற தமிழ் இதழ் 1812 ஆம் ஆண்டு வெளி வந்தது. இந்திய மொழியில் வந்த முதல் இதழ் இதுவே. ஞானப்பிரகாசம் என்ற தமிழர் இந்த இதழை நடத்தினார்.

ஆனால், வரலாற்று ஆசிரியர்கள் 1816இல் வங்காளத்தில் "வங்காள கெசட்டு" நடத்திய கங்காதரப் பட்டாச்சாரியாதான் இதழ் நடத்திய முதல் இந்தியர் என்று எழுதி வைத்திருக்கிறார்கள்!

அதுமட்டுமல்ல. 1818இல் வங்காளத்தில் "திக்தர்சன்" என்ற இதழ் வெளிவந்தது. அதில் ஆங்கிலம் - வங்காளம் ஆகிய இரு மொழிகள் இடம்பெற்றன. இந்திய மொழி ஓர் இதழில் இடம் பெற்றது இதுவே முதல் முறை என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.[1] உண்மை என்னவென்றால், 1812 ஆம் ஆண்டிலேயே தமிழ் முழுமையான இதழ்மொழி ஆகிவிட்டது!

அதற்கும் முன்பேகூட இதழ்களில் தமிழ் இடம் பெறத் தொடங்கி விட்டது. சென்னையில் 1792 இல் "சென்னை கெசட்டு" என்ற ஆங்கில இதழ் தொடங்கப்பட்டது. அதன் 1796 ஆம் ஆண்டு இதழ் ஒன்றில் "அரசாங்கத்தின் விருப்பத்தின்படி ஏராளமான செலவில் தமிழ் எழுத்துகள் வார்த்திருக்கிறோம். தமிழிலும் விளம்பரம் வெளியிடத் தயாராக இருக்கிறோம்" என்று அறிவிப்பு வெளியிட்டார்கள்.[2] 1802இல் இலங்கை அரசிதழில் "அரசாங்க வர்த்தமானி" என்ற தனிப் பெயருடன் தமிழ் இடம் பெற்றது. 1812இல் "மாசத் தினச் சரிதை" என்ற முழுமையான முதல் தமிழ் இதழே வெளிவந்துவிட்டது. "சென்னை கூரியர்" என்ற ஆங்கில இதழின் 7.12.1813 வெளியீட்டில் முத்துக்குளிப்புப் பற்றி இலங்கை அரசு தமிழில் கொடுத்த விளம்பரம் வெளிவந்தது.[3] எனவே இதழ் மொழியான முதல் இந்திய மொழி இன்பத்தமிழே என்பது உறுதி.

அதுமட்டுமா? வங்காளத்தில் உள்ள செராம்பூரில்தான்[4] முதன் முதலில் அச்செழுத்துகள் வார்க்கப்பட்டன; அங்கேதான் முதல் தாள் ஆலை - மை ஆலை அமைக்கப்பட்டன என்றும் வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். உண்மை என்னவென்றால், செராம்பூரில் அச்சகம் தொடங்கப்பட்டதே 1800 ஆம் ஆண்டில்தான்!

உண்மைகள் இப்படி இருக்க, வங்காளம் முதலிடம் பெற்றது எப்படி?

இந்திய இதழியல் வரலாற்றை முதன் முதலில் எழுதியவர்கள் கல்கத்தாக்காரர்களே. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளை அவர்கள் அறிந்து கொள்ள அந்நாளில் எவ்வித செய்தித் தொடர்பும் இல்லை. நாமும் அவர்களுக்குத் தெரிவிக்கத் தவறிவிட்டோம். "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை" என்ற பாரதியார் பாட்டின் முழுப்பொருளும் இப்பொழுதுதான் நமக்கு உறைக்கிறது!

---

1. இந்திய இதழ் வரலாறு - ஏ.பி.சி. வெளியீடு, 1959.

2. "இந்தியாவில் தொடக்கால அச்சும் பதிப்பும்" - முனைவர் பி.ஏ.மோகன ராசன்.

3. தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி - அ.மா.சாமி.

4. சிறீ இராம பட்டினம்

இருட்டடிப்பு!

அன்றைக்கு வரலாறு எழுதியவர்களுக்குத்தான் தமிழ்நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள் எட்டவில்லை; இன்றைக்கு எழுதுகிறவர்களாவது தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளைச் சேர்த்து எழுதலாம் அல்லவா?

எழுதலாம்தான். ஆனால், யாருமே சொந்தமாக எழுதவில்லையே! ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டதைத்தான் இவர்கள் மீண்டும் எழுதினார்கள். இவர்கள் முன்னோர் மொழியைப் .பொன்னேபோலப் போற்றினார்களே அல்லாமல், ஆய்வு நோக்குடன் எழுதவில்லை.

எஸ்.நடராசன் எழுதிய "இந்திய இதழ்களின் வரலாறு" என்ற நூலை ஆவலுடன் படித்தேன். ஏமாற்றம்தான் எஞ்சியது! முழுக்க முழுக்க ஆங்கில இதழ்களைப் பற்றித்தான் எழுதியிருக்கிறார். வங்காள இதழ்களைப் பற்றியும் சொல்லுகிறார். ஆனால், தமிழைக் காணோம்!

முனைவர் நாடிக் கிருட்டிணமூர்த்தி அவர்கள் முதன் முறையாக ஆய்வு செய்து, புதிய இதழியல் வரலாற்று நூலை ("இந்திய இதழியல்") எழுதினார். தொடக்க காலத் தமிழ் இதழ்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மா.இரா. இளங்கோவன் அவர்களும் இத்துறையில் உழைத்துப் புதிய உண்மைகளை வெளிக்கொண்டு வந்தார். அவர்களுக்குப் பின்பு இந்திய இதழியல் வரலாற்றை எழுதியவர்கள்கூட தமிழுக்கு உரிய பங்கு அளிக்கவில்லை. ஏன், "தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி" நூல் 1987இல் வெளிவந்த பின்பு எழுதப்பட்ட வரலாறுகளில்கூடத் தமிழ் இதழ்களின் பங்கு தகுந்தபடி இடம்பெறவில்லை.

1989இல் ரெங்கசாமி பார்த்தசாரதி அவர்கள் "இந்தியாவில் இதழியல்" என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார். நானூறு பக்கமுள்ள அந்நூலில் தமிழ் இதழியலுக்கு வெறும் எட்டுப் பக்கமே ஒதுக்கியிருக்கிறார். அதன் முதல் பக்கம், "மற்ற இந்திய மொழிகள் பலவற்றுடன் ஒப்பிடும் பொழுது, தமிழில் இதழியல் மெதுவாக வளர்ந்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழில் அதிக செய்தித்தாள் இல்லை" என்று தொடங்குகிறது! உண்மை என்னவென்றால், இந்திய மொழிகளில் தமிழில்தான் முதல் இதழ் தோன்றியது. அது அன்றைக்கு உரிய வேகத்துடன் வளர்ச்சி அடைந்து, 19 ஆம் நூற்றாண்டில் மட்டுமே ஐநூறுக்கு மேற்பட்ட தமிழ் இதழ்கள் வெளிவந்தன. வேறு எந்த இந்திய மொழியிலாவது இக்காலகட்டத்தில் இவ்வளவு இதழ்கள் வெளிவந்துள்ளனவா? விரலை மடக்கட்டுமே!

"இந்திய இதழ் தணிக்கைக் குழுவின்" சென்னை வட்டாரப் பிரிவினர் 1959இல் சென்னையில் "இந்திய இதழ்களின் வரலாறு" என்ற பொருட்காட்சியை நடத்தினார்கள். அதையொட்டி ஒரு மலர் வெளியிட்டார்கள். அந்த மலரில் இந்திய இதழ்களின் வளர்ச்சி பற்றிய கட்டுரைகள் உள்ளன. "முதல் முளை" என்பது முதல் கட்டுரை. அதில் சொல்லுகிறார்கள் – "1818 – 1850 ஆண்டுகளுக்கு இடையில் அநேக தமிழ்-தெலுங்கு இதழ்கள் சென்னையில் வெளிவந்தன. அவற்றின் பெயர்கள் தெரியவில்லை!"

இதே மலரில் 1800 முதல் 1850 வரை இந்தியாவில் வெளிவந்த இதழ்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு தமிழ்

இதழ்கூட இல்லை!

1851 – 1900 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இந்திய இதழ்கள் என்று இன்னொரு பட்டியல். இதில் "சுதேசமித்திரன்" மட்டுமே இடம் பெற்றிருக்கிறது!

அடுத்தப் பட்டியல் 1901 முதல் 1914 வரை. இந்தப் பட்டியலில் தமிழ் இதழ்களுக்கு இடமில்லை.

இவர்களின் பட்டியலில் "சுதேசமித்திர"னுக்குப் பிறகு இடம் பெறும் தமிழ் இதழ் "ஆனந்த விகடன்". அதுவும் "1924 இல் எஸ்.எஸ்.வாசன் தொடங்கியது" என்ற தவறான குறிப்புடன்![1]

இதைப் பார்க்கும்பொழுது, இந்திய இதழியலுக்கே முன்னோடியான தமிழ் இதழியல் வரலாறு இவர்களுக்கு எட்டவில்லையா, அல்லது மறைக்கப்படுகிறதா என்று நாம் ஐயப்படவேண்டியிருக்கிறது அல்லவா?

பம்பாயைச் சேர்ந்த ஜி.சி.பாணிக் என்பவர் 1990இல் "மக்கள் தொடர்பு - இதழியல் ஒரு கையேடு" என்ற ஆங்கில நூலை எழுதியிருக்கிறார். அதில் தமிழ் இதழியல் பற்றி அவர் எழுதியிருப்பதைப் பாருங்கள் –

"1882இல் வார இதழாகத் தொடங்கப்பட்ட 'சுதேசமித்திர'னுடன் தமிழ் இதழியல் தொடங்குகிறது. 1917இல் வி.வி.எஸ்.அய்யரை ஆசிரியராகக் கொண்டு, "தேசபக்தன்" என்ற இதழை டி.வி.கல்யாணசுந்தரம் தொடங்கினார். பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் சார்பில் 1940இல் "பாரததேவி"யும், 1943இல் "தினசரி"யும் தொடங்கப்பட்டன".

இதை எழுதியுள்ள ஜி.சி.பாணிக் யார் தெரியுமா? இந்தியத் தகவல் பணித்துறை அதிகாரி!

இது அறியாமையா, அறிவிக்கப்படாமையா? அல்லது அறிந்து கொள்வதில் ஆர்வங்காட்டாத அலட்சியமா?

முதல் முயற்சிகள்

"பூனைகள்" கண்ணை மூடிக்கொண்டாலும், (தமிழ்) உலகம் இருண்டு விடவில்லை. 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்களைத் தொகுக்கும் முயற்சியில் சில தமிழ் அறிஞர்கள் அவ்வப்பொழுது ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் "கிறித்துவமும் தமிழும்" என்ற நூலில் (1936) சில இதழ்களைக் குறிப்பிடுகிறார். அவரே "19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்" (1962) என்ற நூலில் விரிவான பட்டியல் ஒன்று தருகிறார். தமிழ் வளர்ச்சிக்கழகம் வெளியிட்ட "தமிழ் நூல் விவர அட்டவணை" முதல் தொகுதி ஐந்தாம் பகுதியில் (1964) "19 ஆம் நூற்றாண்டு இதழ்கள்" என்று தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் அவர்கள் "19 ஆம் நூற்றாண்டின் தமிழ் உரை நடை வளர்ச்சி" என்ற நூலில் (1966) ஒரு பட்டியல் தருகிறார். "சோமலெ" அவர்களின் "தமிழ் இதழ்கள்" என்ற நூலிலும் (1975) ஒரு பட்டியல் உண்டு. மா.இரா.இளங்கோவன் அவர்கள் "முற்காலத் தமிழ் இதழ்கள்" (1979), "இந்திய இதழ்கள்" (1981) என்று தனி நூல்களே எழுதியுள்ளார். மா.சு.சம்பந்தம் அவர்களின் "தமிழ் இதழியல் வரலாறு"

---

1. 1926இல் விகடகவி பூதலூர் வைத்தியநாதன் தொடங்கினார்.

(1987) நூலிலும் பட்டியல் உண்டு. சு.அ.இராமசாமிப் புலவரின் "இதழ் விளக்க வரிசை", க.பட்டாபிராமனின் "தமிழ் இதழ்கள்", அ.மா.சாமியின் "தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி", பெ.சு.மணியின் நூல்கள், கட்டுரைகள் முதலியவற்றிலும் 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்களைப் பற்றிய செய்திகள் உள்ளன.

இவையெல்லாம் இருண்ட அறையில் ஏற்றப்பட்ட தீக்குச்சிகள்!

சீ.இரா.ரெங்கநாதன் முயற்சி

இந்திய நூலகத் தந்தை சீ.இரா.ரெங்கநாதனின் முயற்சியும் அப்படிப்பட்டதுதான். அவர் எழுதிய "தமிழ் இதழ்களின் துயர நிலை" என்ற கட்டுரை சென்னை நூலகச் சங்க நினைவு மலரில் (1940) வெளிவந்துள்ளது. 1854 முதல் அச்சேறிய தமிழ் நூற்கள் - இதழ்களின் பட்டியல் ஒன்றை அந்த ஆண்டில் (1940) அவர் தொகுத்து முடித்து அச்சுக்குத் தயாராக வைத்திருந்தார். அப்பட்டியலில் இடம்பெற்ற இதழ்களின் அடிப்படையில் இக்கட்டுரையை ரெங்கநாதன் எழுதினார்.

"தமிழ் இதழ்களின் வரலாற்றை இதுவரை எவருமே எழுதிவைக்க வில்லை. புதிதாகத்தான் தொடங்க வேண்டியிருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் எந்த நூலகத்திலும் பழைய இதழ்கள் சேர்த்து வைக்கப் படவில்லை. எனவே, அந்த முயற்சியைத் துயரத்துடன் கைவிட வேண்டிய நிலைக்கு ஆளானேன்" என்று அக்கட்டுரையில் ரெங்கநாதன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் அச்சேறிய 50 ஆயிரம் தலைப்புகளை அவர் தொகுத்தார். அதிலிருந்து இதழ்களைத் தனியே பிரித்து, ஒரு பட்டியல் தயாரித்தார். அந்தப் பட்டியலின் உதவியுடன் இந்தக் கட்டுரையை எழுதினார்.

நூல் பதிவாளரின் நூலகம் ஒன்று தனியே இருந்தது. அங்கு சில இதழ்கள் இருந்தன என்கிறார், ரெங்கநாதன். ஆனால், நூற்களைப் போன்று இதழ்கள் அங்கே பாதுகாக்கப்படவில்லை. அச்சேறிய நூற்கள், இதழ்களில் ஒரு படி நூல் பதிவாளருக்கு அனுப்பப்படவேண்டும் என்ற 1867 ஆம் ஆண்டைய சென்னை மாநில நூல் சட்டத்தின் 20 ஆவது பிரிவிலிருந்து செய்தித்தாள்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. எனவே, நூல் பதிவாளரின் அறிக்கையில்கூட இந்த இதழ்களின் பெயர்கள் இடம் பெறவில்லை என்கிறார், ரெங்கநாதன்.

1867 முதல் 1900 வரை 58 புதிய இதழ்களே வெளிவந்ததாக ரெங்கநாதன் பட்டியல் கொடுத்துள்ளார். அரசாங்கத்தின் தாய்மொழி செய்தித்தாள்களின் அறிக்கைகளை அவர் பார்த்திருந்தால் நிச்சயம் அவரது பட்டியல் விரிந்திருக்கும். அந்த அறிக்கைகளில்தான் செய்தித் தாள்களின் பெயர்கள் உள்ளன. ஆனால், அவரது காலத்தில் (1930-40 ஆம் ஆண்டுகளில்) இவை "மறைமுக" (இரகசிய) அறிக்கைகளாகப் பாது காக்கப்பட்டன.

தமிழ் இதழ்களில் ஒன்றுக்குப் பாதி முதல் பிறந்தநாள் கொண்டாடும் முன்பே மூடுவிழா நடத்திவிட்டதையும் ரெங்கநாதன் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார்.

தமிழில் ஏன் சிறந்த இதழ்கள் தோன்றவில்லை என்று ஆராய்ந்து, அதற்குக் காரணம் பயிற்று மொழியாகத் தமிழ் மொழி இல்லாததுதான் என்ற முடிவுக்கும் அவர் அன்றே வந்துள்ளார்.

அரசு செய்யட்டும்!

19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்களைத் திரட்டுவதில் இன்னும் எவ்வளவோ முயற்சி செய்யவேண்டியிருக்கிறது.

19 ஆம் நூற்றாண்டிலும், அதையொட்டியும் வெளிவந்த அரசு ஆவணங்கள், ஆணைகள், நூல்கள், இதழ்கள் அத்தனையையும் ஒரு பக்கம் விடாமல் புரட்ட வேண்டும். இதற்கு முழுநேரமாக ஒரு குழு முயற்சி செய்ய வேண்டும். செய்தால், இன்னும் பல இதழ்கள் பற்றிய விவரங்கள் வெளிப்படுவது உறுதி.

தமிழ்நாடு அரசு ஏன் இதைச் செய்யக்கூடாது? 1784இல் வெளிவந்த "கல்கத்தா கெசட்டு அண்டு ஓரியண்டல் அட்வர்டைசர்" என்ற இதழின் வரலாற்றை "கல்கத்தா கெசட்டின் கதை" என்ற பெயரில் மேற்கு வங்காள அரசு வெளியிட்டிருக்கிறது. அதுபோலத் தமிழ்நாடு அரசும் தமிழ் இதழ்களின் வரலாற்றை வெளியிடலாமே! இது தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வரலாறு அல்லவா? ✻

3. முதல் இதழ்

தமிழ் இதழியல் வரலாற்றுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர், ஜான்மர்டாக் (1819–1904) என்ற ஆங்கிலேயர். 1865இல் அவர் தொகுத்த "தமிழ் அச்சு நூல் பட்டியல்" என்ற நூலைத்தான் தமிழ் இதழியல் வரலாற்றின் திருமறையாக இன்றும் பலர் கருதுகிறார்கள்; பயன் படுத்துகிறார்கள்.

கிளாஸ்கோவில் (இங்கிலாந்து) பிறந்த மர்டாக், கண்டியில் (இலங்கை) அரசாங்கப் பள்ளியின் தலைமை ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். இலங்கை ஆட்சி மன்ற உறுப்பினராகவும் இவரை அரசாங்கம் நியமித்தது. கிறித்துவ சமய நூல்களை எழுதி, அச்சிட்டு வந்தார். பிறகு ஆசிரியர் வேலையை விட்டுவிட்டு, முழுக்க முழுக்க சமய நூற்கள் வெளியிடுவதில் இறங்கினார். 1850இல் சிங்களத் திங்கள் இதழ் ஒன்றும் தொடங்கினார். அப்பொழுது இலங்கை முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குச் சிறந்த பாட நூற்கள் இல்லை என்பதைக் கண்டார். நூற்கள் அச்சிட்டு வெளியிட சென்னைக்கு வந்தார். கிறித்துவக் கல்விக்கழகம் அமைத்து,[1] அதன் தலைவராகவும் பணி யாற்றினார். அப்பொழுதுதான் "தமிழ் அச்சு நூற்களின் பட்டியல்" என்ற ஆங்கில நூலைத் தொகுத்து வெளியிட்டார். இறுதிக் காலத்தில் அரசியலில் நாட்டம் கொண்டார். சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். மர்டாக் தனது கருத்துகளை அச்சிட்டு மாநாட்டுக்கு அனுப்பி வைத்தார். 1900 ஆம் ஆண்டு டிசம்பரில் அரசப்பேராளர்[2] சென்னைக்கு வந்த பொழுது மர்டாக் அவரைச் சந்தித்து, இந்தியர்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டுமென்று வற்புறுத்தினார். 85 ஆம் வயதில் (1904) காலமானார்.

முதல் பட்டியல்

மர்டாக் தொகுத்த "தமிழ் அச்சு நூற்களின் பட்டியல்" என்ற நூல் அவரது காலத்திலேயே (1865) அச்சிட்டு வெளியிடப்பட்டது.[3] அந்நூலில் "பருவ இதழ்கள் – செய்தித்தாள்கள்" என்று ஒரு பகுதி இருக்கிறது. ஆறு பக்கமுள்ள அந்தப் பகுதி இல்லாவிட்டால், அந்நாளைய இதழ்கள் பலவற்றின் பெயர்களைக்கூட இன்று நாம் அறிந்திருக்க மாட்டோம். இன்றைக்கும் இந்தப் பட்டியலை ஆதாரமாகக் கொண்டுதான் தமிழ் இதழியல் வரலாறு வரையப்படுகிறது.

முதல் முயற்சி என்ற முறையில் மர்டாக்கின் நூல் புகழுக்கும் போற்றுதலுக்கும் உரியதே. ஆனால், அதில் பல குறைகளும் இருக்கின்றன. அந்தக் குறைகளைக் களைய முயற்சி செய்யாமல், கண்மூடித் தனமாக அப்படியே எடுத்துக்கொள்வது சரியல்ல; ஆராய்ச்சி நெறியல்ல.

---

1. இப்பொழுது கிறித்துவ இலக்கியக் கழகம்
2. வைசிராய்
3. 1968இல் தமிழ்நாடு அரசு மீண்டும் வெளியிட்டது.

முதல் பதிப்பின் முன்னுரையிலேயே நூலின் குறைகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. முன்னுரையில் பதிப்பாளர் கூறி இருப்பது:-

> "இந்தப் பட்டியலில் பல குறைபாடுகள் இருப்பதை மார்டாக்கே நன்கு அறிவார். உடல் நலம் இல்லாமல் அவர் இலண்டனுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அவசர அவசரமாக இப்பட்டியல் அச்சிடப்பட்டது. சாதாரண மாகச் சொல்வது என்றால், அவருக்கு வேறு வழியில்லை. அவசர அவசரமாக அச்சிடப்பட்டும் அவர் சென்னையில் இருந்து கிளம்பிச் சென்ற பின்புதான் சில பகுதிகள் அச் சேறின. இந்தப் பட்டியலில் ஏராளமாக விட்டுப்போயிருக் கிறது. சில தவறாக இடம்பெற்றுள்ளன. 'தமிழ் அச்சு நூல் பட்டியலுக்கு ஒரு தொடக்கம்' என்றுதான் நூலின் பெயர் இருந்திருக்க வேண்டும்".

இப்பட்டியலில் இன்னொரு குறையும் இருக்கிறது. மார்டாக் தனது வாழ்நாள் முழுவதையும் கிறித்து சமய நூற்களை வெளியிட்டுப் பரப்புவதில் செலவிட்டவர். எனவே, கிறித்து சமய இதழ்கள் மட்டுமே அவருக்குத் தெரிந்திருக்கின்றன. "இப்பொழுது 12 பருவ இதழ்கள் வெளிவருகின்றன. அவற்றில் 10 கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவை" என்கிறார். மீதி இரண்டும் பிரம்மஞான இயக்கத்தைச் சேர்ந்தவை. அந்நாளைய கிறித்துவ சமயத்தாரைப் போன்றே இந்த இயக்கமும் இந்துக்களின் பழக்க வழக்கங்களைக் கண்டித்தது. எனவே, இந்த இதழ்களை மார்டாக் விரும்பிப் படித்திருக்கக்கூடும். மேலும், மார்டாக் தமிழில் அதிகப் புலமை இல்லாதவர். (இலங்கையில்கூட சிங்கள இதழ்தான் நடத்தினார்). இவரது தமிழறிவு மிகவும் குறைவு என்பது நூலின் முன்னுரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மற்ற இதழ் களைப் படிக்க அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. கிறித்துவக் கல்விக்கழகத்தின் தலைவர் என்ற முறையில் கிறித்துவ இதழ்கள் அனைத்தும் மார்டாக்கின் பார்வைக்கு வந்திருக்கக்கூடும். மற்ற இதழ்களை அவர் பார்த்ததாகவே தெரியவில்லை. நமக்குத் தெரிந்து, 1831 – 1865 ஆண்டுகளுக்கு இடையே இருபதுக்கு மேற்பட்ட இதழ்கள் (கிறித்துவ சமயத்தைச் சாராதவை) வெளிவந்தும், அவை பற்றி மார்டாக் குறிப்பிடாததற்கு இதுதான் காரணமாக இருக்கும். எனவே, மார்டாக்கின் பட்டியலை முழுமையான பட்டியலாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

"தமிழ் மேகசின்"

மார்டாக் முதலில் பருவ இதழ்களின் பட்டியலைத் தருகிறார். அந்தப் பட்டியலில் முதலாவதாக "தமிழ் மேகசின்"[1] என்ற இதழை அவர்

---

1. இப்பொழுது அவ்விதழின் பெயரைத் "தமிழ் இதழ்" என்று குறிப்பிடுகிறார்கள். அந்நாளில் இவ்விதழுக்கு என்ன தமிழ்ப்பெயர் இருந்தது என்பதை இந்நாளில் அறிய இயலவில்லை. ஆனால், அந்நாளில் தமிழ் இதழ்களுக்கு ஆங்கிலத்தில்தான் பெயர்கள் வழங்கின. அம்முறைப்படி இவ்விதழுக்கும் ஆங்கிலப் பெயரே நிலைத்து நின்றிருக்கக்கூடும். ஆங்கில இதழ்கள் வெளிவந்துகொண்டிருந்த நாளில் தமிழில் வெளியிடப்பட்டதால், "தமிழ் மேகசின்" என்று பெயர் சூட்டினார்கள் போலும்.

குறிப்பிடுகிறார்.

"1831இல் சென்னை கிறித்துவக் கல்விக்கழகம் வெளியிட்ட "தமிழ் மேகசின்"தான் இந்தியாவின் முதல் பருவ இதழ்" என்று மர்டாக் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியாவின் முதல் பருவ இதழ்" என்பது தவறு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிந்ததால், "தமிழில் முதல் இதழ்" என்று பின்பு வந்த வரலாற்று ஆசிரியர்கள் மாற்றிக்கொண்டார்கள்.

இந்த இதழ் 2 – 3 ஆண்டுதான் நடந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு மர்டாக் பட்டியலைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை போலிருக்கிறது. இவ்விதழ் 15 ஆண்டு காலம் (1846 வரை) நடந்தது என்பதை மர்டாக் குறித்து வைத்துள்ளார். இவ்விதழ் பற்றி அவர் கூறும் விவரம் :-

> "அடிக்கடி ஆசிரியர்கள் மாற்றப்பட்டதால், இவ்விதழ் பாதிப்புக்கு உள்ளாயிற்று. நீண்ட சமய அறிவுரைகள் இந் நூலின் விற்பனையைப் பாதித்தன. 1846இல் மாதம் இருமுறை இதழான "சத்தியதூதன்" இதழுடன் செய்தித்தாள் வடிவில் "தமிழ் மேகசின்" இதழை இணைக்க முடிவு ஆயிற்று. இதன் வெற்றியையும் செல்வாக்கையும் உணரத் தவறிவிட்டார்கள்; அத்துடன் இதன் ஆசிரியரும் இங்கிலாந்துக்குப் போய் விட்டார். எனவே, ஆறே மாதத்தில் 'தமிழ் மேகசின்' நின்று விட்டது".

இதிலிருந்து நமக்குச் சில உண்மைகள் புலப்படுகின்றன.

"தமிழ் மேகசின்" சமய இதழாகத் தொடங்கப்படவில்லை. இவ்விதழை சென்னை கிறித்துவக் கல்விக்கழகம் தொடங்கியது. கல்விக்காக (அறிவு வளர்ச்சிக்காக) இவ்விதழ் தொடங்கப்பட்டது. பிறகு பெருமளவில் சமயக் கருத்துகள் புகுத்தப்பட்டதால் அதன் விற்பனை வீழ்ச்சி அடைந்தது. (விற்பனை விவரத்தை மர்டாக் குறிப்பிடவில்லை)

1846இல் "சத்தியதூதன்" என்று ஓர் இதழ் வெளிவந்து கொண்டிருந்திருக்கிறது. இவ்விதழ் பற்றி மர்டாக் எதுவும் குறிப்பிடவில்லை.

1835இல் "சத்திய தூதா" என்ற தெலுங்கு இதழ் வெளிவந்தது. திருச்சபை ஆவணங்களில் "ட்ரூத்புல் மெசஞ்சர்" என்ற தமிழ் இதழ் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் தெலுங்கில் மொழி பெயர்த்தால், 'சத்தியதூதா' என்று ஆகிறது" என்று முனைவர் ஜே.மங்கம்மா "இந்தியாவில் நூல் அச்சடிப்பு" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"சத்திய தூதா"தான் முதல் தெலுங்கு இதழ் என்றும், அது சென்னையில் அச்சிடப்பட்டு, பெல்லாரியில் (ஆந்திரா) உள்ள திருச்சபையால் வெளியிடப்பட்டது என்றும் நாடிக் கிருட்டினமூர்த்தி[1] தெரிவிக்கிறார்.

1835 முதலே தமிழிலும் "சத்திய தூதன்" வெளிவந்திருக்கக்கூடும்.

"சத்தியதூதன்" சமய இதழ். அத்துடன் "தமிழ் மேகசின்" "செய்தித் தாள் வடிவில்" இணைக்கப்பட்டது என்கிறார், மர்டாக். அப்படியென்றால் "சத்தியதூதன்" நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டு, செய்தி இதழாக,

1. "இந்திய இதழியல்"

செய்தி இதழ் வடிவில் (அன்றைய செய்தி இதழ் வடிவு என்பது, இன்றைய 'தினத்தந்தி'யை இரண்டாக மடிக்கும் அளவு) தனியே வெளிவந்ததா? அல்லது "சத்திய தூத"னுடன் இணைப்பாக வெளிவந்ததா?

தனிச் செய்தி இதழாகத்தான் வெளிவந்திருக்க வேண்டும். அதனால்தான், மர்டாக் சொல்வதுபோல, ஆறே மாதத்தில் அது செல்வாக்கும் வெற்றியும் பெற்றிருக்க முடியும். முன்பு சமய இதழாக மாறியதால், அதன் விற்பனை வீழ்ச்சி அடைந்தது அல்லவா?

இணைப்புக்குப் பின்னும் அதே ஆசிரியர் தொடர்ந்து இருந்திருக்கிறார். இணைந்த ஆறு மாதத்தில் அவர் இங்கிலாந்துக்குப் போய்விட்டதால், "தமிழ் இதழ்" நின்றுவிட்டது. "தமிழ் இதழ்" செய்தித்தாள் வடிவில் தனியே வெளிவந்தது எனபதை இதுவும் உறுதிப்படுத்துகிறது.

இணைந்த ஆறு மாதம் கழித்து இதழ் நின்றதைத்தான் சிலர் இவ்விதழ் ஆறுமாதம்தான் வெளிவந்தது என்று எழுதி வைத்திருக்கிறார்கள்!

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். "தமிழ் மேகசின்" ஒரு திங்கள் இதழ் என்று இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். 'தமிழில் வெளிவந்த முதல் மாத இதழ்' என்றுகூட எழுதுகிறார்கள். ஆனால், இதற்கு ஆதாரமே கிடையாது. "பருவ இதழ்" என்றுதான் மர்டாக் குறிப்பிடுகிறார். பருவத்தைத் தெரிவிக்கவில்லை. ஆனால், நின்றபொழுது மாதம் இருமுறை செய்தித்தாளாக வெளிவந்து கொண்டிருந்தது.

மாசத்தினச் சரிதை

"தமிழ் மேகசின்" இந்தியாவின் முதல் பருவ இதழ் என்று மர்டாக் குறிப்பிட்டு இருப்பது எவ்வளவு பெரிய தவறோ, அவ்வளவு பெரிய தவறு, "தமிழ் மேகசின்"தான் தமிழில் வெளிவந்த முதல் இதழ் என்பதும்.

1812 ஆம் ஆண்டிலேயே "மாசத்தினச் சரிதை" என்ற மாத இதழ் தமிழில் வெளிவந்திருக்கிறது.

இன்னும் சொன்னால், அதற்கும் முன்பே இதழ்களில் தமிழ் இடம் பெறத் தொடங்கிவிட்டது. 1785இல் தொடங்கப்பட்ட "சென்னைக் கூரியர்" என்ற ஆங்கில இதழ்தான்[1] சென்னையில் தொடங்கப்பட்ட முதல் இதழ் என்று சொல்லப்படுவது உண்டு! ஆனால், இந்த இதழைத் தொடங்கிய வில்லியம் வர்கட்டு என்பவர் ஏற்கனவே "கமர்சியல் சர்குலேட்டர்" என்ற விளம்பர இதழ் நடத்திக்கொண்டிருந்தார். அதைத்தான் "சென்னைக் கூரியர்" என்ற பெயரில் செய்தி இதழாக மாற்றினார். எனவே சென்னையின் முதல் இதழ் "கமர்சியல் சர்குலேட்டர்" என்றுதான் சொல்லவேண்டும். முதல் செய்தி இதழ்தான் "சென்னைக் கூரியர்".

"சென்னைக் கூரியர்" இதழில் தமிழிலும் செய்திகள் வெளியிடப்பட்டன. அந்நாளில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவில்லை. தமிழ் மக்களிடமும் ஆங்கிலம் பரவவில்லை. எனவே, ஆங்கில அதிகாரிகள் அனைவரும் தமிழ் கற்றார்கள். அவர்கள் தமிழ் கற்க வசதியாக அந்நாளைய ஆங்கில இதழ்களில் தமிழும் இடம்பெற்றது.

1791இல் "அரகாரு" (கேள்) என்ற ஆங்கில இதழ் வெளிவந்தது.

---

1. இதே ஆண்டில்தான் இலண்டன் "டைம்சு" இதழ் தொடங்கப்பட்டது.

"சென்னைக் கூரிய"ரில் ஆசிரியராக இருந்த இயூக்பாய்டு என்பவர் அதிலிருந்து விலகி, இந்த இதழைத் தொடங்கினார். இவரும் தமிழில் செய்திகள் வெளியிடும் முறையைப் பின்பற்றியிருக்கக்கூடும்.

அடுத்த இதழ் 1795இல் தொடங்கப்பட்டது. இதுவும் ஆங்கிலமே. "சென்னை கெசட்டு" என்று பெயர். அரசாங்கச் செய்திகள், அறிவிப்புகள், விளம்பரங்கள் இந்த இதழுக்குக் கொடுக்கப்பட்டன. அவை தமிழிலும் வெளிவரவேண்டும் என்று அரசு விரும்பியது. எனவே அவ்விதழாளர்கள் 1796இல் தமிழ் எழுத்துகளை வார்த்தார்கள். "சென்னை கெசட்டு" மேலாளர் எஸ். சாமுவேல், "அரசாங்கத்தின் விருப்பத்தின் பேரில், ஏராளமான பொருட் செலவில், தமிழ் அச்செழுத்துகள் வார்த்திருக்கிறோம். எனவே 'சென்னை கெசட்'டில்தமிழ் விளம்பரங்கள் எடுத்துக் கொள்ளப்படும்" என்று தனது இதழில் அறிவித்தார்.[1] இலங்கை அரசேகூட இவ்விதழில் (1813 டிசம்பர்) முத்துக்குளிப்பு பற்றித் தமிழில் விளம்பரம் கொடுத்தது என்றால், இவ்விதழில் எந்த அளவு தமிழ் இடம் பெற்றிருந்திருக்கும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

1802 ஆம் ஆண்டு இலங்கை அரசிதழ் வெளிவந்தது. அதில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகள் இடம்பெற்றன. தமிழ்ப் பகுதிக்கு "அரசாங்க வர்த்தமானி" என்று தனியே பெயரிட்டு இருந்தார்கள். தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் இந்த "அரசாங்க வர்த்தமானி"தான் முதல் தமிழ் இதழ்!

இந்த வளர்ச்சியின் தொடர்ச்சியாக 1812 ஆம் ஆண்டில் சென்னையில் "மாசத்தினச் சரிதை" என்ற தமிழ் இதழ் வெளிவந்தது. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் இதழ், இதுவே.

திருக்குறள் அச்சேறியது

அந்த ஆண்டில்தான் உலகப் பொது மறையாம் திருக்குறள் முதன் முதலில் அச்சேறியது. "திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டினத்திற்கு அனுப்பிவிச்சு அவ்விடத்திலிருந்து திருவாவடுதுறை ஆதீனவித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடி கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதிப்பித்த காயிதப் பொத்தகம்" என்று அச்சேற்றியவர்களைப் பற்றி அந்நூலிலேயே குறிப்புக் காணப்படுகிறது.

யார் அச்சிட்டது? எங்கு அச்சிட்டது? எந்த அச்சகத்தில்? எப்பொழுது? இந்த விவரங்கள் நூலின் முகப்பு அட்டையில் இடம்பெற்றுள்ளன. அது –

> "இது பொத்தகம் கலி யுகாப்தம் 4900க்கு அங்கீரசஞூ தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகர மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப்பிறகாசனால் அச்சில் பதிக்கப்பட்டது. மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடம். இ.ஆண்டு த அள ய உ"

அச்சிட்டவர் – தஞ்சை நகர மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப்

---

1. "இந்தியாவில் தொடக்க கால அச்சும் பதிப்பும்" – முனைவர் பி.ஏ. மோகனராசன்.


திருககுறள

மூலபாடம்

தெயவபபுலமைத திருவளளுவநாயனார
அருளிசசெயதது.

தொணடைமணடலம சென்னபபட்டினததில
தஞசைநகரம மலையபபபிளளை குமாரன
ஞானபபிறகாசனால
அசசிறபதிககபபடடது.

மாசததினசசரிதையின அசசுககூடம

1812ஆம் ஆண்டு அச்சேறிய திருக்குறளின் அட்டைப் பக்கம். "இது பொத்தகம் தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகர மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிறகாசனால் அச்சிறப்பதிக்கப்பட்டது. மாசத்தினச்சரிதையின் அச்சுக்கூடம்" என்று முகப்பில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஒற்று எழுத்துகளுக்குப் புள்ளியில்லை. "ஞானப்பிரகாசன்" என்பது, "ஞானப்பிறகாசன்" என்று காணப்படுகிறது.

பிரகாசன். ("ஞானப்பிறகாசன்" என்று அச்சில் இருக்கிறது)

அச்சிட்ட இடம் : தொண்டை மண்டலத்தில் உள்ள சென்னை நகரம்.

அச்சகம் : மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடம்.

அச்சிட்ட ஆண்டு : "இ. ஆண்டு தஅளயஉ". "இ.ஆண்டு" என்றால், இங்கிலீசு ஆண்டு. இன்றும்கூடப் பஞ்சாங்கங்களில் கிறித்துவ ஆண்டு முறையை "இங்கிலீசு ஆண்டு" என்று குறிப்பிடுகிறார்கள்.[1] "தஅளயஉ" என்பது தமிழ் எண்கள் – 1812.

அச்சுக்கூடம்

அச்சகத்தின் பெயர், "மாசத்தினச் சரிதையின் அச்சுக் கூடம்". மீண்டும் படித்துப் பாருங்கள். "மாசத்தினச் சரிதை அச்சுக்கூடம்" அல்ல; "மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடம்".

ஓர் இதழ் அச்சாகும் அச்சகத்துக்கு அவ்விதழின் பெயரையே சூட்டுவது வழக்கமாக இருந்து வருகிறது. அந்நாளில் "தத்துவ போதினி அச்சகம்", "திராவிட தீபிகை அச்சகம்" என்று இருந்தன. இன்றும் "தந்தி அச்சகம்", "ராணி அச்சகம்" என்று இருக்கின்றன. எனவே, இந்த அச்சகத்தில் "மாசத்தினச் சரிதை" என்ற இதழ் அச்சிடப்பட்டு இருப்பது உறுதி. அச்சகம் இருந்தால் இதழ் வெளியிடுவது எளிது. இதழ் வெளியிடச் சொந்த அச்சகம் தேவை என்றும் இதனை எடுத்துக் கொள்ளலாம். இங்கிலாந்தில் முதல் இதழை அச்சகத்தார்தான் வெளியிட்டார்கள். தமிழ்நாட்டிலும் ஓர் அச்சகத்தாரே முதல் தமிழ் இதழை வெளியிட்டு இருக்கிறார். அந்த அச்சகத்துக்கு அந்த இதழின் பெயரையும் சூட்டியுள்ளார்.

1812இல் திருக்குறள் இந்த அச்சகத்தில் அச்சான பொழுது, இந்த இதழ் வெளிவந்துகொண்டு இருந்ததா என்ற கேள்வி எழும். ஏனென்றால் இதழ் நின்று, அச்சகம் மட்டும் தொடர்ந்து இயங்கிவர வாய்ப்பு உண்டு.

அந்த வினாவுக்கு "ஆம்" என்று ஆணித்தரமாகப் பதில் அளிக்க ஆதாரம் இல்லை. அப்பொழுது இதழ் வெளிவந்துகொண்டும் இருந் திருக்கலாம்; நின்று போயும் இருக்கலாம். நின்றுபோய்விட்டது என்று நிரூபிக்கப்பட்டால், அவ்விதழின் பழைமைச் சிறப்பு இன்னும் கூடுதல் ஆகவே செய்யும்!


இது சரியான குறிப்பா?

இங்கே இன்னொரு வினாவும் எழும். 1835 ஆம் ஆண்டுவரை ஐரோப்பியர் மட்டுமே அச்சகம் நடத்தினார்கள்; அந்த ஆண்டில்தான் இந்தியர்கள் அச்சகம் நடத்த அனுமதிக்கப்பட்டார்கள் என்று ஒரு குறிப்பு சில நூற்களில் காணப்படுகிறது. அப்படியானால், 1812இல் தஞ்சை நகரம் மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசன் எப்படி அச்சகம் நடத்தினார் என்று கேட்க வேண்டிவரும்.

அந்நாளில் இந்தியாவில் ஆங்கிலேயர் மூன்று மாநிலங்களைத் தோற்று

---

1. குமரன் பஞ்சாங்கம்


யீகூ அதி. புறஙகூறுமை. [யீக

அறஙகூறுனலலசெயினு - - - - - மொருவன
புறஙகூறுனெனறலினிது - - - - - - - *க*

அறனழீஇ யலலவைசெயதலிற - - - - - தீதே
புறனழீஇப்பொயததுநகை - - - - - - *உ*

புறஙகூறிப்பொயததுயிர்வாழதல - - சாதல
லறஙகூறுமாககநதரும - - - - - - - *௩*

கணணினறுகணணறசசொலலினுஞ - சொலலறக
முனனினறுபினனோககாசசொல - - - - *௪*

அறஞசொலலுநெஞசததானனமை புறஞசொலலும
புனமையாறகாணபபடும - - - - - - - *௫*

பிறனபழிகூறுவானறனபழி - - - யுளளுந
திறனதெரிநதுகூறபபடும - - - - - *௬*

பகசசொலலிககேளிரபபிரிபபா - - நகசசொலலி
நடபாடலறறருதவா - - - - - - - - - *எ*

துனனியாருங்குறறமுநதூறறு - - - - மாயினா
ரெனனைகொலேதிலாரமாடடு - - - - - *அ*

அறனோககியாறறுஙகொலவையம - புறனோககிப
புனசொலுனாபபானபொறை - - - - - *௯*

ஏதிலாரகுறறமபோறறங்குறறங - காணகிறபின
றீதுணடோமனனுமுயிரககு *௰* ஆக-௱௯0

பலலார

மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடத்தில்
அச்சான் திருக்குறளின் ஒரு பக்கம். மெய் எழுத்து
களுக்குப் புள்ளியில்லை! (உதவி – மா. சு. சம்பந்தம்)

வித்தார்கள். அவை வங்காளம், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்கள். மூன்றும் மாநிலச் சுயாட்சியுடன் இயங்கின. ஒரு மாநிலச் சட்டம் மற்றொரு மாநிலத்தைக் கட்டுப்படுத்துவது இல்லை.

1835 ஆம் ஆண்டில் இந்தியர்கள் அச்சகம் நடத்த அனுமதிக்கப் பட்டார்கள் என்று ஓரிரு வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்களே தவிர, இந்தியர்கள் அச்சகம் நடத்தக்கூடாது என்று எந்த ஆண்டில் தடுக்கப்பட்டார்கள், யார் தடுத்தது, எந்த மாநிலத்தில் அந்தச் சட்டம் (அல்லது ஆணை) இயற்றப்பட்டது என்ற குறிப்புகளை அவர்கள் கொடுக்கவில்லை.

சென்னை மாநிலத்தில் 1812இல் ஞானப்பிரகாசம் அச்சகம் நடத்தியிருக்கிறார். 1819இல் காஞ்சியில் திருவேங்கடம் என்ற தமிழர் "இயல் தமிழ் விளக்க அச்சகம்" நடத்தினார்.

1816இல் கங்காதர பட்டாச்சாரியா என்ற வங்காளி, "வங்காள கெசட்டு" என்ற இதழை வெளியிட்டுள்ளார்.

1822இல் "பாம்பே சமாசார்" என்ற குசராத்தி இதழ் வெளி வந்திருக்கிறது.[1]

இவ்விதம் ஆங்கிலேயர் ஆண்ட சென்னை, வங்காளம், பம்பாய் மாநிலங்களில் 1835 ஆம் ஆண்டுக்கு முன்பே இந்தியர்கள் அச்சகம் நடத்தியிருக்கிறார்கள். எனவே, இந்தியர்கள் அச்சகம் நடத்த 1835இல்தான் அனுமதிக்கப்பட்டார்கள் என்ற கூற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை.

இந்தக் கூற்றுக்கூட மர்டாக்கிடம் இருந்து இரவல் வாங்கப்பட்ட தாகத்தான் தெரிகிறது. அவர் மறைத்திரு டபிள்யூ. டெய்லரிடம் இதைக் கைமாற்றுப் பெற்றிருக்கிறார். டெய்லர் 1857இல் "கீழ்த்திசைச் சுவடிகள் பட்டியல்" என்ற நூலைத் தொகுத்தளித்தவர்.[1] தமிழ் நூற்களைத் தொகுக்க நடந்த முதல் முயற்சி இதுவே. இவரைத் தனக்கு முன்னோடி என்று தனது நூலில் மர்டாக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தனது நூலில் "தமிழ் மக்களின் அச்சடிப்பு" என்ற பகுதியை, "1835 வரை குறள், அவ்வையாரின் சில பாடல்கள் ஆகியவற்றை மட்டுமே தமிழ் மக்கள் அச்சிட்டு வெளியிட்டார்கள். அந்த ஆண்டில் அச்சிடுவதற்கான தடைகளை சர் சார்லசு மெட்காப் அகற்றினார். அதன்பின் தமிழ் மக்கள் அச்சகங்களை அமைக்கத் தொடங்கினார்கள் என டெய்லர் சொல்கிறார்" என்று தொடங்கியுள்ளார். அப்படிக் கூறிவிட்டு, 1863இல் சென்னையில் பத்து அச்சகங்கள் தமிழ் நூற்களை அச்சிட்டன என்ற விவரத்தையும் மர்டாக் தருகிறார். எனவே, 1835க்கு முன்பு தமிழர் நடத்திய அச்சகங்கள்

---

1. இன்றும் இது நாளிதழாக வெளிவந்துகொண்டிருக்கிறது. இந்திய இதழ்களின் பாட்டி இதுவே. உலகம் முழுக்க இன்றும் வெளிவந்துகொண்டு இருக்கும் 50, பழைமையான இதழ்களில் இவ்விதழ் 42 ஆவது இடம்பெறுகிறது. 1822 சூலை முதல் நாள் முதல் இதழ் வெளிவந்தது. அப்பொழுது இரண்டே பக்கந்தான். முதல் பக்கம் செய்திகள்; பின்பக்கம் விளம்பரங்கள்.

1. ஓலைச்சுவடி, அச்சுச்சுவடி இரண்டும் இத்தொகுதியில் உள்ளன. முதல் தொகுதியில் சில தமிழ் நூற்களும், 3 ஆம் தொகுதியில் பல தமிழ் நூற்களும் இடம் பெற்றுள்ளன.

ஒன்றிரண்டுதான் இருந்தன; கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதும் தமிழர்கள் பெருமளவில் அச்சகங்களை அமைத்தார்கள் என்று டெய்லரின் கூற்றை எடுத்துக்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

சரியான வரலாறும் அதுதான். இதழ் நடத்த அரசாங்கத்திடம் உரிமம் பெறவேண்டும் என்று 1823இல் தலைமை ஆளுநர் ஜான் ஆதம் கட்டுப்பாடு பிறப்பித்தார். அதைப்பின்பற்றி, பம்பாய் மாநிலத்திலும் 1825இல் அந்தக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. ஆனால், சென்னை மாநிலத்தில் அத்தகைய கட்டுப்பாடு வரவில்லை. 1835இல் தலைமை ஆளுநர் மெட்காப் அந்தக் கட்டுப்பாடுகளை நீக்கினார். 'இதழ் தொடங்கப் போகிறேன்' என்று அரசாங்கத்திடம் அறிவிப்பு செய்தால் போதும் என்று அவர் சட்டம் செய்தார். இதன் காரணமாக அவர், "இந்திய இதழ் உரிமைத் தந்தை" என்று அழைக்கப்படுகிறார். அவரைப் போற்றிக் கல்கத்தா மக்கள் "மெட்காப் மண்டபம்" ஒன்றைக் கட்டினார்கள். ஆனால், ஆட்சியாளர்கள் அவரைப் பதவி நீக்கம் செய்து, இலண்டனுக்கு அனுப்பி வைத்தார்கள்!

இந்தியர்கள் அச்சகம் நடத்தக்கூடாது என்று 1684இல் கோவாவில் போர்த்துக்கீசியர் ஆணை பிறப்பித்தார்கள். வேறு எங்கும் இந்த ஆணை செல்ல வாய்ப்பில்லை.

புள்ளியில்லா எழுத்துகள்!

"மாசத்தினச் சரிதை" என்ற பெயரில் இருந்து அவ்விதழ் பற்றிய சில விவரங்களை நாம் அறிந்துகொள்ள இயலுகிறது. இது ஒரு மாத இதழ். ஒரு மாதத்தில் நடந்த செய்திகள் இவ்விதழில் தொகுத்துத்தரப்பட்டன. "இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்ற உண்மை அன்றே உணரப்பட்டிருக்கிறது.

இங்கு அச்சான திருக்குறளில் மெய் எழுத்துகளுக்குப் புள்ளியில்லை. "மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடம்" என்பதுகூட, "மாசததினச சரிதையின அசசுககூடம" என்றுதான் காணப்படுகிறது. இதே முறையில்தான் "மாசத்தினச் சரிதை" இதழும் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். மெய்யெழுத்துகளைப் புள்ளியில்லாமல் அச்சிடுவதுதான் அந்நாளைய வழக்கம்.

இவ்விதழை அச்சிட்டவர் ஞானப்பிரகாசன். அந்நாளில் அச்சிட்டு வெளியிடுபவரே ஆசிரியர் ஆகவும் இருப்பது வழக்கம். அவ்வழக்கப்படி ஞானப்பிரகாசமே இவ்விதழின் ஆசிரியராக இருந்திருப்பார்.

"மாசத்தினச் சரிதை" இதழ் பற்றியோ, ஞானப்பிரகாசம் பற்றியோ வேறு குறிப்புகள் இதுவரை (1992) கிடைத்தில. என்றாலும், 1816இல் "வங்காள கெசட்டு" வெளியிட்ட கங்காதர பட்டாச்சாரியாவை "இதழ் நடத்திய முதல் இந்தியர்" என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவார்கள். ஆனால், உண்மையில் 1812இலிலேயே "மாசத்தினச் சரிதை" இதழ் நடத்திய ஞானப்பிரகாசம் என்ற தமிழரே இதழ் நடத்திய முதல் இந்தியர் என்ற பெருமைக்கு உரியவர்.

வினாவும் விளக்கமும்

எனது "தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி" என்ற நூலிலேயே "மாசத்தினச் சரிதை" பற்றி எழுதியிருந்தேன். அதைப் படித்த நண்பர்

மா.சு.சம்பந்தம் அவர்கள், வெறும் அச்சகத்தின் பெயரைக் கொண்டு மட்டும் ஓர் இதழ் வெளிவந்தது என்று எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்று கேட்கிறார்.[1] "அந்த இதழைக் கண்டவர் உண்டா? ஏதாவது பட்டியலில் அவ்விதழ் இடம் பெற்றிருக்கிறதா?" என்று வினவுகிறார்.

'கண்டவர் விண்டிலர்! விண்டவர் கண்டிலர்!'

1841இல் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த, "உதயதாரகை" 1845இல் நெல்லையில் வெளிவந்த "நற்போதகம்" ஆகிய இதழ்கள் சென்னையில் மறைமலையடிகள் நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இவைதான் இப்பொழுது தமிழ்நாட்டில் நாம் காணக்கூடிய மிகப்பழைய தமிழ் இதழ்கள். "மாசத்தினச் சரிதை" காலம் என்ற யானை தின்ற கரும்பாக ஆகியிருக்கலாம்.

நமக்குக் கிடைக்கும் முதல் பட்டியல், ஜான் மர்டாக் தயாரித்தது. இப்பட்டியல் பல குறைபாடுகளைக் கொண்டது என்பதை முன்பே பார்த்தோம். "தமிழ் மேகசின்" வெளிவந்த அதே காலத்தில் நடந்து கொண்டிருந்த, "சத்தியதூதன்" இதழ் பற்றிக்கூட அவர் குறிப்பிடவில்லை. எனவே, வேறு எந்தப் பட்டியலிலும் "மாசத்தினச் சரிதை"யை எதிர்பார்க்க முடியாது!

குறையுடைய பட்டியல்களை நிறை செய்வதுதானே வரலாற்று ஆய்வு? அதற்குத்தானே வரலாற்று ஆய்வுகள் நடக்கின்றன? விட்டுப்போன பெயர்களைக் கண்டு இட்டு நிரப்புவதில் என்ன தவறு? நேரடியான ஆதாரம் கிடைக்காத நேரத்தில் உள்ளதுகொண்டு இல்லது காண்பதும், ஊகித்து உணர்வதும் ஆய்வு நெறிமுறைதானே?

இதழ்களின் பெயர்களே அவை அச்சான அச்சகங்களுக்கும் சூட்டப் பட்டன என்பதற்கு நூறு ஆதாரங்களை எடுத்துக்காட்ட முடியும். மா.சு.சம்பந்தம் அவர்களே இதை ஒப்புக்கொள்கிறார். தத்துவ போதினி அச்சகம், திராவிட தீபிகை அச்சகம், தமிழ்நாடு அச்சகம், நவசக்தி அச்சகம், தமிழ் முரசு அச்சகம், சுதேசமித்திரன் அச்சுக்கூடம், ஆனந்த போதினி அச்சுக்கூடம், தமிழரசு அச்சகம், திராவிட நாடு அச்சகம், தினத்தந்தி அச்சுக்கூடம், தமிழ் நேசன் அச்சுக்கூடம், வித்தியா விசாரணி அச்சுக்கூடம், சுதேசபரிபாலினி அச்சுக்கூடம், தினமணி அச்சகம், வீரகேசரி அச்சுக்கூடம் என்று அவரே ஆதாரங்களை அடுக்கிக் காட்டுகிறார். தத்துவ போதினி அச்சுக்கூடம், திராவிட தீபிகை அச்சுக்கூடம் என்பது போன்று கூட அல்ல; "மாசத் தினச்சரிதையின் அச்சுக்கூடம்" என்று திட்டவட்டமாகத் தெளிவாக இருக்கும் பொழுது அதை ஏன் ஆதாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாது?

1812இல் "மாசத்தினச் சரிதை" என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றே. இன்று (1992) நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் இதழ் அதுவே. இந்தியாவில் வெளிவந்த முதல் இந்திய மொழி இதழும் இதுவே.

யாழ்ப்பாணத் திருச்சபை இதழ்

1815 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள திருச்சபை ஒரு காலாண்டு

---

1. "தமிழ் இதழியல் வரலாறு"

இதழ் வெளியிட்டது. இந்தத் திருச்சபை இதழ்தான் இப்பொழுது மக்குக் கிடைத்திருக்கும் மூன்றாவது தமிழ் இதழ்.

ஜான் மர்டாக் தனது பட்டியலில், "அப்துல் மெசையா" என்ற வரலாற்று நூல் பற்றிக் குறிப்பிடுகிறார். "புனாரி" என்பவர் மொழிபெயர்த்தது என்ற குறிப்பு மட்டுமே அதில் இருக்கிறது. இந்நூல் பற்றிய மேல் விவரங்களை பிரிட்டீசு அருங்காட்சியகப் பட்டியலில்[1] காணமுடிகிறது.

பிரிட்டீசு அருங்காட்சியகப் பட்டியலில், "அப்துல் மெசையா" என்று அகரத்திலும், "கருணாநிதி" என்று ககரத்திலும் இந்த வரலாற்று நூல் இடம்பெற்றுள்ளது. 20 பக்கமுள்ள இந்நூல் யாழ்ப்பாணம் திருச்சபை நூல் வெளியீட்டுக் கழகத்தின் சார்பில் 1844இல் 3ஆவது பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கிறது.

திருச்சபை திருப்பணிக் கழகத்தின் பேராளராக இருந்த அப்துல் மெசையா என்பவரின் வரலாறு, இது. சேக் சலாகி என்ற பெயருடன் இருந்த இசுலாமியர், இவர். இவரது வரலாறு, புனாரி என்பவரால் தமிழ்ப்படுத்தப்பட்டு, முதலில் திருச்சபை இதழில் 1831இல் வெளி வந்தது. அது 62 ஆவது இதழ். இது காலாண்டு இதழ். (இத்தனை விவரமும் பட்டியலில் இருக்கிறது). எனவே இவ்விதழ் 1815 முதல் வெளிவந்திருக்க வேண்டும். திருச்சபையே முதலிரு பதிப்புகளை வெளி யிட்டிருக்கலாம். சமயநூல் வெளியீட்டுக் கழகம்[2] 1823இல் தனியே தொடங்கப்பட்டது.

இத்தனை விவரங்களைக் கொடுக்கும் பட்டியலில் இந்த இதழின் பெயர் இல்லை. "திருச்சபை திருப்பணிக் கழகக் காலாண்டு இதழ்களில் ஒன்றில் வெளிவந்துள்ளது" என்று மட்டுமே இருக்கிறது. இதிலிருந்து இத்திருச்சபை வேறு சில காலாண்டு இதழ்களையும் வெளியிட்ட விவரம் வெளிப்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்டக் காலாண்டு இதழ்களை ஒரே திருச்சபை வெளியிடும்பொழுது, ஓர் இதழாவது தமிழில் இருந்திருக்கும் அல்லவா? அதுவும் 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ் தலை நிமிர்ந்து நின்றது. மருத்துவ நூல்களைக் கூடத் தமிழில் வெளியிட்டார்கள்.

எனவே, யாழ்ப்பாணத் திருச்சபையில் இருந்து 1815இல் தமிழில் ஒரு காலாண்டு இதழ் வெளிவந்தது என்று நாம் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். அவ்விதழின் பெயரை இன்று (1992) அறிய இயலாததால், அதற்கு "யாழ்ப்பாணத் திருச்சபை இதழ்" என்று பெயர் சூட்டியிருக்கிறேன்.

நாலாவது இதழ்

1816இல் புதுவையில் அரசு அச்சகம் தொடங்கப்பட்டது. அரசாங்க அறிவிப்புகள் அதில் அச்சிடப்பட்டு, தெருக்களில் ஒட்டப்பட்டன.

1823இல் ஆணைகள், அறிவிப்புகளை வெளியிட "பிரெஞ்சு இந்திய அரசு நிர்வாக ஆவணம்" என்ற இதழை அரசு வெளியிட்டது. 1828இல் அந்த அச்சகத்தில் தமிழ்ப் பகுதி சேர்க்கப்பட்டது. அதே ஆண்டில் அவ்விதழ்

---

1. பிரிட்டீசு மியூசியம் கேட்லாக்

2. யாழ்ப்பாணம் டிராக் சொசைட்டி

"நிர்வாக சிற்றிதழ்"[1] என்று பெயர் மாறியது. இதில் தமிழ் - பிரெஞ்சு இரு மொழிகளும் இடம் பெற்றன. இதுவே பின்பு "பிரெஞ்சு இந்திய அரசிதழ்" என்று பெயர் பெற்றது.

தமிழும் இடம்பெற்ற இவ்விதழை 4ஆவது தமிழ் இதழ் என்று எடுத்துக்கொள்ளலாம். இவ்விதழ் பற்றியும் ஜான்மர்டாக் எதுவும் குறிப்பிடவில்லை.

ஐந்தாவது இதழ்

1829இல் பெங்களூரில் "சுஜநரஞ்சனி" என்ற இதழ் வெளிவந்தது. நமக்குக் கிடைக்கும் 5 ஆவது தமிழ் இதழ் இது.

இவ்விதழில் நாராயணசாமி என்பவர் எழுதிய "சித்திரங்காட்டி சத்தியம் நிறுத்திய கதை" என்ற தொடர்கதை வெளிவந்தது. பின்பு இக்கதையின் பிற்பகுதி சேர்க்கப்பட்டு, 84 பக்க நூலாக வெளியாயிற்று. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1894 ஆம் ஆண்டில் சென்னையில் வெளியிடப்பட்ட விவரம் தமிழ் நூல் விவர அட்டவணை முதல் தொகுதி, இரண்டாம் பகுதியில் காணப்படுகிறது. "இதன் முதல் பகுதி 1829ஆம் ஆண்டு 'சுஜநரஞ்சனி' என்னும் இதழில் வெளிவந்தது" என்ற குறிப்பும் இதிலேயே இருக்கிறது.[2]

"சு(ய) ஜனரஞ்சனி" என்றால், "சொந்த மக்கள் மீது அன்பு கொண்டவள்" என்று பொருள். இவ்விதழ் பற்றி வேறு விவரம் எதுவும் இதுவரை (1992) கிடைக்கவில்லை. 1829இல் வெளிவந்த இவ்விதழ் பற்றியும் மர்டாக் ஏதும் குறிப்பிடவில்லை.

இக்கதையை எழுதிய நாராயணசாமி பெங்களூரில் தமிழாசிரியராக இருந்தார். நூலின் முதல் பதிப்பும் பெங்களூரில் வெளிவந்தது. எனவே, இவ்விதழும் பெங்களூரில் வெளிவந்திருக்கலாம். தொடர்கதை வெளியிட்டதால், குறைந்த இடைவெளியில் வெளிவரும் இதழாக இருந்திருக்கும். வாரம் முதல் மாதம் வரை வைத்துக்கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் முதல் தமிழ் இதழ் 1812இல் வெளிவந்தது. அடுத்தத் தமிழ் இதழ் 1829இல்தான் வெளிவந்ததா? 17 ஆண்டு இடைவெளி இருக்கிறதே! இடையில் வேறு இதழ்கள் வந்திருக்காவா? இதற்கு 'ஆம்' என்றும் சொல்ல இயலாது; 'இல்லை' என்று கூறவும் முடியாது. நாளை நாலு பேர் சேர்ந்து பழைய "குப்பை"களைக் கிளறுவார்களேயானால், புதிய மாணிக்கங்கள் கிடைக்க வாய்ப்பு உண்டு. அதுவரை இந்த "சுஜநரஞ்சனி"யை 5ஆவது இதழாக எடுத்துக்கொள்ளவேண்டியதுதான்.

தமிழ் மேகசின்


மர்டாக் 'முதல் இதழ்' என்று குறிப்பிடும் "தமிழ் மேகசின்" அடுத்த படியாக வருகிறது.

"தமிழ் மேகசின்" 1831இல் வெளிவந்தது என்று மர்டாக் குறித்து வைத்திருக்கிறார்.

---

1. "புல்லட்டீன் தி ஆக்ட் அட்மினிஸ்டிரேசன்".

2. இதே கதையை 1879இல் திருசிரபுரம் கோவிந்தன் என்பவர் பெங்களூரில் அச்சிட்டு வெளியிட்ட விவரம் பிரிட்டீசு அரும்பொருளகப் பட்டியலில் இருக்கிறது.



THE CEYLON GOVERNMENT GAZETTE.

MONDAY March 29

இது 3ஆவது இதழ். மார்ச் 29, 1802. முதலிதழ் 15.3.1802இல் வெளிவந்தது. (இலங்கை அரசு சுவடிச் சாலை)

அதற்கு முன்பே, "சுஜநரஞ்சனி" காலத்திலேயே, கதைகள் வெளியிடும் அளவுக்குத் தமிழ் இதழ்கள் வள்ர்ச்சி அடைந்துவிட்டன. எனவே "சுஜநரஞ்சனி", "தமிழ் மேகசின்"னுக்கு இடையில் ஒரு சில தமிழ் இதழ்கள் வெளிவந்திருக்க நிறைய வாய்ப்பு உண்டு.

இப்போதைக்கு (1992), முதல் தமிழ் இதழ்கள் என்று கீழ்க்கண்டவாறு நாம் அமைத்துக் கொள்ளலாம்.

1802 – அரசாங்க வர்த்தமானி (இலங்கை அரசிதழ்)

1812 – மாசத்தினச் சரிதை

1815 – யாழ்ப்பாணத் திருச்சபை இதழ்

1828 – புதுவை அரசிதழ்

1829 – சுஜநரஞ்சனி

1831 – தமிழ் இதழ் (தமிழ் மேகசின்) ✱

கடைசிச் செய்தி

இலங்கை இதழ்கள்

உதயதாரகை (1841) மாதம் இருமுறை. முதலாம், மூன்றாம் வியாழக்கிழமைகளில் வெளிவந்தது.

ஆலமத் இலங்காபுரி (1869) கொழும்புவில் வாழ்ந்த மலாய் முசுலிம்களின் மலாய்மொழி கையெழுத்து இதழ்.

புதினாதிபதி (1870) சனிக்கிழமை தோறும் வெளி வந்தது. ஆசிரியர்: கு. அப்பாதுரை. 1870-க்கு முன் சர்வசன மனோரஞ்சனி, இலங்காபிமானி, யாழ்ப்பாணப் புதினம், யாழ்ப்பாண வர்த்தமானி, பாதுகாவலன் ஆகிய இதழ்கள் வெளிவந்த விவரம் இதன் முதல் இதழில் காணப்படுகிறது.

புதினாலங்காரி (1873) சனி தோறும்.

சர்வசனநேசன் (1886) செவ்வாய் தோறும். "முசுலிம்களைக் குறிக்கும் அடையாளக் குறிகள் முன்பக்கம் இருப்பினும், யாதொரு சமயத்தையும் தழுவாது நடைபெறுகிறது" என்ற குறிப்பு யாழ்ப்பாண "சன்மார்க்கபோதினி"யில் இருக்கிறது.

இலங்கை தின வர்த்தமானி (1886) திங்கள் தவிர நாள்தோறும் வெளிவந்தது. ஆசிரியர்: டி.எசு.இராசு.

கஸ்புரான் அல் காபில் ஜான் (1889) அரபுத் தமிழ் இதழ்.

இசுலாம் மித்திரன் (1893) ஆசிரியர் தமிழ்நாட்டைச் சேர்ந்த மு.அ. சாகிபு சுல்தான். மாதம் இருமுறையாகத் தொடங்கி, வார இதழ் (திங்கள் தோறும்) ஆயிற்று. 1897 இல் நாளிதழ் (வெள்ளி தவிர) ஆயிற்று. 1906 இல் வாரம் மும்முறை (வெள்ளி தவிர.)

மாணவன் (1896) மட்டக்களப்பு. மாதம். இரண்டாம் சனி தோறும். 4 பக்க இதழ்– 1, 4 ஆங்கிலம். 2, 3 தமிழ். மாணவர் இதழ் அல்ல; கிறித்துவ இதழ்.

(இதற்கு ஏற்ப உள்பக்கங்களை மாற்றிக்கொள்ளவும். உதவி: தமிழ்மணி மானா எம்.எம்.மக்கீன், கொழும்பு.)

4. முதல் நாளிதழ்

தமிழின் முதல் இரு இதழ்களே செய்தித்தாள்தான் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அவை 1802இல் வெளிவந்த "அரசாங்க வர்த்தமானி"யும், 1812இல் வெளிவந்த "மாசத்தினச் சரிதை"யும்.

தொடர்ந்து செய்தித்தாள்கள் வெளிவந்துள்ளன. ஆனால்,ஜான்மர்டாக் "தினவர்த்தமானி"யை மட்டுமே குறிப்பிடுகிறார். "தமிழ் அச்சு நூற்களின் பட்டியல்" என்ற அவரது நூலில் "செய்தித்தாள்கள்" என்ற பகுதி "தினவர்த்தமானி"யுடன்தான் தொடங்குகிறது. அவர் சொல்கிறார் :-

> "ஏறத்தாழ 25 ஆண்டுக்கு முன் பல செய்தித்தாள்களைத் தமிழ் மக்கள் தொடங்கினார்கள். கொஞ்ச நாளில் அவை மறைந்துவிட்டன. 1855இல் வணக்கத்துக்குரிய பி.பெர்சிவல் 'தினவர்த்தமானி' என்ற 8 பெரிய பக்கமுள்ள தமிழ் வார செய்தித்தாளைத் தொடங்கினார். இதன் விலை, சென்னையில் உள்ளூர் மக்களுக்கு ஆண்டுக்கு ரூ. 3. வெள்ளையருக்கு ரூ. 5. வெளியூர்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட ரூ. 5. இந்த குறைந்த விலையும்,[1] தரமும் போட்டி இதழ்களை நம்பிக்கை இழக்கச் செய்தன. தொடக்க கால முதல் இவ்விதழ் போட்டியற்று விளங்கியது. செய்திகளும், இலக்கியம், அறிவியல், கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெற்றன. எப்பொழுதாவது தமிழ்ப் பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன. உள்ளூர் மக்கள் தங்கள் கருத்துகளை உரிமையுடன் வெளியிட இவ்விதழில் அனுமதிக்கப்பட்டார்கள். மொத்தத்தில், இவ்விதழ் சிறப்பாகப் பணியாற்றியது".

1840 ஆம் ஆண்டுகளிலேயே தமிழ் மக்கள் பல செய்தித்தாள்களை நடத்தியிருக்கும் உண்மை இதிலிருந்து தெரிகிறது. அந்த இதழ்களில் ஒன்றைக்கூட மர்டாக் குறிப்பிடாதது அவரது நூலின் பெருங்குறையாகும்.

"தினவர்த்தமானி" வெளிவந்த பொழுதுகூட வேறு செய்தித்தாள்களும் வெளிவந்து கொண்டிருந்திருக்கின்றன. அவற்றைத் "தினவர்த்தமானி" வீழ்த்தி, போட்டியில்லாமல் வலம் வந்ததையும் மர்டாக் குறிப்பிடுகிறார். ஆனால், அந்த சமகால இதழ்களின் பெயர்களைக்கூட அவர் விட்டு விட்டார். அவை கிறித்துவ சமயத்தைச் சாராத இதழ்களாக இருந்தமை தான் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

முதல் செய்தி இதழ்கள்

அந்தச் செய்தி இதழ்களின் பெயர்களையே அறிய இயலாத பொழுது அவை நாளிதழா, பருவ இதழா என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியாதுதான்.

1802இல் வெளிவந்த இலங்கை "அரசாங்கவர்த்தமானி" ஒருவார இதழ்.

1812இல் வெளிவந்த "மாசத்தினச் சரிதை" ஒரு திங்கள் இதழ்.

---

1. தனி இதழ் 1 அணாவாக இருந்திருக்க வேண்டும்.

1832 முதல் வெளிவந்த சென்னை அரசின் "புனித ஜார்ஜ் கெசட்டு" வார இதழ்.

1833இல் மாதம் மும்முறையாகத் தொடங்கப்பட்ட "இராச விருத்தி போதினி", 1855இல் வார இதழாக மாறியது. (இந்த ஆண்டில்தான் "தினவர்த்தமானி" வெளிவரத் தொடங்கியது. ஆனால், "தினவர்த்தமானி" பற்றிக் குறிப்பிடும் மர்டாக், 'இராசவிருத்தி போதினி' பற்றிக் குறிப்பிடவில்லை). கிறித்துவப் பெரியார் ஜே.இலாங்[1] 1855இல் தயாரித்த ஒரு பட்டியலில் "இராசவிருத்தி போதினி"தான் தமிழில் வெளிவந்த முதல் செய்தித்தாள் என்று குறிப்பிடுகிறார். 1861இல் இவ்விதழ் மீண்டும் மாதம் மும்முறை ஆகி வெளிவந்தும்கூட, ஜான் மர்டாக் ஏனோ இவ் விதழை விட்டுவிட்டார்.

1835இல் "மெட்ராசு கிரானிகல்" என்ற வார இதழ் வெளிவந்தது. இது "தமிழில் வெளிவந்த முதல் செய்தி இதழ்" என்று மார்க்ரெட்டு பார்ன்சு என்பவர் குறித்து வைத்துள்ளார்.

1840இல் "பொதுசனபிரசாரணி" என்ற ஆங்கிலம் - தமிழ் இருமொழி செய்தித்தாள் மாதம்தோறும் வெளிவந்தது.

1841இல் சென்னையில் "சனசிநேகன்" என்ற மாதமிருமுறை செய்தித் தாள் வந்தது.

1844இல் "மதியம்" என்ற செய்தி இதழ் மாதம் மும்முறையாக வெளி வந்தது.

1846இல் "தமிழ் மேகசின்" செய்தித்தாளாக திங்கள் இருமுறையாக வெளிவந்தது.

இப்படியாகத் "தினவர்த்தமானி"க்கு முன்பு எத்தனையோ செய்தித் தாள்கள் தமிழில் வெளிவந்தன என்றாலும், எந்த இதழும் நாளிதழாக வெளிவந்ததாக இதுவரை (1992) நமக்குத் தெரியவில்லை.

காலக்கணிதன்

"சுதேசமித்திரன்"தான் தமிழின் முதல் நாளிதழ் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். உண்மை என்னவென்றால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டில் (1900)தான் "சுதேசமித்திரன்" நாளிதழாக வெளிவந்தது. ஆனால், அதற்கு முன்பே பல நாளிதழ்கள் தமிழில் வெளிவந்துள்ளன என்ற புதிய வரலாறு அசைக்க முடியாத ஆதாரங்களுடன் இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சென்னை அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ள தாய்மொழி இதழ் அறிக்கைகளை ஆண்டு வாரியாகப் புரட்டிக்கொண்டு வந்தபொழுது, 1879 ஆம் ஆண்டிலேயே "காலக்கணிதன்"[2] என்ற நாளிதழ் தமிழில் வெளி வந்த உண்மை வெளிப்பட்டது.

---

1. தமிழ் நூல் பட்டியல் தயாரிக்கும் எண்ணம் இலாங்கிடம் இருந்துதான் தனக்கு வந்தது என்று மர்டாக் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இலாங் 1855இல் வங்காளி நூற்பட்டியல் தயாரித்தார். அதில் தமிழ் நூற்களை ஒப்பிட்டிருப்பார் போலிருக்கிறது. அதைப் பின்பற்றி மர்டாக் தமிழ் ஏடுகள் - இதழ்களுடன் வங்காள ஏடுகள் - இதழ்களை ஒப்பிட்டுள்ளார்.

2. எவ்வளவு அருமையான பெயர்!

The Fort St. George Gazette.

Published by Authority.

TUESDAY EVENING, JULY 10, 1860.

GOVERNMENT HOUSE,
5th July 1860.

THE Honorable the Governor will hold a Public Levee at the Banqueting Hall, on Thursday next, the 12th instant, at 5 o'clock P.M., and hopes to have the pleasure of seeing the East Indian and Native Gentlemen on the same occasion.

Gentlemen are requested to bring their Cards with their Official designations noted on them, and to deliver them to the Aide-de-Camp in attendance.

By order.
D. W. TUFFER, Major, *Mily. Secy.*

MEMORANDUM.

OFFICERS attending the Levee will appear in Full Dress—White Trowsers.

By order.
D. W. TUFFER, Major, *Mily. Secy.*

GOVERNMENT HOUSE,
5th July 1860.

THE Honorable the Governor will be happy to see Gentlemen at Breakfast, at Government House, on Wednesday next, the 11th instant at half-past 9 o'clock.

Gentlemen purposing to attend are requested to send their names to the Aide-de-Camp in waiting, Government House, *before* 6 *o'clock* the previous evening.

Gentlemen who may be desirous of having a *Private* Audience with the Governor after Breakfast, are requested to notify the same on their Cards.

By order.
R. C. GLOVER, Captain, *Aide-de-Camp.*

NOTICE.

HIS Excellency Sir HENRY WARD will hold a Darbar at 11 A.M., on Tuesday the 17th instant.

Native Gentlemen desirous of attending are requested to send in their Cards to the Private Secretary, on or before the Monday preceding.

Government House, 5th July 1860.

விளம்பரம்.

மகாகனம்பொருந்திய ஸர்-ஹென்ரி-வார்ட்டு கவர்னர்துரையவர்கள் நாளது மீ 17உ செவ்வாய்க்கிழமைதினம் பகற்பதினொரு-மணிக்கு பேட்டிகொடுப்பதற்கு தர்பாரில்விருப்பமுள்ளவர் அந்தகாலத்தில் பேட்டிபண்ணிக்கொள்ளவேணுமென்றிற அபேட்சையுள்ள இந்துதேசத்தாரான பெரிய மனிதர்கள் தங்கள் கார்டுகளை முந்தின திங்கட்கிழமை தினத்திலாவது அல்லது அதற்கு முன்னாவது தங்கள்பேர்களை பிரைவேட் செக்கிரிட்டேரியவர்களுக்கு எழுதியனுப்பும்படியாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கவர்ன்மெண்டு அவுசு, 1860 ௵ ஜூலை மீ 5௳.

ప్రకటనము.

మహారాజశ్రీ ఘనతవహించిన - సర్ - హెన్రీ వార్డు గౌనరుదొరగారు యీ నెల ౧౭ తేది మంగళవారం పగలు ౧౧ ఘంటలకు భేటియివ్వడమునకు దర్బారులో దయచేసియుందురు.

ఆకాలమునందు భేటిచేసుకోవలెనని యపేక్షించు నట్టి యీదేశస్థులగు పెద్దమనుష్యులందరున్ను సదరహీ వారమునకు ముందటి సోమవారములోపలగాని లేక నాటికిని ముందుగాని తమతమపేర్లను ప్రైవేట సెక్రెటెరిగారి వద్దికి వ్రాసిపంపించేలాగున కోరడమైనది.

గౌరన్మెంటు హౌసు, ౧౮౬౦ సం॥ జూలై నెల ౫ తేది.

اطلاع

جناب معلی القاب سر ہنری وارڈ صاحب بہادر شہر حال کی سترھوین تاریخ سہ شنبہ کے روز صبح کے ۱۱ گھنٹوں کو دربار کرینگے

یہان کے رہنے والے ہندو اور مسلمان صاحبان جو ملاقات کی تمنا رکھتے ہین چاہئے کہ تاریخ مذکور کے آگے آنا ہی سو دوشنبے کو یا اُسکے قبل اپنے نام کے چٹھیان پرایویٹ سکرٹری صاحب کے پاس روانہ کرین

گورنمنٹ ہوس

۵ جولائي سنہ ۱۸۶۰ ع

FORT ST. GEORGE, *July* 10, 1860.

THE Honorable the Governor in Council has been pleased to make the following Appointments:—

Mr. C. N. Pochin to act as Subordinate Judge of the Zillah of Mangalore, during the absence of Mr. Swinton, or until further orders.

10.7.1860 இதழ். (சென்னைப் பல்கலைக்கழக நூலகம்)

1879 ஆம் ஆண்டு சூன், சூலை, ஆகஸ்டு மாதங்களில் "காலக்கணிதன்" என்ற இதழ் சென்னையில் வாரம் இருமுறையாக வெளிவந்தது. விற்பனை 200 படிகள்.

வாரம் இருமுறை இதழ்களையும் "நாளிதழ்" என்று இப்பொழுது ஒன்றிய நாடுகள் கல்வி-பண்பாட்டு அமைப்பு[1] செந்தரம் செய்திருக் கிறது. அப்படிப் பார்த்தால், இவ்விதழை "நாளிதழ்" என்று நாம் எடுத்துக்கொள்ளலாம்.

அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான அறிக்கையில் இவ்விதழ் "வார இதழ்" என்று குறிக்கப்பட்டுள்ளது. வாரம் இரு முறையாகத் தொடங்கி, பின்பு வார இதழாக ஆயிற்று என்ற வரலாறு இதிலிருந்து தெரிகிறது. 1881, 1882களிலும் வார இதழாகவே வெளி வந்துள்ளது.

1883இல் "காலக்கணிதன்" நாளிதழாக வெளிவந்துள்ளது. சனவரியில் 16 முதல் 20 வரை அரசுக்கு இதழ் கிடைக்கப் பெற்றிருக்கிறது.

பிப்ரவரி அறிக்கை கோப்பில் இல்லை.

மார்ச்சில் 16,17,18,20,21,23,24,27,28,29,30 நாட்களில் வெளிவந்திருக் கிறது.

ஏப்ரலில் 22,24,25,26,27 நாட்களில் அரசுக்கு இதழ் வந்துள்ளது.

விற்பனை 300 படிகள். மே மாதம் வாரம் மும்முறையாக சுருங்கி விடுகிறது. நவம்பர் வரை வெளிவந்திருக்கிறது. டிசம்பர் மாத அறிக்கையில் தமிழ் இதழ்கள் இடம் பெறவில்லை. 1884 சனவரி அறிக்கையில் "காலக்கணிதன்" காணப்படவில்லை.

திராவிட வர்த்தமானி

1882 சூலையில் "திராவிட வர்த்தமானி" என்ற இதழ் சென்னையி லிருந்து வாரம் இருமுறையாக வெளிவந்துள்ளது. விற்பனை 600 படிகள். 1886 சனவரியில் (வாரம் இருமுறையே) விற்பனை 425 படிகள்.

1887 பிப்ரவரியில் "சுதேசமித்திரன்" வாரமிருமுறை ஆனபின்பு, "திராவிட வர்த்தமானி"யின் பெயர் அறிக்கைகளில் காணப்படவில்லை.

தினோதய வர்த்தமானி

1882 செப்டம்பர் – அக்டோபர் மாதத்துக்கான அறிக்கையில் "தினோதய வர்த்தமானி" என்ற இதழ் இடம் பெற்றிருக்கிறது.

இது ஒரு நாளிதழ். செப்டம்பர் 1 முதல் அக்டோபர் 28 வரை நாள்தோறும் அரசுக்கு இதழ்கள் வந்து சேர்ந்த விவரம் இதே அறிக்கையில் காணப்படுகிறது.

நவம்பர் – டிசம்பர் மாதத்துக்கான அறிக்கை இல்லை. 1883 சனவரி இருக்கிறது. அதில் "தினோதய வர்த்தமானி" இதழ் சனவரி 15 முதல் 20 வரை அரசுக்கு வந்து சேர்ந்த விவரம் காணப்படுகிறது. பிப்ரவரி அறிக்கையில்லை. மார்ச்சு அறிக்கையில் "தினோதய வர்த்தமானி" இல்லை!

இவ்விதழ் சென்னையில் இருந்து வெளிவந்துள்ளது. நாள்தோறும் 150

1. யுனெஸ்கோ

படிகள் விற்பனை ஆயின.

பெயருக்கு ஏற்பத் தினம் உதயமான முதல் தமிழ் நாளிதழ் இதுவே. தொடங்கும் பொழுதே நாளிதழாகத் தொடங்கப்பட்டுள்ளது. இவ் விதழையே "தினோதயப் பத்திரிகை" என்று சே.ப.நரசிம்மலு குறிப்பிட் டுள்ளார்.[1]

லலித பிரசோனதயா

அதை அடுத்து இவ்வறிக்கை வழியில் நமக்குக் கிடைக்கும் நாளிதழ் "லலிதபிரசோனதயா" என்பது.

இவ்விதழ் 1887 ஆம் ஆண்டு சென்னையில் வெளிவந் துள்ளது. அந்த ஆண்டு பிப்ரவரியில் அரசாங்கத்துக்கு வந்து சேர்ந்த இதழ்களின் பட்டியலில் 11 இதழ்கள் உள்ளன. அவற்றில் இந்த "லலித பிரசோனதயா"வும் ஒன்று.

(இதே பட்டியலில் "சுதேசமித்திர"னும் இடம் பெற்றிருக்கிறது. அப் பொழுது "சுதேசமித்திரன்" வாரம் இருமுறையாக வெளிவந்திருக்கிறது).

"லலிதபிரசோனதயா" நாளிதழாக வெளிவந்ததை இதே அறிக்கை யில் "பத்திரிகை வரவு" என்ற குறிப்பும் உறுதிப்படுத்துகிறது. 1887 பிப்ரவரிக்கான குறிப்புப்படி சனவரி 19,21,22,27,29,31 பிப்ரவரி 4,5,10,12,14,16,17,18,19,21,25 ஆகிய நாட்களில் "லலிதபிரசோனதயா" வெளிவந்திருக்கிறது. மார்ச்சு குறிப்புப்படி பிப்ரவரி 26,28, மார்ச்சு 1,2,3,4,5,7,9,10,11,12,14,17,18,19,21,22,23,24. ஏப்ரல் குறிப்புப்படி மார்ச்சு 25,26,28,29,30,31, ஏப்ரல் 1,2,4,5,7,9,11,13,14,15,16,18,20, ஏப்ரலுக்கு பிறகு இல்லை.

அறிக்கையில் இருந்து இவ்விதழ் பற்றி வேறு எந்த விவரமும் நமக்குக் கிடைக்கவில்லை. இவ்விதழ் நாள்தோறும் 150 படி விற்பனையானதாக மட்டும் விவரம் இருக்கிறது. வெறும் 150 படியுடன் நாளிதழ்கள் வெளிவந்தது நமக்கு வியப்பாகத் தோன்றும். ஆனால், அன்று இந்தியாவின் தலைநகராக விளங்கிய கல்கத்தாவில் 1828இல் "வங்காள அரகாரு" என்ற ஆங்கில நாளிதழ் 155 படி தான் விற்பனையாயிற்று!

"லலிதபிரசோனதயா" என்ற பெயரைப் பார்க்கும்பொழுது அது ஓர் இந்து சமய இதழ் என்று தெரிகிறது. இதழ்களில் சமயச் சண்டை நடந்து கொண்டிருந்த காலம், அது. சுடச்சுடப் பதில் கொடுக்க "லலிதபிர சோனதயா" நாளிதழாக வெளிவந்திருக்குமோ? இவ்விதழில் இருந்து ஒரு செய்திகூட எடுக்கப்பட்டு, அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பப் படவில்லை.

சென்னையில் "லலிதபிரசோனதயா அச்சகம்" என்று ஓர் அச்சகம் 1886 முதல் நடந்து வந்தது. அவர்கள் இவ்விதழை வெளியிட்டார்கள். இதழ் நாலு மாதம்தான் வெளிவந்தது என்றாலும், அச்சகம் 1888இலிலும் நடந்துகொண்டிருந்தது. இந்து சமய நூற்களை அச்சிட்டு வெளியிட் டார்கள். அந்நூற்களின் ஆசிரியரான உ.தியாகராயர் "லலிதபிர சோனதயா"வின் ஆசிரியராகவும் இருந்திருக்கக்கூடும்.

சுதேசமித்திரன் வாரம் இருமுறை

1887 பிப்ரவரி முதல் "சுதேசமித்திரன்" வாரம் இருமுறையாக வெளி

1. "தட்சண இந்திய சரித்திரம்" 1919

சுதேசமித்திரன்.

பிரதி திங்கட்கிழமைதோறும் பிரசுரம் செய்யப்படும்.

புஸ்தகம்-௧] சென்னபட்டணம்:—வ்யய-ளூ ஆடி-மீ ௨௬-௨-க்கு ௧௮௮௬-ளூ ஆகஸ்டு-மீ ௯-௨. [இலக்கம்

பலசரக்கு.

[illegible]

சமாசாரக்குறிப்பு.

[illegible]

கடிதங்கள்.

[கடிதமெழுதியோருக்கு அறிக்கை]

வியப்புற் றன்மை யுணர்ந்தோன்.—உமது கடிதம் போடப்படத்தக்கதல்ல.

இந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் ஒற்றுமை.

[illegible]

போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜெட்.

[illegible]

சுதேசபாஷா பத்திரிகைகள்.

[illegible]

சென்னை மகாஜன சபை.

[illegible]

9.8.1886 இதழ் (உதவி - இரகமி)

வந்தது.

அதற்கு ஐந்தாண்டு கழித்து, 1892 ஆம் ஆண்டு அறிக்கைகள் வாயிலாகப் புதிய நாளிதழ் ஒன்றைக் கண்டுபிடிக்க முடிந்தது.

1892 சூலையில் "தேச ரட்சனி" என்ற நாளிதழ் சென்னையில் வெளிவந்துள்ளது. இதன் விற்பனை நாள்தோறும் 1000 படியாக உயர்ந் திருந்தது குறிப்பிடத்தக்கது. (அப்பொழுது "சுதேசமித்திரன்" வாரம் இருமுறை வெளிவந்தது. விற்பனை 850 படிகள்).

"தேச ரட்சனி" சூலையில் 27,29 தேதிகளிலும், ஆகஸ்டில் 3,4,6,8,9, 10,11,13,15,16,17,18,19,22,23,24,25,26,29,30, செப்டம்பரில் 1,2,3 தேதிகளில் வெளிவந்தது. அத்துடன் அதன் வாழ்க்கை முடிந்தது!

தேச பரிபாலினி

அடுத்த (1893) ஆண்டிலேயே மற்றொரு நாளிதழ் வெளிவருகிறது. சென்னையில் • வெளிந்த இந்த நாளிதழின் பெயர், "தேச பரிபாலினி" என்பது. விற்பனை 240 படிகள்.

"தேச பரிபாலினி"யின் முதல் இதழ் 1893 பிப்ரவரி 2இல் வெளிவந்தது. தொடர்ந்து 3,4,6,7,8,9,10,11,13,14,15,16. பெயருக்கு ஏற்ப நாட்கணக்கில் வெளிவந்ததுடன் சரி!

சுதேசமித்திரன் வாரம் மும் முறை

1897 சனவரியில் "சுதேசமித்திரன்" வார மும்முறை இதழ் தொடங்கப் பட்டது. சு.மி. வாரம் இருமுறை இதழும் தொடர்ந்து வெளிவந்தது.

சுதேசமித்திரன் நாளிதழ்

"தமிழில் முதல் நாளிதழ்" என்று இவ்வளவு காலமும் நாம் நினைத்துக்கொண்டிருந்த "சுதேசமித்திரன்", இத்தனை இதழ்களுக்குப் பிறகுதான் நாளிதழாக வெளிவருகிறது.

"சுதேசமித்திரன்" முதலில் வார இதழாகத் தொடங்கப்பட்டது. எப்பொழுது தொடங்கப்பட்டது என்பதில் வரலாற்று ஆசிரியரிடையே ஒத்த கருத்து இல்லை. 1880 என்று சிலரும், 1881 என்று வேறு சிலரும், 1882 என்று இன்னும் சிலரும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், சரியான ஆண்டு எது என்பது தாய்மொழி செய்தித்தாள் அறிக்கையின் வாயிலாகத் தெரியவருகிறது.

1881 நவம்பர் 20 அன்று "சுதேசமித்திரன்" வார இதழ் வெளிவந்தது. விற்பனை 1500 படிகள். 1887 பிப்ரவரியில் வாரம் இருமுறை ஆகிறது. விற்பனை 1,120 படிகள். 1897 சனவரியில் "சுதேசமித்திரன்" வார மும்முறை இதழ் தொடங்கப்பட்டது. ஆம், தனியே தொடங்கப்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், வாரம் இருமுறை "சுதேச மித்திரன்" பிப்ரவரி வரை வெளிவந்துகொண்டிருந்தது. மும்முறை இதழ் 900 படிகளும், இருமுறை இதழ் 900 படிகளும் விற்பனை ஆயின.

1900 ஆம் ஆண்டு சனவரி 5 ஆம் தேதி "சுதேசமித்திரன்" நாளிதழ் வெளிவந்தது.

அதற்குமுன் டிசம்பர் 29 முதல் வார மும்முறை இதழ் நிறுத்தப்பட்டது.

ஆனால், பின்பு தொடங்கப்பட்டது. (எப்பொழுது என்ற விவரம் இல்லை). 1922 ஏப்ரல் 26இல் வெளிவந்த "சுதேசமித்திரன்" வார மும்முறைப் பதிப்பில் மலர் - இதழ் எண்கள் 42 : 5 என்று உள்ளன.

"சுதேசமித்திரன்" நாளிதழ் பதிவு எண் 89. மும்முறைப் பதிப்புப் பதிவு எண் 998.

1921 முதல் "சு.மி" வார அனுபந்தம் வெளிவந்தது. (பதிவு எண் 89.) 1934 முதல் சு.மி. வாரப் பதிப்பும் தனியே வெளிவந்தது. பதிவு எண் - 2514.

1923இல் சு.மி. ஆங்கிலத்தில் வார இதழாக வெளிவந்தது.

இப்படி படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்த சு.மி. 1951இல் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தம் முதல் தள்ளாடத் தொடங்கியது. 1968, 1971, 1973 ஆம் ஆண்டுகளிலும் வேலை நிறுத்தம் நடந்து, இதழைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. அதன்பின் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சி அதை விலைக்கு வாங்கிக் கட்சி இதழாக நடத்தியது. தொடர்ந்து நடத்த முடியாமல், 1977இல் நிறுத்தப்பட்டது. சு.மி.க்கு சொந்தமான மிகப்பெரிய இரு கட்டடங்களுக்காக நில விற்பனையாளர் ஒருவர் இவ்விதழை வாங்கி, 1980 மார்ச்சு 30 முதல் மீண்டும் வெளியிட்டார். அதே ஆண்டு ஏப்ரல் 14இல் சு.மி நூற்றாண்டு விழா கொண்டாடினார்கள். அன்று வெறும் 8 பக்கத்துடன் சு.மி. நூற்றாண்டு விழா மலராக வெளிவந்தது. 1981 மார்ச்சு 31 அன்று வழக்கமான 4 பக்கத்துடன் 101 ஆம் ஆண்டு மலராக சு.மி. வெளிவந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் இதழின் கடைசி வெளியீடு இதுதான்!

நூறு ஆண்டு வெளிவந்த சு.மி. வரலாற்றை இதுவரை (1992) யாரும் முறையாக எழுதாதது வருந்தத்தக்கது. அதை எழுதினால் இந்திய விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் பங்கையும் முழுமையாக வெளியே கொண்டுவர முடியும்.

பை பத்திரிகை

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புகழ்பெற்ற இதழாசிரியராக விளங்கிய எஸ்.ஜி.இராமானுசலு "பழங்காலத்துப் பத்திரிகைக்காரர்கள்" என்ற கட்டுரையில் 1899 ஆம் ஆண்டு இறுதியில் "பை பத்திரிகை" என்ற தமிழ் நாளிதழ் வெளிவந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். "பை பத்திரிகை என்று ஒரு தம்பிடிக்கு ஒரு பத்திரிகையும் சென்னையிலே தமிழிலும், தெலுங்கிலும் புறப்பட்டது" என்று அவர் சொல்லுகிறார்.[1]

"தமிழ்ப்பொழில்" என்ற திங்கள் இதழில் "தமிழ் பத்திரிகைகளின் வரலாறு" என்ற தொடர் கட்டுரை எழுதிய ப.கல்யாணசுந்தரம் என்பவரும் இதை உறுதிப்படுத்துகிறார். "பை பத்திரிகை என்ற பெயரோடு ஒரு பைசா விலைக்கு ஒரு தினசரிப் பத்திரிகை சென்னையில் புறப்பட்டது"[2] என்கிறார், அவர்.

"தாய்மொழி செய்தித்தாள் அறிக்கை"யில் 1899 டிசம்பர் 31இல் "பை பேப்பர்" என்ற வாரம் இருமுறை தெலுங்கு இதழ் வெளிவந்த விவரம்

1. "அமிர்தகுணபோதினி" - 12.3.1929

2. "தமிழ்ப்பொழில்" - 1936 வைகாசி (துணர் 12, மலர் - 2).

இருக்கிறது. அதே இதழ் தமிழில் "பை பத்திரிகை" என்ற பெயரில் 17-2-1900 முதல் வாரம் மும்முறை இதழாக வெளிவந்த விவரமும் காணக்கிடைக்கிறது.

பிப்ரவரிக்குப் பிறகு சூலை மாத அறிக்கைதான் கட்டிடத்தில்[1] இருக்கிறது. சூலையில் தமிழ் - தெலுங்கு "பை பத்திரிகை" இரண்டுமே இல்லை. எனவே, பிப்ரவரிக்குப் பிறகு சூலைக்கு முன் இவ்விதழ் நாளித ழாக வெளிவந்திருக்கக்கூடும். அந்நாளைய இதழ்கள் "அவரைக்காய்ச் செடி போல ஆறு மாதத்து பயிர்தான்" என்று இராமானுசலுவே சொல்லுகிறார். நாளிதழ்களின் வாழ்நாளோ நாட்கணக்கில்தான். "பை பத்திரிகை"யும் ஓரிரு மாதமே நாளிதழாக வெளிவந்திருக்க வேண்டும்.

இந்த நாளிதழ் ஒரு பைசா விலையில் வெளிவந்ததால், "பை பத்திரிகை" என்று பெயர் பெற்றது. ("ஒரு பைசாத் தமிழன்" என்ற பெயரிலும் ஒரு வார இதழ் 1907இல் வெளிவந்தது). ஒரு பைசா என்பது 1/192 ரூபாய். அதாவது ஒரு ரூபாய்க்கு 200 இதழ்! இன்று 200 காசுக்கு ஓர் இதழ்!! (இன்றைய 200 காசு என்பது அந்நாளைய 400 பைசாவுக்குச் சமம். ஒரு ரூபாய்க்கு 192 பைசா. ஆனால், ஒரு ரூபாய்க்கு 100 காசுதான்).

1870இல் "சுலபசமாசார்" என்ற வங்காளி வார இதழ் ஒரு பைசாவுக்கு விற்கப்பட்டது. இதுதான் இந்தியாவின் முதல் ஒரு பைசா இதழ் என்ற தவறான வரலாறு உண்டு. 1859இல் வெளிவந்த "தர்மப்பள்ளி போதம்" என்ற தமிழ்த் திங்கள் இதழ் ஒரு பைசாவுக்கு விற்கப்பட்டது. (ஆண்டுச் சந்தா 1 அணா. அதாவது 12 பைசா). இந்தியாவில் ஒரு பைசாவுக்கு விற்கப்பட்ட முதல் இதழ் இதுவே. "பை பத்திரிகை"தான் ஒரு பைசாவுக்கு விற்கப்பட்ட முதல் நாளிதழ். 1887 இல் "சத்தியதூதன்" என்ற தமிழ்த் திங்கள் இதழ் ஒரு பைசாவுக்கு விற்கப்பட்டது. ஒரு பைசாவுக்கு விற்கப்பட்ட நாளிதழ், "பை பத்திரிகை" மட்டுமே.

தினவர்த்தமானி

1855 முதல் சென்னையில் வார இதழாக வெளிவந்த "தினவர்த்தமானி" ஒரே நேரத்தில் தமிழிலும் தெலுங்கிலும் வெளிவந்தது. 1861 இல் வெளிவந்த இதன் தெலுங்குப்படி ஒன்று இலண்டனில் பிரிட்டீசு நூலகத்தில் இருக்கிறது. நூலகப்பட்டியலில் "தினவர்த்தமானி சென்னை, நாளிதழ்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது.[2]

இந்தப் பட்டியலை ஆதாரமாகக் கொண்டு, முனைவர் ஜே.மங்கம்மா "இந்தியாவில் நூல் அச்சடிப்பு" என்ற தனது ஆங்கில நூலில் (1975) "தினவர்த்தமானி"யை நாளிதழ் என்று குறிப்பிடுகிறார்.

கிரகாம் ஷா, சலீம் குரோசி ஆகியோர் தொகுத்த "தென் ஆசிய இதழ்கள்" என்ற பட்டியலிலும் "தினவர்த்தமானி" நாளிதழ் என்றே குறிக்கப்பட்டுள்ளது!

"தினவர்த்தமானி"யை நாளிதழாகக் குறிப்பிடும் வரலாறும் இருக்கத் தான் செய்கிறது. 1935இல் விளாங்குறிச்சி நா.மருதாசலம் "இந்தியப்

---

1. பைண்டிங்

2. தினவர்த்தமானி (தெலுங்கு), சென்னை, நாளிதழ். B.L.OP. 218 (5) எண் 272 (1861)

பத்திரிகைத் தொழிலியல்" என்ற தமிழ் நூலை எழுதியிருக்கிறார்.[1] அதில் "தினவர்த்தமானி"யை நாளிதழ் என்றே குறிப்பிடுகிறார். "சென்னைத் தமிழ் தின்சரிகளை எடுத்துக்கொண்டால், இராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை பி.ஏ.பி.எல்., அவர்களை ஆசிரியராய் கொண்ட, 'தினவர்த்தமானி' என்பதே முதல் தினசரி என்று எண்ணுகிறேன். அது நாள் வெளியீடு ஆகும்" என்கிறார், அவர். சி.வை.தாமோதரம் பற்றி "இந்து" ஆங்கில இதழில் வெளிவந்த ஒரு கட்டுரையில்கூட "தினவர்த்த மானி"யை நாளிதழ் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதழாளரான கி.வா.ஜகந்நாதனும் "தினவர்த்தமானி"யை நாளிதழ் என்றே கூறுகிறார்.[2]

ஆனால், 1860களில் வெளிவந்த தாய்மொழி செய்தித்தாள் அறிக்கை அனைத்திலும் "தினவர்த்தமானி" வார இதழ் என்றே குறிக்கப்பட்டிருக்கிறது. ஜான்மர்டாக்கும் (1865) வார இதழ் என்றே குறித்துள்ளார். பிரிட்டீசு நூலகத்தில் இருப்பது 1861 ஆம் ஆண்டு இதழ். இதழின் எண் 272. அந்நாளில் சில இதழ்களில் மலர் - இதழ் குறிப்பிடுவது இல்லை. தொடங்கிய நாளிலிருந்து இதழ் எண் மட்டும் தொடர்ந்து குறிப்பிடுவார்கள். அப்படிப் பார்த்தால், 1855இல் தொடங்கப்பட்ட "தினவர்த்த மானி" வார இதழாக வெளிவந்திருந்தால்தான் 1861இல் 272 ஆவது இதழாக இருக்க முடியும். (ஆண்டுக்கு 52 இதழ்). புதுவைப் பெரும்புலவர் செ.சவரிராயலுவின் பாடல் தொகுதியில் (1904) அவரது பாடல்கள் - செய்திகள் வெளிவந்த இதழ்களின் பட்டியல் ஒன்று கொடுக்கப் பட்டிருக்கிறது. அப்பட்டியலில் சென்னை "தினவர்த்தமானி" 1861 சனவரி 24 நாளிட்டு இதழ் எண். 277 என்று குறிக்கப்பட்டுள்ளது. இதுவும் "தினவர்த்தமானி" வார இதழ்தான் என்று உறுதிப்படுத்துகிறது. (இதன்படி பார்த்தால், 1854 அக்டோபரில் "தினவர்த்தமானி" தொடங்கப் பட்டிருக்க வேண்டும். இதையே 1855 என்று ஜான் மர்டாக் குத்துமதிப் பாகக் குறிப்பிட்டிருக்கக்கூடும்).

1886 ஆம் ஆண்டு இலங்கையிலும் ஒரு "தினவர்த்தமானி" வெளிவந்தது. அது "இலங்கை தினவர்த்தமானி" என்று பெயர் சூட்டிக்கொண்டது. ஆசிரியர் ரி.எஸ்.இராசு. இலங்கையின் முதல் தமிழ் நாளிதழ் இதுதான் என்று சொல்லப்படுவது உண்டு.[3] ஆனால், மலையகத் தொழிற்சங்கத் தலைவர் கோ.நடேசன் ஆசிரியராக இருந்து 1921 முதல் 1923 வரை நடத்திய "தேசநேசன்" என்ற இதழ்தான் இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் என்று அந்தோணி ஜீவா சொல்லுகிறார்.[4] நடேசன் தமிழ்நாட்டிலுள்ள தஞ்சையைச் சேர்ந்தவர். 1920இல் இலங்கைக்குப் போனார்.

---

1. இதழியல் பற்றி இந்திய மொழியில் எழுதப்பட்ட முதல் நூல், இது.

2. ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர் - 1981

3. நான்காவது உலகத்தமிழ் மாநாட்டு மலர் - 1974. யாழ்ப்பாணம். ஆ.சிவநேசச் செல்வன்.

4. "தினகரன்" (கொழும்பு நாளிதழ்) வார மஞ்சரி - 29.9.1991. முதலாவது சிங்கள நாளிதழ் 1895இல் வெளிவந்தது. அதன் பெயர் "தினபத்தபிரவூர்த்தி". ஆசிரியர் செயவீரபண்டார. 1908 வரை வெளிவந்தது (வை)

1921இல் யாழ்ப்பாணத்தில் "தேசாபிமானி" (ஆசிரியர் மாசிலாமணி) என்ற நாளிதழ் வெளிவந்ததாக "இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள்" என்ற நூலில் கோப்பாய் சிவம் குறிப்பிட்டுள்ளார். இதே நூலில் வேறோரிடத்தில் 1930 இல் க.அ. மீரா முகைதீன் தொடங்கிய "தினத் தபால்" என்ற இதழ்தான் ஈழத்தின் முதலாவது செய்தித்தாள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

1893 இல் கொழும்பில் வெளிவந்த "இசுலாம் மித்திரன்" ஒரு நாளிதழ் என்று இலங்கை இதழாளர் "தமிழ் மணி" மானா மக்கீன் சொல்லுகிறார்.

1928இல் சிங்கப்பூரில் இருந்து ஒரு "தினவர்த்தமானி" வெளிவந்தது. பெயருக்கு ஏற்ப இது நாளிதழாகவே வெளியிடப்பட்டது.

நாளிதழ்

1889இல் "தத்துவ வாதம்" என்ற நூல் வெளிவந்தது. சை.இரத்தினம் (புனைப் பெயர் "ஆரியன்") எழுதியது. "தமிழ் நாளிதழ் ஒன்றிலிருந்து எடுத்து அச்சிடப்பட்ட விவாதத்துக்குரிய ஒரு நூல்" என்று, "தமிழ் நூல் விவர அட்டவணை" (தொகுதி - 1, பகுதி - 4) இந்நூல் பற்றிக் குறிப்பிடுகிறது.

அந்த நாளிதழைத் தேடிக்கண்டு பிடிக்க நான் முயற்சி செய்த பொழுதுதான், இக்குறிப்பு தவறு என்று தெரிந்தது. "சுதேசமித்திரன், பிரம்மவித்தியா, இந்து ஜனபூசணி ஆகிய பத்திரிகைகளிலிருந்து எடுத்தது" என்று நூலின் அட்டையிலேயே அச்சிடப்பட்டிருக்கிறது.

தமிழில் முதல் இதழ்கள்

முதல் நாளிதழ் – "தினோதய வர்த்தமானி" (1882)

முதல் வார இதழ் – "புதுவை அரசிதழ்" (1823)

முதல் வாரம் இருமுறை இதழ் – "புனித ஜார்ஜ் கெசட்டு" (1832)

முதல் வாரம் மும்முறை இதழ் – "காலக்கணிதன்" (1883)

முதல் மாத இதழ் – மாசத்தினச் சரிதை (1812)

முதல் மாதம் இருமுறை இதழ் – சத்தியதூதன் (1835)

முதல் மாதம் மும்முறை இதழ் – "இராசவிருத்தி போதினி" (1833)

முதல் காலாண்டு இதழ் – யாழ்ப்பாணம் திருச்சபை இதழ் (1815)

முதல் அரையாண்டு இதழ் – பிரம்மவித்தியா (1894)

முதல் ஆண்டு இதழ்: சாமியின் ஆண்டு இதழ் (1885) *

5. பட்டியல்

19 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இதழ்களின் பட்டியலைக் கொடுக்குமுன் சில சொற்கள் சொல்லவேண்டும்.

முதலில் இந்தப் பட்டியலுக்கான ஆதாரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். முதல் ஆதாரம், மர்டாக் பட்டியல்தான். பேராசிரியர் சீனி. வேங்கடசாமி, பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், தமிழறிஞர்கள் "சோமலெ", மா.இரா. இளங்கோவன் போன்றவர்கள் பட்டியல்களும் பயன்பட்டன.

பிரிட்டீசு அருங்காட்சியகத் தமிழ் நூற்கள் பட்டியலிலும் சில இதழ்களின் பெயர்கள் கிடைத்தன.

தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பக நூலகம், மறைமலையடிகள் நூலகம், ரோசா முத்தையா தொகுப்பு, மீ.சு.இளமுருகு பொற்செல்வி தொகுப்பு போன்றவற்றில் சில பழைய இதழ்கள் இருக்கின்றன.

பழைய நூற்களில் சிற்சில இடங்களில் சில இதழ்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு வெளியிட்ட தமிழ்நூல் விவரப்பட்டியலிலும் சில இதழ்களைக் கண்டுபிடிக்க முடியும். அதில் இதழ்களின் பட்டியல் ஒன்றும் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பெரியபுதையல்!

மிகப் பெரிய புதையல், சென்னை எழும்பூரிலுள்ள தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம்தான்.

சென்னை மாநிலத்திலுள்ள அச்சகங்கள், அவற்றில் அச்சாகும் இதழ்கள் பற்றி ஆண்டு அறிக்கை அனுப்பும்படி 1860இல் இந்திய அரசு, மாநில அரசைக் கேட்டது. அதன்பேரில் 1860-61இல் முதல் அறிக்கை அனுப்பப்பட்டது. ஆண்டு அறிக்கை பிறகு காலாண்டு அறிக்கையாக மாறியது.

இந்த அறிக்கைகள் இன்றும் (1992) தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் உள்ளன. காப்பக ஆணையரிடம் முறையாக விண்ணப்பித்து, அனுமதிபெற்று, ஆய்வாளர்கள் இந்த அறிக்கைகளைப் பார்க்க முடியும். முதலில் கல்வித்துறை ஆவணங்களிலும், பின்பு பொதுத் துறை ஆவணங்களிலும் இந்த அறிக்கைகள் உள்ளன.

இதில் என்ன பரிதாபம் என்றால், சில அறிக்கைகளைக் காணவில்லை. 1871 டிசம்பர் மாதத்துடன் முடியும் காலாண்டு அறிக்கையில், "அசல் சிம்லாவுக்கு அனுப்பப்பட்டது. நகல் கல்கத்தாவுக்கு அனுப்பப் பட்டது" என்ற குறிப்பு இருக்கிறது.[1]

சில அறிக்கைகள் அப்பளம் போல உள்ளன - கைபட்டால் நொறுங்கிப் போகும். எனவே, பார்வைக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். பயன் படாமலே மக்கிப் போவதைவிடப் பயன்பட்டு நொறுங்கிப் போவது மேல் அல்லவா? இவற்றுக்கு நகல் எடுத்து வைக்கலாமே?

---

1. அந்நாளில் இந்தியாவின் தலைநகராகக் கல்கத்தா இருந்தாலும், கோடை காலத் தலைநகராக சிம்லா விளங்கியது.

ஆவணங்களுக்குப் பட்டியல் இருக்கிறது. அந்தப் பட்டியலைப் பார்த்துத்தான் ஆவணங்களை எடுக்கவேண்டும். சில ஆண்டுகளுக்கான பட்டியல்கள் தவறிவிட்டன! எனவே, அந்த அறிக்கைகளையும் பார்க்க முடியாது!

1867 ஆம் ஆண்டு நூற்பதிவுச் சட்டம் வந்தது. அந்த ஆண்டு முதல் சென்னை மாநிலத்தில் அச்சான நூற்கள், இதழ்கள் ஆகியவை அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டு, ஒரு பேரேட்டில் பதிவு செய்யப்பட்டன. ஆண்டுவாரியான இந்தப் பதிவு ஏடுகள் ஆவணக் காப்பக நூலகத்தில் இன்றும் (1992) இருக்கின்றன. தூசிகூடத் தட்டாமல், அப்படியே பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்! இந்த ஏடுகளிலும் பல இதழ்களின் பெயர்களைக் காணமுடிகிறது.

எல்லா ஆண்டுகளுக்குமான பதிவேடுகள் இருந்தாலும், சில ஏடுகள் நொறுங்கிப் போய்விட்டன.

அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்ட இதழ்கள் மட்டுமே இந்த ஏடுகளில் பதிவு செய்யப்பட்டன. "நூல் பதிவுச் சட்டம்" என்று பெயர் இருந்ததால், ஏராளமான இதழ்கள் பதிவு செய்யப்படவில்லை. செய்தி இதழ்களுக்கு இச்சட்டத்திலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டிருந்தது.

இதழின் பெயர், ஆசிரியர், அச்சிட்டவர், வெளிவந்த நாள், பக்கம், விலை ஆகிய விவரங்கள் இந்தக் குறிப்பேட்டில் உள்ளன.

நூல்பதிவாளரின் காலாண்டு அறிக்கைகள் அரசிதழில்[1] வெளியிடப் பட்டன. மேற்சொன்ன விவரங்கள் இந்த அறிக்கைகளிலும் உள்ளன. சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் பழைய அரசிதழ்கள் இருக்கின்றன.

பக்கங்கள் அதிகமான பொழுது கூடுதல் இதழாக[2] இவ்வறிக்கைகள் வெளியிடப்பட்டன.

நூல்பதிவாளர் அறிக்கைகள் தொகுத்தும் தனி நூலாக வெளியிடப் பட்டுள்ளன. 1867–1889க்கு ஒரு தொகுப்பும், 1890–1900க்கு இன்னொரு தொகுப்பும் இருக்கின்றன. ஆனால், அறிக்கையில் உள்ள "இதழ்கள்" என்ற பகுதி, இந்தத் தொகுப்பில் இடம் பெறவில்லை!

இரகசிய அறிக்கைகள்

அன்றைய சென்னை மாநிலத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது ஆகிய மொழி இதழ்களில் வெளிவந்த செய்திகளை அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டுவர மொழிபெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். பின்பு இந்தியர் நடத்திய ஆங்கில இதழ்களில் இருந்தும் செய்திகள் எடுக்கப்பட்டு, அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பப்பட்டன!

மொழிபெயர்ப்பு அறிக்கைகள் "சொந்த மொழி செய்தித்தாள்கள் அறிக்கை" என்ற பெயருடன் 1874 முதல் அரசுக்கு வந்தன. முதலில் இருமாதத்துக்கு ஒருமுறை, பிறகு மாதம்தோறும், அதன் பின் மாதம் இருமுறை. இவை "மறைமுக அறிக்கைகள்" என்று குறிப்பிடப்பட்டன.

---

1. புனித ஜார்ஜ் கெசட்டு
2. சப்ளிமெண்டு

இந்த அறிக்கைகள் தொகுக்கப்பட்டு, கட்டிடம் செய்து, ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளில் இருந்தும் இதழ்களின் பெயர்களை எடுத்துக்கொள்ளலாம்.

இந்த அறிக்கைகளிலும் சில பக்கங்கள் சிதைந்துவிட்டன. சில பக்கங்களை "நேர்மையான" ஆய்வாளர்கள் கிழித்துக்கொண்டு போய் விட்டார்கள்! தொடக்கக் காலத்தில் தமிழ் இதழ்கள் பற்றிய அறிக்கையே இல்லை!

இதழின் பெயர், வெளிவந்த ஊர், நாள் ஆகிய விவரங்கள் அறிக்கை யில் உள்ளன. ஆசிரியர் பெயர் இல்லை. நூல் பதிவாளர் அறிக்கையில் இல்லாத ஏராளமான இதழ்கள் (குறிப்பாக செய்தித்தாள்கள்) இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

இதழ்களில் இருந்து எடுக்கப்பட்டச் செய்திகளும் இந்த அறிக்கை களில் உள்ளன. ஆனால், அவை ஆங்கில மொழி பெயர்ப்பு. அதை நாம் மீண்டும் தமிழ்ப்படுத்திக் கொள்ளவேண்டும். அருவி "வாட்டர் பால்ஸ்" ஆகி, அது 'நீர்வீழ்ச்சி' ஆன கதையாகத்தான் இருக்கும்! இருந்தாலும், அந்நாளையத் தமிழ் இதழ்களில் இடம்பெற்ற செய்திகள் பற்றி ஆய்வு நடத்துவோருக்கு இந்த அறிக்கைகள் நன்கு பயன்படும்.

அந்நாளில் வெளிவந்த தமிழ் நாளிதழ்களின் பெயர்கள், அவை என்றென்று வெளிவந்தன என்ற விவரங்கள் இந்த அறிக்கைகளில் மட்டுமே உள்ளன.

ஆண்டு வேறுபாடு

சில இதழ்கள் வெளிவந்த ஆண்டுகளில் அறிக்கைக்கு அறிக்கை வேறுபாடு இருக்கிறது. சில நேரம் ஒரே அறிக்கையில்கூட ஆண்டு வேறுபாடு காணப்படுகிறது.

ஆசிரியர், பக்கம், விலை, விற்பனை விவரமும் மாறுபடுகின்றன. ஆனால், நாளுக்கு நாள் இவை மாறுபடக்கூடியவைதான்.

இருந்தாலும், ஒருமுறைக்கு இருமுறை அல்ல மும்முறைகூட ஆதாரங்களை சரிபார்த்து இந்தப் பட்டியலைத் தயாரித்திருக்கிறேன்.

முயற்சிக்கு இடமுண்டு!

இதை முழுமையான பட்டியல் என்று நான் சொல்ல மாட்டேன். இன்னும் முயற்சிப்பதற்கு நிலறய இடம் இருக்கிறது. ஆய்வுக்கு முடிவு இல்லை அல்லவா?

நூலகங்களில் உள்ள பழைய இதழ்களை நான் பார்த்தேனே அல்லாமல், பக்கம் பக்கமாகப் புரட்டிப் படிக்கவில்லை. புரட்டினால் நொறுங்கிவிடும். ஆனாலும், தகுந்த பாதுகாப்பு செய்து கொண்டு பக்கங்களைப் படித்தால், வேறுசில சமகால இதழ்களைக் காணமுடியும். அந்நாளில் சமகால இதழ்களைப் பற்றி மதிப்புரை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் கிடைக்காத பல இதழ்கள் இலண்டனில் பிரிட்டீசு அருங்காட்சியகத்தில் உள்ளன. அவற்றின் நகல்களைப் பெற்று, இதே முறையில் சமகால இதழ்களைத் தேடலாம். புதுவை, காரைக்கால் பகுதியில் வெளிவந்த இதழ்கள் பாரிசு நூலகங்களில் உள்ளன.

"சுதேசமித்திரன்" பழைய இதழ்களைப் படம் (மைக்ரோ பிலிம்) எடுத்து

வைத்திருக்கிறார்கள். சென்னைப் பல்கலைக்கழக நூலகத்திலும், கல்கத்தா நாட்டு நூலகத்திலும் அவை உள்ளன. பொறுமையாக அமர்ந்து அவற்றைப் பார்த்தால், புதிய இதழ்களைப் பற்றிய விவரங்கள் கிடைக்க வாய்ப்புண்டு.

இந்திய நூலகத் தந்தை சீ.இரா.(எஸ்.ஆர்.) ரெங்கநாதன் அவர்கள் 1940 ஆம் ஆண்டில் தமிழ் நூற்பட்டியல் ஒன்று தயாரித்தார். 1854 முதல் 1935 வரை அச்சேறிய 50 ஆயிரம் பெயர்களைச் சேகரித்தார். இப்பட்டியலில் தமிழ் இதழ்களின் பெயர்களும் இருந்தன. செட்டிநாட்டரசர் (அப்பொழுது இளவரசர்) முத்தையாவின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட இப்பட்டியலை தலா 750 பக்கம் கொண்ட 3 தொகுதியாக வெளியிட சென்னை நூலகச் சங்கம் முயற்சி செய்தது. அது முடியாமல் போகவே, அரசாங்கத்தின் உதவியைச் சங்கம் நாடியது. அரசாங்கமும் உதவாததால், பட்டியல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதைக் காண இந்நூலாசிரியர் 1990இல் அப்பல்கலைக்கழகத்துக்குச் சென்ற பொழுது, அங்கு அப்படி ஒரு பட்டியலே இல்லை என்று சொல்லிவிட்டார்கள்! அப்பட்டியல் கிடைத்தால், சில புதிய இதழ்களின் பெயர்களாவது நமக்குக் கிடைக்கக்கூடும். இதில் மிகவும் வருந்தத்தக்கது என்னவென்றால், இப்பட்டியலிலிருந்து தமிழ் இதழ்களின் பட்டியல் ஒன்றை ரெங்கநாதன் தனியே தயாரித்திருந்தார்.

அதேபோல, சாகித்திய அகாதமிக்காகப் பேராசிரியர் லெ.ப.கரு. அவர்கள் தலைமையில் பேராசிரியர்கள் வெள்ளைவாரணார், மு.அருணாசலம், பழநி ஆகியோர் தமிழ் நூற்பட்டியல் ஒன்று தயாரித்தார்கள். இது இன்னும் வெளியிடப்படவில்லை. இந்தப் பட்டியலும் பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

பர்மா, மவுரீசுத் தீவு, ரீயூனியன், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இதழ்கள் வெளிவந்தன. ஆனால், அவை பற்றிய விவரங்களை அறிய இயலவில்லை.

இப்படியாக என் கைக்கும் கண்ணுக்கும் எட்டாத எத்தனையோ ஆதாரங்கள் இன்னும் இருக்கக்கூடும். ஐநூறு இதழ்களைப் பற்றிய விவரங்களைத்தான் என்னால் திரட்ட இயன்றது. "ஆறு நூறு" என்று ஆர் மேலும் முயற்சி செய்யப்போகிறாரோ!

ஏற்கனவே ஏராளமாக இழந்துவிட்டோம் என்று எண்ணுகிறேன். இப்பொழுதே சில இதழ்களின் பெயர்கள் தெரிகின்றனவே அல்லாமல், வேறு விவரம் கிடைக்கவில்லை. இனியும் தாமதித்தால், மேலும் இழப்புகள் ஏற்படுவது உறுதி. தாள்தானே? நீர் நெருப்பு மட்டுமல்ல, பூச்சிகளும் இரையாக்கிக்கொள்ளும். எனவே, தமிழ்நாடு அரசோ, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ தமிழ் இதழ்களைத் திரட்டும் பணியைத் தொடங்கவேண்டும்.

எனக்கு எட்டாத இதழ்கள் எங்காவது பரணில் நீடுதுயில் கொண்டிருக்கக்கூடும். "பழைய இதழ்களைக் கொண்டு வருவோருக்குப் பரிசு" என்று அறிவித்தால், அவை விழித்தெழுந்து, வெளியில் தலை காட்டக்கூடும்!

நாம் 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருக்கிறோம். 21 ஆம் நூற்றாண்டுக்குள் நுழையப் போகிறோம். எனவே, 20 ஆம் நூற்றாண்டுத்

தமிழ் இதழ்களைத் திரட்டும் பணியைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொழுதே தொடங்கலாம். 21 ஆம் நூற்றாண்டு பிறக்கும்வரை காத்திருக்க வேண்டாம்.

ஒரே பெயரில் சில இதழ்கள்

ஒரே பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. எனவே, ஒரே இதழின் பெயர் கால மாறுபாட்டுடன் மீண்டும் வருகிறதே என்று மயங்க வேண்டாம்.

அதேபோல, "அமிர்தவசனி" போன்ற இதழ்கள் இடையில் நின்று மீண்டும் வந்திருக்கின்றன. "உண்மை விளக்கம்" என்ற இதழ் 1861 இல் வெளிவந்திருக்கிறது. அதே ஆசிரியர் அதே இதழை 1872இல் மீண்டும் தொடங்குகிறார். 1885இல் இதே இதழை மீண்டும் தொடங்க அரசாங்கத் திடம் அறிவிப்புச் செய்திருக்கிறார். ஒவ்வொரு முறை தொடங்கப்பட்ட பொழுதும் அதை ஒரு புதிய இதழாகவே இப்பட்டியலில் காட்டி யிருக்கிறேன்.

தமிழ் கூறும் நல்லுலகம்

"தமிழ் கூறும் நல்லுலகம்" என்று எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டில் என்று மட்டுமல்லாமல், இலங்கை, சிங்கப்பூர், மலாயா முதலிய நாடுகளில் வெளிவந்த தமிழ் இதழ்களைப் பற்றிய குறிப்புகளையும் இப்பட்டியலில் சேர்த்திருக்கிறேன்.

"இராமாயணம்", "கந்தபுராணம்" என்று சில இதழ்கள் வெளிவந் துள்ளன. இவை இராமாயணம், கந்தபுராணம் போன்ற கதைகளை (அல்லது விளக்க உரைகளை) மட்டும் தொடர்ந்து வெளியிட்டு வந் துள்ளன. நிலையான பெயருடன் முறையான இடைவெளியுடன் வந் துள்ள இவையும் இதழ்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பிறமொழி இதழ்களில் இடையிடையே தமிழ் இடம் பெற்றது. அத்தகைய இதழ்களையும் இப்பட்டியலில் இணைத்திருக்கிறேன்.

"விண்டவர் கண்டிலர், கண்டவர் விண்டிலர்" என்றபடி, இப்பட்டி யலில் உள்ள பெரும்பாலான இதழ்களைக் கண்ணால் பார்த்தவர் எவரும் இலர்! பிற இதழ்கள், நூல்கள், முன்னோர் குறிப்புகள் கொண்டுதான் இப்பட்டியல் திரட்டப்பட்டிருக்கிறது.

இதழ்களுடன் உள்ள ஆண்டுகள் பெரும்பாலும் இதழ் தொடங்கப்பட்ட ஆண்டைக் குறிக்கும். ஆனால், சில நேரம் அந்த ஆண்டில் அந்த இதழ் வெளிவந்து கொண்டிருந்ததைக் காட்டும்.

நாணயம்

அந்தநாளில் ரூபாய், அணா, பைசா புழக்கத்தில் இருந்தன. 12 பைசா 1 அணா. 16 அணா 1 ரூபாய். 3 பைசா காலணா. (காலணா நாணயம் புழக்கத்தில் இருந்தது). 4 பைசா 1 துட்டு. ஒரு பைசாவை "கால் துட்டு" என்பார்கள். இரு பைசா அரைத் துட்டு. 6 பைசா "அரையணா" என்று சொல்லப்பட்டது. பைசாவை "சல்லி" என்றும் சொல்வதுண்டு. அதிலிருந்து "சல்லிப்பயல்" (சின்னப் பையன்) தோன்றியது. சிலரை "கால் துட்டுப் பெறாதவன்" என்பார்கள்.

—

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இதழ்களின் விலையை சில்லிங், கினி என்று ஆங்கில நாணயங்களிலும் குறித்திருந்தார்கள். பணம், சக்கரம் என்ற பழைமையான - அல்லது ஒரு பகுதியில் மட்டும் புழங்கிய நாணயங்களிலும் விலைகள் குறிக்கப்பட்டன. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா,. பர்மா, தென்னாப்பிரிக்காவுக்கு இதழ்கள் பெருமளவில் சென்றதால், இதழ்களின் விலையை அந்த நாட்டு நாணயங்களிலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

18 ஆம் நூற்றாண்டு

18 ஆம் நூற்றாண்டிலேயே இதழ்களில் தமிழ் இடம்பெறத் தொடங்கிவிட்டது. அப்பொழுது சென்னையில் வெளிவந்து கொண்டிருந்த "சென்னை கெசட்டு" போன்ற ஆங்கில இதழ்களில் தமிழும் இடம்பெற்றதை முன்பே பார்த்தோம்.

ஆனால், 19 ஆம் நூற்றாண்டில்தான் முழுமையான தமிழ் இதழ்கள் முதன் முதலில் வெளிவந்தன. அந்த இதழ்கள் பற்றிய விவரங்களை மட்டுமே இந்நூலில் திரட்டித் தொகுத்திருக்கிறேன். அவற்றை ஆண்டு வாரியாகப் பட்டியலிட்டு அளித்துள்ளேன்.

1802

அரசாங்க வர்த்தமானி

வாரம். (திங்கட்கிழமைதோறும்) கொழும்பு. முதல் இதழ் மார்ச்சு 15இல் வெளிவந்தது.

இலங்கை அரசிதழ். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகள் இடம்பெற்றன.[1] தமிழ்ப் பகுதிக்கு "அரசாங்க வர்த்தமானி" என்று பெயரிட்டிருந்தார்கள். "வர்த்தமானம்" என்றால், நடப்பு. நடப்புகளைத் தெரிவிப்பது, "வர்த்தமானி".

"இந்தியப் பத்திரிகைத் தொழிலியல்" என்ற நூலில் அதன் ஆசிரியர் வி.நா.மருதாசலம் இவ்விதழ் பற்றிக் குறிப்பிடுவது; "சிலோன் கெஜட்டு ஆரம்பத்தில் முப்பகுதிகளை உடைத்ததாயிருந்தது. ஒரு பகுதி ஆங்கிலத் திற்கும், ஒரு பகுதி சிங்களத்திற்கும், ஒரு பகுதி தமிழுக்குமாம். அம் மூன்றும் ஒன்றைப் போலவே மந்தத் தரத்துடன் திகழ்ந்தன. அவ்வெளி யீட்டில் கவிஞனுக்கெனவும் ஒரு மூலை ஒதுக்கப்பட்டிருந்தது".

தமிழ் கூறும் நல்லுலகில் முதல் தமிழ் இதழ் இதுவே. இதை 'இலங்கை வர்த்தமானி' என்றும் சொல்வதுண்டு

கலாநிதி க.கைலாசபதி தமது "ஈழத்து இலக்கிய முன்னோடிகள்" என்ற நூலில் அ.சதாசிவம் பற்றி எழுதும்பொழுது, "அவர் பல்லாண்டுகள் ஆசிரியராக விளங்கிய 'உதயதாரகை' பத்திரிகையையும், 'இலங்கை நேசன்', 'இலங்கை வர்த்தமானி' முதலிய பத்திரிகைகளையும் குறிப்பிடுதல் வேண்டும்" என்கிறார்.

---

1. கொழும்புவில் உள்ள இலங்கை அரசு ஆவணக் காப்பகத்தில் இதன் 3 ஆவது இதழ் (29.3.1802) இருக்கிறது. அதில் ஆங்கிலப் பகுதி மட்டும் இருக்கிறது. தமிழ், சிங்களப் பகுதிகள் இல்லை. இப்பொழுதும் இலங்கை அரசிதழில் தமிழ் இடம் பெறுகிறது.

1812

மாசத்தினச்சரிதை

மாதம். சென்னை. ஆசிரியர் – ம.ஞானப்பிரகாசம்.

மெய்யெழுத்துகளுக்கு ஒற்று இல்லாமல் "மாசததினசசரிதை" என்று இருக்கிறது. செய்திகளும் அப்படியே அச்சிடப்பட்டிருக்கலாம். ஒரு மாதச் செய்திகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டன.

இவ்விதழ் "மாசத்தினச்சரிதை"யின் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. இதே அச்சுக்கூடத்தில்தான் திருக்குறள் – நாலடியார் இரண்டும் 1812இல் அச்சாயின. இந்த இரு சங்க நூல்களும் அச்சேறியது இதுவே முதல் முறை. இந்த நூற்களிலும் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியில்லை.

1815

திருச்சபை இதழ்

காலாண்டு. யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் கிறித்துவத் திருச்சபை வெளியிட்ட இந்தக் காலாண்டு இதழ் பற்றி ஏற்கனவே "முதல் இதழ்" என்ற அதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு கிறித்துவ இதழ். கிறித்துவ சமயத்தைப் பரப்பியது.[1]

1823

புதுவை அரசிதழ்

வாரம். புதுவை. பிரெஞ்சு – தமிழ்.

"பிரெஞ்சு இந்திய அரசு நிர்வாக ஆவணம்" என்ற பெயரில் முதலில் 1823 இல் தொடங்கப்பட்டது. 1828இல் "பிரெஞ்சு இந்திய அரசு நிர்வாக சிற்றிதழ்" என்று பெயர் மாற்றப்பட்டது. மீண்டும் 1850இல் "பிரெஞ்சு இந்திய அரசிதழ்" என்று பெயர் மாறியது. அதில் நிர்வாகம், நீதித்துறை, வணிகம், இலக்கியம் ஆகியவை இடம் பெற்றன. 1954 இல் இந்தியாவுடன் புதுவை இணைக்கப்பட்டது முதல் "புதுவை அரசிதழ்" என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இவ்விதழ் புதுவை அரசு அச்சகத்தில் அச்சாயிற்று. அரசு அச்சகம் 1816 இல் நிறுவப்பட்டது. 1828 இல் தமிழ் எழுத்துகளும் வார்க்கப்பட்டன; சேர்க்கப்பட்டன. அது முதல் தமிழிலும் செய்திகள் வெளியிடப்பட்டன.

புதுவையில் முதல் அச்சகம் 1761இல் அமைக்கப்பட்டது. காவல்துறை ஆணையரின் அனுமதியில்லாமல் அரசியல் செய்திகளை அச்சிடக்கூடாது என்று 1778 ஆம் ஆண்டைய காவல் சட்டத்தின் 36,37 ஆம் பிரிவுகள் கூறுகின்றன.

அச்சகம் அமைக்கப்படுவதற்கு முன்பு அரசாங்க அறிவிப்புகள்,

---

1. முதல் சிங்கள இதழ் 1860 ஆம் ஆண்டில் வெளிவந்தது. "இலங்கா லோகயா" என்பது அதன் பெயர். திங்கள் இருமுறை. ஆசிரியர் – இரணசிங்கம். கொழும்புவை அடுத்த காலியிலிருந்து வெளிவந்தது.

AVIS

Madame la directrice de l'école laïque des filles, MM. les directeurs des écoles primaires centrales de garçons de la rue Royale et de la rue des Missions Étrangères et le personnel desdits établissements ont l'honneur de prier les parents des élèves, ainsi que le public, de bien vouloir assister à la distribution des prix qui aura lieu, le 10 juillet prochain, à 7 heures et demie du matin, dans une des salles de l'école primaire centrale de la rue des Missions Étrangères.

Le présent avis tiendra lieu d'invitation. 2—2

AVIS.

La distribution des prix du Collège colonial, laquelle devait avoir lieu le vendredi 12 juillet, est avancée au 8 juillet, à la même heure.

Les personnes qui auraient été oubliées voudront bien considérer le présent avis comme une invitation.

SERVICE DES CONTRIBUTIONS

Le public est prévenu qu'en exécution des clauses et conditions des cahiers des charges relatifs aux adjudications des divers droits indirects approuvés par M. le Gouverneur en Conseil les 1er août 1892, 13 juin, 18 août, 22 et 27 décembre 1894,

Il sera procédé à *l'adjudication sur folle enchère*, en cas de non paiement dans le délai voulu des termes échus et de non accomplissement des conditions imposées par lesdits cahiers des charges aux adjudicataires et à leurs cautions :

Le 6 juillet courant et les jours suivants, à trois heures de relevée, dans le local occupé par les bureaux des contributions, à Pondichéry, de la ferme générale d'introduction, de fabrication et de la vente des spiritueux ;

D° des débits de tabac établis en deçà de l'ancienne zone des joncans ;

D° de l'opium, du ganja et du banguy ;

D° du droit d'entrée sur les charrettes ;

D° des débits pour la vente du bétel.

2° Le 17 du courant à trois heures de relevée dans le local occupé par les bureaux des contributions à Pondichéry, des licences spéciales pour la vente des spiritueux, des débits pour la vente du callou ;

3° Le 17 du courant et les jours suivants, à deux heures de relevée, à *Bahour*, dans le bangalow du Gouvernement ;

4° Le 17 du courant et les jours suivants, à la même heure, à *Villenour*, dans le bangalow du Gouvernement ;

5° Le 17 du courant et les jours suivants, à la même heure, à *Oulgaret*, dans le bureau du contrôleur ;

Des licences de tabac et de callou établies dans les aldées de ces trois communes.

Ces adjudications, qui seront faites pour le restant de la durée de chacun de ces droits primitivement adjugés, auront lieu aux risques, périls et fortune des premiers adjudicataires et de leurs cautions, et conformément aux clauses et conditions des cahiers des charges précités, dont on pourra prendre communication au bureau des contributions indirectes tous les jours, aux heures de bureau, les dimanches et jours de fête exceptés.

Pondichéry, le 1er juillet 1895.

அமானி இறைவரிவிசாரணை செர்விஸ்

விளம்பரம்.

சகலவித அமானிபாத்தியதைகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஏலங்களுக்கு சம்பந்தப்பட்டதும் ௲௮௱௯௰௨-ம் ஆ அவுஸ்ட் ௴ ௧ உ ௲௮௱௯௰௪-ம் ஆ ஜூன் ௴ ௧௩ உ அவுஸ்ட் ௴ ௧௮ உ திசம்பர் ௴ ௨௨ உ ௨௭ உ இத்ததேதிகளில் தனி ஆலோசனை சங்கத்தில் ம-ள-ள-ஸ்ரீ குவர்னேர் துரையவர்கள் ஏற்றுக்கொண்டதுமான ஏலவுடன்படிக்கைகளின் நிபந்தனைகள் நிறைவேறும்பொருட்டு பின்வருமாறு எல்லாருக்கும் தெரிவிப்பது யாதெனில்.

குத்தகைக்காரர்கள் அவர்கள் ஜாமீன்தாரர்கள் தங்கள் குத்தகைகளுக்கு கட்டவேண்டிய கெடுவில் வாயிதா கட்டாதபடியாலும் மேற்படி ஏலவுடன்படிக்கைகளில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாதபடியாலும் பொல்லான்ஷேர்ஷ் மறுஏலம் போடப்படும்.

அதாவது :

௧-வது. காலை ஜூலை ௴ ௬ உ முதல் அதற்கடுத்த நாட்களிலும் பத்தியானம் மூன்று மணிக்கு புதுவை இறைவரிவிசாரணை பீரோவில் ... வெளியிலிருந்து கொண்டுவரவும் விற்கிறதற்கும் சாராயம் முதலானவைகளை தருவிக்கவும் சாராயக்கடைகளுக்கும் பழைய செந்நெல் எல்லைக்குட்புறத்தில் ஏற்பட்டிருக்கும் புகையிலைக் கடைகளுக்கும் குத்தகை அபினி கஞ்சா பாங்கு குத்தகை வண்டிவரி குத்தகை வெற்றிலை விற்பனை குத்தகை.

௨-வது. காலை ஜூலை ௴ ௧௭ உ அதற்கடுத்த நாட்களிலும் மத்தியானம்-௩-மணிக்கு புதுவை இறைவரிவிசாரணை பீரோவில் சென்னை சாராயக்கடைகள் கள்ளுப்பாக்கு கடைகள்

௩-வது. பாகூர் குவெர்ன்மா பங்களாவில் காலை ௴ ௧௭ உ முதலும் அதற்கடுத்த நாட்களிலும்.

௪-வது. வில்லியனூரில் குவெர்ன்மா பங்களாவில் வருகிற ௴ ௧௭ உ முதலும் அதற்கடுத்த நாட்களிலும்.

௫-வது. உழவர்கரையில் கோந்துரோலேர் பீரோவில் மேற்படி ௴ ௧௭ உ முதலும் அதற்கடுத்த நாட்களிலும் மத்தியானம்-௩-மணிக்கு மூன்று கொம்முயின்களிலும் சேர்ந்த கிராமங்களிலும் ஏற்பட்டிருக்கும் புகையிலைக்கடைகள், கள்ளுக்கடைகள்.

இந்த ஏலங்கள் முதல்லேலம்விட்ட ஒவ்வொரு பாத்தியதையின் மிச்சகாலத்தை முதல் ஏலம் எடுத்தவர்களுடையவும் அவர்கள் சாமீன்தாரர்களுடையவும் நஷ்டத்திலும் மேற்கண்ட ஏலவுடன்படிக்கைகளின் நிபந்தனைகள்படிக்கும் நடக்கப்படும். இதைப்பற்றிய மனதுள்ளவர்கள் திருவிழா நாட்கள் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்ற நாட்களில் பீரோ நேரங்களில் அமானி இறைவரிவிசாரணை பீரோவில் வந்து பார்வையிட்டுக்கொள்ளலாம்.

புதுவை, ௲௮௱௯௰௫-ம் ஆ ஜூலை ௴ ௧ உ 2—3

செர்னல் அபீசியல்" (புதுவை அரசிதழ்) 5.7.1895 இதழ் (ரோமன் ரோலந்து நூலகம், புதுவை)

ஆணைகள் தெருக்கள் தோறும் முரசு அடித்து அறிவிக்கப்பட்டன. ஒருவன் முரசு அடித்து மக்களைக்கூட்ட, ஒரு பிரெஞ்சு அதிகாரி ஒரு குதிரைமீது அமர்ந்து அரசு ஆணை ஒன்றை பிரெஞ்சில் படிக்க, அழகன் என்ற கணக்குப்பிள்ளை அதைத் தமிழ்ப்படுத்திக் கூறிய நிகழ்ச்சியை அனந்தரங்கம் தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். 1816 இல் அரசாங்க அச்சகம் அமைக்கப்பட்டதும் அரசுச் சட்டம், ஆணைகள் அறிவிப்புகள் இங்கு அச்சிடப்பட்டு, நகர் முழுக்க முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டன.[1]

1829

சுஜந ரஞ்சனி

இவ்விதழ் பெங்களூரில் வெளிவந்தது. "சித்திரங்காட்டி சத்தியம் நிறுத்திய கதை"[2] இவ்விதழில் தொடராக வெளிவந்தது. எனவே, இவ்விதழ் மாதம் ஒருமுறைக்குள் வெளிவருவதாகத்தான் இருந்திருக்க வேண்டும். மாதம் அல்லது மாதம் இருமுறை இதழ் என்று எடுத்துக் கொள்வது சரியாக இருக்கும்.

"ஜனம்" என்பது "ஜநம்" என்று எழுதப்பட்டது. ("ஜநவிநோதிநி") சு(ய)ஜனம் (சொந்த மக்கள்) என்பதை "சுஜனம்" என்று அந்நாளில் எழுதினார்கள். ("சு(ய)ஜன மனோரஞ்சனி", "சு(ய)தேசமித்திரன்", "சு(ய)ஜன அபிமானி". "ரஞ்சனி" என்றால் இனியவள் - அன்பானவள் என்று பொருள்.

இதே பெயரில் 1884 இல் பாளையங்கோட்டையிலும், 1893இல் புதுவையிலும் இதழ்கள் வெளிவந்தன.

1831

தமிழ் மேகசின்

சென்னை. சென்னை கிறித்துவ சமயக் கல்விக்கழக வெளியீடு. 1846 வரை நடந்தது. இவ்விதழைத்தான் "முதல் இந்தியப் பருவ இதழ்" என்று மர்டாக் பிழைபடக் குறிப்பிட்டுள்ளார். அவருக்குப் பின் எழுதியவர்களும் "முதல் தமிழ் இதழ்" என்று தவறாக எழுதினார்கள்.

இவ்விதழின் தமிழ்ப் பெயரை மர்டாக் குறிப்பிடவில்லை. இடைக் காலத்தில் "தமிழ்ப் பத்திரிகை" என்று எழுதினார்கள். இப்பொழுது "தமிழ் இதழ்" என்று நல்ல தமிழில் குறிக்கிறார்கள்.

இதன் பருவத்தை மர்டாக் குறிப்பிடவில்லை. பின்னாளில் மாதம் - காலாண்டு என்று சிலர் குறிப்பிட்டுள்ளதற்கு ஆதாரம் இல்லை.

1938 இல் சென்னையில் "இந்திப்பத்திரிகை" என்ற பெயரில் ஒரு தமிழ் மாத இதழ் வெளிவந்தது. இந்திப் பிரசாரசபை வெளியீடு.

---

1. புதுவை "கெசட்டர்".

2. 84 பக்கமுள்ள இக்கதையை எழுதியவர், பெங்களூர் மையக்கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த நாராயணசாமி. இதழில் எழுதியதை விரித்து, நூலாக வெளியிடப்பட்டது.

1832

புனித ஜார்ஜ் கெசட்டு

வாரம் இருமுறை. சென்னை. செவ்வாய், வெள்ளியில் வெளிவந்தது. 1831 இல் சென்னையில் அரசாங்க அச்சகம் அமைக்கப்பட்டது. (அப்பொழுது கிழக்கு இந்தியக் குழுமத்தின் ஆட்சி நடந்தது). 1832 சனவரி 4 முதல் சென்னை அரசிதழான "செயின்டு ஜார்ஜ் கெசட்டு" வெளியிடப்பட்டது. இதில் ஆங்கிலத்துடன் தமிழும் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் தலைமையகம் புனித ஜார்ஜ் கோட்டைக்குள் இருந்தது (இன்றும் இருக்கிறது). எனவே, இவ்விதழ் "செயின்டு ஜார்ஜ் கெசட்டு" என்று பெயர் பெற்றது.

பக்க எண் 6 மாதத்துக்குத் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டது. 6 மாத இதழ்கள் கட்டிடம் செய்தும் விற்கப்பட்டன. பொருளடக்கம் சேர்க்கப் பட்டது. 1861 சூலை – டிசம்பர் பருவத்தில் மொத்தம் 1254 பக்கம் வெளிவந்தது. 1871 இல் 9,919 பக்கம் வெளியாயிற்று. பக்கங்கள் பெருகப் பெருக காலாண்டுக்கு ஒருமுறை கட்டிடம் செய்யப்பட்டது. கூடுதல் (சப்ளிமெண்டு) இதழ்களும் தனியே கட்டிடம் செய்யப்பட்டன.

தொடக்க இதழ்களில் விலை விவரம் இல்லை. பின்பு காலாண்டுக்கு ரூ. 4 விலை வைக்கப்பட்டது.

1833

இராச விருத்திபோதினி

மாத மும்முறை, சென்னை. ஆங்கில இதழ்களில் வெளிவந்த செய்திகள் தமிழ்ப்படுத்தப்பட்டு இவ்விதழில் வெளியிடப்பட்டன. 1855 இல் வார இதழாக மாறியது. கிறித்துவப் பெரியார் ஜே.இலாங் 1855 இல் தயாரித்த ஒரு பட்டியலில் இவ்விதழ்தான் தமிழில் வெளிவந்த முதல் செய்தித்தாள் என்று குறிப்பிட்டுள்ளார். தெலுங்கிலும் இவ்விதழ் வெளிவந்தது. இருமொழி இதழ்களுக்கும் அரசாங்கம் உதவிப்பணம் வழங்கியது. ஆட்சேபணைக்குரிய விஷயங்களைப் பற்றி எழுதியதற்காக இவ்விதழ் மூன்றுமுறை அரசாங்கத்தின் கண்டனத்துக்கு ஆளாயிற்று. 1861 இல் மீண்டும் மாத மும்முறை ஆயிற்று. விற்பனை 286 படிகள்.

1835

மெட்ராஸ் கிரானிகல்

வாரம். சென்னை. இதே பெயரில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தனித்தனியே இதழ்கள் வெளிவந்தன.

"1832 இல் 'மெட்ராஸ் கிரானிகல்' என்ற பெயரில் தமிழிலும், தெலுங்கிலும் இதழ்கள் வெளியிட மூவர் கூட்டாக அரசிடம் அனுமதி வேண்டினர். இது 1835 இல் வெளிவந்ததாகத் தெரிகிறது. தமிழில் முதலில் வெளிவந்த செய்தி இதழ் என்று இதனை மாக்ரெட்டு பார்ன்சு என்பவர் குறிப்பிடுகிறார்" என்று தமிழ்க் கலைக்களஞ்சியத் துணை யாசிரியர் இரா. நடராசன் தெரிவித்துள்ளார்.[1]

---

1. "தமிழ் இதழ்கள்" – சோமலெ.

45th Tiruvilliadel—verse 38.

நிலத்தைக்கிளைத்துப்பிலங்காட்டி நிமிர்ந்ததூள்வான்
றலத்தைப்புதைபபத்தவியென்னவரவுநோக்கி
வலத்தைப்புகழ்ந்தான்வியந்தான்சிலைவாங்கிவாளிக்
குலத்தைச்சொரிந்தான் பொருனைத்துறைக் கொற்கை
வேந்தன.

. The only part which needs to be interpreted is that the Pandyan king is designated " the Lord of Gorrkai situated at a ford of the river Porunei" (*hodie* Tombrapoorny).

III.—*Memorandum regarding Syrian or Cylinder Roofs.—By Captain* GEORGE UNDERWOOD, *Madras Engineers.*

This description of roof, without any wood-work, is composed entirely of hollow earthen-ware cylinders (formed on the wheel) which are about 9 inches long, 5, 5$\frac{1}{2}$, or 6 inches diameter at the larger end, and about 3 or 3$\frac{1}{2}$ inches diameter at the smaller. They much resemble in shape a quart bottle with the neck cut off, the bottom being flat. The smaller diameter of these cylinders must of course vary according to the nature of the curve, very large semi-circular spans or segments of large circles requiring a less diminution than when the arcs are small. The centreings being prepared (and very common ones are sufficient), having commenced the intended arch with solid brick and chunam on the two side walls of the room, and having raised these portions to a height of about 3 feet or about $\frac{1}{3}$ of the curve on either side, so as to form solid haunches, the hollow cylinders are laid side by side in chunam along the length of the room with their small ends pointing inwards. On these, in the intervals between every two well imbedded in chunam, another row is now laid, and so on row on row (both sides of the arch rising equally), till the last course forced in on the top completes the whole. This last line of cylinders of course is vertical, and care must be taken during the construction to press every row well against the centreing,

"சென்னை இலக்கிய – அறிவியல் இதழ்"
தொகுதி 7. சனவரி- ஜூன் 1838. (சென்னைப் பல்கலைக் கழக நூலகம்)

வித்தியா தர்ப்பணம்

யாழ்ப்பாணம். சைமன் கதிரவேல்

யாழ்ப்பாண சுதந்திரன்

யாழ்ப்பாணம். நிக்கோலசு கூல்டு. ஆங்கிலம் - தமிழ். இப்பொழுது (1992) "ஈழ சுதந்திரன்" என்ற இதழ் வந்து கொண்டிருக்கிறது.

சத்தியதூதன்

மாதம் இருமுறை. சென்னை. 1846 இல் இத்துடன் **"தமிழ் மேகசின்"** இதழ் இணைக்கப்பட்டது. 1887 இல் **"சத்தியதூதன்"** என்ற பெயரில் சென்னையில் இன்னோர் இதழ் வெளிவந்தது.

மதராசு சென்னல் ஆப் லிட்டரேச்சர் அண்டு சயின்சு

அரையாண்டு இதழ். சென்னை. சென்னை இலக்கியச் சங்க வெளியீடு. ஆசிரியர் - இராபர்டு கூலி. ஆங்கில இதழ் என்றாலும் தமிழும் இடம் பெற்றது. **"மதராசு சென்னல்"** என்று குறிப்பிடுவது வழக்கம்.

1838

புதுவை நடுநிலை [1]

வாரம். புதுவை. பிரெஞ்சு - தமிழ். ஆசிரியர் - குர்ரீ.

புதுவையில் தனியார் தொடங்கிய முதல் இதழ், இது. முதல் அரசியல் இதழும்கூட. அரசாங்கச் சட்டங்கள், அறிவிப்புகள், ஆணைகளை இலவசமாக வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்விதழுக்கு அரசாங்கம் அனுமதி அளித்தது. இவ்விதழில் நீதிமன்ற விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. அதற்கானக் கட்டணத்தை அரசு தலைமை வழக்கறிஞர் அவ்வப்பொழுது நிர்ணயித்தார். ஆசிரியர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, விளம்பரக் கட்டணத்தை நிர்ணயித்து, 1849 ஆகஸ்டு 14 இல் அரசாங்கம் ஓர் ஆணை பிறப்பித்தது. அடுத்த ஆண்டில் (1850) இவ்விதழ் நின்றுவிட்டது. அதே ஆண்டில் தொடங்கப்பட்ட **"மொனிதேர் அபீசியல்"** என்ற இதழில் நீதிமன்ற விளம்பரங்களை வெளியிட அனுமதித்தும், அதற்குரியக் கட்டணத்தை நிர்ணயித்தும் 1850 மார்ச்சு 30 இல் அரசு புதிய ஆணை பிறப்பித்தது.

இந்திய ஞாயிறு

வாரம். புதுவை. ஆசிரியர் - வேங்கடராயர். தமிழாசிரியர் லெட்சுமணன் நிறுவிய அச்சகத்தில் இவ்விதழ் அச்சாகி வெளிவந்தது. புதுவையில் வெளிவ்ந்த முதல் தமிழ் இதழ், இது. **"புதுவை நடுநிலை"** இதழுக்கு விதித்த நிபந்தனையை இந்த இதழுக்கும் அரசு விதித்தது.

புதுவையில் 1838 இல் முதல் தமிழ் அச்சகம் அமைக்கப்பட்டது. 1875க்குள் மேலும் பத்துக்கு மேற்பட்ட அச்சகங்கள் தமிழில் அச்சிடும் வசதியுடன் தோன்றின.

---

1. ல இம்பார்டியல்டி பாண்டிச்சேரி.

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month, at one shilling a Quarter, payable in advance.

சஞ்சிகை. உ.] துன்மாசுக ௵. மாசி. ௪, திகதி. வியாழக்கிழமை. Thursday, February 4, 1841. [No. 3.

வாலாறு.

உதயதாரகைப் பத்திரத்திலே கற்கை, சாஸ்திரம், பொதுவான கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி மார்க்கம் முதலானவைகளைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும்.

அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே சிலவும் இங்கிலீசிலுமாயும், எட்டுப் புறமுள்ளதாக நான்காய் மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாதத்தின் முதலாம் மூன்றாம் வியாழக்கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப்படும்.

இதின் விலை, பத்திரம் ஒன்றுக்கு, உ. பென்ஸ் அல்லது மக. வெள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு.

இந்தப் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்தம் பணம் முன்னறக் கொடுத்து வைத்த, பத்து பெயருக்குச் செலவிடக்கூடிய காரியகாரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு, கஉ. பென்ஸ் அல்லது ௪. பணம். அல்லது மூன்றுமாதத்திற்கு முன்னறக் கொடுத்திருந்தால் விலை, ௯ பென்ஸ்.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னறக் கொடுத்தவைக்கும் காரியக்காரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு க. பென்ஸ், அல்லது அ. வெள்ளைச் சல்லி. மூன்றுமாதத்திற்கு முன்னறக் கொடுத்திருந்தால், விலை ஆறு பென்ஸ்.

☞ தபாற் செலவுக்கட்ட.

இந்த பத்திரத்துக்குக் காரியக்காரராய் இருக்க விரும்புகிறவர்கள் மானிப்பாயிலுள்ள அமெரிக்கன் மிஷியோன் அச்சுக்கூடத்திலுள்ள பிரசித்தக்காரனிடத்தில் எழுதிக் கேட்டுக்கொள்ளவும்.

காகிதம் எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவைகளை உதயதாரகைப் பத்திராதிபதி முகாமைக்காரருக்கு எழுதிக் கொள்ளவும்.

இந்தப் பத்திரங்களை யாழ்ப்பாணத்திலும் மதுரையிலுமுள்ள மிஷியோனக்கடைகளில் வாங்கலாம்,

TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and general Literature, and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *two pence* a number, or *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price is *one and a half pence* a number, or *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *one penny* a number, or *six pence* a quarter.

N. B. Postage extra.

Persons who wish to act as AGENTS, may apply to the Publisher, at the American Mission Press, Manepy, Jaffna.

CORRESPONDENTS may send their Communications addressed to "The Editors of the Morning Star," Batticotta, Jaffna.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. Grenier; POINT PEDRO, A. Holmes; CALPENTYN—John Woodhull; MADURA—Rev. F. D. W. Ward; DINDIGUL—Rev. J. J. Lawrence.

[BRIEF HISTORICAL VIEW OF INDIA.]

[Continued from page 10.]

இந்துதேசச் சரித்திரம்.—*Principal mountains in Hindustan.*

இந்துதேசத்தில் இமயம், மந்தரம், விந்தம், சாத்தாடி என்னும் விசேஷித்த மலைகளுண்டு. அவற்றுள், முதலாவது, இமயபருவதம் கிடைஅட்சம் (உ௰.) பாகையில் இந்து நதியிற்றலைக்கு, இந்துதேசத்தின் வடமேற்கெல்லையாகிய காசுமீரத்துக்கு வடமாகச் சென்று தெற்காக, (௯) மயில் தூரத்துக்கு கிழக்காய், பிரமபுத்திரநதிக்கப்பாலே இந்துதேசத்தின் மேற்காத்திலுள்ள அரக்கன் தேசத்தில் முடிகின்றது. இப்பருவதத்தில் பாறைப்பிரதேசம் ... இந்த மதத்தவர்களுடைய புராண காவியங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்பருவதம் வடபக்கத்திலுள்ள திபேத்துத் தேசத்தைத் தெற்குத் திசையிலுள்ள இந்துதேசத்தையும் பிரிக்கின்றது. காசுமீரத்துக்கு மேற்கே சதாஜித் தொடர்பாய் ஆப்கானிஸ்தேசத்துக் கூடாகச் செல்லுகிற இமயத்தின் ஓர் பகுதியை அந்நாட்டார் ஹிந்துகுஷ் (Hindu Coosh) என்று சொல்லுகிறார்கள். ரோமர் இம் மலையை இமோதுபருவதம் (Imout or Imaus which is the same with the Indian Caucasus) என்று சொல்லுவார்கள். இந்த மதத்தவர்கள் பரிசுத்த பொன்றென்றெண்ணுகிற கங்கை நதியும் இம்மலையில் ஓர் ஊற்றேயாம். மகத்துவம் பொருந்திய கங்கை நதியைப்பற்றி இனிமேல் சொல்லப்படும். இமயமலையின் மகத்துவத்தைப்பற்றிக் கந்தபுராணத்தில் சொல்லியிருக்கிற வசனமாவது,

பாறைபதி பரமேசுவரனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அன்புமுன் சக்தோரும் அன்புக் கத்தருடைய திருவடியும் தொழுதிருக்கவே செல்ல பாறைபதியம்மை கயிலாசத்தை விட்டு எழுந்தருளி இமயமலைச் சாரலையடைந்தாள். பனிமலைப்போல் பருப்பதமாய் விழுகின்ற இயல்பையுடைய பனி சூழ்ந்ததினாலே, அந்த இமய பருவதம், வெள்ளியங்கிரியைப்போல் பிரகாசிக்கும். அந்த இமயபருவதமும் அதின் மேல் சஞ்சரிக்கின்ற முகில்களும் பிரகாசிப்பது சமுத்திரக்கல்லும்பிய சுரிய சங்கையும் அதை உண்ட சத்தரையும் போலிருக்கும். கருமைபொருந்திய பிரகாசமான மின் தொடரோடு விளக்கப்பட்ட இமய பருவதத்து வண்டெல்லாம் கூடியாரப் பரிக்க அவராத வெண்டாமரை போலிருக்கும். பூமதேவி நாவியுக்குவிடை ஒரு மகாவடிய மேனியிலே முகிலையுத்தப் பரவக்கொமுடியிலுறுபச்சப்பொன்மலை ... தேவர்கள் இதையும்பொன்மலையென்று வாழ்த்து கூறுவாச்செய்தும் புறப்புறமாயிருலே மறைத்து வைத்ததுபோலவுமிருக்கும் அந்த இமயமலை. மேற்குக்கடலும் கிழக்குக்கடலும் பொருந்துக்கொடாமல், இடையிலே பல்நிவர்த்தின்றதுபோல அம்மலை நீண்டுபூமியளவுமோடியிருக்கும். தேவர்கள் தயிர்க்கடலைக் கடைந்தெடுத்த வெண்ணெய்த்திரளோ பாற்கடலின் அமுதமோ வைத்ததுபோல பனியிலே மூடப்பட்ட இப்பருவதத்திடமேலே ஒருவாவி இருக்கிறது என்பதாம.

[பாறைபதிப் படலம்.]

இங்கிலீசுக்காரர் அளவிட்டுக் கண்டபடி, இமயபருவதம் உலகத்திலுள்ள பருவதங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்ததாய், அதின் உயரமான கொடுமுடி, (உகூ) ஆயிரம் அடி அல்லது சமுத்திரத்தின் ஒப்புரவுக்கு மேலாக, (௫ ½) மயில் தூரத்துக்கு எட்டியிருக்கின்றது. இப்பருவதத்தின் முடிகளில் எப்பொழுதும் பனிக்கட்டிகள் மூடியிருக்கும். ஆகையால் இமயமென்னுஞ்சொல் பனிசூழ்ந்த மலையென்றர்த்தமாம். இம்மலையின் உயரமான சிகரத்தைச் சேர்வதற்கு பயமான அடிவாரத்திலுள்ள பள்ளத்தாக்கைப் பார்க்க அதிக குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் மலைகள் எப்பொழுதும் குளிர்ச்சியாயும் உறைந்ததாயுமிருக்கின்றன. தூரத்திலிருந்து பார்க்கிற ஒரு வழிப்போக்கருடைய பார்வைக்கு இம்மலை அடிவாரத்தில் வெண்மையான முகில்கள் செல்லுகிறதுபோலவும் உயரமாக வெள்ளியைப்போல் பனிமூடும்.

இரண்டாவது, மந்தரமலை பாகாற் தேசத்தில் பிரதான பட்டணங்களில் ஒன்றாகிய பகலப்பூருக்கு(Boglipore) வடபக்கம் போய் இருக்கின்றது. இது ஐந்து தொடர்ச்சியான மலைகள் சேர்ந்ததாய் இருக்கின்றது. இம்மலைகளெல்லாவற்றிலும் உயர்ந்த ஒரு கொடுமுடியுண்டு. இப்பருவதத்தின் இவ்விடங்களில் வாசஞ்செய்பவர்களுமில்லாமல், கற்கு விவரம் நிறைந்த காடுகளும், இவ்விடங்களிலே மரங்கள், செடிகள், பூக்காவனங்கள், தோப்புகளுமுண்டு. இங்கே அன்னப்பட்சி, குயில், மயில், முதலிய இராசப்பட்சிகள் கூவுகிறதும், மலைகள், நதிகள், சோலைகள், பச்சை நிறைந்த காடுகள், புற்றுகள் மூடியிருக்கிறதும், பார்வைக்குச் செவ்வையான காட்சியைக் காட்டுகின்றன. வேண்டிய கனிவர்க்கங்களைத் தரக்கூடிய விருட்சங்கள் மலைவெடிப்புகளில் முளைத்தெழும்பியிருக்கும். இம்மலையில் ஏறுவதற்கு குறுகலான படிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இப்பருவதத்

இதழ் 3 (4.2.1841) மறைமலையடிகள் நூலகம்

விருத்தாந்தி

வாரம். சென்னை. தெலுங்கு இதழ். தமிழும் இடம் பெற்றது.[1]

வித்யா விருத்தி விவரம் இல்லை.

1840

பால தீபிகை

காலாண்டு. நாகர்கோவில். சிறுவர் இதழ். **இந்தியாவில் வெளிவந்த முதல் குழந்தைகள் இதழ் இதுவே.**

பொதுஜன பிரசாரணி

மாதம். சென்னை. ஆசிரியர் - நாராயணசாமி. ஆங்கிலம் - தமிழ். ஆங்கிலப்பெயர் **"நேடிவ் சர்குலர்"**[2] பின்பு இவ்விதழ் "மதராசி" என்ற இதழுடன் இணைந்தது. **"மதராசி"** காலத்தில் **"மக்கள் நண்பன்"** என்ற ஆங்கில இதழும் வெளிவந்தது.

1841

உதய தாரகை

மாதம் இருமுறை. யாழ்ப்பாணம். தமிழ் - ஆங்கில இருமொழி அறிவியல் இதழ். அமெரிக்கத் திருச்சபை வெளியீடு. மதுரையிலும் அமெரிக்கத் திருச்சபை இவ்விதழை விற்பனை செய்தது. நூற்றாண்டு விழா கொண்டாடி, இப்பொழுதும் (1992) வெளிவருகிறது. தமிழ்ப் பகுதியின் முதல் ஆசிரியர் - சிற்சபேசன். இதுதான் இலங்கையின் முதல் தமிழ் இதழ் என்று தவறாகக் கூறப்பட்டு வந்தது. 1865 இல் **"உதயதாரகை அநுபந்தம்"** ஒன்று வெளிவந்தது.

கிறித்துவர்களுக்கு ஆதரவாக "உதய தாரகை" இயங்கியது. இதைக் கண்டித்து ஆறுமுக நாவலர் "இலங்கை நேசன்" இதழில் எழுதினார். அது-

> "பத்திரிகையினது கடமை யாது? சனங்களுக்குப் பொது நன்மை செய்வது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக்கள், கிறித்துவர்கள், மகமதியர்கள் என்கிற சனங்கள் இப்பொழுது இரண்டு மூன்று வருஷகாலம் என்ன நிலையில் இருக்கிறார்கள்? துவையினந் துரையுடைய சிநேகிதர்களாகிய சில உத்தியோகத்தர்கள் ஒழிந்த மற்றச் சனங்களெல்லாம் துவையினந் துரையினாலும் அவர் கீழுத்தியோகத்தர்களாலுந் துன்பமே அனுபவிக்கிறார்கள். சனங்களுடைய பணங்கொண்டு நடத்தப்படுகின்ற 'உதய தாரகை' இதிலே தன் கடமையைச் செய்கின்றதா? இல்லை. பின் யாது செய்கின்றது? துவையினந் துரைக்குச் சார்பாகச் சனங்களுக்கு மாறாகப் பொய் வார்த்தையே பேசுகின்றது".

1923 இல் இதே பெயரில் சிங்கப்பூரில் இருந்து ஒரு மாத இதழ் வெளிவந்தது.

உதயாதித்தன்

மாதம். கொழும்பு. சைமன்காசி. இலங்கையில் ஒரே ஆண்டில்

---

1. "சென்னையில் இந்திய எழுச்சிக்குழந்தைய இதழ்கள்" - முனைவர் து.சதாசிவம். 2. "விவேக போதினி" - மார்ச்சு, 1918.

THE

MISSIONARY GLEANER.

சுவிசேஷபிரபலிவிளக்கம்.

VOL. XXIV.

Nagercoil:
PRINTED AT THE LONDON MISSION PRESS,
FOR THE SOUTH TRAVANCORE TRACT AND BOOK SOCIETY.
1865.

వర్తమానతరంగిణి.

శుభకృన్నామసం॥ ఆషాఢ. బ ౬. గురువారము, ౬౭

[సూం] ప్రతిగురువారమున్ను ప్రాతఃకాలమున ప్రచురమవును, [సంఖ్య ౮]

సంగీ-చందాహూహాయి-౧ } ౧౮౪౨-న. జూలై నెల. ౨౮-తేది { సం॥గకి-చందాహాయాలు-౦
ముందుగాయివ్వవలసినది. } ఆదివారం-౦౫ తేది { ముందుగాయివ్వవలసినది.

ప్రకటనలు.

ప్రకటన

...టి దేశములో నుండే వారు పదినూం...న గాకుండా యేకముగా చేరినా పత్రికకు కట్టగా సరరహే పదిమందికిన్ని యెవ...బనయినా తెప్పించుకోనే పక్షము మరదు...ంటి దరఖాస్తులు చేసిన వారికి పోస్టుఫ్రీ ...ర్తమాన తరంగిణి పంపించడమౌను - ...నికి తక్కువ గాకుండా చేరి వకటిగా తె...కొంటె వకనెల పోస్టుఫ్రీగానున్ను వక...రింగు పోస్టుగానున్ను అంపించడము

వర్తమానతరంగిణి.

౧౮౪౨ సం॥ జూలై నెల ౨౮ తేది,

గురువారము.

— • —

మచిలీపట్టణము గుంటూరు యీ దేశములలో కొలకిరి వర్షములు కు...యింకమంచివర్షములు కురియడానకు ...నముగా దేశము కొంతమట్టుకు చల్లగా ...డనివిన్నాము,.

— • —

కడప బళ్లారి,

...దేశములలోనుండ మాస్నేహితులు పెనిమి...కిన్ని వ్రాసిన వుత్తరములవలన అచ్చట మారిసుముష్టులున్ను వరిజ్వరములున్ను స్ఫోటకములున్ను బలమైజనులకు చాలా తొందరగా వుండే టట్టు తెలియవస్తున్నది,

— • —

నిప్పు.

సింహాద్రిపేటలో చేరిన నరసింగపురములో యేదోవక హేతువవలన మొన్నటి మంగళవారముపగులు సుమారు ౧౪ గంటలకు - రెండు మాలగుడిశెలు నిప్పంటగిలి కాలి పోయినట్టున్ను దైవవశాత్తున జీవనష్టమునేమిన్ని లేనట్టున్ను అయితే కొంత సామానులున్ను బట్టలున్ను తగలబడిపోయినట్టున్ను యింటలో అక్కడవుండే కొందరు నీళ్లుపోసి ఆర్పినట్టున్ను వినడములో మేము నిండా సంతోషిస్తున్నాము,

— • —

కరోనరు గారివిచారణ.

౮ - రోజులకిందట ఉసుపలిక్లైజిలో వైష్ణవ ...నాక వైష్ణవస్త్రీ బిడ్డకన్నప్పటినుంచి దాహానికి నీళ్లయిన్ని అనుగుతూవస్తే యివ్వనందున సదరుహే యింటిలో వంట ...గదిన

“வர்த்தமான தரங்கிணி” (தெலுங்கு மலர் 1, இதழ் 8. 18.7.1842) கீழ்த்திசை சுவடிச் சாலை, சென்னை.

உதயமான இரண்டு தமிழ் இதழ்களும் "உதயம்" என்ற பெயரைக் கொண்டுள்ளன.

ஜனசிநேகன்: மாதம் இருமுறை. சென்னை.

1842

சுவிசேச பிரபல விளக்கம்

மாதம். நாகர்கோவில். ஆசிரியர் - தந்தை ஜே. டுத்தி. 8 பக்கம். விலை காலணா.

திருச்சபை ஊழியக் குறிப்புகளும், ஊழியம் பற்றி மற்ற இதழ்களில் இடம்பெற்ற செய்திகளும் இவ்விதழில் தொகுத்துத் தரப்பட்டன.

"மிசினரி கிளீனர்" என்பது இதன் ஆங்கிலப் பெயர். சிலர் தமிழ் - ஆங்கிலப் பெயர்களைத் தனித்தனி இதழாகக் குறிப்பிடுவார்கள். அது சரியல்ல.

"1840 அளவில் இவ்விதழ் வெளியிடப்பட்டது" என்று மர்டாக் குறித்துள்ளார். அதைக்கொண்டு இவ்விதழ் 1840 முதல் வெளிவந்ததாக எடுத்துக்கொள்வதுண்டு. ஆனால், இவ்விதழின் ஒரு தொகுதி பிரிட்டீசு நூலகத்தில் இருக்கிறது. அது 1865 இல் வெளிவந்த 24 ஆவது தொகுதி. இதன்படி பார்த்தால், இவ்விதழ் 1842 இல்தான் தொடங்கப் பட்டிருக்கிறது.

1904 முதல் "சுவிசேச பிரபல்ய வர்த்தமானி" என்ற மாத இதழ் திருநெல்வேலியில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

வர்த்தமான தரங்கிணி

வாரம் (வியாழன்) சென்னை. செய்தி இதழ். தமிழிலும், தெலுங்கிலும் வெளிவந்தன. மாதக் கையொப்பம் ரூ. 1. ஆண்டுக் கையொப்பம் ரூ. 10. "வர்த்தமான தரங்கணி" அச்சகத்தில் ஏராளமான தமிழ் நூற்கள் அச்சிடப்பட்டன.

"அரோரா"

மாதம் இருமுறை. சென்னை. அமெரிக்கத் திருச்சபை வெளியீடு. இவ்விதழின் தமிழ்ப்பெயரை இப்பொழுது அறிய இயலவில்லை. "ஆரோரா" என்றால், "வைகறை" என்று பொருள்.

1844

மதியம்

*மாத மும்முறை. தமிழ், தெலுங்கு, ஆங்கிலம். ஆசிரியர் - காசுலு லெட்சுமி நரசிம்மலு. "பொதுஜன பிரசாரணி" இதழை வாங்கி, "மதியம்" என்று பெயர் மாற்றினார். ஆங்கிலப் பெயர், **"கிரசண்டு"**[1]*

தமிழ்நாட்டில் இதழ் வாயிலாக மக்களின் கருத்தை முதன் முதலில் ஒன்று திரட்டியவர், காசுலு லெட்சுமி நரசிம்மலுதான். இவர் ஒருமுறை ஒரு காட்டு வழியே பயணம் செய்தார் என்றும், திருடர்கள் வழிமறித்தார்கள் என்றும், இவர் யார் என்பது தெரிந்ததும் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு, ஒரு பல்லக்கில் ஏற்றி, காட்டுக்கு வெளியில் கொண்டு வந்து விட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அவ்வளவு

---

1. "விவேக போதினி" – மார்ச்சு 1918

சிறந்த இதழாளராக விளங்கினார். 1863 இல் சென்னை மாநில ஆளுநர் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

முதல் இதழ் அக்டோபர் 2 இல் (காந்தியடிகள் பிறந்த நாள்) வெளிவந்தது. விற்பனை 10,704 படிகள்.[1] அந்நாளில் பத்தாயிரம் படிகள் விற்றது அருஞ்சாதனையாகும். 1861 இல் மாதம் இருமுறை இதழாகி, பின்னர் நின்றுவிட்டது. அப்பொழுது விற்பனை வெறும் 150 படிகள். இந்து அச்சகத்தில் அச்சாயிற்று.

1845

உரை கல்லு: மாதம். கொழும்பு.

1847

திராவிட தீபிகை: மாதம். சென்னை.

நற்போதகம்

மாதம். திருநெல்வேலி. "பாளையங்கோட்டை மிஷனரியாக திரு. நியூமன் ஐயர் அவர்கள் பொறுப்பேற்றதும் பல புது முறைகளைக் கொண்டு வரத் தொடங்கினார். சபை ஊழியர்கள், விசுவாசிகள் ஆகியோரின் இறைப்பற்றை வளர்க்க "நற்போதகம்" (1847) என்ற பத்திரிகையைத் தொடங்கினார்" என்று, "பாலியர்நேசன்" 1991 பிப்ரவரி இதழ் தெரிவிக்கிறது. இது சிற்றிதழாக[2] வெளிவந்தது. ஆசிரியர் எட்வர்டு நியூமன்.

1848

சென்னையில் இருந்த அமெரிக்கத் திருச்சபை இந்த ஆண்டில் "இதவாதி" ("நல்லது சொல்வேன்") என்ற தெலுங்கு இதழை வெளியிட்டது. இவ்விதழ் சென்னையில் அச்சிடப்பட்டு, மசூலிப்பட்டினத்தில் வெளியிடப்பட்டது. இதன் 1862 ஆம் ஆண்டுத் தொகுதி ஒன்று பிரிட்டீசு அரும்பொருளகத்தில் இருக்கிறது. அந்நாளைய வழக்கப்படி இவ்விதழ் உறுதியாகத் தமிழிலும் வெளிவந்திருக்க வேண்டும். ஆனால், தமிழ் இதழின் பெயரை அறிய இயலவில்லை.

பாலியர் நேசன்

காலாண்டு. பாளையங்கோட்டை. பாளையங்கோட்டையில் திருச்சபை ஊழியராக நியூமன் பதவி ஏற்றதும், சிறுவர்களின் இறைப்பற்றை வளர்க்க இவ்விதழைத் தொடங்கினார் என்று "பாலியர் நேசன்" 1991 பிப்ரவரி இதழ் தெரிவிக்கிறது. 1850 இல் நியூமன் தன்னாடு திரும்ப, 1851 இல் இதழ் நின்றுவிட்டது. இவ்விதழுக்கு நல்ல வரவேற்பு இருந்த தென்றும், சிறுவர்கள் விரும்பி வாசித்து மகிழ்ந்ததாகவும் கடாட்ச புரம் திருச்சபை ஊழியர் ஜான் தேவசகாயம் தனது நாட்குறிப்பில் குறித்து வைத்துள்ளார்.

---

1. "இந்து" 6.1.1991 2. புல்லட்டீன்

MARCH. 1849. மார்ச்சு.

TAMIL

FRIENDLY INSTRUCTOR.

நற்போதகம்.

—o—

அட்டவணை :

இது

திருநெல்வேலியில் ஸ்தாபிக்கப்பட்ட சன்மார்க்கபுத்தகசங்கத்தாரால் பிரசித்தஞ்செய்யப்பட்டது.

௲௮௱௪௰௯.

இது இரண்டாவது இதழ். மார்ச்சு, 1849.

(மறைமலையடிகள் நூலகம்)

இலங்கை நேசன்

யாழ்ப்பாணம். ஆசிரியர் - முத்துசாமி. இதே பெயரில் 1877இல் கொழும்புவில் ஓரிதழ் வெளிவந்தது.

1849

நற்போதகம்

மாதம். நெல்லை. ஏ.எம்.பாக்கியநாதன். விலை காலணா. முதல் இதழ் பிப்ரவரியில் வெளிவந்தது. 1865 இல் விற்பனை 12,000 படிகள். 1870 இல் விற்பனை 10,200 படிகள்.

"நிறுவியது பெப்ருவரி 1849" என்ற முத்திரையுடன் இப்பொழுதும் (1992) வந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் - தமிழ் இதழ்களின் பாட்டி, இதுவே. அன்று "திருநெல்வேலி டையோசிசன் மேகசின்" என்று சொல்லப்பட்டது. இன்று "திருநெல்வேலி அத்தியட்சாதின நற்போதகம்" என்று முழுப்பெயர் காணப்படுகிறது. புகழ்பெற்ற "இரட்சனிய யாத்திரீகம்" காப்பியம் இவ்விதழில் 14 ஆண்டுகள் தொடராக வெளி வந்தது.

"பிரண்ட்லி இன்ஸ்டிரக்டர்" என்ற இதன் ஆங்கிலப் பெயரை மர்டாக் குறிப்பிடுகிறார். 1840 ஆம் ஆண்டு அளவில் இவ்விதழ் வெளிவந்தது என்றும் சொல்லுகிறார். இதைக்கொண்டு, "1840 இல் "பிரண்ட்லி இன்ஸ்டிரக்டர்" என்ற இதழ் வெளிவந்தது" என்று பின்னாளில் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். இது சரியல்ல. ஒரு பக்கம் தாண்டியதும், "பிரண்ட்லி இன்ஸ்டிரக்டர் - நற்போதகம்" என்று தமிழ்ப் பெயரையும் மர்டாக்தந்துள்ளார்.

இவ்விதழில் மலர் - இதழ் விவரம் இல்லை என்று மர்டாக் குறித் துள்ளார். அதன் காரணமாக இவ்விதழ் எப்பொழுது தொடங்கப்பட்டது என்பதை அவரால் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. இதன் முதல் இரு இதழ்கள் மறைமலையடிகள் நூலகத்தில் (சென்னை) உள்ளன. இவ்விதழ்களிலும் மலர் - இதழ் விவரம் இல்லை. ஆனால், வெளிவந்த நாள் விவரம் இருக்கிறது.

1847 ஆம் ஆண்டிலிருந்து இவ்விதழ் திருச்சபை ஊழியர் கழகத்தின் சிற்றிதழாக (புல்லட்டீன்) வெளிவந்தது. 1849 பிப்ரவரி முதல் முழுமை யான இதழாக வெளியிடப்பட்டது.

முதலில் "நற்போதகம்" என்று தமிழ்ப்பெயர் மட்டும் இருந்தது. சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த தேவதாசின் தந்தை முத்தையா இப்பெயரைச் சூட்டினார். 1860க்குப் பிறகு "பிரண்ட்லி இன்ஸ்டிரக்டர்" என்ற ஆங்கிலப் பெயரும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1920க்குப் பிறகு "திருநெல்வேலி அத்தியட்சாதீன நற்போதகம்" என்று பெயர் பெற்றது.

சிறு பிள்ளையின் நேசத் தோழன்

காலாண்டு. நாகர்கோவில். குழந்தைகள் இதழ்.

தரங்கை நேசன்.

மாதம். பிறகு வாரம். சென்னை. விற்பனை - 200 படிகள்.

TRENTE-CINQUIÈME ANNÉE.—N° 72. RÉPUBLIQUE FRANÇAISE VENDREDI 5 SEPTEMBRE 1884

LE MONITEUR OFFICIEL

DES ÉTABLISSEMENTS FRANCAIS DANS L'INDE.

LE MONITEUR parait le mardi et le vendredi de chaque semaine.—PRIX DE L'ABONNEMENT: Pour LA VILLE, un an, 10 roupies; six mois, 6 roupies; trois mois, 4 roupies.— Pour l'INDE hors de Pondichéry, un an, 14 roupies; six mois, 8 roupies; trois mois, 5 roupies. — Pour L'EUROPE: Un an, 14 roupies; six mois, 8 roupies.

ANNONCES: la première et la seconde, 2 annas par ligne; les mêmes répétées immédiatement, 1 anna par ligne.—Les annonces légales seront reçues jusqu'au mardi inclusivement, les autres jusqu'au mercredi soir.— RÉCLAMES: 4 annas par ligne.

Pour les abonnements et les annonces, s'adresser au Chef de l'Imprimerie du Gouvernement.

SOMMAIRE.

PARTIE OFFICIELLE

DIRECTION DE L'INTÉRIEUR

ÉTABLISSEMENTS DANGEREUX,

INCOMMODES OU INSALUBRES.

AVIS.

Les personnes ci-après désignées sollicitent l'autorisation d'établir un four à briques dans la Commune de Bahour savoir :

Bahour.

Les sieurs Ramane, fils de Sinnatatty, et Outtoucattane, fils de Narayanane, sur la propriété dudit Ramane, sise à Carclampacom.

Conformément aux dispositions du décret du 10 mai 1882, promulgué dans la colonie par arrêté du 2 mars 1883, une enquête *de commodo* sera ouverte aux commissariats de police de la Commune de Bahour, pendant quinze jours francs, à compter du 20 septembre prochain.

Les personnes qui auraient des observations à présenter pour ou contre l'établissement de ces briqueteries sont invitées à les adresser à M. le Commissaire de police de ladite Commune, nommé Commissaire enquêteur.

Pondichéry, le 20 août 1884.

Le Directeur de l'intérieur,
CELORON DE BLAINVILLE.

ஆபத்தான அசவுக்கியமான அல்லது அசுத்தமான ஸ்தானங்கள்

விளம்பரம்.

பின்குறித்த கரணப்பட்டபெயர்வழிகள் பாகூர் கொம்முய்னில் செங்கல்சூளை போட்டுக்கொள்ள உத்திரவு கேட்கின்றார்கள் அதின் விபரம்.

ஈ-- சின்னதாட்டி மகன் ராமன் நாராயணன் மகன் ஊத்துகாட்டான் இவர்கள் கர்க்களாம்பாக்கத்தில் மேற்படி ராமனுக்குச் சொந்தமான நிலத்தில்.

இக்காட்டில் -௲௮௱௮௰௨-ம். ஆ மார்சு மீ ௨ உ நிர்ப்பிரமுலாய் பிரசுரஞ்செய்யப்பட்ட ௲௮௱௮௰-ம். ஆ மே மீ ௰ உ சட்டத்தின்படி மேற்படி சூளைபோடுவதினாலிருக்கும் சவுக்கியம் அல்லது அசவுக்கியம் விளக்கம். பாகூர் கொம்முய்ன் பொலீசில் வருகிற செப்தம்பர் மீ ௨௰ உ முதல் பூராய் பதினைந்துதினம் நடத்தப்படும்.

இந்தசெங்கல்சூளைகள்போடக்கூடும் அல்லது கூடாதென்று தகராறு சொல்பவர்கள் தங்கள் ஆட்சேபனைகளை மேற்படி கொம்முய்னில் விளக்குநராகவேம்படுத்தியிருக்கும் பொலீசுகொம்மிசேருக்கு எழுதிகொடுக்கவேண்டியது.

புதுவை ௲௮௱௮௰௪-ம். ஆ அவு மீ ௨௰ உ.

திரெக்தேர் தெ லேந்தெரியேர்,
செலொரோந் தெ பிளேம்வில்.

AVIS OFFICIELS

SERVICE DES CONTRIBUTIONS.

AVIS.

Le public est prévenu que, le 9 septembre prochain et les jours suivants, à deux heures de l'après-midi, il sera procédé au bureau du service des Contributions à l'adjudication 1° de la ferme du droit d'introduction et de fabrication des spiritueux, pour une durée de trois ans, du 1er janvier 1885 au 31 décembre 1887 ;

2° Des licences pour la vente du tabac tant dans l'intérieur de la zône des joucans que dans les aldées ;

3° Des débits de sel dans les aldées ;

4° Des licences pour la vente des spiritueux.

Ces trois derniers débits pour la durée d'un an, du 1er janvier au 31 décembre 1885.

Les personnes qui désireront connaître les clauses et conditions du cahier des charges relatif à ces adjudications, pourront en prendre connaissance aux bureaux du Chef du service et du Receveur des Contributions et, dans les districts de Villenour et de Bahour, à la cacherie de chacun de ces districts, tous les jours, de 8 à 11 heures du matin et de 2 à 5 heures du soir, les dimanches et jours de fête exceptés.

Pondichéry, le 11 août 1884.

"மொனித்தோர் ஒப்பிசியல்"

5.9.1884 இதழ் (ரோமன் ரோலந்து நூலகம், புதுவை)

பெரம்பூரில் (சென்னை) மாதா கோயில் கட்ட அன்றைய அரசாங்கம் உதவிப்பணம் வழங்கியது. அதனைக் கண்டித்து "அரசாங்கம் மக்கள் பணத்தை வீணாக்குவது வருந்தத்தக்கது" என்று இவ்விதழ் (7.9.1889) எழுதியது.

1850

மொனித்தோர் ஒப்பிசியல்

வாரம். புதுவை. பிரெஞ்சு - தமிழ். "அரசு நடவடிக்கைகள்" என்று பொருள். புரூன் என்ற பிரெஞ்சுக்காரர் தொடங்கினார். 1893 வரை இவ்விதழ் வெளிவந்தது. "அரசாங்கச் சட்டங்கள், ஆணைகள், அறிவிப்புகளை இலவசமாக வெளியிடவேண்டும்" என்ற நிபந்தனையுடன் இவ்விதழ் வெளிவர அரசு அனுமதி அளித்தது.

புதுவைக்கவிஞர் சவராயலுவின் பாடல்கள் இவ்விதழில் நிறைய வெளிவந்தன. "இராசாங்க விளம்பரப்பத்திரிகை" என்று இவ்விதழை அவரது கவிதைத்தொகுதி குறிப்பிடுகிறது. 1829 இல் பிறந்து 1911 இல் காலமான அவரது பாடல்கள் - செய்திகள், பாரிசு, புதுவை, காரைக்கால், சென்னை இதழ்களில் வெளிவந்தன. அவரது காலத்துக்குப் பிறகு திரட்டப்பட்ட அத்தகைய இதழ்கள் (வெளியீடுகள்) 289 என்று பாடல் திரட்டு தெரிவிக்கிறது.[1] ஆனால், அந்த இதழ்களை இப்பொழுது கண்டுபிடிக்க இயலவில்லை.

சாதியைக் குறித்து . . . பத்திரிகைகள்

பிரிட்டீசு அருங்காட்சியகப் பட்டியலில் 1850ஆம் ஆண்டு வரிசையிட்டு "சாதியைக் குறித்து... பத்திரிகைகள்" என்று இருக்கிறது. அந்த ஆண்டில் சென்னை திருச்சபை சார்பில் சாதிகளைக் குறித்து நடந்த ஒரு மாநாட்டின் அறிக்கைகளைத் தான் "பத்திரிகைகள்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

உதய நட்சத்திரம்

சென்னை. வேங்கடராயலு.

1854

கிறிஸ்து மார்க்க விளக்கம்

காலாண்டு. மதுரை. அமெரிக்கத் திருச்சபை வெளியீடு. ஆசிரியர் - வெப். 4 ஆண்டு வெளிவந்தது.

ஆசிரியர் எழுதிய "திருச்சபை வரலாறு", ஜே.எட்வர்டு எழுதிய "மீட்பின் கதை" ஆகிய நூற்கள் முதலில் இவ்விதழில் தொடராக வெளிவந்தன.

"சீர்திருத்தக் கிறித்துவர்கள் பெருகிவிட்டார்கள். ஆங்கிலம் படித்தவர்களுக்கு ஆங்கிலத்தில் திருச்சபை நூற்கள் நிறையக் கிடைத்தன. தமிழ் படித்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. நூல் கிடைக்காததால், திருச்சபை ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வாய் வழியாகவே பாடம் நடத்தப்பட்டது. அவர்களுக்கு உதவவும், கத்தோலிக்கர் - இந்துக்கள் போன்றோருக்குப் பதில் அளிக்கவும், கிறித்துவர்கள் - குறிப்பாகக் குழந்தைகள், பெண்கள் படிக்கவும் இந்த இதழ் தொடங்கப்பட்டது" என்று

1. "கவிஞர் சவராயலு நாயக்கர் கவிதைகள்" - புதுவை அரசு வெளியீடு.

"75 ஆண்டு மதுரை திருச்சபை" என்ற ஆங்கில நூல் தெரிவிக்கிறது. தொடக்கத்தில் 400 கையொப்பக்காரர்கள். பிறகு 350 ஆகக் குறைந்தது. 1858 இல் ஆசிரியர் ஒய்வு பெற்றதும், இதழும் நின்றது.

இதே சபையினர் "குவார்ட்டர்லி ரிபோசிடரி" என்ற ஆங்கில இதழை வெளியிட்டார்கள். அதே நேரத்தில், அதே பெயரில் வெளியிட்ட தமிழ் இதழுக்கு "தமிழ் குவார்ட்டர்லி ரிபோசிடரி" என்று பெயரிட்டிருக்கிறார்கள். (தமிழில் "கிறிஸ்து மார்க்க விளக்கம்"[1].) 1815 இல் யாழ்ப்பாணத்தில் தமிழில் காலாண்டு திருச்சபை இதழ் வெளிவந்திருக்கவேண்டும் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

ஞான தீபிகை

யாழ்ப்பாணம். திருச்சபை வெளியீடு. ஆசிரியர்கள் - டபிள்யூ நைட், வின்சுலே.

1855

தினவர்த்தமானி

வாரம். சென்னை. தந்தை பெர்சிவல் வெளியிட்டார். இதற்காக அவர் ஆங்கிலம் - தமிழ் அகர முதலி ஒன்றும் வெளியிட்டார். சி.வை.தாமோதரம், "இரட்சனிய யாத்திரீகம்" அ.ஆ.கிருட்டினன் ஆகியோர் துணை ஆசிரியர்களாக இருந்தார்கள். **தமிழில் முதன் முதலில் நாளிதழ் அளவில் வெளிவந்த செய்தித்தாள், இது.** ஆயிரம் படி விற்பனையான முதல் தமிழ் செய்தித்தாள் இதுவே. ஆண்டுக் கையொப்பம், ஐரோப்பியருக்கு ரூ. 5. சுதேசிகளுக்கு ரூ. 3. இவ்விதழை நடத்த அரசாங்கம் மாதம் ரூ. 200 உதவிப் பணம் கொடுத்தது. வியாழக்கிழமை தோறும் வெளிவந்தது. சென்னை இலஸ்சில் இருந்த திராவிடன் அச்சகத்தில் அச்சாயிற்று. 1863 இல் விற்பனை 160 படிகள். 1871 இல் விற்பனை 350 படிகள். 1875 இல் இதழ் நின்றுவிட்டது. அச்சகத்தை ரூ. 670க்கு அரசாங்கம் விலைக்கு வாங்கிக்கொண்டது. தந்தை பெர்சிவலுக்கு ரூ. 1500 உதவிப் பணம் வழங்கியது.

"செய்தித்தாள்கள்" என்ற பட்டியலில் இவ்விதழைத்தான் மர்டாக் முதலில் குறிப்பிடுகிறார். இப்பட்டியலைக் கீழ்க்கண்டவாறு மர்டாக் தொடங்குகிறார். "ஏறத்தாழ 25 ஆண்டுக்கு முன்பு தமிழர்கள் தொடர்ந்து பல செய்தித் தாள்களைத் தொடங்கினார்கள். சிறிது காலத்துக்குப் பிறகு அவை நின்றுவிட்டன".

மர்டாக் இக்குறிப்பை எழுதியது, 1865 இல். அதற்கு முன் 25 ஆண்டு என்றால், 1840. 1840 ஆம் ஆண்டிலிருந்து தமிழில் தமிழர்களே தொடர்ந்து அநேக செய்தித்தாள்களைத் தொடங்கினார்கள் என்ற விவரம் இதிலிருந்து தெரிய வருகிறது. ஆனால், அந்த இதழ்களின் பெயர்களில் ஒன்றைக்கூட மர்டாக் குறிப்பிடவில்லை. அவரது பட்டியலில் உள்ள பல குறைகளில் இதுவும் ஒன்று.

கிறித்துவ மறுப்பு

விவரம் இல்லை.

---

1. தென் ஆசிய இதழ்ப்பட்டியல்

தர்மப்பள்ளிப்போதம்.

THE

MISSION SCHOOL MAGAZINE.

VOLS. I. AND II.

Nagercoil:
PRINTED FOR THE CHRISTIAN VERNACULAR EDUCATION SOCIETY.
LONDON MISSION PRESS.
1859.

தொகுதி 1, 2. 1859 (பிரிட்டீசு நூலகம்)

1856

இந்த ஆண்டில் மாவட்டம்தோறும் அரசிதழ்களை (மாவட்ட கெசட்டு) அரசாங்கம் வெளியிட்டது. 8 தமிழ் மாவட்டங்களில் வெளிவந்த இதழ்களில் ஆங்கிலத்துடன் தமிழும் இடம்பெற்றது. எல்லாமே வார இதழ். விலை 1 அணா. தனியார் விளம்பரங்களும் இடம்பெற்றன.

சென்னை மாவட்ட அரசிதழ்

மாதம். சென்னை. விற்பனை 240 படிகள்.

தென்னார்க்காடு மாவட்ட அரசிதழ்

மாதம். கடலூர். 226 படிகள்.

தஞ்சாவூர் மாவட்ட அரசிதழ்

மாதம். தஞ்சை. 213 படிகள்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழ்

மாதம். திருச்சி. 157 படிகள்.

மதுரை மாவட்ட அரசிதழ்

மாதம். மதுரை. 215 படிகள்.

திருநெல்வேலி மாவட்ட அரசிதழ்.

மாதம். திருநெல்வேலி. 62 படிகள்.

கோயமுத்தூர் மாவட்ட அரசிதழ்

மாதம். கோவை. 419 படிகள்.

சேலம் மாவட்ட அரசிதழ்

மாதம். சேலம். 160 படிகள்.

வெறும் 62 படியுடன் ஓர் இதழ் வாரம்தோறும் வெளிவந்திருக்கிறது என்று வியந்தோம். ஆனால், விசாகப்பட்டணம் (ஆந்திரா) மாவட்ட அரசிதழ் வெறும் 47 படிதான் விற்பனையாகியிருக்கிறது!

இவ்வளவு குறைவானப் படிகள் விற்பனையாகியும், இவ்விதழ்களில் இருந்து 1864-65 ஆம் ஆண்டில் ரூ. 80,538 ஆதாயம் கிடைத்தது என்று மர்டாக் குறிப்பிட்டுள்ளார்.

பாலியர் மித்திரன்

மாதம். ஆசிரியர் - ஜோசப் பாஸ்மோர்.

விவேக விலாசம்

கிறித்துவப் பிரசாரத்தை எதிர்த்து ஒரு தமிழ்ப்புலவர் தொடங்கிய இதழ். வேறு விவரம் இல்லை.

1859

தர்மப்பள்ளி ப்போதம்

மாதம். நாகர்கோவில். ஆசிரியர் - தந்தை டூத்தி. தென்னிந்திய கிறித்துவப் பள்ளிகள் சங்க வெளியீடு. "மிசின் ஸ்கூல் மேகசின்" என்பது இதன் ஆங்கிலப் பெயர். சிலர் இதனைத் தனியாகக் குறிப்பிடுவார்கள். ஆனால், இரண்டும் ஒன்றுதான். விலை ஒரு பைசா. இந்தியாவில் ஒரு

தேசோபகாரி.

DESOPAKARI:

AN ILLUSTRATED TAMIL MAGAZINE.

VOL X. AUGUST No. 8.

CONTENTS:

Nagercoil:

PRINTED FOR THE MADRAS BRANCH OF THE

CHRISTIAN VERNACULAR EDUCATION SOCIETY,

AT THE LONDON MISSION PRESS.

1870.

பைசா விலையில் வெளிவந்த முதல் இதழ், இதுவே.

பாலியர் நேசன்

யாழ்ப்பாணம், சிறுவர் இதழ். 1864இலிலும் இதே பெயரில் யாழ்ப்பாணத்தில் ஓரிதழ் வெளிவந்தது.

1860

அமிழ்தவசனி

வாரம். திருச்சி. ஆசிரியை – திருமதி. அமிர்தபாபு. தமிழில் வெளிவந்த முதல் மகளிர் இதழ்.[1] 8 பக்கம். 200 படிகள். 1872 இல் இவ்விதழ் சென்னையில் வெளிவந்தபொழுது இலவசமாத வழங்கப்பட்டது. அப்பொழுது மாத இதழ். "உள்ளொளி பெருக்கி, அருளொளி விளக்கச் சிறந்த தெய்விக மாதப்பத்திரிகை" என்ற முழக்கத்துடன் 1954 இல் சென்னையில் ஓர் "அமிர்தவசனி" வெளிவந்தது.

விவேக சிந்தாமணி

மாதம். சென்னை.

இதே பெயரில் வடக்கே ஓர் இதழ் வெளிவந்ததாக சே.ப.நரசிம்மலு குறிப்பிட்டிருக்கிறார்.

கதா மஞ்சரி

மாதம். சென்னை. ஆசிரியர் – தாண்டவராயர். பயனுள்ள கதைகள் வெளியிடப்பட்டன. இதில் வெளிவந்த கதைகள் பிறகு தேர்ந்தெடுக்கப் பட்டு, இதே பெயரில் தனி நூற்களாகவும் வந்தன.

1861

தேசோபகாரி

மாதம். நெய்யூர் (குமரி மாவட்டம்). ஆசிரியர் – மறைத்திரு பேலீசு. "இந்து – கிறித்துவ ஒற்றுமை இதழ்" என்று அந்நாளில் பெயர் பெற்றது. அக்காலத்திலேயே 16,800 படிகள் விற்ற சிறப்பு இவ்விதழுக்கு உண்டு. கிறித்துவத் தமிழ்க் கல்விக்கழக வெளியீடு.

இவ்விதழில் நிறையப் படங்கள் வெளியிட்டார்கள். "இப்படத்திற்குரிய பிளாக்குகளை இலண்டனிலிருந்து பாய்மரக் கப்பல் வழியே ஆப்பிரிக்காவின் தென்முனையைச் சுற்றி (சூயசுக் கால்வாய் அன்று வெட்டப்பட வில்லை) கொண்டு வரப்பட்டது என்பது நமக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கும்" என்று "தேசோபகாரி" நூற்றாண்டுவிழா மலர் கூறுகிறது.

இவ்விதழ் இப்பொழுதும் (1992) வெளிவந்து கொண்டிருக்கிறது.

இதன் ஆசிரியர் "புனித பாலின் அடிச்சுவட்டில்" என்ற மொழி பெயர்ப்பு நூலும் எழுதியிருக்கிறார்.

இதே பெயரில் 1925இல் இரங்கூனில் ஒருவார இதழும், 1934இல் புதுவையில் ஒரு வார இதழும் வெளிவந்தன.

---

1. 1856 இல் "ஸ்திரீ போதா" என்ற குசராத்தி இதழ் பம்பாயில் வெளிவந்தது. இந்தியாவில் வெளிவந்த முதல் மகளிர் இதழ் இதுதான்.

அருணோதய

தரங்கன்பாடி

மிசியோனின் பத்திரிகை.

No. 1. ஜூலை. 186.

மத்தேயு உஅ, ம அ—உ ய.

அப்போது இயேசுசேர்ந்து அவர்களுடனே பேசிச்
சொன்னதாவது, வானத்திலும் பூமியிலும் எனக்குச்சகலஅதி
காரமுங்கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆகையால்நீங்கள்போய்.
சகலசாதிகளையும் சீஷராக்கிப் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவி
யின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து,
நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையுங் கைக்கொள்ள
அவர்களைப்போதியுங்கள். இதோ,நான்லோகமுடிவுமட்டாரு
ச்சகலநாள்களிலும் உங்களுடனேகூட இருக்கிறேனென்றார்.

இந்த வேதவாக்கியத்தை இந்தப் பத்திரிகையைத் தொ
டங்குகிற வார்த்தையாக்கிக் கொள்ளுகிறது ஞாயந்தான்.
அதேனென்றால் உயிரோடெழுந்த இயேசுநாதர் பிரமண்ட
லங்களுக்கேறுததற்கு முன் திருவுளம்பற்றின இந்த வார்த்
தையினால் தம்முடைய மிசியோனையும் ஞானஸ்நானத்தை
யும் ஏற்படுத்தினார். அவர் இக்கும் வசனத்தில் சொன்ன பர
கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற விசுவாசமுள்ள கிறி
தவர்கள் இருக்குமட்டும் அவர் தம்முடைய திருச்சபை
லோகமெங்கும் பரம்பப்பண்ணி லோகமுடிவுமட்
நிலைக்கொண்டிருக்கப்பண்ணுவார். இந்தக்கட்டளைக்குக்கீ
படிந்து அவருக்கூழியஞ் செய்கிறயாவரும் நம்பிக்கை
றுப்போகக்கூடாது. ஏனெனில்முன்னுக் இருக்கிற பதிவே
டாம் வசனத்தி [illegible] கிறதாவது, வானத்திலும்
மியிலும் எ [illegible] ரமுங் கொடுக்கப்பட்
ருக்கிறதென்ப [illegible] ரச்சியத்தில் ஆ

"அருணோதயம்" முதல் இதழ். ஜூலை , 1863.
(உதவி – மறைத்திரு எஸ். தானியேல் மனோகர்.)

சத்திய தீபம்

மாதம். சென்னை. ஆசிரியர் – தந்தை ஆர்.எம்.பாபு. "அமிர்தவசனி" ஆசிரியை இந்த பார்புவின் மனைவிதான்.

சென்னையில் "உரிமைத்திருச்சபை"யின் தலைவராகப் பாபு இருந் தார். "இந்துக்களிடம் சமய ஒளி பரப்புவதே குறிக்கோள்" என்று தனது இதழின் முழக்கத்தைக் குறிப்பிட்டார். ஆங்கிலத்திலும் இந்த இதழை நடத்தினார்.

பாபு மொத்தம் 23 நூற்கள் எழுதியிருப்பதாக மர்டாக் கூறுகிறார். "அன்பே கடவுள்", "இறுதித் தீர்ப்புநாள்", "ஏசுநாதர் வாழ்க்கை", "விநாயக சதுர்த்தி", "சிவா சான்றிதழ்", "திருமால் சான்றிதழ்", "காஞ்சி கரிவரதர்" முதலியவை, அவை. "திருச்சபை மருத்துவமனை முகவரிகள்" என்ற நூலும் இப்பட்டியலில் இருக்கிறது. அந்நூல், இரண்டே பக்கம்!

ஜனோபகாரப் பத்திரிகை

மாதம் இருமுறை. கள்ளிக்கோட்டை. ஆசிரியர் – அருணாசலம். வித்தியாவிலாச அச்சுக்கூடம். 34 படிகளே விற்பனை ஆயின. சில மாதமே வெளிவந்தது. பின்பு 1863 இல் இதே ஆசிரியர் "கேரளோதயம்" என்ற மலையாள வார இதழை நடத்தினார்.

1861 சனவரி 1 முதல் செய்தித்தாள்களை அஞ்சல் தலை ஒட்டி அனுப்ப வேண்டும் என்று இந்திய அரசு ஆணையிட்டது.

1863

அருணோதயம்

மாதம். தரங்கம்பாடி.

சூலையில் தொடங்கியது. 16 பக்கம். 4 பைசா. விற்பனை (1888) 500 படிகள்.

"தமிழ் சுவிசேச லூத்ரன் மாதாந்திர சஞ்சிகை" என்ற முழக்கத்துடன் இன்றும் (1992) சென்னையில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

1929 இல் எட்டையபுரத்தில் இருந்தும், 1947 இல் கோவையில் இருந்தும் (மாதம்) இதே பெயரில் இதழ்கள் வெளிவந்தன.

சுவிசேச தூதிகை

மாதம். நாகர்கோவில். ஆசிரியர் – தந்தை ஜோ லோவி. "தென் திருவாங்கூர் கிறிஸ்தியன் மெசஞ்சர்" என்பது இதன் ஆங்கிலப் பெயர். விலை காலணா. தமிழ்க் கிறித்துவர்களுக்காக வெளிவந்தது.

இலங்காபிமானி

மணிப்பாய் (இலங்கை). ஆசிரியர் – சி.வை.கதிரவேல்

திருச்சபை பத்திரிகை

மாதம். சென்னை. ஆசிரியர் – எஸ். சாமுவேல்

இலங்கைப் பாதுகாவலன்

கொழும்பு. சி. முத்தையா.

THE

SOUTH TRAVANCORE

CHRISTIAN MESSENGER.

சுவிசேஷதாதிகை.

VOL. III.

Nagercoil:

PRINTED AT THE LONDON MISSION PRESS,

FOR THE SOUTH TRAVANCORE TRACT AND BOOK SOCIETY.

1865

இதழ் 3, மலர் 1, 1865 (பிரிட்டீசு நூலகம்)

தத்துவபோதினி.

Vol: 1

சென்னப்பட்டணம் [illegible] மேமீ [illegible]. [இலக்கம் க.

[illegible] ராம் - [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விளம்பரம்.

இந்தச் சென்னை தத்துவபோதினி [illegible] வேதசமாஜத்தின் [illegible] [illegible]சார்ட்டு வந்தில். [illegible] [illegible]சாரியருக்கு, [illegible] [illegible]த்துக் கொள்ள[illegible].

இதற்குச் சந்தாவிவரம்.

[illegible]னப்பட்டணத்தி லுள்ள [illegible]ர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்	க - அ - 0
[illegible]கு வெளியிலுள்ளவர் த[illegible] [illegible]பால்கூலியுடன் சேர்த்து வ[illegible]ருஷம் ஒன்றுக்கு ரூபாய் ...	உ - 0 - 0
[illegible] [illegible]ரும் வெளியி லுள்ளவர் [illegible] தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூ[illegible]பாய். ...	க - சஉ - 0

இதற்குச் சந்தாதாரர்கள் [illegible] [illegible] அந்தந்த வருஷத்தில் [illegible] [illegible]கட்டவேண்டியது. மேம்[illegible] மாசம் இதற்கு வருஷமாய்க் கொள்[illegible] [illegible]. வருஷ நடுவில [illegible] [illegible]மோர் வருஷத்திற் சந்தாவும் [illegible] [illegible]வேண்டும்


வெளியிலிருந்து சந்தா அனுப்[illegible] [illegible]டியவர்கள் தபால் முத்திரை [illegible] லாம். ஆனால், அப்படி [illegible] [illegible]த்திரைகளை மாற்றுவதற்காக [illegible] [illegible]க்கு ஒரு அணா வீதம் வட்டம் சேர்த்[illegible] அனுப்பவேண்டும்.

தத்துவபோதினி.

[illegible]வான்களே, இந்தப்பத்திரிகையை [illegible] எழுதத்தொடங்கியதில் எங்களு[illegible] [illegible]தேரியம் இல்லையென்று [illegible] தெரியாத பக்ஷத்தில் எப்போதாவது [illegible] [illegible]ங்கள் கருத்தை நீங்கள் பிசகாய் [illegible] வும், உங்கள் மனம [illegible] [illegible] கோரிக்கை நிறைவேறாமல் போகவும், இ[illegible] [illegible]டாராளமாகையால், நாங்கள் [illegible] [illegible]றும், நமக்குள்ள சம்மந்த மிப்படி[illegible] பட்டதென்றும், எங்கள் உத்தேசம் இ[illegible]ன்னதென்றும் முன்னதாய் சொல்லுகி[illegible]றோம்.

முதலில் நாங்கள் யாரெனில், [illegible] [illegible]பிருமமத்தையே எங்கள் தெய்[illegible] உங்கள் வேதத்தையே எங்கள் [illegible] [illegible]யும், உங்கள் தேசத்தையே எங்கள் [illegible] [illegible]யாயும், உங்கள் வேஷபாஷா[illegible] [illegible]ங்கள் சுவாதப்பின்னங்களாயும், [illegible] [illegible]வைகளின் [illegible] காக்க[illegible] [illegible]தை எங்கள் கடமையாக நம்பி, அதற்[illegible] [illegible]கப்படி நடக்கவும், நடப்பிக்கவும் பிரதி[illegible]

முதல் இதழ் - மே, 1864. (மறைமலையடிகள் நூலகம்)



இது யாழ்ப்பாணத்தில் வெளிவந்த "பாலியர் நேசன்". மலர் 2, இதழ் 1. சனவரி, 1865. (இலங்கை அரசு சுவடிச்சாலை)

புனித தாமஸ் கதிட்ரல் வர்த்தமானி

மாதம். சென்னை. தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனியே வெளி வந்தன. தலா 100 படிகள் விற்பனை ஆயின.

1864

தத்துவபோதினி

மாதம். சென்னை. ஆசிரியர் – வழக்கறிஞர் வ.இராசகோபால். முதல் **இந்து சமய இதழ்**. வேத சமாசம் நடத்தியது. முதல் இதழ் மே 7இல் வெளிவந்தது. இராமநாதபுர மன்னர் பொன்னுசாமி ரூ. 1000 நன்கொடை நல்கினார். 1873 இல் விற்பனை 250 படிகள். 1923 இல் சென்னையில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

கற்பக விருட்சம்

மாதம். சென்னை. ஆசிரியர் – திருச்சபை பத்திரிகை நடத்திய எஸ். சாமுவேல். 1917, 1922, 1934 ஆம் ஆண்டுகளில் "கல்பதாரு" என்ற பெயரில் இதழ்கள் வெளிவந்தன.

இலங்கைக் காவலன்

கொழும்பு. ஆசிரியர் – இராபர்டு நியூட்டன்.

பாலியர் நேசன்

மாதம். யாழ்ப்பாணம். சிறுவர் இதழ். ஆசிரியர் – வில்லியம் சின்னத்தம்பி. முதல் இதழ் சனவரியில் வெளிவந்தது. "குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள். தடைபண்ணாதிருங்கள்" என்ற ஏசுவின் மொழியை முழக்கமாகக் கொண்டிருந்தது. ஆண்டுக் கையொப்பம்: 8 அணா. நெல்லையில் ஒரு "பாலியர் நேசன்" இப்பொழுதும் வந்து கொண்டிருக்கிறது.

> 1863–64 ஆம் ஆண்டில் தமிழில் வார செய்தித்தாள் ஒன்றும், மாதம் இருமுறை செய்தித்தாள் ஒன்றும் வந்துகொண்டிருந்தன என்று மர்டாக் குறிப்பிட்டுள்ளார். அவை **தினவர்த்தமானி**யும் யாழ்ப் பாணம் **"உதயதாரகை"**யும்.
>
> **"உதயதாரகை"**யின் 1864 ஆம் ஆண்டு இதழ்களில் **"திருச்சினாப்பளி சேர்னல்"**, **"இந்திய நண்பன்"** என்ற இரு இதழ்கள் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன. முதல் இதழ் திருச்சியிலிருந்து வெளிவந்தது என்பது பெயரிலிருந்து தெரிகிறது. தமிழ் இதழா? ஆங்கில இதழா? ஆங்கில இதழ் என்றாலும், அந்நாளைய வழக்கப்படி தமிழும் இடம் பெற்றிருக்க வாய்ப்புண்டு.

1865

விவேக விளக்கம்

மாதம். சென்னை. வேத சமாச வெளியீடு. சென்ற ஆண்டு இச்சங்கம் தொடங்கிய **"தத்துவ போதினி"** இதழில் வந்த சமய வாதப் பிரதிவாதங்கள் காரணமாக, அவ்விதழ் விற்கப்பட்டுவிட்டது. புதிதாக இந்த ஆண்டு இந்த இதழைத் தொடங்கினார்கள். விற்பனை 300 படிகள். இவ்விதழை "செய்தித்தாள்" என்று நூல் பதிவாளர் அறிக்கை கூறுகிறது.

உதயதாரகை அநுபந்தம்.

யாழ்ப்பாணம், [illegible] சித்திரை [illegible] வியாழக்கிழமை. [சங்கிலை, அ

[illegible]ந்த சமாசாரம்.

[illegible] (Evangelical Christen-[illegible] (Free Church [illegible] (Himalaya) [illegible] (Chumba Mission) [illegible] (Mr. Ferguson) [illegible] (Kols) [illegible] (Free Church Mission) [illegible] (German) [illegible] (Mr. Sternburg) [illegible]

[illegible] (Dr. Martin) [illegible] (Fermasi) [illegible] (Niger) [illegible] (Bishop Crowther) [illegible] (Idda) [illegible] (Ata) [illegible] (Aboko) [illegible] (Antananarivo) [illegible] (Friendly Islands) [illegible]

[illegible] (Ebon) [illegible]

ஒரு குருட்டுப் பெண்பிள்ளையின் உதார குணம்.—A blind girl.—[illegible]

விசேஷித்தமாக்க அருட்சி.—A remarkable revival.—[illegible]

இரட்சிக்கப்படுதற்கு வழி.—How to be saved.—[illegible]

"உதயதாரகை அநுபந்தம்" (1865).

இலங்கை அரசு சுவடிச்சாலை.

உ

கடவுள்துணை.

கலாவர்த்தனி.

சென்னபட்டணம் கஅசுசுஞு நவம்பர்மீ கருவ [சஞ்சிகை-ங.

கடவுள்வணக்கம்.

நேரிசைவெண்பா.

ஆனந்தாதேஜோமயரூபடிவாவைம்பூத
வானந்தாவேதமுடிவாழ்தேவா - ஞானந்தா
விவ்வகையென்றேயறியாவேழைமதியேந்தெருள்பெற்
றுய்வகையாமெவ்வகையின்றோது.

ஆசிரியவிருத்தம்.

எங்குநோக்குந்திருக்கண்மலர்படைத்தநீயேதுமறியாப்பேதையர்
ஈடேறவெட்கடைக்கோடியிலோர்கூறுமியினுங்கடாக்ஷித்திடாமல்
கங்குல்பகலறியாதகுருடர்போன்மருளிற்கலங்கவிட்டிடுவதழகோ
கருத்தைத்திருத்தியெமதறிவுக்குமறிவாய்க்கலந்தாள்வதுனதுகடனே
இங்குநின்றிருவடிப்புணைதுணையென்க்கொண்டிருக்குநாமினுமிழிந்த
வெம்மைமூம்மையினும் புரக்குங்க்ருபாமூர்த்தியென்றுன்சரண்புகுந்தேம்
அங்கிங்கெனச்சுட்டிடாதெங்குமாய்நிறைந்தருள்சச்சிதாநந்தனே
அவரவர்நினைத்திடுந்திருவுருக்கொண்டேயநுக்கிரகம்புரிகடவுளே.

விளம்பரம்.

இப்பத்திரிகை மாசத்திற்கு ஒன்றாகப்பிரசுரம்செய்யப்படும். இதை வாங்கவேண்டியவர்கள் சென்னபட்டணம் முத்தியாலுபேட்டை தம்புசெட்டியார் வீதியில் காளியம்மை கோயிலுக்குத் தென்புறம், சுஎ - வது கதவிலக்கமுள்ள வீட்டிற்காவது, ஷை பேட்டையில் செம்புதாசு தெருவில், சுஎ-வது கதவிலக்கமுள்ள கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்காவது கலாவர்த்தந சபா காரியதரிசியாகிய, ஊ. புஷ்பரத செட்டியார் பேரால் கடிதம் அனுப்பவேண்டியது.

கையொப்பவிவரம்.

இந்நகரவாசிகள்	ஞு கஇ நூக.	அ.	,,
ஷை	ஞு உஇ	,, கங	,,
ஷை	மீ கஇ	,, உ	சு
புறநகரவாசிகள் தபாற்கூலிஉள்பட	ஞு கஇ	உ.	ச. ,,
ஷை	,, உஇ	௬	ங ,,

ஷை தொகைக்னே முன்னதாகக் கட்டவேண்டியது.

வெளியிலிருந்து பத்திரிகைக்குக் கையொப்பத்தொகையாவது பின்வரும் புத்தகங்களின் கிரயத்தையாவது அனுப்புகிறவர்கள் தபால் முத்திரைகளாக அனுப்பலாம். அப்படிக்கு அனுப்பும்பக்ஷத்தில் அரை, அல்லது ஒரு அணா முத்திரைகளாக நூகஇ வட்டம் அணா-க-சேர்த்து அனுப்பவேண்டியது.

இதழ் 3. 15.11.1866 (மறைமலையடிகள் நூலகம்).

அமிழ்தவசனி

பழைய இதழ் நின்று, மீண்டும் சென்னையில் தொடங்கப்பட்டது. தமிழ் - ஆங்கிலம்.

சிவகங்கை சமீன்தார் கெசட்டு

காலவரையில்லை. எப்பொழுதாவது வெளிவந்தது. சிவகங்கை. 200 படிகள். சிவகங்கை நிலக்கிழார் வெளியிட்டார். **அரசிதழ் வெளியிட்ட ஒரே நிலக்கிழார் இவர்தான்.** சிவகங்கை கொலம்பியா அச்சகத்தில் அச்சாயிற்று.

வேதியர் விளக்கு

மாதம். நாகர்கோவில். திருச்சபை வெளியீடு. 1910 இல் சென்னையில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

உதயதாரகைஅநுபந்தம்

மாதம் இருமுறை. யாழ்ப்பாணம். "உதயதாரகை" வெளியிட்ட அநுபந்தம், இது. திருச்சபைச் செய்திகள் இடம் பெற்றன.

1866

கலாவர்த்தினி

மாதம். சென்னை. சீனிவாச இராகவன். விலை 2 அணா. ஆண்டுக் கையொப்பம் உள்ளூர் ரூ. 1-8-0. வெளியூர் ரூ. 2-4-0. விற்பனை 200 படிகள். இவ்விதழில் **வாசகர் எழுதி அனுப்பிய கருத்துகள் "கடிதம்" என்ற தலைப்பில் வெளிவந்தன.** "ஒருவரை ஒருவர் வைது எழுதும் சங்கதிகளுக்கு இடம் கொடுக்கப்படமாட்டாது" என்று, "கடிதம் எழுதுவோர்க்குக் குறிப்பு" கூறுகிறது.

"மாணவர் இதழ். ஆங்கில இதழ்களுக்கு ஈடானது. நல்ல தமிழில் சரியான விவரங்களுடன் கட்டுரைகள் வெளிவருகின்றன. தமிழர்களே கட்டுரைகளை எழுதுகிறார்கள். தமிழ் மாணவர்களுக்குப் பயனுள்ளது" என்று இவ்விதழ் பற்றி நூல் பதிவாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.[1]

1867

நட்புப் போதகன்

மாதம். நெல்லை. விலை 1 அணா. ஆசிரியர் - வேதநாயகம். சூலை முதல் வெளிவந்தது.

சித்தாந்த ரத்நாகரம்

மாதம். சென்னை. சைவ சமய இதழ். ஆசிரியர் - சூளை சோமசுந்தரம். விலை 3 அணா. 24 பக்கம். 500 படிகள். இதே ஆசிரியர் 1879 ஆகஸ்டு முதல் இதே இதழை மீண்டும் வெளியிட்டார். 1906 இல் இதே பெயரில் சென்னையில் ஓர் இதழ் வெளிவந்தது.

---

1. 14.11.1868

Registered No. 75.

தேசாபிமானி.

DESABHIMANI.

Vol. X. SEPTEMBER, 1877. No. 6.

பொருள் அட்டவணை.	பக்கம்.	CONTENTS.	Page.

"நாடெங்கும் வாழக்
கேடொன்றுமில்லை."

MADRAS
The Native Christian Improvement Society.

PRINTED BY ADDISON AND CO., MOUNT ROAD.
1877

இதழ் 10, மலர் 6. செப்டம்பர் 1877. (பிரிட்டீசு நூலகம்)

சன்மார்க்க விவேக விருத்தி

இவ்விதழைத் தொடங்கப் போவதாக வள்ளலார் அறிவித்தார். ஆனால், வெளிவரவில்லை. இப்பொழுது சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தார் 1969 முதல் இவ்விதழை வெளியிட்டு வருகிறார்கள்.

தேசாபிமானி

மாதம். சென்னை. தாயகக் கிறித்துவ வளர்ச்சிக்கழக வெளியீடு. 1871-72 ஆம் ஆண்டுக்கான அச்சகங்கள் - இதழ்கள் பற்றிய சென்னை அரசு அறிக்கையில், சென்னை பிராடுவேயில் இருந்து "சென்னை விளம்பரம் - அச்சகக் குழுமம்" என்ற கூட்டு நிறுவனம் இவ்விதழை வெளியிட்டது என்றும், அந்நிறுவனத்தின் அச்சகத்தில் அச்சிடப்பட்டது என்றும் காணப்படுகின்றன. விற்பனை 500 படிகள். "அத்தினீயம் அண்டு டெய்லி நியூசு" என்ற நாளிதழ், அதே இதழ் வாரம் மும்முறை, "ஓவர்லாண்டு சமரி", "செர்னல் ஆப் எஜுகேசன்" ஆகிய இதழ்களையும், ரெயில்வே கையேடும் (திங்கள் வெளியீடு) இந்நிறுவனம் வெளியிட்டது என்ற விவரமும் அந்த அறிக்கையில் காணக்கிடக்கிறது.

1867 இல் 5 இதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன என்றும், அவற்றில் 3 இதழ்கள் ஏற்கனவே வந்து கொண்டிருந்தவை என்றும் சீ.இரா.ரெங்கநாதன் கூறியுள்ளார். அவரது குறிப்பு அகப்பட்டால், இவ்விதழ்களின் விவரம் கிடைக்கும்.

1868

முதலாயிரம்

மாதம். சென்னை. "நாலாயிரப் பிரபந்தங்களுள் முதலாயிரம்" என்று தலைப்பில் தரப்பட்டுள்ளது. முதலாயிரம் பாடல்கள் இதழ்தோறும் தொடர்ந்து வெளிவந்தன.

ஞானபாநு

மாதம். சென்னை. ஆசிரியர் - வேங்கடம். விலை 2 அணா.

சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்புச் சுருக்கம்

மாதம். சென்னை. 85 பக்கம். விலை ரூ. 1-4-0. படிகள் 500.


இலங்கை பாதுகாவலி

இலங்கை. இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது

1869

மனுக்குலத்துக்கு இறைவனின் செய்தி (எண். 4)

சென்னை. கிறித்துவ அறிவு பரப்புக்கழக வெளியீடு. ஏப்ரலில் வெளிவந்தது. 8 பக்கம். 1000 படிகள். 3 பைசா.



“சத்தியவர்த்தமானி” நூற்றாண்டு மலர் (1970)

சூரியோதயம்

முதல் ஆதி தமிழர் இதழ். வேறு விவரம் இல்லை.

முனியாண்டி

கொழும்பு. மக்கள் சீர்திருத்த இதழ். வேறு விவரம் இல்லை.

அகமத் இலங்காதுரை

இலங்கை. இதன் படி இலங்கைஅரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

1870

சத்திய வர்த்தமானி

மாதம். பசுமலை (மதுரை). ஆசிரியர் மறைத்திரு முனைவர்உவாஷ்பர்ன். ஆண்டுக் கையொப்பம் : 8 அணா.

முனைவர் உவாஷ்பர்ன் ஓர் அமெரிக்கர். மதுரையில் அமைந்த அமெரிக்கத் திருச்சபையில் பணியாற்ற வந்தார். பசுமலையில் அமைந்த இறையியல் கல்லூரியின் 2 ஆவது முதல்வராக 1870 இல் பதவி ஏற்றார். 1892 இல் ஓய்வு பெற்றார். 1900 இல் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றார். மதுரையில் இருந்தபொழுது மாணவர்களுக்கு உதவிப்பணம் வழுங்குதல், பரிசு வழங்குதல் திட்டங்களை இவர் கொண்டு வந்தார். ஆசிரியர் பயிற்சிப்பள்ளி நிறுவினார். பசுமலையில் அஞ்சலகம் (1881) நடத்தினார். **மதுரை அமெரிக்கன் கல்லூரியை நிறுவியவரும் (1881) இவரே.**

1870 இல் "சத்திய வர்த்தமானி"யைத் தொடங்கினார். அவ்விதழை அச்சிட 1871 இல் அச்சகம் அமைத்தார். **மதுரையில் அமைந்த முதல் அச்சகம்,இதுவே.** "லெனாக்சு அச்சகம்" என்று தனது சொந்த ஊரின் பெயரைச் சூட்டினார். இன்றும் (1992) இந்த அச்சகம் பசுமலையில் பணியாற்றி வருகிறது. இதழையும், அச்சகத்தையும் 25 ஆண்டுகாலம் சொந்தமாகவே நடத்தி வந்தார். இதழின் வருமானம் அதற்குப் போது மானதாக இருந்தது. பிறகு இரண்டையும் திருச்சபையிடம் ஒப்படைத்தார். அந்நாளில் வெளிவந்த ஒரே கிறித்துவ செய்தித்தாள் இதுவே. மூன்றில் ஒரு வாசகர் கிறித்துவர் அல்லாதவராக இருந்தார்கள்.

1884 இல் இவ்விதழின் பெயர், **"புதிய காலம்"** என்று மாற்றப்பட்டு, தமிழ் - ஆங்கிலம் இருமொழி இதழாக, மாதம் இருமுறை வெளிவந்தது. 1909 இல் தென்னிந்திய ஒன்றிய திருச்சபை அமைந்தபொழுது இவ்விதழின் பெயர் **"தென்னிந்திய ஐக்கிய சபை தூதிகை"** என்று மாறியது. 1941 இல் மீண்டும் **"சத்திய வர்த்தமானி"** ஆயிற்று. 1985 முதல் **"பேராலய மலர்"** என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

பெயர் மாறும்பொழுதுதெல்லாம் இதன் மலர் - இதழ்கள் முதலில் இருந்து தொடங்கின. ஆனால், "1870 இல் நிறுவப்பட்டது" என்று அட்டைப் பக்கத்தில் அச்சிடப்பட்டது.

1874 இல் விற்பனை 350 படிகள். 1884 இல் 750 படிகள். 1888 இல் 690 படிகள்.

நேடிவ் பப்ளிக் ஒபினியன்

வாரம். சென்னை. ஆசிரியர் - திவான்பகதூர் ரெங்கநாதன். தமிழ்,

ஜனவிநோதினி.

Janavinodini.

A POPULAR MAGAZINE

OF

AMUSING AND INSTRUCTIVE INFORMATION IN TAMIL.

Vol. I.

PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

Madras:

PRINTED BY H. W. LAURIE, AT THE C. K. S. PRESS, VEPERY.

1870.

முதல் தொகுதி – 1870. (உ.வே. சா. நூலகம்)

தெலுங்கு, ஆங்கில மும்மொழி இதழ். மக்கள் குரலை ஒலித்த இதழ். விற்பனை 550 படிகள்.

அகத்திய வர்த்தமானி

மாதம். சென்னை. தமிழில் முதல் வைத்திய இதழ்.

ஜனவிநோதினி

மாதம். சென்னை. அரசு கல்வித்துறை வெளியீடு. சனவரியில் தொடங்கப்பட்டது. விலை 2 அணா. கல்வி வளர்ச்சிக்கான சிறந்த கட்டுரைகள் இதில் வெளிவந்தன. பின்னாளில் அக்கட்டுரைகளைத் தொகுத்துப் பேராசிரியர் கா.நமச்சிவாயம் நூற்களாக வெளியிட்டார். அந்நூற்கள் பல்கலைக்கழகப் பாடமாக வைக்கப்பட்டன. இராமாயணக் கதைகள் இவ்விதழில் தொடராக வெளியிடப்பட்டன. கம்ப இராமாயணம் அச்சேறியது இதுவே முதல் முறை. இவ்விதழை "மக்கள் இதழ்" என்று சென்னை மாநில அரசு நிர்வாக அறிக்கை (1869-70) கூறுகிறது. 1874 இல் விற்பனை 4,300 படிகள்."இரட்சணிய யாத்திரிகம்" அ.ஆ.கிருட்டினனின் இளவல் முத்தையா, இதன் ஆசிரியராக இருந்தார்.

சத்திய தீபம்

மாதம். சென்னை. ஆசிரியர்கள் - சைதாபுரம் காசி விசுவநாதன், இராமசாமி ராசு.

புதினாதிபதி

கொழும்பு. கு.அப்புத்துரை. கையெழுத்து இதழாக வெளிவந்தது. தமிழில் முதல் கையெழுத்து இதழ் இதுவே.

மகாபக்த விஜயம்

மாதம். சென்னை. ஆசிரியர் - திருவேங்கடம். திருமால் பக்தர்களின் கதைகள் தொடர்ந்து வெள்ிவந்தன. பிறகு இதே பெயரில் பெரிய நூலாக வெளியிடப்பட்டது.

சர்வ ஜன மனோரஞ்சனி

மாதம் இருமுறை. திருநெல்வேலி. விற்பனை 1,200 படிகள்.

கதாசிந்தாமணி

இதே தலைப்பில் கதைத் தொகுதிகள் தொடர்ந்து வெளிவந்ததால், இதனை இதழாக சிலர் கொள்ளுகிறார்கள். ஆசிரியர் - ச.வ.சந்தியாகு.

ஞானபாநு

மாதம். சென்னை. அக்டோபரில் தொடங்கியது. 48 பக்கம். விலை 2 அணா. 300 படிகள் விற்பனை. "ஞானபாநு சங்கம்" வெளியிட்டது. ஆசிரியர் - செங்கல்வராயன். சமய இதழ். புராணக்கதைகளுடன் செய்திகளும் இடம்பெற்றன. 1868 இல் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

பிரம்மதீபிகை

மாதம். சென்னை. ஆசிரியர் - சைதாபுரம் காசி விசுவநாதன் (1806-1871). "சத்திய தீபம்" இதழில் இருந்து பிரிந்து, தனியே இந்த இதழைத் தொடங்கினார். முதல் இதழ் டிசம்பர் 26 இல் வெளிவந்தது. பிரம்மஞான சபையின் முதல் இதழ், இது. ஆசிரியர் இறந்ததும், இதழ் நின்றது என்கிறார், சே.ப.நரசிம்மலு.

ஆசிரியர் காசி விசுவநாதன் மொழி பெயர்ப்பாளராக நீதி மன்றத்தில் பணி தொடங்கி, மாவட்ட நடுவராக ஓய்வு பெற்றார். **"டம்பாச்சாரி நாடகம்"** என்ற தமிழின் முதல் சமுதாய நாடகத்தை எழுதியவர், இவரே. இவர் எழுதிய **"தாசில்தார் நாடகம்"** அந்நாளைய அரசு அதிகாரிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தக்கூடியது. 400 பக்கமுள்ள **"பிரம்ம சமாச நாடகம்"** என்ற நாடகத்தையும் எழுதியிருக்கிறார். **புனர் விவாக தீபிகை, யாப்பிலக்கண வினா விடை, அப்பர்சாமி பதிகம், தாலுகா சட்டம்** ஆகிய நூற்களையும் எழுதியுள்ளார். "பாகசாத்திரம்" என்ற சமையல் நூலையும் சமைத்துள்ளார்.

இவ்விதழில் காசி விசுவநாதன் எழுதிய கட்டுரைகளைக் கண்டித்து 1871 இல் ஒரு நூல் வெளிவந்துள்ளது. **"விசுவநாத முதலியாரும் அவரது பிரம்மதீபிகையும்"** என்று பெயர். கே.இராமானுசலு எழுதியது. "விசுவநாத முதலியார் அவரது 'பிரம்மதீபிகை' வாயிலாக பிரம்மஞான சபைத் தத்துவத்தை விளக்கியதைக் கண்டித்து, உண்மையான பிரம்ம ஞானசபைத் தத்துவத்தை விளக்கும் நூல்" என்று, தமிழ் நூல் விவர அட்டவணை (முதல் தொகுதி, நாலாம்பகுதி) கூறுகிறது.

விவேக விளக்கம்

மாதம். சென்னை. 45 பக்கம். 500 படிகள். விலை 3 அணா. அக்டோபர் முதல் இந்தத் தலைப்பின் கீழ் கதை, கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டார்கள். அவற்றில் சில : பெண்கல்வி, குழந்தை மணம், பெண்களை விற்றல், பேய், காலரா, மரியாவின் தியாகம்.

1871

ஆந்திர பாசா சஞ்சீவினி

மாதம். சென்னை. தெலுங்கு - தமிழ் மொழிகளில் தனித்தனியே வெளிவந்தது. விற்பனை தலா 200 படிகள்.

கும்பகோணம் அத்தினீயம்

வாரம். கும்பகோணம். விற்பனை 54 படிகள். **"கும்பகோணம் அத்தினீயம் - வர்த்தமான விமர்சனம்"** என்பது முழுப்பெயர். சென்னையில் "அத்தினீயம்" என்ற ஆங்கில இதழ் வெளிவந்து கொண்டிருந்ததால், இது "கும்பகோணம் அத்தினீயம்" என்று பெயர் சூட்டிக்கொண்டது. இலக்கிய ஆர்வமிக்க ஒரு குழு இவ்விதழை நடத்தியது.

"அத்தினீயம்" என்பது கிரேக்கச் சொல். அங்குள்ள கலைமகள் கோயிலுக்கு "அத்தினீயம்" என்று பெயர். இப்பொழுது நூலகம், இலக்கிய மன்றம் போன்றவற்றைக் குறிக்கும்.

பிரிமியர்

மாதம். சென்னை. கிறித்துவக் கல்விக்கழக வெளியீடு. சனவரியில் தொடங்கியது. 36 பக்கம். 6 பைசா. 1000 படிகள். இதன் தமிழ்ப் பெயரை அறிய இயலவில்லை.

பஞ்சமன்

மாதம். சென்னை. ஆதி தமிழர் இதழ்.

'light,' we get kây, to burn; kâṅgoi, heat; kâram, anything hot; kânal, mirage, heat; kâmam, love; kâthal, warm attachment; kâyam, a wound (that burns), pungency; kâḍi, vinegar; kâl, seed (which possesses the fire of life), to be pungent; kâḍu, a desert, a place for *burning* the dead; kâṭchi, sight, (we say "a glance full of *fire*"); kâri, blackness (burnt); kâvi, red ochre; kâvu, sacrifice; kâḷi, black woman; kâḷei, young bullock, young man (possessing the *fire* of youth); kaṛuppu, black; kasa, to taste bitter; kasattei, astringency; kaḍu, to throb; katham, anger; kathir, ray of light; kattu, to cry harshly; kanthi, brimstone; kamaru, to be excessively heated; kayar, astringent matter; kari, to be scorched; karukku, to scorch; karei, to dissolve; kala, to flame; kani, to grow ripe, tender, melt; kanṛu, to be burnt by the sun.

From KU, signifying anything 'bent,' 'curved,' 'hollow,' 'round,' we get kuni, to stoop; kûnu to curve; kuḍoi, umbrella; kûḍoi, basket; kumiḷi, bubble; kuṇḍu, bullet; kuḍam, pot; kuḷam, tank; kuthi, heel; ku, the earth; kuhoi, cave; kuḍakkiyan, a bent or crooked person; kuḍantham, rotundity; kuḍal, bowels; kuḍambei kûḍu, bird's nest; kuḍâ, cavity, bay; kuḍumi, hair tied in a knot; kuḍumbam, family circle; kuṇakku, crookedness; kuthoi, bow, loop: kunthu, squat (to bend the legs); kuppei, a heap (of rubbish); kumal, a sickle; kumuṛu, to emit a hollow sound, bubble; kumbi, the paunch: kuraṅgu, to bend, stoop; kuruppu, pimple; kuvaḍu, roundness, mound; kuvi, become conical; kuḻal, tube; kuḻi, hole; kuḻeichchu, bow, loop; kuṛaḍu, tongs, pincers; kuṛaṇḍu, to be crooked; kuṛâvu, to shrink, contract; kunṛu, a hill.

From TA, denoting the action of 'striking,' 'stroking,' we find taṭṭu, to tap; taḍi, a stick; tagar, fragment; taḍavu, stroke; taḍam, road; taḍaṅgal, taḍei, hindrance; taṇḍi, chastise; tattu, hop; tappu, a tomtom (what is struck); tari, to stop, take (or *strike*) root; tavaḷei, frog; taḻumbu, bruise from a *stroke*; taḻir, germinate, *strike*; taḷḷu, shove; taṛi, cut off; taṛei, to hammer; tâkku, beating; tâṅgu, ward off; tâṇḍu, leap; tâvu, to spring upon, attack.

From VA, with the idea of 'carrying,' we get vâ, to come (carry oneself near); vâḻu to live, flourish (as the French say "*se porter*," to *carry* oneself); vârei, a pole for carrying anything; vâr, to pour; vây, mouth (for carrying breath); vârttai, a word (to carry a single idea); vâkkiyam, a sentence (to carry an assemblage of ideas); vâl, a train or tail; vaṇḍi, a carriage; vaḻi, a road, way.

A. M. Ferguson, Jr.

Abbotsford Estate, Lindula, Ceylon.

MARRIAGE CUSTOMS IN THE RÂWAL PINDÎ DISTRICT.

HINDUS.

Betrothal.—(*Sakh or Kurmai.*)

Among Hindûs betrothals are of three kinds, *viz.*:—

1.—*Pûnsakh*, where no valuable consideration is received whatever. 2.—*Dúdihí*, where an interchange of brides takes place between the two families. 3.—Where money is paid for the bride.

The last is a custom much reprobated, and does not usually prevail among very high-caste Hindûs.

The preliminaries having been settled privately between the two families, the parents or guardians of the girl send their *purohita* with some sugar, one rupee cash, two pice, two tolâs of saffron, and a Brahmanical thread (*janéo*) to the house of the parents or guardians of the boy. On his arrival the friends and relatives of the boy assemble with their *purohita*. A drum (*dhol*) is beaten, and it is publicly notified to the members of the assembly that such a person's son has been betrothed to such a person's daughter. The boy's *purohita* draws a figure with saffron or *sendûr* of Ganêśa in the vessel containing the *janéo*, &c., and offers up prayers to Ganêśa: The girl's *purohita* invests the boy with the Brahmanical thread, and affixes a *ṭikâ* of saffron on his forehead. Some *batáshas* (sugardrops) or raisins are distributed to the friends assembled, and the *purohitas* are dismissed with a present. There is also for the next two days music and singing in the boy's house.

In some instances the above ceremonies are not observed. There is a simple announcement, when the girl's *purohita* is sent, that a betrothal has taken place between the parties, and in cases where there is relationship or confidence between the parties, there is no ceremony of any kind whatever, the parties are content with a private verbal engagement. The betrothal of a widower takes place without any ceremony.

Marriage.—(*Biyâh or Shâdî.*)

When a marriage is to be celebrated, two or three months before the event the friends of the bride, with the assistance of the family *purohita* or priest, fix upon the auspicious day, which is known as the *Sâhâ*. It is taken down in writing, and this document, which is called the *Parchâ shâdî*, is sent by the hand of the family *purohita* or barber to the parents of the bridegroom.

"இந்தியன் ஆண்டிகுவரி" தொகுதி 10, 1881,
(சென்னைப் பல்கலைக்கழக நூலகம், தமிழ்ச்
சொற்கள் ஆங்கில எழுத்தில் எழுதப்பட்டுள்ளன)

வேதாந்த நிர்ணயப்பத்திரிகை

மாதம் மும்முறை. பிறகு மாதம் இருமுறை. சென்னை. 1888 இலிலும் இவ்விதழ் வெளிவந்தது. அப்பொழுது விற்பனை 500 படிகள்.

சுகிர்தவசனி

மாத இருமுறை. சென்னை. விற்பனை 320 படிகள். 1873 இல் வார இதழாக வெளிவந்தது. விற்பனை 250 படிகள். சுகிர்தவசனி அச்சகம். ஆசிரியர் – இராயப்பா.

போலீசு வீக்லி சர்குலர்

வாரம். சென்னை. காவல்துறை வெளியீடு. தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித்தனியே வெளிவந்தது. தமிழ் இதழ் விற்பனை 550 படிகள்.

1872

வியவகார தரங்கிணி

மாதம். சென்னை. சட்ட இதழ்.

உண்மைவிளக்கம்

மாதம். சென்னை. ஆசிரியர் – தந்தை ஆர்.எம்.பாபு. (1861 இல் "சத்திய தீபம்" இதழை நடத்தியவர்). 10 பக்கம். 200 படிகள். இலவச வெளியீடு.

இந்தியன் அண்டிகியூட்டி

காலாண்டு. பம்பாய். இந்த ஆங்கில இதழில் தமிழும் இடம்பெற்றது.

பாரிசில் வெளிவந்த "கீழ்நாட்டு மொழிகள்"[1] என்ற பிரெஞ்சு இதழ். செர்மனியில் வெளிவந்த ஓர் ஆராய்ச்சி இதழ்[2] ஆகியவற்றிலும் தமிழ் இடம் பெற்றிருந்தது[3] என்று பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் குறிப்பிட்டுள்ளார்.

1873

சுக இரஞ்சனி

மாதம், மார்க்கபுரம்.

புதினாலங்காரி

மாதம். கொழும்பு. ஆசிரியர்கள் – நெயிந்த மரைக்காயர், வாப்பு மரைக்காயர். இலங்கையில் முதல் இசுலாமிய இதழ். இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

புதினா என்றதும், புதினாக்கீரையை நினைக்க வேண்டாம்! தமிழ் நாட்டில் நாவல் – நவீனம் என்று சொல்லப்படுவதை ஈழத்தில் "புதினம்" என்பார்கள். "புதின அலங்காரி" என்பதுதான் "புதினாலங்காரி" என்று ஆயிற்று.

---

1. Ecole Speciale des Languages Orientales vivantes (1736-1746, 1883, 1886, 1894, 1899)

2. Deutsche Morgenlaendishe ceseleschaft

3. *19 ஆம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி.*

திருவாங்கூர் அபிமானி.

மாசம் மூன்று முறை பிரசுரஞ்செய்யப்படுகின்றது.

கிரயவிபரம்.

	ரூ.	அ.	பை.
வருஷம் ஒன்றுக்கு	௨	௮	௦
பிரிட்டிஷ் தபாற்கூலி உட்பட ...	௩	௪	௦
அஞ்சற்கூலி உட்பட	௩	௰௨	௦
இலங்கை தபால்மூலம் ஒரு பிரதிக்கு	௪	௰௨	௦

தனிப்பிரதி ஒன்றுக்கு அணா ௨.

மூன்று மாசத்துக்குப்பின் பணம் கொடுக்கிறவர்கள் கால் ரூபாயும், ஆறு மாசத்துக்குப்பின் அரை ரூபாயும், ஒரு வருஷத்துக்குப்பின் ஒரு ரூபாயும் கூட்டிச் செலுத்தவேண்டும்.

அறிவிப்பு முதலியவைகள் அச்சிடும் கூலி விபரம்.

வரி ஒன்றுக்கு முதல் முறை அச்சிட அணா ௨ தப்பால் எத்தனை முறை அச்சிட்டாலும் அத்தனை முறையும் வரி ஒன்றுக்கு அணா ௧.

முத்திரை ஒட்டி அனுப்பப்படாத கடிதங்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

கடிதம் எழுதுவோர் திட்டமாயும் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதி அனுப்பவேண்டும்.

☞ இப்பத்திரிகையின் கிரயத்தை தபால் முத்திரையாக அனுப்புவோர் ரூபாம் ஒன்றுக்கு அரை அணா வீதம் கூட்டி அனுப்பவேண்டியது.

இப்பத்திரிகையை சம்பந்தித்த சகல விசேஷங்களையும் நாகர்கோவில் லிக்றேசியா அச்சியந்திரசாலை, மி. ஜி. ஜோசெப் என்பவருக்கு மேல்விலாசம் எழுதி அனுப்பவும்.

திருவாங்கூர் அபிமானி.

நாகர்கோவில் ௲௮௱௮௰௪, பெப்ருவரி ௴ ௨௰.

WAR NEWS
யுத்த சமாசாரம்.

சென்ற ௴ ௨௰௨ தேதி பாஷாவை அபமேற்றுடன் சந்தித்த ஜெனரல் கோடான் என்பவர் சூடானின் கிரேஷ்டாதிபத்தியத்தை பெறவில்லையென்ற சமாசாரம் கிட்டினதே. அத்துடன் பேகர் பாஷா சத்துருவைத் தாக்கி தன் குதிரைப்பட்டாளத்தைக்கொண்டு பல தாற்றுச்சேர்ச்சை பேரை மாய்த்திருக்க பேகர் பாஷா பாடு பம்பரப்பழாச்சைப் முடிந்தது. எப்படி என்றால், அவர் தோக்காரிலே உத பேரையும் கு தவகுகளையும் பரிசோதித்து முடியடிக்கப்பட்டு தங்காப்பிளை நம்பிரா என்ற மீதித் தானியத்துடன் சாகிமூக்குத் திரும்பினர். ஓகோ! அம்மட்டோடே போனால் லோசி. இரத்த ருசி கண்டுகொண்டு சத்துரு விடேல விடேலென்று தொடர்ந்து சாகிமூருகுள் செல்லவே பேகர் பாஷாவின் மிஞ்சின எம்பிய தளம் எல்லாருமே சனியன் எதம்புபோளுள் எமக்கு ஏரு மைபோல் வந்து எதிர்ந்தே என்ற சொல்லிக்கொண்டு மூபிய அடிபட்டு ஓட்டம்பிடித்து விட்டது. பாஷாவும் பயந்துவிட்டாராம். புலியில்லாக் காட்டிலே நரி தன்கொண்டு என்றதுபோல சாகிம் சத்துருவினால் பிடிபட்டு. சாகிம் பட்சிக்கப்பட்டு போமோ? அப்படிக்கு யாம் கருதில் பம்பாய் தானியமும் மதிய தரைக் கட்டுவளமைதில் நல்ல விசி அடக்கி சேவனும் சாகிமைப் பாதவகை செய்ய விரைந்து செல்லும்படி உத்தரவு பிறந்துவிட்டது. மேலும் இங்கிலீஷ் துரைத்தனம் சூடானின் கோடான் கிளமையை உணர்ந்து சாகிமூருக்கு உதவி புரி அவ்விடத்துச் சேனையை அதிகரிக்கும்படியான முயற்சியின் செய்திட்டதென்று கொண்டிடன் பிரபவர்கள் அறிவித்திருக்கின்றனர். ஏதேன் சூடாவிலுள்ள எம்பிய அரசமுறையில் ஏதேன் அரைச் சேனை வர்த்தமொண்டது. கோர்ணாவிலுள்ள சவேரன் லகம் உரைப்பட்டபடியம் ஜெனரல் கோடான் போவதை நிறுத்திவிட்டார். ஹோலிரோவிலே ஒரு காவலருமு எடுப்பி பிரிட்டிஷ் தானியகத்தில் அடைக்கப்புகுத்திருக்கும் ஒரு அணியினதை நாம் [illegible]

றது. இப்படி மறுபடியும் எழும்பாதபடி சிறு அதிகாரன்றர் சவறானமைய இருக்குமென்று எண்ணுகின்றோம். விபனுவிலே ஒரு போலீஸ் கிப்பாய் சதிகொலைக்காரன் ஒருவனால் கடப்பட்டுச் செத்தான். கொலைஞன் சிறையில இருந்தப்பட சிறைப்படுத்தியவன்மேல் ஒரு குண்டை எய்தான். ஆனால் தப்பிப்போய் விட்டது.

HIS HIGHNESS THE MYSORE MAHA RAJAH.
மைசூர் மகாராஜா அவர்கள்.

சென்ற சனிக்கிழமை மாட்சிமைதங்கிய மைசூர் மகாராஜா அவர்கள் சென்ட்ரல் ஸ்டேஷனில் தமதுடைய திவான், பிறைவேற் செக்கிரிட்டெரி, முதலிய கனவான்களோடு இறங்கினர். இவருடைய வருகைக்கு டி. மாதவராவ், ஜெனரல் ரூல், ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் முதலியோரால் எதிர்கொள்ளப்பட்டது. இவருக்காக ஒரு மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு அவர் சென்றவுடன் சர். டி. மாதவராவ் சுதேசிகளுக்காக ஒரு அட்ரஸ் வாசித்தார். அதற்கு திவான் அவர்கள் இராசாவுக்குப் பதிலாய் மறுமொழியுரைத்தார்.

ILBERT BILL.
இல்பர்ட் பில்.

இல்பர்ட் பில்லைபற்றி கவர்ன்மெண்டாருக்கும் பாதுகாவல சங்கத்தாருக்கும் இருந்த முடிவுப்படி ஒரு ஒழுங்கு வந்ததென்று கேள்விப்படுகிறோம். எப்படியென்றால், ஒரு சதேச டிஸ்டிரிக்ட் ஜட்ஜ அல்லது ஒரு சுதேச டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டைத் தவிர வேறெந்த சுதேசியாவது ஐரோப்பிய பிரிட்டானிய பிரஜைகளில் குற்றவிசாரணை செலுத்தப்படாது. மேலும் அப்படிப்பட்ட விஷயத்தில் ஒரு ஐரோப்பியன் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டால் விசாரிக்கப்படத்தக்க குற்றத்தை செய்யும்போது ஐரோப்பியரே மிகுதியாயுள்ள ஜூரிகளைக்கொண்டு விசாரிக்கவேணுமென்றும் இவ்விதப் பாத்தியதை சூரிகளில்லா ஜில்லாக்களிலும் செல்லவேணுமென்றும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாலும் விசாரிக்கப்படத்தக்க ஒவ்வொரு கேசிலும் அம்மாஜிஸ்டிரேட் ஐரோப்பியனாய் இருந்தபோதிலும் மேற்படி சூரிப்பாத்தியதை செல்லவேணுமென்றும் ஒழுங்காயிருக்கிறது.

HIS EXCELLENCY THE VICEROY AND GOVERNOR GENERAL OF INDIA.
லார்ட் ரிப்பன் மஹாப்பிரபு.

மாட்சிமைதங்கிய எங்கள் இராஜப்பிரதிநிதியும் அவர் தேவியும் சென்ற வெள்ளிக்கிழமை மத்தியானம் ௩ மணிக்கு சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டு ஐதராபாத் நகருக்கு சென்றார்கள். சேண்டியிலுள்ள கவர்ன்மெண்டு வீடு துவங்கி ரெயில் ஸ்டேஷன் வரைக்கும் உள்ள தெருவெல்லாம் சுவிரமான வளைவுகளினால் புனிதமாயும் விற்பன்னமாயும் அலங்கரிக்கப்பட்டது. அநேகர் தங்கள் வாக்குதைகளால் அரசாள்வதற்கு அதிகம் இடம்படிக்கவசனென்பதை நன்கு வெளியிட்டார்கள். மவுண்றோட்டில் (மவுண்டு) உருவாட்டுவதுக்கு டட, தெருவின் இருபக்கமும் (பென்கைக) மாணாக்கர்களும் பல்ல சங்கங்களின் அங்கத்தார்களும் வரப்பார்த்திருந்தனர். அங்கு உரை வார்த்தைகட்டுத்தார்கள் தங்கள் இடங்களை வரவேற்க செடி செடி முதலியவற்றால் சிறந்ததாய் அலங்கரித்தார்கள். வெண்டி பார்க்கும் செவனுடைய லெப்டினன்ட் மணியில பல இடங்களில் போலீசர் தெருவின் இரண்டு பக்கத்திலும் நின்று ஒழுங்காய் நடத்திவந்தார்கள். அநேக சிரமான ஜனங்கள் கூடியிருந்து கம்பெனிக்கு அவுனைக் குழுந்து நிற்கைக்கள். பல்லிரண்டு மணியில் இறங்கி நிற்கும் அவர் போட்டிய கரையில் எத்தவர்கள்.

அப்பொழுது இருந்த சனங்கள் சந்தோஷத்துடன் ஆரவாரித்து வாழ்த்தினார்கள். ஊனிசமயத்தில் உப பட சுதேச பட்டாளமும், நல்ல கம்பெனியாரும் அணியாகுதச் சென்றார். ஒரு கூட்டம் குதிரை வீரரும் செங்கோலும் மலந்தில் இருந்த அழைக்கப்பட்டது. ரிப்பன் மஹாப் பிரபு லேடி அவர்களையும் இன்னும் இரண்டு பரிவாரத்தாரையும் கூடக்கொண்டு ஓர் வண்டியிலேறி செல்ல அவர்களுக்கு வாழ்த்தாக குண்டுகள் போடப்பட்டது. குதிரைமேல் செல்வோர் மாத்திரமல்ல, மெய்காப்பாளர் பலர் வண்டி பாதுகாத்துக்கொண்டு கூடச் சென்றனர். இன்னொருவண்டியில் லார்ட் ரிப்பன் தேவியும், கவர்னர் தேவியும், இரண்டு பரிவாரமுமாகச் சென்றார்கள். இன்னும் பெரிதுணைமகன் முன்சென்று இவர்கள் வருகையை எதிர்கொள்ளப் போனார்கள். அநேக உத்தியோகஸ்தரும் பல லேடிகளும் இவர்களை பின்தொடர்ந்து சென்றார்கள். இராஜப்பிரதிநிதியின் சாமான் பண்டசாமான்களும், பெட்டிகளும் அதற்குமுன்னமே முன்னதாய் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்த வேலையிலே ஒரு டசன் போலீசுக்குமேல காவலாயிருந்தார்கள். இவ்வாறு இவர்கள் ஸ்டேஷனை வாத்தியத்துடன் அங்கு அடைந்து மரியாதையைப் பெற்று ரயிலண்டை சென்று வண்டியில் ஏறிச் சென்று ரயில் எழும்ப புறப்பட்டனர். ஸ்டேஷன் மேடைக்குள் எல்லாரும் போகாவண்ணம் சட்டம் போட்டுப் பூட்டப்பட்டிருந்தது. டிக்கட் உள்ளவர்களை மாத்திரம் உள்ளே விட்டார்கள்.

இவர் ஐதராபாத்துக்குச் சென்று நிஜாம் இளவரசின் பட்டாபிஷேகமுடித்தார்.

மாட்சிமை தங்கிய எமது ராஜப்பிரதிநிதியாகிய ரிப்பன் பிரபு அவர்கள் ஐதராபாத்திலிருந்து சென்ற சனிவாரம் மாலை ௫ மணிக்கு சென்னைக்கு வந்தார். திங்கட்கிழமை பாங்குவீடு ஆவில் சென்னை பிரபுக்களை கண்டபிறகு கிண்டிக்குப்போகும் வழியில் மயிலாப்பூருக்கு சென்று அந்த தெப்பகுளச்சகதை காணப்போயினர். அவ்விடத்தில் குளம் விசேஷமாய் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன. வந்திருந்த ஜனங்களையும், அவ்விடம் அலங்கரிக்கப்பட்ட விதங்களையும் [illegible] பார்த்தவனாதலால் இதனை விஸ்தரிக்காது விட்டவம். இங்கு ராஜா சர். டி. மாதவராவ் கனம் முத்துசாமி ஐயர் ஸ்ரீ கவரைய செட்டியார் முதலிய [illegible] களும் தலைவர்களும் ராஜப் [illegible] வரவை எதிர்கொண்டு [illegible] நடத்தினர். இராஜப்பிரதிநிதி சந்தோஷ வாழ்த்தைக் கேட்டு கிண்டிக்குப் போய் விட்டனர்.

அன்று மறுநாளாகிய செவ்வாய்க்கிழமை மாலை இராஜப்பிரதிநிதிகள் பிரசிடென்சி காலேஜுக்குச் சென்று, அங்கிருந்து ஜேன்ட் அயுலைக்குப் போய் லார்ட் ஹோபார்ட்டின் படத்தைத் தரிசித்து, கோட்டைக்குப் போய் அங்கு ஜேஸ்ட் மேரிகோவிலின் லார்ட் ஹோபார்ட்டின் பிரேதத்தை புதைத்திருக்கும் இடத்தையும் கண்டார்கள். அதன் பிறகு மிலவர்க்கு எல்லு வழக்கும் கிறிஸ்டியன் காலேஜுக்குச் சென்றார். இவ்விடத்தைவிட்டு பச்சையப்பன் கல்விசாலைக்குப் போய் அங்கு சுதேசிகளால் மரியாதை பெற்று கிண்டிக்குப் போயினர். கேதுவத்திரம் பசல் ஸ்டேஷனில் ஏறி கல்கத்தாவுக்குச் சென்றனர்.

LOCAL NEWS.
இந்நாட்டு வர்த்தமானம்.

Mr. Ross, M. A; F. M. U.—இவர் கேத்புவனம் காலேஜின் புரோபெஸராயிருந்த மேன்தர் ரூஸ் துரையவர்கள் இம்மாசம் ௰௨-௳ கோட்டாற்று நதைன் கலிக் செய்துகளம் டதி அம்மானவர்கள் வழியாய் மறுகாக்குக்கு பரிக கொடுத்து திருவனந்தபுரம் வரினர்.

The Chief Engineer.—சீப் இஞ்சினியர் மேன்தர் ஜேகப்துரையவர்கள் இக்காட்சயை வெளி எல்லாம் சுற்றென்று பணியொன்றும் பார்ப்பாய் அங்கும் இதுவரை அத்துவானத்துடன் சாகிட்டு வருகிறார். அவரோடு மேன்தர் சுவிரோட்டு துரையவர்களும் ஆரல்வாய்மொழி முதலிய இடங்களுக்கு சென்று தமது அவஸ்தை காட்டி சமர்த்தரென பேர்வாங்குனர். ஜேகப் துரையவர்கள் காலை [illegible]

“திருவாங்கூர் அபிமானி”

20.2.1884 இதழ். (உதவி – டி. ரெங்கநாதன், நாகர்கோவில்)

சுதேச பூசணி

வாரம். சென்னை. விற்பனை 150 படிகள். மே மாதம் முதல் இதழ் வெளிவந்தது.

1874

திருவாங்கூர் அபிமானி

மாத மும்முறை. நாகர்கோவில். ஆசிரியர் பி.சி.சோசப்.

தமிழ் - ஆங்கில இருமொழி இதழ். ஆங்கிலப் பகுதி "திருவாங்கூர் டைம்சு" என்று பெயர் பெற்றது. திருவாங்கூர் குறுநிலத்தில் முதல் ஆங்கில இதழ் இதுவே. 1895 வரை ஒரே இதழாக நடந்தது. அந்த ஆண்டில் ஆசிரியர் இறந்ததும், அவர் மகன் டி.சி.சோசப் பொறுப்பு ஏற்றார். இவர் காலத்தில் "திருவாங்கூர் அபிமானி", "திருவாங்கூர் டைம்சு" இரண்டும் தனி வார இதழாக வெளிவந்தன. கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்த பின்பு "திருவாங்கூர் அபிமானி" என்ற பெயர் "தியாகநாடு" என்று மாற்றப்பட்டு, மாலை நாளிதழாக வெளிவந்தது. டி.சி.சோசப்பின் மகன் டி.எப்.சோசப் இதன் நிர்வாக ஆசிரியராக இருந்தார். 1959 இல் டி.சி. சோசப் மரணம் அடைந்ததும், இதழும் மரணம் அடைந்தது.

"தியாகநாடு" இதழில் அதன் பெயருடன் சேர்த்து, "தமிழ் தினசரி பத்திரிகை" (1874 இல் நிறுவப்பட்டது) என்றும், "இந்தியாவில் முதல் தமிழ் பத்திரிகை" என்றும் அச்சிட்டு வந்தார்கள். திருவாங்கூர் குறுநிலத்தில் "திருவாங்கூர் டைம்சு" முதல் ஆங்கில இதழ் என்பது மட்டுமே சரியானது.

"பிற்பட்ட மக்களின் தூணாக இவ்விதழ் விளங்கியது. அரசியல் - பொருளாதார மறுமலர்ச்சிக்கும் போராடியது" என்று, "சென்னை மாநிலம் - அண்டை அரசுகள் கலைக்களஞ்சியம்" என்ற ஆங்கில நூல் (1921) தெரிவிக்கிறது.

அர்ச்சிலாஜிகல் சர்வே ஆப் இந்தியா

சென்னை. ஆங்கில இதழ். தமிழும் இடம்பெற்றது.

வெற்றிக் கொடியோன்

வாரம். சென்னை. த.மெய்யப்பன். அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்ட தாய்மொழி இதழ்கள் அறிக்கையில் இவ்விதழ்தான் அதிக இடம் பெற்றிருக்கிறது. விற்பனை 400 படிகள்.

சத்திய போதினி

மாதம். ஊட்டி. விற்பனை 130 படிகள்.

1875

சிநேக போதன்

மாதம். பாளையங்கோட்டை. ஆசிரியர் - தந்தை ஆர்.மெடோஸ்.

பெற்றோர்களுக்கான பத்திரிகை[1]

"பத்திரிகை" என்று பெயர் இருந்தாலும், இது இதழ் அல்ல; ஒரு நூல்.

---

1. தமிழ் நூல் விவர அட்டவணை (தொகுதி 1, பகுதி 4.)

[18.] யில் தானத்தார்க்கு நிருபம் [||*] எ-
[19.] டுத்து ஆயிரமுடைய நாயகார்
[20.] தானத்தை முன்பு குலோத்-
[21.] துங்கசோழதேவர் காலத்தி-
[22.] லே இறங்கல் இட்டு நாயனார்
[23.] திருநாமத்துக்காணியுமாகி தி-
[24.] ருவிருப்பும் திருமடைவிளாகமு-
[25.] ம் அனையபதங்காவுடைய நா-
[26.] யனா[ர்*]க்கு குடுத்த இதுவும் எடுத்-
[27.] து ஆயிரமுடைய நா[ய*]-
[28.] னார் தானத்தை இறங்-
[29.] கல் இட்ட இதுவும் ஸ்ரீ-
[30.] ம் அல்லாதபடி ஆலே

East face.

[31.] இன்னா[யனா*]ர் தானம் இறங்க-
[32.] ல் மீண்டு ஆடி மாதமுத-
[33.] ல் பூசை திருப்பணி நடக்-
[34.] கும்படிக்கு தென்கரை
[35.] மணவிற்கோட்ட-
[36.] த்து பன்மாநாட்டு முரு-
[37.] க்கை ஊர் அடங்கலும் ஸர்வமா-
[38.] ன[1]யம் இறைய[2]லி ஆக
[39.] நாற்பாற்கெல்-
[40.] (கெல்)லைக்குட்பட்ட
[41.] நிலமும் சந்திராதித்தவ-
[42.] ரையும் ... நடக்கும்படிக்-
[43.] கும் [|*] இன்னாயனார் தி-
[44.] ருவிருப்புக்கு வடபாற்-
[45.] கெல்லை வடதாழம்பள்-
[46.] ளத்து தெற்கும் [|*] தென்-

North face.

[47.] பாற்கெல்லை கழனிக்-
[48.] கு வடக்கும் [|*] மே. ல்பா-
[49.] ற்கெல்லை கரை மே-
[50.] மட்டுக்கு கிழக்கும் [|*] கி-
[51.] ழ்பாற்கெல்லை வரி
[52.] வாய்க்காலுக்கு மே-
[53.] ற்கும் [|*] இந்த நாயனார்
[54.] சந்நிதித்தெரு அட-
[55.] க்கலும் ஸர்வமா-
[56.] ன்னியம் ஆகச்சந்தி-
[57.] ராதித்தவரையும் செ-
[58.] ல்லும்படி முன்பு இறங்-

---

[1] Read னி. [2] Read யி.

"அர்ச்சலாஜிகல் சர்வே ஆப் இந்தியா"
தொகுதி 1, 1890. (சென்னைப் பல்கலைக் கழக நூலகம்)

குழந்தை வளர்ப்புப் பற்றிப் பெற்றோருக்கு ஆலோசனை கூறக்கூடியது.

நெடுங்கணக்கு இதழ்கள்[1]

"இதழ்கள்" என்று பெயர் இருந்தாலும், இது இதழ் அல்ல. நெடுங் கணக்குகள் (வாய்ப்பாடு) அச்சிடப்பட்ட உதிரித்தாள்கள். ஊ.புட்பரதம் வெளியிட்டது. அந்நாளில் உதிரித்தாள்களையே "இதழ்கள்" என்று சொல்லி யிருக்கிறார்கள்.

பிரமானந்தரஞ்சனி

மாதம். சென்னை. விற்பனை 150 படிகள்.

சிங்கை வர்த்தமானி

வாரம். சிங்கப்பூர். ஆசிரியர் – சி.கு.மகுதூம் சாயபு. "சிகு" என்றால், மலாய்மொழியில் "ஆசிரியர்" என்று பொருள். மலாயாவில் வெளிவந்த முதல் தமிழ் இதழ் இதுவே. அங்கு "ஜாவி பிரானாக்கன்" என்ற முதல் மலாய்மொழி இதழை வெளியிட்டவரும், மு.மு.சையதுபின் முகைதீன் என்ற தமிழரே – 1876 இல். 1897 இல் கோலாலம்பூரில் "நன்யாங் சீ வூ பாவ்" என்ற சீனமொழி இதழ் வெளிவந்தது. மலேசியாவில் வெளிவந்த முதல் சீன இதழ் இதுவே. இதை வெளியிட்டவரும் ஒரு தமிழரே. (பெயரை அறிய இயல வில்லை).

சென்னை நியாய போதினி

மாதம். சென்னை. ஆசிரியர் – கிருட்டினசாமி. 38 பக்கம். விலை 4 அணா. 282 படிகள். சட்டங்கள் தமிழ்ப்படுத்தி வெளியிடப்பட்டன. சட்ட நூற்களையும் வெளியிட்டது.

கிராமப்பள்ளி ஆசிரியர் துணைவன்

மாதம். சென்னை. ஆசிரியர் – புஷ்பரதம். 30 பக்கம். விலை 1 அணா 3 பைசா. 500 படிகள்.

1876

மச்ச புராணம்

மாதம் இருமுறை. சென்னை. பி.வேங்கடவன். 80 பக்கம். 500 படிகள். 8 அணா.

சத்திய வேத பாதுகாவலன்

யாழ்ப்பாணம் அருளப்பா. இப்பொழுதும் (1992) வெளிவந்து கொண்டி ருக்கிறது. கத்தோலிக்கத் திருச் சபை வெளியீடு

கத்தோலிக்க பாதுகாவலன்

மாதம் இருமுறை. யாழ்ப்பாணம். தமிழ் – ஆங்கிலம். ஆசிரியர் – பிலிப்பையா முருகப்பா. 1878 இல் வார இதழ் ஆயிற்று. இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

வர்த்தமான தரங்கினி

வாரம். சென்னை. செய்தி இதழ். 1842 இல் இதே பெயரில்

---

1. *தமிழ் நூல் விவர அட்டவணை (தொகுதி 1, பகுதி 4.)*

SIDDANTHA SUNGRAHAM.

FEBRUARY, 1878.

சித்தாந்த சங்கிரகம்.

இஃது

கல்கத்தா, சென்னப்பட்டணம், பம்பாய், அல்லஹாபாத்,
அல்லது பிரயாகை, இந்தநான்குஹைகோர்ட்டாரவர்
களுடையவும் பிரிவிகவுன்சில் என்ற மகாராணி
யவர்களுடைய நியாயசபையாருடையவும்
சித்தாந்தங்களடங்கிய,

லா ரிபோர்ட்டை

இந்தியா கவரன்மெண்டாரவர்களுக்காக அவர்களுடைய உத்
திரவுப்படி, தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டுஜட்ஜியவர்களால் பரிக்ஷிக்
கப்பட்டு, அதன்பேரில் ஷை கவரன்மெண்டாரவர்களுடைய
அனுமதிபெற்றுக்கொண்டிருக்கிற,

கும்பகோணம் வலங்கைமான் இவ்விரண்டு
டி-மு-கோர்ட்டுகளின் வக்கீலாகிய
கரூர்-இராமராவ்என்பவரால்
சங்கிரத்து மொழிபெயர்க்கப்பட்டது.

1878ஹு பிப்ப் வரிமீ த்து
லா ரிபோர்ட்டிலுள்ள சித்தா திகளின் சங்கிரகம்.

MADRAS:
PRINTED AT THE VIYAVAHARA THARUNGINEE PRESS.
1878.

பிப்ரவரி, 1878 இதழ். (மறைமலையடிகள் நூலகம்)

சென்னையில் ஒரு இதழ் வெளிவந்தது.

சுஜந ரஞ்சனி

வாரம். பெங்களுர். செய்தி இதழ். 1829 இல் பெங்களுரில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

1877

சித்தாந்த சங்கிரகம்

மாதம். சென்னை. ஆசிரியர் - களுர் இராமன். அரசாங்க வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சட்ட இதழ். அட்டையில் "இவ்விதழ் கல்கத்தா, சென்னைப்பட்டணம், பம்பாய், அலகாபாத் அல்லது பிரயாகை இந்நான்கு ஐகோர்ட்டார் அவர்களுடையவும், பிரிவு கவுன்சில் என்ற மகாராணி அவர்களுடைய நியாய சபையாருடையவும் சித்தாந்தங்கள் அடங்கிய லா ரிப்போர்ட் ஆகும்" என்று அச்சிடப்பட்டிருந்தது. 60 பக்கம். 300 படிகள். 6 அணா. கையொப்பம் ரூ. 5–4–0.

பழநி தலவிநோதம்

உள்ளுர் செய்தித்தாள்

இலங்கை நேசன்

மாதம். கொழும்பு. எச்.எம். சின்னத்தம்பி. இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

வால்மீகி இராமாயண வசனம்

மாதம். சென்னை. ஆசிரியர் - தாதா தேசிகன். நவம்பரில் முதல் இதழ். 16 பக்கம். 2 அணா. 1250 படிகள்.

திருவாய்மொழி

மாதம். சென்னை. 38 பக்கம். விலை 4 அணா. 240 படிகள்.

பராசுர சுமிருதி

மாதம். சென்னை. ஆசிரியர் - வேலாயுதம். மேயில் தொடங்கியது. 20 பக்கம். 2 அணா. 5000 படிகள். பராசுர சுமிருதி தமிழில் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

சேலம்சுதேசாபிமானி

மாதம் இருமுறை. சேலம். ஆசிரியர் - சே.ப.நரசிம்மலு. மார்ச் 10 இல் முதல் இதழ் வெளிவந்தது. இவர் மிகச் சிறந்த இதழாளர். இவர் நடத்திய இதழ்களின் பெயர்களில் "கோயமுத்தூர் கலாநிதி". "ஸ்ரீரங்கம்ஸ்தலபூசணி" என்று ஊர்ப்பெயரையும் சேர்த்துக் கொள்ளுவது வழக்கம்.

1867 இல் சென்னையில் "தேசாபிமானி" என்ற பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

1878

ஐகோர்ட்டு விதிகள்

மாதம். சென்னை. சட்ட இதழ்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தக பரமஹம்ஸரான

பின்பழகியபெருமாள்ஜீயர்

திருவாய்மலர்ந்தருளிய

ஆறுயிரப்படி

குருபரம்பராப்ரபாவம்.

இது

த்ராவிடபாஷையில் - ப்ரமாணத்திரட்டு - படம்,

இவைகளுடன்

ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகரான

வித்வான் – காஞ்சீபுரம்,

ஆ வல-ரி - ராமாநுஜாசார்யரவர்களாலும்,

ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூளியாகிய

கா - ராமஸ்வாமிநாயுடு அவர்களாலும்

பலப்ரதிகளைக்கொண்டு பிழையறப் பரிசோதிக்கப்பட்டு.

திருவல்லிக்கேணிக்கடுத்த ராயப்பேட்டை

ஸ்ரீமத்வரவரமுநீந்த்ரனை வாழ்த்துஞ் சபையைச்சேர்ந்த

ஸ்ரீ-ரா-ராமக்ருஷ்ணபிள்ளையவர்களால்

சென்னை:

மலைச்சாலையிலிருக்கும்

கார்டியன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு - ௪000.

ஸ்ரீபராங்குசர் திருவவதாரஞு - சகூஅ0 - க்குச்சரியான

பஹுதாந்யஞு.

1878.

Registered Copy Right.

"குரு பரம்பரா பிரபாவம்"- 1878. (உதவி : மா. சரவணன், திருச்சி)

இதற்கு உள்ளூரார் ஒரு ரூபா. 1½ யும், வெளியூரார் தபால் கூலியுட்பட ரூபா. 2-ம் முன் கொடுக்கவேண்டும்.

ஸ்ரீ

வேண்டுவோர் பெங்களூர் பிரம்ம ஜுவலி மாளிகை ஏஜெண்டு ஆ. ஐயாசாமி முதலியாரவர்களுக்கு எழுதிக்கொள்ளலாம்.

பிரம்மக்கியானபோதினி.

பிரதி மாதம் 1-ஆ 16-ஆ பிரசுரமாகும்.—படித்தால் தெரியும், முயன்றால் முடியும்.
THE BANGALORE BRAHMA GYANA BOTHINI. A BI-MONTHLY JOURNAL. 1/2/90.

(புத்தகம் 12.) பெங்களூர்:—1890-ஞு பிப்ரவரி-மீ 1-ஆ சனிக்கிழமை. (இலக்கம் 12.)

ஓம்.
பிரம்மனேநமஃ.

உண்மை

[illegible]லர்க்கு விரோதம், [illegible]ர்க்கு நேசம்.

வேத வாக்கியம்.

ஓம் ஏகமேவாத்விதீயம்.
ஒன்றே யுள்ளது ஒப்புயர் வற்றது.

மஹாவாக்கியம்.

பிரம்மத்திலேபிறந்து, பிரம்மத்திலே வளர்ந்து, பிரம்மத்திலே யொடுங்கும் பிராணிகாள் அதைப்போற்றுங்கள்போற்றுங்கள்: அஞ்ஞானத்தை அகற்றுங்கள் அகற்றுங்கள்—B.

பிரம்மவியல்பு.

அரியுமல்ல அயனுமல்ல அரனுமல்ல அப்புறம், கருமைசெம்மை வெண்மையுங் கடந்துநின்றகாரணம், பெரியதல்ல சிறியதல்ல பெண்ணுமாணுமல் [illegible] தன் சிந்தையில் வைத்து சேரப் பிரசங்கம்செய்யவேண்டும்—B.

பழக்கம் வழக்கம்.

பனிப்பால் குடிப்பவர்களுடன் பாலகரைச்சேர்த்தால் பனிப்பால்குடிப்பார்கள். பசுப்பால்குடிப்பவர்களுடன் பாலகரைச் சேர்த்தால் பசுப்பாலகுடிப்பார்கள். இதுகளைப்போல பிம்பாராதனை செய்பவருடன் பிள்ளைகளைச்சேர்த்தால் பிம்பாராதனைசெய்வார்கள், பிரம்மத்தியானம் செய்பவர்களுடன் பிள்ளைகளைச் சேர்த்தால் பிரம்மத்தியானம்செய்வார்கள், ஆனதால் இதுகடினமன்று கடினமன்று!—B.

பிரம்ம பிரார்த்தனை.

அளவற்ற அண்டகோடிகளையும் அநேகம்சராசரங்களையும் ஆக்கி, அளித்து, அழித்து அருள்புரியும் பிரம்மமே! உமதருமைக் குழந்தைகளாகிய இந்தவெண்ணம் காதலர் பிம்பாராதனையில் அழுந்தாமலும், பிரம்மமே [illegible] யில் பிரவேசமுறும் உமது திருவடிக்கு பாத்திரமாகிய பிரம்மத்தியானத்தை அநுசரித்து இகத்திலும், பரத்திலும் இன்பத்தைப்பெறும்படி கிருபை செய்ய பிரார்த்திக்கின்றோம். ஓம்தத்ஸத்—B

ஓம்

பிராமதரும வினாவிடை.

(முன் தொடர்ச்சி.)

வினா—சுண்ணாம்பு மஞ்சளோடு கூடுவதால் செப்புவர்ணமாவதுபோலவே பூதசமஷ்டிசரீரத்தில் அறிவு முதலிய மேற்கண்டகுணங்கள் உற்பத்தியாகின்றன. ஆகையால் இந்த குணங்கள் சரீரத்தினுடையதே; ஜீவாத்மாவென்ற பெயர் வேறொரு தனித்த பொருளுக்கில்லையென்று சிலர் சொல்லுகிறார்களே?

விடை—ஆம் வஸ்துக்களின் இரசாயன சம்யோகத்தால் (சேர்க்கையால்) புதிதான வஸ்துவும் குணமும் விசேஷமாய் உண்டாகின்றன. ஆனால் வஸ்துக்களின் அந்த ஜடபதார்த்தங்களின் சாதாரண குணம் [illegible] வஸ்துவிலும் குணவிசேஷத்திலும் இருக்கின்றது. சுண்ணாம்பிலும் மஞ்சளிலும் எது சாதாரணகுணமோ அது சுண்ணாம்பு மஞ்சளின் சேர்க்கையிலும் அதன் செப்பிலும் இருக்கின்றது. ஆனால் ஜீவாத்மாவில் சரீரத்தின் அல்லது ஜடபதார்த்தத்தின் சாதாரணகுணம் ஒன்றுமில்லை. ஆகையால் ஜீவாத்மாவை ஜடபதார்த்தங்களின் சம்யோக விசேஷமென்று சொல்லுவதற்கில்லை.

வினா—ஜீவாத்மாவின் குணங்களில் சில பிரம்மத்தின் குணங்களோடு ஒத்திருப்பதால், பிரம்மமும் ஜீவாத்மாவும் ஒரே பதார்த்தமா?

விடை—இல்லை. பிரம்மமும் ஜீவாத்மாவும் ஒன்றல்லவென்று வேறுவேறு. ஆனால் இவையிரண்டின் குணங்கள் ஒன்றோடொன்று பொருந்துவதால் அவைகளில் ஸஜாதியத்துவம் (ஒரு இனமானதன்மை) இருக்கின்றது. எப்படியெனில், பிரம்மமும் ஜீவனும் இரண்டும் ஆத்மாக்களாயிருக்கின்றன. ஆத்மதத்துவத்தில் அவைகளுக்கு ஸஜாதியத்துவமுண்டு. ஆனால் குணங்களின் பேதத்தினால் அவைகள் விஜாதியத்துவம் (ஒரு இனமல்லாத தன்மை) ஆகின்றன.

வினா—ஸஜாதி விஜாதிகளுக்கு லக்ஷணமென்ன?

விடை—இரண்டு வஸ்துக்களின் குணங்களில் பேதமுண்டானால் அவைகள் வெவ்வேறு பதார்த்தங்களாகின்றன. வெவ்வேறு வஸ்துக்களில் எந்த குணங்களாவது அவைகளுக்குப்பொதுவான குணங்களானால் அவைகள் அந்த அம்சத்தில் ஸஜாதி ஆகின்றன. மேலும் அவைகளில் எந்த குணங்களாவது ஒன்றுக்கொன்று அம்சமில்லாவிட்டாலும் அல்லது விரோதப்பட்டாலும் அவைகள் அந்த அம்சத்தில் விஜாதிகளென்று சொல்லப்படுகின்றன. எப்படியெனில் மரமும் கல்லும் ஜடத்துவ அம்சத்தில் ஸஜாதிகள். ஜடமும் சேதனமும் ஒன்றுக்கொன்று விஜாதிகள்.

[illegible] சரீரத்தில் அறிதல் முதலிய குணங்கள் ஆத்மாவினுடையதல்ல. ஒரு உபாதியென்று சிலர் சொல்லுகிறார்கள்; சிலர் புத்தியை ஆத்மாவின் குணமென்றும்; மனம் ஆத்மாவின் குணமல்ல, ஆனால் அதுஒரு இந்திரியமென்றும் சொல்லுகிறார்களே?

விடை—[illegible] தவிர வேறு ஜடபதார்த்தங்களில் அறிதல், நினைத்தல், முதலிய குணங்களில்லை. உண்மையில் அவைகளில் இந்த குணங்களில்லையே. அவைகள் ஜடமென்று சொல்லப்படுகின்றன. எவைகளில் இந்த குணங்களிருக்கின்றனவோ அவைகளே ஆத்மாவென்று சொல்லுகின்றார்கள். ஆகையால் இந்த குணங்களை யார் ஜடத்தினிடத்திலேற்றிச் சொல்லுகிறார்களோ அவர்கள் ஜட லக்ஷணத்தை அறியவில்லை. மேலும் அவர்கள் அநித்தியவாதிகளை (ஆத்மா அநித்திய மென்பவர்களை)ப்போல ஜடசேதனங்களை ஒன்றாய்ச்செய்கிறார்கள். மேலும் ஆத்மாவை நிர்க்குணமென்று சொல்லி அதை லக்ஷணமற்றதாயும் [illegible] அல்லது அசத்தாகவும் செய்கிறார்கள்.

(இ—ம்.) [illegible]

சிந்திக்கும்பலன்.

பொய்சொல்வோரை யிகழ்வர், மெய்சொல்வோரை விரும்புவர், இதைச் சொல்லி மாறுமிறைவரையில் இந்தநேசம் நிலைத்திருப்பதும் பெரிது! பெரிது!! ஆனதால் இதனை விவேகிகள் யோசித்து [illegible]—B.

மகாபாரத வசனம்

மாதம். சென்னை. தாதா தேசிகதாதா. ("வால்மீகி இராமாயண வசனம்" ஆசிரியர்). 24 பக்கம். 1 அணா. 1000 படிகள்.

யதார்த்த வசனி

மாதம். சென்னை.

தத்துவ விசாரணி

மாதம். சென்னை.

தங்கை நேசன்

மாதம் இருமுறை. சிங்கப்பூர். ஆசிரியர் - மு.மு.சையதுபின் முகைதீன். 150 படிகள்.

பாகவத புராண வசனம்

மாதம். சென்னை. ஆகஸ்டில் முதல் இதழ் வெளிவந்தது. ஆசிரியர்கள் - ரெங்கையா, இராமானுசய்யா. விலை 4 அணா. விற்பனை 600 படிகள். 32 பக்கம்.

குருபரம்பரா பிரபாவம்

மாதம். சென்னை. ஆசிரியர் - இராமகிருட்டினன். டிசம்பரில் தொடங்கியது. 32 பக்கம். 3 அணா. 1000 படிகள். மார்ச்சு இதழ் 40 பக்கங்களுடன் வெளிவந்தது. விலை 3 அணா 9 பைசா.

பிரம்மக்கியான போதினி

திங்கள் இருமுறை. பெங்களூர். ஆசிரியர் - ஆ. ஐயாசாமி. கையொப்பம் : உள்ளூர் ரூ. 1-8-0. வெளியூர் ரூ. 2. பிரம்மசமாச இதழ். ஆசிரியர் ஒரு கவிஞர். அட்சய ஆண்டுப் பஞ்சம் பற்றி இவர் எழுதிய பாடல் "தத்துவ போதினி" 1866 ஆகஸ்டு இதழில் வெளி வந்திருக்கிறது.

1879

காரைக்கால் முன்னேற்றம்

வாரம். காரைக்கால். பிரெஞ்சு - தமிழ். காரைக்காலில் வெளிவந்த முதல் அரசியல் இதழ். முதல் இருமொழி இதழும்கூட. ஆசிரியர் - ஞானப் பிரகாசன்.

காலக்கணிதன்

வாரம் இருமுறை. சென்னை. அக்டோபரில் தொடங்கியது. டிசம்பரில் வார இதழ் ஆயிற்று. 1892 இலும் இவ்விதழ் வெளிவந்து கொண்டிருந்ததை புதுவைப் புலவர் சவராயலுவின் பாடல் திரட்டி லிருந்து அறிய முடிகிறது.

குருபரம்பர பிரபா

மாதம். சென்னை. தமிழ் - தெலுங்கு - வடமொழி. ஆசிரியர் - பெண் பாளையம் பெருமாள் ஜீயர். நவம்பரில் தொடங்கியது. 36 பக்கம். 1000 படிகள். 2 அணா 3 பைசா.

இடைநிலை உயர்தரப்பள்ளி நண்பன்

மாதம். சென்னை. ஆசிரியர் - அண்ணாதுரை. ஆண்டுக் கையொப்பம் 10 அணா. (1910 இல் சென்னையில் "மாணவர்கள் ஆசிரியர்கள் குழந்தை

களுக்கான பத்திரிகை" என்ற பெயரில் ஒரு மாத இதழ் வெளிவந்தது. ஆசிரியை – குமாரி வால்போர்ட்டு).

தத்துவ விவேகினி

நாகர்கோவில்.

வித்தியா வர்த்தினி

சென்னை.

கோயமுத்தூர் அபிமானி

மாதம். கோவை. ஆசிரியர் – சே.ப.நரசிம்மலு. மத மாற்றம், நீதிமன்றங்களில் வெள்ளையருக்கு ஒரு நீதி, தமிழர்களுக்கு ஒரு நீதி, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் ஊழல் ஆகியவற்றைக் கண்டித்து "சேலம்சுதேசாபிமானி"யில் எழுதியதால், அதிகாரிகளின் தொல்லைக்கு ஆளாகி, கோவை வந்து இந்த இதழைத் தொடங்கினார். "கோயமுத்தூர் பத்திரிகை" என்று சே.ப. குறிப்பிடுவது இந்த இதழோ?

1880

நாகரிக வர்த்தமானி

வாரம். காரைக்கால்.

மார்க்கண்டேயபுராணம்

காலாண்டு. சென்னை. 40 பக்கம். 4 அணா. 2000 படிகள். ஆசிரியர் - இரத்தினசபாபதி. முதல் இதழ் ஆகஸ்டில் வெளிவந்தது.

சத்தியாபிமானி

வாரம். பொறையார் (தஞ்சை மாவட்டம்). ஆசிரியர் – ஆ.முத்துத்தம்பி.

சிலுவைக் கொடி

மாதம். இராமநாதபுரம். 50 படிகள். நற்செய்தி பரப்புக்கழக வெளியீடு. திருச்சபை ஊழியர் கழகத்துடன் இச்சபை இணைந்தபின், 1925 இல் நிறுத்தப்பட்டது. ("நற்போதகம்" திருச்சபை ஊழியர் கழக வெளியீடு).

சிறீரங்கம் தல பூசணி

மாதம் இருமுறை. திருவரங்கம். ஆசிரியர் – சே.ப.நரசிம்மலு. 200 படிகள் விற்பனை ஆயிற்று. இந்த ஆண்டில் "சேலம் சுதேசாபிமானி" இதழும் வெளிவந்து கொண்டிருந்தது.

திருப்பாவை

மாதம். சென்னை. ஆசிரியர் – திருவேங்கடம். ("முதலாயிரம் வியாக்கியானம்" ஆசிரியர்) 40 பக்கம். 5 அணா. 600 படிகள்.

சைவ உதய பாநு

மாதம். யாழ்ப்பாணம். ஆசிரியர் – ஊ.சரவணமுத்து. 1884 முதல் மதுரையிலும் இவ்விதழை வெளியிட்டார். ஒரே நேரத்தில் யாழ்ப்பாணத்திலும், மதுரையிலும் வெளிவந்தது. ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் அச்சாகி வெளிவந்த முதல் தமிழ் இதழ் இதுவே. ஒரே நாட்டுக்குள் என்று இல்லாமல் ஈழத்திலும், தமிழ்நாட்டிலுமாக ஒரே நேரத்தில் வெளிவந்தது

இதன் தனிச்சிறப்பு. மதுரைப்பதிப்பின் முதலாவது இதழில் (21.4.1884) ஆசிரியர் கையெழுத்திட்டு "விசேட விளம்பரம்" என்று எழுதியிருப்பது.

"சைவ உதயபாநு என்னும் இப்பத்திரிகையை நாம் இம் மதுராபுரியிலே இருந்து வெளிப்படுத்தும் நோக்கத்தை நமது முதல் விஷயத்திலே தெளிவாக விளக்கியிருக்கின்றோம். நாம் இயன்றளவு நமது சித்தாந்த சைவத்துக்கு மாறுபடாமலும் வாசிப்போர், கேட்போராகிய இருபாலார் மனமுங் குளிர்ந்து முகமும் மலர்ந்து களிகொள்ளத்தக்க இனிய மொழிகளையே புணர்த்திப் பலருக்கும் பிரயோசனப் படத்தக்கதாக இப்பத்திரிகையை நடத்தி வருவோமென்று எண்ணுகிறோம். அவ்வாறு இதனைச் சோர்வடையாது நடத்துதற்குச் சைவசமயாபிமானமுள்ள பிரபுக்கள், வித்துவான்களாகிய இருபாலார் உதவியும் வேண்டப்படும். அதற்கு இவ்விந்தியா - இலங்கை முதலிய இடங்களிலுள்ள கனவான்கள் பின்னிடமாட்டார்களென்று நம்புகின்றோம்.

இப்பத்திரிகைக்காக எழுதப்படும் கடிதங்களும் பத்திரிகைகளும் பிறவும், பத்திரகிரயமும், "மதுரைப்புதுத்தெரு வாணிவிலாச யந்திரசாலையில் சைவ உதயபாநு பத்திராதிபர் ஸ்ரீ.சரவண முத்துப்பிள்ளைக்கு" என்று எழுதி நமக்கே அனுப்பப்படல் வேண்டும். கடிதமெழுதுவோர் இயன்றளவு கடுஞ்சொற்புணர்த்தலையும், கொடுந்தமிழ் மொழிகளையும், நியாயமின்றி பிறரைத் தாக்கத்தக்க வன்மொழி புணர்த்தலையும் நீக்கிப் பலர்க்கும் பிரயோசனப்படத்தக்க நல்ல விஷயங்களைத் தெளிவான எழுத்தில் எழுதியனுப்புக".

இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

முதலாயிரவியாக்கியானம்

மாதம். சென்னை. ஆசிரியர் - திருவேங்கடம். 16 பக்கம். விலை 2 அணா. 500 படிகள். பிப்ரவரியில் தொடங்கியது. இதே ஆசிரியர் இதே பெயரில் 1882 இல் தமிழ் - தெலுங்கு இதழ் வெளியிட்டார். 1868 இல் "முதலாயிரம்" என்ற பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

1881

பரதத்துவப்பிரகாசிகை

மாதம். சென்னை. ஆசிரியர் - கோவிந்தசாமி. விலை 1 அணா. சூன் முதல் வெளிவந்தது.

தேவாரப்பதிகத்திருமுறைகள்

மாதம். சென்னை. ஆசிரியர்கள் - தண்டலம் பாலசுந்தரம், வாசுதேவன்.

பெரிய திருமொழி

மாதம். சென்னை. ஆசிரியர் - பார்த்தசாரதி. தமிழ் - தெலுங்கு. 48 பக்கம். 600 படிகள்.

விவேகவர்த்தினி

மாதம். சென்னை. இதே பெயரில் 1875 இல் சென்னையிலும், 1886 இல்

௧.

[illegible]

காரைக்கால்.

சத்தியாபிமானி.

'THE LOVER OF TRUTH'. 'AMI DE LA VERITE'

புதவாரந் தோறும் பிரகடனம் செய்யபடும்.

"நித்தன் பரமன் நிமலன் நிறைவாய் நிறைந்த-சுத்தன் நமக் கென்றுந் துணை."

௧-ம்-புத்தகம் } காரைக்கால். சித்திரபானுஸு கார்த்திகைமீ - உ௯-௳-க்கு - ௲௮௱௮௰௨ஸு டிசம்பர்மீ ௧௩-௳. { இலக்கம்-௰௭.

தெய்வவணக்கம்.

[illegible]

பத்திரிகையிலிருந்து எழுதிய தகவல்கள் (பத்திராயம்.)

உள்ளூராருக்கு.

ரூபா-அணா.

வருடம்-ஒன்றுக்கு...... ...	௩	,,
மாதம்-௬-க்கு............ ...	௧	௮
மாதம்-௩-க்கு............ ...	௧	,,

பிறவூராருக்கு.

தபாற் கூலியுடன்

வருடம்-ஒன்றுக்கு...... ...	௪	,,
மாதம்-௬-க்கு............	௨	,,

இலங்கைமுதலிய பரதேசத்தாருக்கு.

வருடம் ஒன்றுக்கு...... ...	௫	,,
மாதம்-௬-க்கு............	௨	௮

தனிப்பிரதி-௧-க்கு-அணா ... ௨..

[illegible]

ஓர் இங்கிலீஷ் வைத்தியர்.

[illegible]

நீலகண்ட பாஷியம்.

[illegible]

[illegible]

இவண்

ஆ-முத்தாத்தம்பிப்பிள்ளை

EDITOR சத்தியாபிமானி.

தமிழ்விரிவகராதி.

இப்புத்தகம் யாழ்ப்பாணத்துப் பிரதிக்கினங்க நல்லகாகிதத்திலே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. விலைதோற்கட்டடப்பிரதி-௧-க்கு-ரூ-௪-கலிக்கக்கட்டடப்பிரதி-௧-க்கு-ரூ-௩-௸-தபாற்கூலி-அணா௩.

வேண்டியவர்கள் - பணமனுப்பிப் பெற்றுக்கொள்க.

இங்ஙனம்

காரைக்காலச்செந்திர

சாலைத்தலைவர்.

அரிபாகதாவுடைய

சாரபடம்.

இப்படம் வேண்டியவர்கள் எமக்குப்பண மனுப்பினால் அவர்க்குத்தருவித்துக்கொடுப்போம்-விலைபிரதி-௧-க்கு-அணா-௮-தபாற்கூலி-அணா-௧

தினியாகங்கம்.

1882ம் [illegible]

[illegible]

13	[illegible]
14	[illegible]
15	[illegible]
16	[illegible]
17	[illegible]
18	[illegible]
19	[illegible]

மலர்1, இதழ் 17. டிசம்பர், 1882 (அரசு நூலகம், பாரிசு)

இராசமுந்திரியிலும் தெலுங்கு இதழ்கள் வெளிவந்தன.

சைவ சம்போதினி

யாழ்ப்பாணம். ஆசிரியர் – உடுவில் வைத்தீசுவரன். இது கையெழுத்து இதழ்.

இந்துநேசன்

மாதம். ஊட்டி. 100 படி விற்பனை ஆயிற்று.

சுதேசமித்திரன்

வாரம். சென்னை. ஆசிரியர் – க. சுப்பிரமணியம். முதல் இதழ் 20.11.1881 அன்று வெளிவந்தது. முதல் இதழே 1500 படிகள் விற்பனை ஆயின.

கோயமுத்தூர் கலாநிதி

மாதம் இருமுறை. கோவை. ஆசிரியர் – சே.ப.நரசிம்மலு. தமிழ் – ஆங்கிலம். 26 பக்கம். 4 அணா. 1000 படிகள். "கோவை சுதேசாபிமானி"க்கு ஆபத்து வரவே, அதை விட்டுவிட்டு, சனவரியில் இவ்விதழைத் தொடங்கினார். 20 ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து மாத இதழாக வெளிவந்தது. "கோயமுத்தூர் கலாநிதி மாதாந்திர சஞ்சிகை" என்று சொல்லப்பட்டது.[1]

1882

இயல்பா – முதல் திருவந்தாதி

"இது முதல் சம்புடத்தின் முதல் சஞ்சிகை" என்று தமிழ்நூல் விவர அட்டவணையில் காணப்படுகிறது.

சத்தியாபிமானி

வாரம். காரைக்கால். காரைக்காலில் வெளிவந்த முதல் தமிழ் இதழ், இது. ஆசிரியர் – ஆ.முத்துத்தம்பி. விலை 2 அணா. (1880 இல் சென்னையில் இதே பெயரில் ஒரு வார இதழ் வெளிவந்தது).

புதுவை நாகரிக வர்த்தமானி

புதுவை.

தத்துவ விவேசினி

மாதம். சென்னை. ஆசிரியர் – தமிழ்ப் பேராசிரியர் டி.முனுசாமி. இவ்விதழை "நாத்திகப் பத்திரிகை" என்று "சிறீலோகரஞ்சனி" (1.6.1888) கூறுகிறது.

சத்திய வேதக்கொடி

மாதம். நாகர்கோவில். ஆசிரியர் – மாசிலாமணி.

முசுலீம் நேசன்

வாரம் இருமுறை. கண்டி (இலங்கை). ஆசிரியர் – சித்திக் லெப்பை. இலங்கையில் முதல் பெருங்கதையான "அசன்பே சரித்திரம்" என்ற

---

1. தமிழ் நூல் விவர அட்டவணை. தொகுதி 2, பகுதி 3. (1972).

கதைஸ்யை எழுதியவர், இவர். இது தமிழ் கூறும் நல்லுலகின் இரண்டாவது பெருங்கதை. முதல் பெருங்கதை, மயிலாடுதுறை வேதநாயகம் எழுதிய "பிரதாப முதலியார் சரித்திரம்". இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

இவ்விதழ் குறித்து இலங்கை ஆய்வாளர் ஏ.எம்.ஏ. அசீசு தமது "தமிழ் யாத்திரை" (1968) நூலில் கூறுவது :

> "இலங்கை முஸ்லீம்களின் தலைவராக விளங்கியவர் சித்தி லெவ்வை அவர்களாவார். 1839இல் தோன்றிய இவர் 1899இல் மௌத்தானார். இவர் 1882இல் "முஸ்லீம் நேசன்" பத்திரிகையைத் தோற்றுவித்தார். அக்கால இலங்கை, இந்திய முஸ்லீம்களின் மத்தியில் பெரு வழக்கிலிருந்த அறபுத் தமிழ் நடையில் எழுதப்பட்ட இந்த வார சஞ்சிகையை 1889 வரை சித்தி லெவ்வை நடத்தி வந்தார். முஸ்லீம்கள் மத்தியில் வெற்றி பெற்ற முதலாவது பத்திரிகை வெளியீட்டு முயற்சி இதுவே. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஆறுமுக நாவலரின் உரைநடை யிலும் கண்டனப் பிரசுரங்களாலும் உரம் பெற்ற இம் 'முஸ்லீம் நேச'னுக்குச் சென்னை, புதுச்சேரி, பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலெல்லாம் சந்தாதாரரிருந்தார்கள். இதன் சம காலத்தில் பினாங்கிலிருந்து "வித்தியா விசாரிணி" வெளிவந்து கொண்டிருந்தது. நாகூர் தர்கா வித்துவான் குலாம் காதிறு நாவலர் நடத்தி வந்த இப்பத்திரிகை சில சமயங்களில் முஸ்லீம் நேசனுடன் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டது. 19ஆம் நூற்றாண்டு இலங்கை வரலாற்றை குறிப்பாக, இலங்கை முஸ்லீம் களின் வரலாற்றை, விரிவாக எழுத முனையும் எவரும் "முஸ்லீம் நேசனை" முக்கிய ஆதார ஏடாகக் கொள்ள வேண்டும்".

ஆரிய ஜனப்பிரியான்

"சுதேசமித்திரன்" தோன்றிய காலத்தில் சென்னையில் வெளிவந்த இதழ். 1890களிலும் வெளிவந்தது.

பிரம்மோ பப்ளிக் ஒபினியன்

சென்னை. மாதம். தென்னிந்திய பிரம்மஞான சபை இதழ். ஆசிரியர் – மன்ன புச்சையா பந்தலு.

மகாவிகட தூதன்


வாரம். சென்னை. ஆசிரியர் – பா.அ.அ.இராசேந்திரன். நகைச்சுவை இதழ். இதில் வெளியான கதைகளைத் தொகுத்து "பூலோக விநோதக் கதைகள்" என்ற தலைப்பில் நான்கு தொகுதியாக ஆசிரியரே வெளியிட்டிருக்கிறார். ஒவ்வொரு தொகுதியிலும் 100 கதைகள் உள்ளன.

நாலாயிர திவ்விய பிரபந்தம்

மாதம். சென்னை. ஆசிரியர் – கிருட்டினன். 32 பக்கம். 1000 படிகள். 3 அணா.

தினோதய வர்த்தமானி

நாளிதழ். சென்னை. 150 படி விற்பனை ஆயிற்று. தமிழில் முதல்



மலர் 1, இதழ் 1. ஏப்ரல் 21, 1882. (இலங்கை அரசு சுவடிச் சாலை, கொழும்பு)

நாளிதழ் இதுவே. முதல் இதழ் 1.9.1882 அன்று வெளிவந்தது. 1883 சனவரி வரை வெளியாயிற்று.

திராவிட வர்த்தமானி

வாரம் இருமுறை. சென்னை. சூலையில் தொடங்கப்பட்டது. விற்பனை 600 படிகள்.

முதலாயிரம்

மாதம். சென்னை. தமிழ் – தெலுங்கு. திருவேங்கடம். ஏப்ரலில் தொடக்கம். 40 பக்கம். விலை 5 அணா. 500 படிகள். இதே ஆசிரியர் – "முதலாயிரவியாக்கியானம்"என்ற பெயரில் தமிழில் மட்டும் ஒரு மாதஇதழை 1880 முதல் வெளியிட்டு வந்தார்.

இந்தத் தமிழ் – தெலுங்கு இதழ் ஏப்ரலில் வாரம் இருமுறை வெளிவந்தது. பின்பு மாதம் ஒன்றாக வெளிவந்தது.

சமயம்

மாதம். சென்னை. ஆசிரியர் – மறைத்திரு பவுல். சமய இதழ். ஆங்கில இதழ். தமிழும் இடம்பெற்றது.

விஞ்ஞான வர்த்தினி

மாதம் மும்முறை. யாழ்ப்பாணம். ஆசிரியர் – மூத்தத்தம்பி. சைவ சமய இதழ். "தக்கன் வேள்விப் பொக்கந்தீர்த்த மிக்கதேவர் பக்கத்தோமே" என்ற முழக்கத்துடன் வெளிவந்தது.

1883

பகவத் விஷயம்

மாதம். சின்னக் காஞ்சிபுரம். தமிழ் – வடமொழி. 32 பக்கம். 2 அணா. 500 படிகள். ஆசிரியர் – கிருட்டினதாதா. சத்சம்பிராதய சஞ்சீவினி சபை வெளியீடு.

நாச்சியார் திருமொழி

மாதம் இருமுறை. சென்னை. தமிழ் – தெலுங்கு. 16 பக்கம். ஆண்டுக்கு ரூ. 1–4–0. 250 படிகள்.

பிரெஞ்சு இந்தியா

வாரம். புதுவை. பிரெஞ்சு – தமிழ். துறவிகளை ஆதரித்த இதழ்.

"துறவிகள்" என்றால், காவி கட்டியவர்கள் அல்லர். இந்தியச் சட்டங் களைத் துறந்தவர்கள். பிரெஞ்சுச் சட்டங்களை ஏற்றுக்கொண்டவர்கள். 1881 இல் பிரெஞ்சு அரசு இதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தது. அப்பொழுது வாக்காளர்களும் ஐரோப்பியர், துறந்தவர், துறவாதவர் என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டார்கள். இது புதுவை மக்களிடம் பெரும் பிளவையும், போராட்டத்தையும் ஏற்படுத்தியது.

புதுவையில் வாழ்ந்த "பெனி" என்ற பிரெஞ்சுப் பெண் கவிஞர் இதே பெயரில் 1881 இல் ஓர் இதழ் வெளியிட்டிருந்தார். அவர் எதிர்த்ததால், இவ்விதழின் பெயர், "பிரெஞ்சு இந்தியா டைம்சு" என்று மாற்றப்பட்டது. இதற்கு பாரிசில் வெளிவந்த "டைம்சு" இதழ் எதிர்ப்புத் தெரிவிக்கவே, பத்தாம் வெளியீட்டுடன் இதழ் நிறுத்தப்பட்டது.

மீண்டும் 1893 இல் "பிரெஞ்சு இந்தியா" இதழ் வெளிவந்தது, அதே கொள்கையுடன்.

புதுவை முன்னேற்றம்

வாரம். புதுவை. தமிழ் - பிரெஞ்சு. ஆசிரியர் - ஞானப்பிரகாசன். "காரைக்கால் முன்னேற்ற"த்தின் புதுவைப்பதிப்பு. 1917 வரை வெளி வந்தது.

இவ்விதழ் விதவை மறுமணத்துக்காகப் போராடியது. 1867 இல் பிரான்சில் கொண்டுவரப்பட்ட கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தைப் புதுவையிலும் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தியது. அரசாங் கத்தை ஆதரித்த இதழ். ஆனாலும், தவறு செய்த நிர்வாகக் குழு (சட்ட மன்ற) உறுப்பினர்களையும், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களையும் கண்டித்து எழுதியது. இதற்காக இதன் வெளியீட்டாளர் இரா. இராசேந்திரனுக்கு 1883 இல் நீதிமன்றத்தில் 1000 பிராங் (பிரெஞ்சு நாணயம்) தண்டம் விதிக்கப்பட்டது. அப்பொழுது இராசேந்திரன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்.

நடுநிலை

வாரம். புதுவை. தமிழ் - பிரெஞ்சு. துறவாதார் (பிரெஞ்சு சட்டங்களை ஏற்காதார்) இயக்கத்தை ஆதரித்த இதழ். புதுவை மக்கள் இந்திய மக்களாகவே வாழவேண்டும் என்று வற்புறுத்தியது.

1838லும் இதே பெயரில் ஓர் இதழ் புதுவையில் வெளிவந்தது.

ஆரதாரவிலாசம்

காலாண்டு. சென்னை. ஆசிரியர் - வேலாயுதம். 40 பக்கம். 2 அணா 6 பைசா. 1000 படிகள். மனோதத்துவம், யோகம் பற்றிய நாடக இதழ். தமிழில் முதல் நாடக இதழ் இதுவே.

கடவுள்

சென்னை நற்செய்திக்கழக வெளியீடு. 5 ஆவது இதழ் 1883 பிப்ரவரியில் வெளிவந்தது. இது ஒரு தொடர் கட்டுரை இதழ்.

இந்து மதப்பிரகாசிகை

மாதம். பாளையங்கோட்டை. ஆசிரியர் - ஆறுமுகம். விலை 2 அணா. முதல் இதழ் மார்ச்சில் வெளிவந்தது.

திருவிளையாடற் புராணம்

மாதம். சென்னை. ஆசிரியர் - இரத்தினவேலு. 40 பக்கம். 3 அணா. 1000 படிகள்.

பெரிய புராணம் உரையுடன்

மாதம். சென்னை. ஆசிரியர் - ஆறுமுகத்தம்பிரான். 40 பக்கம். 4 அணா. 1300 படிகள். முதல் இதழ் சூனில் வெளிவந்தது.

இந்துமத சீர்திருத்தி

மாதம். பாளையங்கோட்டை. ஆசிரியர் - ஆறுமுகம். ("இந்து மதப் பிரகாசிகை"யின் ஆசிரியர்). தமிழ் - ஆங்கிலம். 14 பக்கம். 2 அணா. 300 படிகள். இந்து சீர்திருத்த சங்கம் வெளியிட்டது.

சுகுணபோதினி.

மாதம் இரண்டுமுறை பிரசுரம் செய்யப்படும்.

சென்னை. 1888-ஹு மார்ச்சுமீ 1வ [1

ஆறுவது புத்தகம்.

டவுளதுபேரருளால் 'சுகுண ..ாதினி' ஐந்துவருஷ காலமாக ..ாய் நிறைவேறப் பெற்று இப் ..ழுது ஆறுவது புத்தகம் ஆர ..மாயிற்று. இந்தப் பத்திரிகை ..ன்றிய காலந்தொட்டு ஏற்ற ..ங்களில் ஒழுங்காய்ப் பிரசுர ..டுவந்ததென்றாலும், இதை ..படி. ஆதரிப்பாரின்மையால் ..ன்டொரு வருடகாலமாகச் ..ற பின்பட்டே பிரசுரமாகி ..கின்றது. பெண்களின் உப ..ாகத்துக் கென்றே இந்தப்பத் ..ாக கருத்தாய் அவர்களுக்கே .. பலவிஷயங்களைப்பற்றி எ ..பில் எழுதப்பட்டு வருகி ..னினும், இதைப்படிக்கும் ..ர்கள் சிலரே நாம் இந்தப்பத் ..ரிகையை ஆரம்..காலத்தி.. ..தைவிட இ.. ..ங்கும் நன்..

யாய்வருகின்றதனால், இதனேரு நிலைபெற்றுஎங்கும் பிரசித்திபெறுமென்பது நிச்சயமேயாதலால், இனிச்சிறிதும் அதைரியப்படாமல் இதுவிஷயமாக நம்மால் இயன்றமட்டும் ஒழுங்காய் நடத்த நிச்சயித்திருக்கின்றோம். எல்லோர்க்கும் பயன்படும்படியான இந்த நன் முயற்சி கைசோராதிருக்கும்படி இதைப்படிக்கின்ற நண்பர் பலரும் தங்களைச்சேர்ந்தவர்களுக்கு இந்தப் பத்திரிகையைக் காட்டிஇதைஇன்னும்நன்றாய் எங்கும்பரவச்செய்ய வேண்டுகிறோம். இத்தனைகாலமாய் இதன் சந்தா பள்ளிக்கூடத்து உபாத்திப்பெண்களுக்குவருஷமொன்றுக்கு ரூபாய் இரண்டரையென்றும், மற்றவர்களுக்கு ரூபாய் மூன்றரையென்றும் விதித்திருந்தோம். இனி அவ்வாறான வித்தியாசமின்றி யாவர்க்கும் .. விதமாய் வருஷ .. தபால்கூலி யுள்

மலர் 6, இதழ் 1. 1.3.1888 (மறைமலையடிகள் நூலகம்)

ஞானாமிர்தம்

மாதம். யாழ்ப்பாணம்.

காலக்கணிதன்

நாளிதழ். சென்னை. விலை காலணா. விற்பனை 300 படிகள். சனவரி முதல் வெளிவந்தது. 1883 மேயில் வாரம் மும்முறை ஆயிற்று. நவம்பர் வரை வெளிவந்தது.

சுகுண போதினி

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் - பாலசுந்தரம். மகளிர் கல்வி இதழ். முதல் இதழ் மார்ச்சில் வெளிவந்தது. கையொப்பம் : ஆசிரியைகளுக்கு ரூ. 2 1/2 (தனி இதழ் 3 அணா). மற்றவர்களுக்கு ரூ. 3 1/2 (தனி இதழ் 4 அணா) விற்பனை 350 படிகள். 32 பக்கம்.

இந்த ஆண்டில் (1883) சென்னை மாநிலத்தில் 55 பருவ இதழ்கள் பதிவு செய்யப்பட்டன என்ற விவரம் "சென்னை மாநில நிர்வாக நூல்" முதல் பகுதியில் காணப்படுகிறது. ஆனால், பெயர்கள் இல்லை. மொழி வாரியாகவும் விவரம் இல்லை. குறைந்தது ஒரு 25 தமிழ் இதழாவது இருக்காதா? இதே ஆண்டில் சென்னை மாநிலத்தில் 60 அச்சகங்கள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவை தமிழர்களுக்கு சொந்தமானவை என்ற விவரமும் இந்நூலில் இருக்கிறது.

வித்தியா விசாரிணி

பினாங்கு. ஆசிரியர் - நாகூர் வா.குலாம் காதிறு நாவலர். இவர் சீறாப் புராணத்துக்கு உரை எழுதியிருக்கிறார்.

இவ்விதழ் குறித்து இலங்கை ஆய்வாளர் ஏ.எம்.ஏ. அசீசு கூறுவது -

> "பினாங்கில் குலாம் காதிறு நாவலர் அவர்கள் பற்றியும் அவர் நடாத்திய 'வித்தியா விசாரிணி' பத்திரிகை பற்றியும் எவ்விதத் தகவலும் பெறமுடியவில்லை. பலருக்கு 'வித்தியா விசாரிணி' பத்திரிகை என்னும் பெயரே விசித்திரமான பெயராகத் தோன்றியது. சிங்கப்பூரிலுள்ள தேசிய நூல்நிலையத்தில் கூட ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அவரைப் பற்றி எவருக்குமே நினைவிருப்பதாகத் தெரியவில்லை"
>
> "என்னைப் பெரிதும் கவர்ந்த விஷயம் பினாங்கில் வெளியான 'வித்தியா விசாரிணி' என்னும் பத்திரிகைக்கும் அதே காலத்தில் இலங்கையில் சித்திலெவ்வை அவர்கள் வெளியிட்டு வந்த 'முஸ்லீம் நேச'னுக்குமுள்ள உறவாகும். 'வித்தியா விசாரிணி'யை நடத்தியவர் குலாம் காதிறு நாவலர் அவர்களாவார். 'முஸ்லீம் நேசனி'ல் வெளியான பல அம்சங்கள் 'வித்தியா விசாரிணி'யிலும் வெளியாயின. உதாரணமாக இரண்டு பத்திரிகைகளுமே உலகச் செய்திகள், மார்க்க வினா-விடைகள், இலக்கண, இலக்கியச் சர்ச்சைகள் ஆகியவற்றை வெளியிட்டு வந்தன. இதே நாகூர் தர்கா வித்துவான் குலாம் காதிறு நாவலர் அவர்களே 1896 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் க.மு. அசனாலெப்பை ஆலிம் புலவர் அவர்களது அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து வண்ணார்பண்ணையில்

வைத்து நமது 'ஆரிபு நாயகம்' என்னும் நூலினை அரங்கேற்றிய வராவார்."[1]

இவ்விதழ்பற்றி *1883* ஏப்ரல் *23*இல் வெளியான 'முசுலீம் நேசன்' இதழில் பின்வரும் செய்தி காணப்படுகிறது :

"... இந்த நாமந்தரித்த பினாங்கில் வா. குலாம் காதிறு நாவலரவர்களாற் பிரசுரஞ் செய்யப்பட்ட பத்திரிகை நமக்குக் கிடைத்து மிக மகிழ்ச்சியடைந்தோம். இலங்கை, இந்தியா, பினாங்கு முதலிய தேசங்களிலுள்ள முஸ்லீம்கள் இப் பத்திரிகைக்குக் கையொப்பக்காரர்களாகி அது நெடுங்காலம் நடைபெறச் செய்யும்படி வேண்டுகிறோம்..."

1883 சூலை *16*இல் வெளியான "முசுலீம் நேசனி'ல் 'வித்தியா விசாரிணி'யில் வெளியான பகிரங்கக் கடிதமொன்று மறுபிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. அது –

"பெண்களுக்கு நாணமாவது ஓராபரணமாயிருக்குமென்றனை நேசா. பெண்கட்கு நாணமானதியற்கையாயுள்ள குணமா? தட்டானாற் செய்த ஆபரணமா? விளங்கச் சொல் பார்ப்போம். 'வித்தியா விசாரிணி'யென்னும் பெண்ணே நாணமாகிய ஆபரணத்தைத் தரித்துக் கொள்ளென்றனை. நேசா, அந்நாண முனக்கு வேண்டற்பாலதோ? அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு என்ற குறளைப் பார்... யான் ஆணோ, பெண்ணோ, அலியோ என்பது தானும் எனக்குத் தெரியா திருப்பது உனக்கு விளங்கிற்றா நேசா? எப்படி விளங்கிற்று. சற்றே சொல்வாயா?"

1884

சிவரத்நமகுடம்

மாதம். சென்னை. ஆசிரியர் – சைவ சமய சண்ட மாருதம் சூளை சோமசுந்தரம்.

கூர்மபுராணம்

மாதம். பாளையங்கோட்டை. ஆசிரியர் – சிதம்பரநாத கவிராயர். நவம்பரில் தொடங்கியது. *36* பக்கம். *4* அணா. *1000* படிகள்.

பெரிய புராணம் உரையுடனும் விளக்கங்களுடனும்

மாதம். சென்னை. விலை 1 அணா.

ஆரியப்பிரகாசினி

மாதம். திருநெல்வேலி.

புதுவை நீதியபிமானி

மாதம். புதுவை.

இந்துசாதனம்

மாதம் இருமுறை. யாழ்ப்பாணம். ஆசிரியர் – சு.ஆட்சிலிங்கம். அன்றே தன்னாட்சிக் குரல் கொடுத்தவர், இந்த ஆட்சிலிங்கம். இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

1. "தமிழ் யாத்திரை" (1968)

சைவாபிமானி

மாதம். யாழ்ப்பாணம். ஆசிரியர் – வ.பொ.ஞானசபாபதி.

சத்தியவேதானுசாரன்

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் – யோகா. அக்டோபரில் தொடங்கியது. 20 பக்கம். 2 அணா 6 பைசா. 600 படிகள். புதுவைக் கவிஞர் சவராயலு பற்றிய ஒரு செய்தி இதன் 1890 செப்டம்பர் 15 ஆம் நாளைய வெளியீட்டில் வந்திருக்கிறது.

தீர்க்கதரிசன வர்த்தமானி

காலாண்டு. நாகர்கோவில். ஆசிரியர் – மாசிலாமணி.

சந்தோசச் செய்தி

மாதம். பசுமலை (மதுரை). மாத இதழான "சத்தியவர்த்தமானி" 1884 இல் மாதம் இருமுறை ஆயிற்று. திருச்சபை செய்திகளை வெளியிட மாத இதழ் ஒன்று தேவை என்ற நோக்கத்துடன் இந்தப் புதிய இதழ் 1884 நவம்பரில் தொடங்கப்பட்டது.[1] விற்பனை 782 படிகள். ஆண்டுக்கு 8 அணா. 1909 இல் "தென்னிந்திய ஐக்கிய சபை தூதிகை" என்ற இதழுடன் இணைக்கப்பட்டது.

ஜனப்பத்திரிகை

நாகை. அனந்தாச்சார்லு. இவ்விதழ் தொடங்க "சுதேசமித்திரன்" க.சுப்பிரமணியம் உறுதுணையாக இருந்தார்.

ஞான சூரியோதயம்

சென்னை. பி.சின்ன கேசவலு.

ஜீவரட்சாமிர்தம்

சென்னை.

திராவிடவர்த்தமானி

வாரம் இருமுறை. பெங்களூர். ஆசிரியர் – வாசுதேவன்.

பாலசத்குரு போதிகா

தஞ்சை மாவட்டம் திருவாதியில் வெளிவந்தது. ஆசிரியர் சிறுகளத்தூர் இராமசாமி. இரகுவம்சம் தமிழ் உரையுடன் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

இந்துஜனபூசணி

வாரம். சென்னை. ஆசிரியர் – சுந்தரம். 150 படிகள் விற்பனை ஆயின. "சென்னை இந்து ஜனபூசணி" என்றும் சொல்லப்பட்டது.

சுஜநரஞ்சனி

மாதம் இருமுறை. பாளையங்கோட்டை. விற்பனை 207 படிகள். இதே

---

1. "மதுரை திருச்சபையில் 75 ஆண்டுகள்" (ஆங்கிலம்)

பெயரில் புதுவையிலும், பெங்களூரிலும் இதழ்கள் வெளிவந்துள்ளன.

சிவாகம மணி

இலங்கை. இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

சன்மார்க்க போதினி

மாதம். யாழ்ப்பாணம். ஆசிரியர் - புலவர் தம்பி முத்து. வள்ளலார் வழி இதழ். இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது. 1887 இல் இதே பெயரில் ஓரிதழ் சிதம்பரத்தில் வெளிவந்தது.

1885

திராவிடமித்திரன்

விவரம் இல்லை.

போர்ச்சத்தம்

மாதம். கோவை. ஆசிரியர் - எஸ்.ஏ.பால். விற்பனை 2,300 படிகள். 15.3.1888 முதல் சென்னை, கோவை ஆகிய இரு இடங்களிலும் இவ்விதழ் வெளிவந்தது. **தமிழ் நாட்டில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஊரில் அச்சாகி வெளிவந்த முதல் தமிழ் இதழ் இதுவே.** மூன்று மாதம் இரு ஊர்களிலும் வெளிவந்தது. பின்பு சென்னையில் மட்டும் வெளிவந்தது.

சித்தாந்த இரத்தினாகர அர்ச்சதீபம்

மாதம். சென்னை. ஆசிரியர் - சூளை சோமசுந்தரம். ஆண்டுக் கையொப்பம் 12 அணா.

விநோத மனோகரினி

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் - கிருட்டினராசு.

தத்துவ விவேசினி

மாதம். சென்னை. ஆசிரியர் - சோமையா. விற்பனை 350 படிகள்: இவர் "திங்கர்" (சிந்தனையாளன்) என்ற ஆங்கில இதழையும் இவ்விதழுடன் சேர்த்து நடத்தினார். 1882இல் சென்னையில் இதேபெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

ஆந்திரப் பிரகாசிகா

வாரம். சென்னை. ஆசிரியர் - பார்த்தசாரதி. தெலுங்கு இதழ். தமிழும் இடம்பெற்றது. இந்திய தேசிய காங்கிரசு தொடங்கப்பட்ட ஆண்டு, இது. அந்த இயக்கத்தை இவ்விதழ் தீவிரமாக ஆதரித்தது. 25 ஆண்டுக்குப்பின் வாரம் இருமுறையாகி; பின்பு மீண்டும் வார இதழாகி, பிறகு நின்றுவிட்டது.

சுதேசாபிமானி

வாரம் இருமுறை. சேலம். ஆசிரியர் - குமரகுரு.

வித்தியாவிநோதினி

மாதம். சென்னை. ஆசிரியர்கள் - இராமசாமி, வாசுதேவன். விலை 3 அணா. 32 பக்கம். தாயுமானவர் பாடல்கள் தொடர்ந்து வெளிவந்தன. 2000 படி விற்பனை ஆயிற்று. 1891 சனவரியில் நிறைவுற்றது.

Wishing Every Reader a Bright and Happy New Year!

போர்ச் சத்தம்

...istered No. T. 93. License No. 40. Dated 12-6-26.

PORE SATHAM.

...Official Organ of The Salvation Army, South Indian Territory.

...Booth, Founder. Edward J. Higgins, General. Colonel Priya, Territorial Commander.

Vol. XXXIV. No. 1 | TRIVANDRUM, January 1930. திருவனந்தபுரம், ஜனுவரி மீ 1930. [விலை சக். 1.

The Chief of the Staff.

A Sketch by Mrs. Colonel Carpenter.

முழுலோக முக்கிய காரியதரிசி.


மிஸிஸ். கர்னல் கார்பென்றற் எழுதிய ஓர் விவரணம்.



(7-ம் பக்கம் பார்க்க.)

வாசகர் யாவருக்கும் எம் நவவருட வாழ்த்துதல்.

மலர் 35. இதழ் 1. சனவரி, 1930. (உதவி - "போர்ச் சத்தம்", நெல்லை)



MAGAZINE FOR THE HOME

மாதா போதினி

December, 1935

CONTENTS

News of the Month

The Boy Scout Movement

Our Story Page

Women's Section

Hygiene Notes

Our Parents' Pages

Country Life

A Tale of the Deccan

The Month's Study Column

For the Children

The Christmas Chimes

VOL. L No. 3

மலர் 50, இதழ் – 3. டிசம்பர், 1935. (தமிழ் நாடு அரசு ஆவணக் காப்பக நூலகம்.)

புரோகிறோ

வாரம். புதுவை. பிரெஞ்சு – தமிழ். "முன்னேற்றம்" என்று பொருள். தமிழர் நடத்திய இதழ்.

இந்து சுமித்திரா

வாரம் மும்முறை. சென்னை. விற்பனை 500 படிகள்.

ஜெனரல் பஜார் பத்திரிகை

மாதம் இருமுறை. பெங்களூர். விற்பனை 100 படிகள்.

பிரம்மஞானபோதினி

மாதம் இருமுறை. பெங்களூர். ஆசிரியர் – சேசாசலம். விற்பனை 92 படிகள். 1887 இல் சென்னையில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

சாமியின் ஆண்டு இதழ்

ஆண்டு. சென்னை. தமிழ் – தெலுங்கு – ஆங்கில மும்மொழி இதழ். மருத்துவமும், மற்ற பயனுள்ள தகவல்களும் இடம்பெற்றன. ஆண்டுக் குறிப்பேடும் இணைந்திருந்தது.

ரிப்பன் நினைவு வரிசை

முதல் வரிசை மார்ச்சில் வெளிவந்தது. "இந்து சபைகள் குறித்து ஒரு சொற்பொழிவு" என்பது தலைப்பு. 8 பக்கம். விலை 1 அணா. 500 படிகள்.

திராவிட பாண்டியன்

மாதம். சென்னை. ஆசிரியர் – மறைத்திரு ஜான்பாண்டியன். ஆதி தமிழர் இதழ். 1890 இல் சென்னையில் திராவிட மகாசனசபை தொடங்கப் பட்டதும், அதன் இதழாக வெளிவந்தது. இவ்விதழைத் தொடங்கி வெளி யிட்டவர், க.அயோத்திதாசப் பண்டிதர் என்ற ஆதி தமிழ்ப்பெரியவர். இவர் 1907 சூன் 19 முதல் "ஒரு பைசாத் தமிழன்" என்ற வார இதழை ஆசிரியராக இருந்து வெளியிட்டார். அது 1908 இல் "தமிழன்" என்று பெயர் மாறியது. 1914 மே 5 இல் அவர் இறந்தபின் அவர் மகன் க.அ.பட்டாபி ராமன் 1915 வரை இவ்விதழை நடத்தினார்.[1]

1886

மாதர் போதினி

மாதம். சென்னை. ஆசிரியர் – இராமசாமி.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக இவ்விதழ் தொடர்ந்து வெளிவந்தது. 1937 இல் "கிரகம்மணி" என்று பெயரை மாற்றிக்கொண்டது. 1920களில் "மாதர்போதினி" என்ற பெயரில் ஓர் இதழ் சென்னையில் வெளிவந்தது 1909 முதல் 1935 வரை "தேசோபகாரி" (நாகர்கோவில்) இதழுடன் "மாதர் போதினி" என்ற இதழும் இணைக்கப்பட்டிருந்தது.

சிறீமத் வால்மீகி இராமாயண வசனம்

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் – கே.சீனிவாச ராகவன். தமிழ் – தெலுங்கு – வடமொழி. 32 பக்கம். 1000 படிகள். 4 அணா. 1877

1. நீதிக்கட்சி பவளவிழா மலர் ("விடுதலை" வெளியீடு)



விகட தூதன்.

THE COMIC HERALD.

வாரந்தோறும் பிரசுரமாகும் விநோதப்பத்திரிகை.

புத்தகம் IIII.] ... 1889 ... 24 ... [இலக்கம் 34.

NOTICE TO SUBSCRIBERS.

மலர் 4, இதழ் 34. ஆகஸ்டு 24, 1889. "புத்தகம் IIII" என்று நான்கு கோடு போடப்பட்டிருக்கிறது. (உதவி – உவமைக்கவிஞர் சுரதா)

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

[illegible] [க | புத்தகம்-ச] [illegible] [க

[illegible]

வருஷம்	1-இ	3	8
மாசம்	6-இ	1	12
ஷ	3-இ	0	14
காபி	1-இ	0	5

உ

சிவமயம்

இவ்வுலகிற் பண்டைக்காலந் தொடங்கி அறம், பொருள் இன்பம், வீடு, என்னும் நாற்பயனையுந் தருவதிற் புகழ்பெற்றனவும், கண்ணுதற்பெருமான் திருவடித்தாமரைகளிற் பேரன்புற்ற ஆசையையொழித்துத் தெளிந்த மெஞ்ஞானச் செல்வர்களின் ஆனந்தமென்னும் ஒரு கொடியின் மெய்காய் விளங்குவனவும், ஸ்ரீமத் பகவத்பாத முனிவர் கோமான் அருளிய சித்தாந்தத்தை யநுசரித்தனவும், ஸ்ரீமத் அப்பயதீக்ஷித ராஜ யோகி அருளியனவும், அந்தணர்களின் குலதெய்வமாகிய சிவ பெருமானது மகிமையை விரித்துக் காட்டுவனவுமாகிய பிரபந்தங்கள் ஏதோ ஒரு காலவிசேஷத்தால் ஏதோ ஒரு விதமான வேறுபாட்டை யடைகின்றன வென்பதைக் கண்டு மனமுருகி [illegible], ஆசாரியனது ஆஞ்ஞைக்கடங்கியும் அப் பிரபந்தங்களை அச்சிட்டுப் பிரகடனஞ் செய்து வரும் நான், இக்காரியம் மிகுந்த திரவியத்தாலன்றி நிறைவேறாததனால் சைவ மதஸ்தர்களாகிய கனவான்களைத் தயவுடன் தங்கள் உசிதப்போற் பொருளுதவி செய்யும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதன் பொருட்டு ரூபா 10- முதல் உதவி செய்யும் கனவான்களுக்கு, அச்சிட்டுவரும் புஸ்தகங்களில் ஒவ்வொன்று அனுப்பிக்கப்படும். அச்சிட்டுவரும் புஸ்தகங்களின் கிரந்த சங்கியை சுமார் 30000.

இங்ஙனம்
கு. ஸ்ரீநிவாசசாஸ்திரி,
ப்ரம்மவித்தியா ப்ரேஸ்தலைவர்,
சிதம்பரம்.

மலர் 1, இதழ் 1. ஜூன் 30, 1886 (பிரிட்டீசு நூலகம்)

21 கலை ஸ்ரீவல்லாளதேவர்க்கு இதா
22 ளாகு ஒதுளாத்தாவாமாஷித்தா அகிஞ்சுவ
23 புதெவத்தாக விவவாதெவவாத்தகு
24 வர் வகிதெதெஸ்யிவலைஞ
25 யச் காமாடுகுட்பாடீநாகுற்க கஂடீ
26 ஙயி

9 c 1371

ಪಾಡಿನಾಲ್ಕು ನಾಡ ತಾಲ್ಲೂಕು ತವುನಾಡು ಸಂಸಜನಾಡ ಭಾಗಮಣ್ಣಾಲ ಗ್ರಾಮದ
ಭಗುಂಡೇಶ್ವರದೇವಸ್ಥಾನದಲ್ಲಿರುವ ಶಿಲಾ ಶಾಸನ

ಪ್ರಮಾಣ 4′6″ × 2′8″.

ಗ್ರಂಥ ಮತ್ತು ಅರವಕ್ಷರ

1 ஸ்வஸ்திஸ்ரீ சகவருஷ மாளாடமகூரு | சகரு
2 ளுல ஞ்யூஹஸ்ஸுகெள | வ்யஷ்டிகாவெ ஏஹாரீ
3 ஙெ வ்யஹவகூதாளாக்கெ || கலிவஷ்ய ஸாவக[ம்]வ
4 ஷு | மாமொராளகடிஅவிணஃ ஸாவகாம் மொயாவுவெ
5 ஹம் ஸ்ரீவழ்ணாஸ்ரீவிஹி || ஒதிஞ்ஞிகா தீயாவதா
6 டாவாபூகித்த ஸ்ரீதீருவெஷாதீவஷ்யதாயர் வ
7 வமவாளவாடீஙாய்வெஷித்த வெவெடுதெகவுடி கிஞ
8 ஞிமடுயவொளகாங் கஷிஞாகக்தா கடீயாவதா
9 ஙாயாவெண்ணகவுடி ஒதிஜ்தாடுவாமுக்தூவா
10 வகாண குணத்தவு வத்ரணகாணம் வொதீக
11 ராவத்தி ஸ்ரா காவைக்தா உளபிஷுபிதெவத்த கஷுபிசுஞ்சி
12 வடும் சுகிதெதில் வத்ராகழஙு வொதெ
13 மூதீற்று அளமுக்தா கஷாவிலக்தா வகிதெழு | காடிதீ
14 து தீகமாய் வொதுவாஉலிடுக்டுவயியிவத்து
15 காழி ஒமுகவித்ராகாழி வாவுத்தாக்தாகாகாழி
16 கமதீஙு தீமதீவுகிரணவ்யஷ்டிகவிஷ
17 தூதிஸாவிதொடு வாஅவிஷாகதெகாகயதீஞா
18 கதீஷுவபிவெமாக்தாகாகித்தாதிஙககாடுவா
19 மூதீவவெதெகஉகாகாதீாண கவத்தாபீ
20 ல் வமத்தகபியிடுத்தவிபிஞாஒதெதீஅது
21 யுத்தா யவக் வெண்ணிவெத்தா தலைக்வஞ்[ாதீ]வடு
22 தூடுவ துண்ணு உல்லாணதிகாகுகதெகண்ணமுவ
23 கடுதீவெகவித்தாவொதீவாத்தாகதாபீதூகஜ
24 கியாண குணகாவிதாடுவிடுவித்தயதீக்தா
25 விடுத்டுவச் வ்யகவிவடுகதீஙாய்வணியஙு
26 தீஹமாமாளகம் ஒனது உஞ்ஞவிவொன்றுகஷி
27 ல் காலைக்திரஞ்ஞவெக்தாணம்வகிதெதெஸ்யிவ
28 புவிபிஞுவதாயிவச் | வலஷியச் | லகவித்த வ
29 கண்ஙதெயெ வத்ராவிகலைதீவதீமய
30 உகித்தகவணாளவெபாத்தகதெத்தமுதெ
31 வவெஷுதீதீ . . வகண்ணு குயாரி எழுத்து ||

“எபிகிராபியா கர்நாடகா” தொகுதி 1. மறு
பதிப்பு 1914. (சென்னைப் பல்கலைக் கழகம்)

இல் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

மனோரஞ்சித விநோதம்

விவரம் இல்லை.

சுதேசாபிமானி

வாரம். சென்னை. அரசாங்க அறிக்கைகளை தமிழிலும் வெளியிட வேண்டும் என்று அந்நாளிலேயே எழுதிய இதழ், இது.

மித்திரன்

பிஜித் தீவில் வெளிவந்த தமிழ் இதழ். ஆசிரியர் - அப்பாப்பிள்ளை.

சர்வசன நேசன்

வாரம் இருமுறை. கொழும்பு. ஆசிரியர் - முகைதீன். இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

யவன யாமினி விநோதங்கள்

மாதம். சென்னை. செப்டம்பரில் தொடங்கியது. 26 பக்கம். 500 படிகள். 4 அணா. அரபுக் கதைகள் தொடராக வெளியிடப்பட்டன.

மந்திரங்கள்

இந்துக்களின் மந்திரங்களைக் கண்டித்து நற்செய்திக் கழகம் வெளியிட்டது. நவம்பரில் 7 ஆம் பகுதி வெளிவந்தது. 32 பக்கம். 5000 படிகள். 3 பைசா.

சிவஞான போதம்

மாதம். சென்னை. ஆசிரியர் - சி. சண்முக சுந்தரம்.

எபிகிராபிகா கர்நாடகா

பெங்களூர். மைசூர் அரசு வெளியீடு. ஆசிரியர் - லீவிசு ரைசு. ஆங்கிலம். தமிழும் இடம்பெற்றது.

திராவிட ரஞ்சனி

மாதம். திருச்சி. ஆசிரியர் - வேங்கடராசு. சனவரியில் தொடங்கியது. 24 பக்கம். 2 அணா. 50 படிகள்.

இலங்கை தினவர்த்தமானி

வாரம். கொழும்பு. ஆசிரியர் - ரி.எஸ்.இராசு. சென்னை 'தினவர்த்த மானி' போன்றே இதுவும் வார இதழாக வெளிவந்தது.

இதன் படி இலங்கை அரசு சுவடிச் சாலையில் இருக்கிறது.

மகாவிகட தூதன்

வாரம். சென்னை. விலை 4 பைசா. கையெர்ப்பம் உள்ளூர் ரூ 1-4-0. வெளியூர் ரூ. 2. "வாரந்தோறும் பிரசுரமாகும் விகடப் பத்திரிகை" என்ற முழக்கத்துடன் வெளிவந்தாலும், இது ஒரு செய்தி இதழ். 1882 இல் சென்னையில் இதே பெயரில் ஓரிதழ் வெளிவந்தது.

பிரம்ம வித்தியா பத்திரிகை

மாதம். சிதம்பரம். ஆசிரியர் - கு. சீனிவாசன். முதல் இதழ் சூனில் வெளிவந்தது. 16 பக்கம். 700 படிகள்.



பிரதிபட்சந்தோறும்
பிரசுரிக்கப்படும்

ஸ்ரீலோகரஞ்சனி.

புத். ச. } விக்குருதிஹு வைகாசிமீ உ௨—கஅகூ௦ஹு மேமீ க௨. { இல. ச.

விளம்பரங்கள்.

ஸ்ரீ லோகரஞ்சனி.

—:0:—

இத்தமிழ்ப்பத்திரிகை ஹிந்து ஸ்திரீ புருஷர்கள் ஞானாபிவிர்த்தியின் பொருட்டு, பிரதி பக்ஷமும் பிரசுரிக்கப்படும்.

முன்பண வருஷ கையொப்பம்.

	ரு.	அ.	பை.
சென்னைக்கு (உள்ளூர்) தபாற்கூலியுட்பட	1	0	0
இந்தியாவைச்சார்ந்த ஊர்களுக்கு ,,	1	4	0
இலங்கை பர்மா, அந்தமான் ... ,,	1	8	0
மோரிஸ், சிங்கப்பூர் ... ... ,,	2	4	0
100-பத்திரிகைகளுக்கு (ஒருபக்ஷத்திற்கு)	2	12	0
தனிப்பத்திரிகை தபாற்கூலியில்லாமல்	0	0	6

இவ்வித ஏற்பாட்டில் சேருங்குப்பத்திரிகையொன்று ஜூலைமீ முதல்பிரசுரஞ்செய்யப்படும்.

ஏதேனும் வேறுவிஷயங்கள் தெரிந்துகொள்ள இஷ்டமுடையவர்கள் ரிப்லை கார்ட். அல்லது தபால் பில்லைகள் அனுப்பவேண்டும்.

சி. கோ. அப்புமுதலியார்,
பத்திராதிபர்,
உப அக்கிராசனாதிபதி, ஹிந்து பிரீச்சிங் சொஸைடி,
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

தயாராயிருக்கிறது!

விக்குருதி வருஷத்திய வைதிக கிரியாங்கம்.

பெரிய அளவுள்ள (Sheet Almanac) கடிதநபம்.

—:0:—

இக்கிரியாங்கம் இந்துக்கள் பிரதிதினமும் அநுஷ்டிக்கவேண்டிய முறைமைகளை அதி சுலபமாய்த் தெரிவிக்கும்.

விலை-1-க்கு அரையணா.—தபாற்கூலி அரையணா.
100-க்கு தபாற்கூலியுட்பட ரூபா (3) மூன்று.

ஏஜண்டுகள்.

காரைக்கால்
இராசகோபால இந்து சிவிஜியஸ் பாடசாலையின் மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ தி. ச. இராசகோபால பிள்ளை யவர்கள்.
திருச்சி-ஸ்ரீமநாயக்கன்பாளையம்
இந்து மதாபிமானசங்க காரியதரிசியவர்கள்.

கையொப்ப வரவு.

—:0:—

சென்ற 1889 ...

கிருஷ்ணசாமி நாயுடவர்கள், ஆலமரத்துப்பட்டி ...	0	4	0
க. லக்ஷ்மு அம்மாள், வட்டமலைபாளையம் ...	0	8	0
சிங்காரவேலு பிள்ளையவர்கள், காரைக்கால் ...	0	4	0
யல். யஸ். வெங்கட்ரமணன் அவர்கள், புதுவை...	0	6	0
முத்துகுமாரவேலு பிள்ளையவர்கள், காரைக்கால்...	0	6	0
பி. விசுவநாத முதலியாரவர்கள், போத்தனூர் ...	0	6	0
டி. யன். கிருஷ்ணசாமி நாயுடவர்கள், புரசை ...	1	0	0
ஜெகந்நாதம் பிள்ளையவர்கள், திண்டுக்கல் ...	1	0	0
முத்துசாமி நாயுடவர்கள், பொன்னேரி ...	0	8	0
தாமோதர நாயுடவர்கள், சிதம்பரம் ...	0	8	0
ஈசுவரப்பமுதலியாரவர்கள், ஆரணி ...	0	11	0
திருவேங்கட ராமாநுஜதாஸ், பெல்காம் ...	0	8	0
இரத்தினசாமிமுதலியாரவர்கள், ராய்பகதூர் பெங்க	3	0	0
1890ஹுத்தின் வரவு.			
ஈசுவரய்யரவர்கள், கோயமுத்தூர்	1	4	0
வெட்டிவெட் நாராயணசாமி நாயுடவர்கள், பெங்களூர்	1	4	0
திரு-கிருஷ்ணநாடாரவர்கள், அருப்புக்கோட்டை ...	1	4	0
ஸ்ரீநிவாசசம்பியன், மதுரை	1	4	0
பி. வேணுகோபால் பிள்ளையவர்கள், சபரிமதி ...	1	4	0
இராசபிள்ளையவர்கள், செங்கற்பட்டு	1	4	0
ஏ. யம். அரங்கசாமி நாயுடவர்கள், ஆலெவெள்ளி...	1	0	0
இராமச்சந்திரய்யரவர்கள், கொள்ளேகாலம் ...	0	10	0

மலர்: 4, இதழ்: 4. மே 1. 1890. (உதவி– உவமைக் கவிஞர் சுரதா)

ஒரு பெண் படிக்க ஆண்கள் கேட்டுக்கொண்டு நிற்பது போல இதன் முகப்புப் படம் அமைந்திருக்கிறது.

1888 சூன் முதல் திங்கள் இருமுறை. முதலில் தமிழ் 1, 15 நாட்களில்; பின்பு அமாவாசை, முழு நிலா நாட்களில். 1901 முதல் நடுக் காவிரியிலிருந்து திங்கள் இதழாக வெளிவந்தது.

தமிழ் - வடமொழி. இடையிடையே தெலுங்கும் இடம் பெற்றது. இதழின் பெயர் முதலில் வடமொழியிலும், அதன் கீழ் தமிழிலும் இடம் பெற்றது. உட்பக்கங்கள் இரு பாத்தியாகப் பிரிக்கப்பட்டு, இடப்பாத்தி வடமொழியும், வலப்பாத்தி தமிழும் இடம் பெற்றன.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1-12-0. இலங்கைக்கு ரூ. 2-4-0. பிறகு கையொப்பம் ரூ. 3-, ஆசிரியர் - மாணவர்களுக்கு ரூ. 1-8-0., இந்து சமய உபந்நியாசிகளுக்கு ரூ. 0-12-0 என்று மாற்றப்பட்டது. "பத்திரிகைக்கு ரூ. 5 மேல் கொடுப்பவரை பத்திரிகாபிமானியாக எடுத்துக்கொண்டு அவருக்கு உயர்ந்த கடிதத்தில் பதித்த சஞ்சிகை அனுப்பி வரப்படும்" என்ற அறிவிப்பு 1.1.1892 இதழில் காணப்படுகிறது. இதற்காக மெல்லிய வண்ணத்தாளில் இதழ் தனியே அச்சிடப்பட்டது. 4 பக்கம். ஒவ்வொரு பக்கமும் 2 பாத்தி. இரண்டுமே தமிழில், வடமொழி இல்லை. இராமநாதபுர மன்னர் இரகுநாத பாஸ்கரசேதுபதி இவ்விதழுக்குப் பண உதவி செய்தார்.

1891 செப்டம்பர் 15 இதழில், "பிரம்ம வித்தியா பத்திராதிபராகிய சிறீமத் சீனிவாச சாஸ்தியார் அவர்களுடைய புகைப்படம் (போட்டோ) கார்டு சைசில் தயாராக இருக்கிறது. விலை தபால் கூலியுள்பட 6 அணா" என்ற அறிவிப்பு இருக்கிறது. ஆசிரியர் அந்த அளவு செல்வாக்குடன் விளங்கியிருக்கிறார்.

இவ்விதழ் பிராமணீயத்தை ஆதரித்தது. இவ்விதழின் கருத்துகளைக் கண்டித்து சைவ சித்தாந்த சண்ட மாருதம் சூளை சோமசுந்தரம் "பிரம்ம வித்தியா விகற்ப நிரசநம்" என்ற நூலை எழுதியிருக்கிறார்.

1887

சிறீலோக ரஞ்சனி

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் - சி.கோ. அப்பு. சென்னையிலிருந்த இந்து பிரசார சங்க வெளியீடு. ஆசிரியர் இச்சங்கத்தின் துணைத்தலைவர். இந்து பிரசார சங்க அச்சுக்கூடத்தில் அச்சாயிற்று என்றாலும், பிராமணீயத்தைக் கடுமையாக எதிர்த்தது. 8 பக்கம். தனி இதழ் 1 அணா. கையொப்பம் உள்ளூர் ரூ. 2-0-0. வெளியூர் ரூ. 2-8-0. விற்பனை 200 படிகள். 1890 சூலை முதல் தெலுங்குப் பதிப்பும் வெளியிடப்பட்டது. ஆங்கிலப் பதிப்பும் வருகிறது என்று அறிவிக்கப் பட்டது. ஆனால், வந்ததாகத் தெரியவில்லை.

சமய இதழ் என்றாலும், இறைவன் பெயரில் நடக்கும் பித்தலாட்டங் களைக் கடுமையாகச் சாடியது. தங்கத் தகட்டில் எழுதப்பட்ட அஞ்சல் ஒன்று தேவலோகத்திலிருந்து காசி விசுவநாதர் கோவிலில் விழுந்ததாக ஒரு செய்தி. இது பற்றி 1888 சூன் 1 இதழ் எழுதுகிறது "இது, சில மாதங்களுக்கு முன் வீரபோக வசந்தராயலு[1] வந்தார், பேசினார், போனார் என்னும் புரளியை ஒத்திருக்கிறது"

1. திருமாலின் அவதாரம் என்று கருதப்படுகிறவர்.



ஸ்ரீ லோகரஞ்சனி அனுபந்தம்.

சென்னை ஸ்ரீ வி. வி. பி. லங்கம் என்னும் ஹிந்து பிரீச்சிங் சொஸைடியாரால்
இந்து மதிர் புருஷர்கள் சகிதம் - பிரசங்காதாரங்கட்காக மாதம் இருமுறை பிரசுரிக்கப்படும்.

விசேஷ விளம்பரங்கள்.

ஸ்ரீலோகரஞ்சனி அனுபந்தம்.

குறைந்த விலை!

தனிப்பத்திரிகைக்கு விலை பை 1.

C. G. APPOO MOODALIAR,
Editor, Sree Loka Ranjani,
Hindu Preaching Society, Chintadrepet,
Mount Road, Madras

உண்மைச் சன்டை எவற்றால்?

மலர் 2. இதழ் 1. ஆகஸ்டு 15, 1888. (உதவி - உவமைக் கவிஞர் சுரதா)

புதுவை

ஹிந்து நேசன்.

பிரதிசனிக்கிழமைதோறும்பிரசுரஞ்செய்யப்படும்

புத்தகம்—க.] புதுவை:—விய ஹல மார்கழிமீ ௨௬ ௳ க்கு கஅ௲எம்அஎ ஜனவரிமீ ௮௳. [இலக்கம்—உ.

காப்பு.

—

[illegible]

வேண்டுகை

பொது ஜனோபகாரார்த்தமாக வியற்றிய இப்பத்திரிகைக்குச் சமாச்சாரக்கடிதங்களனுப்ப விரும்புவோர் பிறரை நிந்தித்தாயினுந் தனிநன்மையைக் கோரியாயினு மில்லாமல் பொதுநன்மையையே விசேஷித்தெழுதிய சகல விஷயங்களையும் நூதனசமாச்சாரங்களையும் தவின உற்பவங்களையும் வரைந்தனுப்பக்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

பத்திரிகையின்கிரயம்.

[illegible]

விளம்பரவிகிதம்

[illegible]

[illegible]

மலர் 1. இதழ் 2. சனவரி 8, 1887 (ரோமன் ரோலந்து நூலகம், புதுவை)

1888 இல் பெல்லாரியில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

சிறீலோக ரஞ்சனி அநுபந்தம்

திங்கள் இருமுறை. சென்னை. ஆசிரியர் - சி.கோ.அப்பு. 4 பக்கம். விலை 1 பைசா. "சிறீலோக ரஞ்சனி"யின் இணை இதழாக இது வெளிவந்தது. "இந்து மதாபிமான சபையோர்களே! ஏனையோர்களே! இந்த ரஞ்சனியில் வெளிவரும் இந்து மத தாபனம், கிறித்து மத நிராகரணம், சமாசாரக்குறிப்பு முதலிய விசயங்களை 4 பக்கமாய் பட்சந்தோறும் அனுபந்தமாக வெளியிடப்பட்டு வருகிறது. இதனை வாங்கி, "சத்தியதூதன்", "போர் சத்தம்" முதலிய பேய்களையோட்டி வாழக்கோருதும். தனிப் பத்திரிகைக்கு விலை பைசா 1. மொத்தமாய் 100 பத்திரிகைகளுக்கு விலை அணா 6" என்று ஓர் அறிவிப்பு காணப் படுகிறது.

6 அணா என்பது 72 பைசா. அதாவது, ஒரு படி முக்கால் பைசாவுக்கும் குறைவு!

இந்த இணை இதழ் பின்பு இடையிடையே வெளியிடப்பட்டது. இது குறித்து "சிறீலோக ரஞ்சனி" 1890 சனவரி 1 ஆம் நாள் இதழில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. "நமது பத்திரிகையின் நிலை" என்று எழுதப்பட்டிருப்பது - "கையொப்பக் கனவான்களே! ஏனையோர்களே! சென்ற பட்சத்துப் பத்திரிகையின், "கையொப்பக்காரர்களுக்கு முடிவுரை" என்று தெரிவித்த விளம்பரப்படி, இதுவரைக்குங் காத்தும் பல கையொப்ப நேயர்கள் யாதுஞ் செய்யாதொழிந்தனர். அதன் மேல் கையொப்பக்காரர்கட்கு முன்னதாகப் பத்திரிகை அனுப்பி, பிறகு 'பணமனுப்புங்கள்! பணமனுப்புங்கள்!' என்று பறையடிப்பது வெட்கமான காரியமாயிருப்பதால், இனி பத்திரிகையை அனுப்பாது நிறுத்திவிட்டோம். நிறுத்தவே கையொப்ப நேயர் சிறுபர்லராயினர். ஆயது பற்றி பத்திரிகையை நிறுத்திவிட வேண்டியதாயிற்று. அப்படிச் செய்துவிட்டால், இந்து மதாபிமானிகளுக்குக் குறைவு நேரிடுவதைப்பற்றி, நம் சொந்தத்தில் பத்திரிகையை நஷ்டம் வரினும் நடத்த வேண்டுமென்றெண்ணி இவ்வருட முதல் பத்திரிகையின் பக்கங்களை சுருக்கியும், கையொப்பத்தைக் குறைத்தும் பிரசுரித்திருக்கின்றோம். ஆயினும் இடையிடையே அனுபந்தங்கள் வெளியாகிக் கொண்டிருக்கும்". புதிய கையொப்பம் உள்ளூர் ரூ. 1. வெளியூர் ரூ. 1-4-0. தனி இதழ் 6 பைசா. நூறு இதழ் ரூ. 2-12-0.

புத். க. ஜூலை மீ இல. க.

மாதர் மித்திரி.

மெதடிஸ்ட் எப்பிஸ்கோப்பல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

முதல் இதழ்,ஜூலை, 1887. (பிரிட்டீசு நூலகம்)

ஸம்ஸுல் இஸ்லாம்

ஹிஜ்றத்து 1307 துல்ஹஜ்ஜிப்பிறை 14 வெள்ளிக்கிழமை

ஸகல உலகங்களைப்பிறப்பித்து அவைகளுக்கு உணவாகஜலத்தை ஆகாரமாக்கி வைத்தது போல் மனிதர்களைப் பிறப்பித்து அவனுடைய கல்பு வென்னும் ஹிருதயத்திற்கு ஈமானென்னும் உறுதியை ஆவியாகவும் இல்முவெனும் கல்வியை யதற்கு ஆகாரமாகவும் உண்டுபண்ணி தன்னுடைய உண்மையை வெளிப்படுத்துகிறதற்காக விவேகத்தா லறிந்து நித்திய முணர்ந்து அநித்தியம் இழந்து நடக்கும்பொருட்டு பகுத்தறிவைக்கொடுத்து ஆக்க அழிக்க காக்க வல்லமையுஞ் சிறப்பும் மேன்மையும்பொருந்திக் கருணை நிறைந்த அல்லாஹுதஆலா எனும் உண்மையாகிய உள்ளமைக்குரிய நாயனைப்புகழ்ந்து அவனுடைய கிருபையைப்பெற்று சர்வ மனு முதலான உலகங்களை இரட்சிக்கவும் அவற்றுட் சேர்ந்திருக்கும் இருட்களை யொழிக்கவுமும் வானுலக நக்ஷத்திரங்களின் பிரகாசங்களுக் கோர் சூரியோதயம்போல சகலமதகண்டனையான புருக்கானென்னும் வேதாதிபதியாய் வஹுகானென்னும்ஒருண்மைப்பொருளை வெளிப்படுத்தி இருளாயிருந்த பன்மை முதலிய விரோதங்களைச் சங்கரித்து இறந்துபோன இருதயங்களுக் கெல்லாம் ஜீவனைக் கொடுத்தும் மற்ற அவயவங்களை யெல்லாம எஜமானுக்கு பணிவிடைசெய்ய தங்க முயற்சியை யுடையவராய், உலகரக்ஷகராய், முடிவுகாலில்தனது பின்வழியினர்களுக்கு பாபநிவாரணையென்னும் ஷபாஅத்துசெய்ய பொருந்தருளிய எங்கள் நாயகன் முகம்மதுல் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்பேரிலும் அவர்களின்பரிசுத்த வம்சமாகிய ஹாஷிமி முத்தலிபியெனும் இருகிளையார்களின்பேரிலும் பின்னும் சங்கையாலும் வீரத்தாலும் பக்தியாலும் சிறந்து உலகத்திற்கு பிரகாசங்களைக்காட்டின தீன் பயரேந்திய பொங்கு ஞாயகமாய், அக்கினியை உயிர்த்துணைவராய் வெளிப்படுத்திய ல்பகீத சுருபராகிய அஸ்ஹாபிகள்பேரிலும் அவர்களைப்பின்பற்றி தீன்நெறியொழுங்கு தவறாமலும் நித்தியமுறைநெறி பிசகாமலும் ஞானசுரூபராகிய தவப்பதி முயற்சிகள் அனுதினமுஞ் செய்வதலன்றியே முயன்ற தாபியீன்க

1887 இதழ் (ஹிஜிரி 1307, துல்கச்பிறை 14) இலங்கை அரசு சுவடிச்சாலை.

ஜனோபகாரம்

வாரம். சென்னை. முதல் இதழ் சனவரியில் வெளிவந்தது. விலை 3 பைசா. 8 பக்கம். 1500 படிகள். ஆசிரியர் - சி.சடையாண்டி. (1917 இல் வேலூரில் இதே பெயரில் ஒரு திங்களிதழ் வெளிவந்தது).

சைபுல் இஸ்லாம்

வாரம். (வெள்ளிக்கிழமைதோறும்). இலங்கை. ஆசிரியர் - அ.அப்துல் ரகுமான்.

மாதர் மித்திரி

மாதம். சென்னை. ஆசிரியர் - திருமதி ரூத். கிறித்துவ மகளிர் இதழ். முதல் இதழ் சூலையில் வெளிவந்தது. 12 பக்கம். விலை 2 அணா. 500 படிகள்.

தேசாபிமானி

வாரம். திருப்பாப்புலியூர். விற்பனை 300 படிகள். முதல் இதழ் செப்டம்பர் 3 இல் வெளிவந்தது. 1867 இல் சென்னையிலும், 1896 இல் பேரா (மலேசியா)விலும், 1899 இல் கடலூரிலும் இதே பெயரில் இதழ்கள் வெளிவந்தன.

இந்து ஜன சமிஸ்காரிணி

மாதம். அரசாங்க வேலைகளில் பிராமணர்கள் நிறைந்திருப்பதை சுட்டிக்காட்டி, அவர்களுக்கு அவர்களின் மக்கள் தொகை விகிதப்படியே அரசாங்க வேலைகள் கொடுக்கப்படவேண்டும் என்று 1888 சனவரி வெளியீட்டில் இவ்விதழ் எழுதியிருக்கிறது.

இவ்விதழுக்கு "இந்துமத சீர்திருத்தி" என்ற ஆங்கிலப் பெயர் இருந்தது. ஆனால், 1883 இல் வெளிவந்த "இந்துமத சீர்திருத்தி" அல்ல.

கிராமப்பள்ளி ஆசிரியர்

மாதம். சென்னை. ஆசிரியர் - கோபால். விலை 2 அணா. ஆசிரியர்களுக்கான இதழ். முதல் இதழ் சூனில் வெளிவந்தது. விற்பனை 1000 படிகள். 18 பக்கம். இதே ஆசிரியர் இதே காலத்தில் தெலுங்கில் "ஆசிரியர்" என்ற இதழையும், ஆங்கிலத்தில் "பள்ளி ஆசிரியர்" என்ற இதழையும் நடத்தினார். (1925 இல் தரங்கம்பாடியில் "கிராம ஆசிரியர் தோழன்" என்ற காலாண்டு இதழ் வெளிவந்தது).

தரங்கம்பாடி மிசன் பத்திரிகை

மாதம். தரங்கம்பாடி. ஆசிரியர்கள் - சாபர், சாமுவேல்.
முதல் இதழ் சனவரியில் வெளிவந்தது. 16 பக்கம். விலை

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

REGISTERED No. 85.

உலக நேசன்

The Ulaga Nesan.

PUBLISHED EVERY WEEK.

வாரம் ஒருமுறை பிரகடனஞ் செய்யப்படும்.

நன்னெறிதவறாது நடங்கள்; அதைவிட்டு விலகாதிருங்கள்.

புத்தகம் 1. } பினாங்கு;— திங்கட்கிழமை, 28 உ மார்ச்சு மீ 1887 ளு { இலக்கம் 1.

பிஸ்மில்லாஹி:

"உலகநேசன்"

வெண்பா.

[விக்கும்.
சேர்மணங்கமழ்க்க மேனிலத்திற் சம்ப
[கேசற்கு
மாசரிதை தாம்பெய்யெரிச் மாவுலக—
[மென்றும்
வக்கிமைகையேப்ப மார்களுக்கே நா
த்திமேவோம் வந்தனர் நான்.

கையொப்பத்தொகை.

வருடம் 1 க்கு	(முற்பணம்)	$ 2-00
மாதம் 6 க்கு	,, ,,	1-25
மாதம் 3 க்கு	,, ,,	0-75

புறதேசத்தார்க்கு தபால்கூலியுள்பட வருடம் 1 க்கு தீர்வை 3-00

கடிதமனுப்புவார்க்கு.

1.— கடிதங்களின் மொழிகட்கும் கடிதமுடையார் அபிப்பிராயங்கட்கும், எழுதுவோர்க்கும் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

2.— கடிதங்கள் பிறர்மனத்துக்கு வருத்தமுண்டாக்காமலும், உண்மையானதாய் ஒருபக்கமட்டும் நலக்கமா யெழுதவேண்டும்.

3.— கடிதங்களின் கீழ் வெப்பெயரையிடினுஞ் சொந்தப்பெயரை விலாசத்துடன் பத்திராதிபருக் கறிவித்தாலன்றி அங்கீகரிக்கப்படா.

4.— எம்பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டியவைகளுக்குக் கடிதங்களெல்லாம் பினாங்கு உலகநேசன் பத்திராதிபர் அ. மு. மரைக்காயரவர்கள் 124 நம்பர் ருபிசு சேம்பியா ஸ்டிரீட் என்றனுப்புவது அவசியம்.


5.— கையொப்பக்காரர்களாகப் பிரியமுள்ளோர் தங்கள்பெயர், இடம், தொழில், விலாசம் முதலியவற்றை விவரமாயெழுதவேண்டும்.

6.— கையொப்பர் தம்மிருப்பிடம்விட்டு வேறெவ்விடத்துக் காயினுஞ் சென்றுவிட்டால் பத்திராதிபருக் கறிவிக்கவேண்டும்.

7.— கையொப்பர் பணமனுப்பவேண்டினால் மணியார்டராயினும், உண்டியலாயினும் எடுத்தனுப்பவேண்டும்.

விளம்பரம்,

இப்பினாங்கு வாசிகளாகிய மஹான்களே! இப்பத்திரிகையை யாம்வெளியிட முயன்றகாலத்தே, கையொப்பஞ்சேர்க்க முயன்றுஞ் சிலவேலைத் தொந்தரையின் காரணம்பற்றி சிலரிடம் கையொப்பம்வாங்கியும் பலரிடம் வாங்காமலும் போனபோதினும் தங்களுள் ஒவ்வொருவருக்கும் எம்பத்திரிகையை முறையே சேர்ப்பிக்கும்படி நமதுவேலைக்காரருக்கு யாம் கட்டளையிட்டிருக்கின்றோம். கனவான்களே! தயைகூர்ந்து தங்கேரிக்க வேண்டுமென்றோம்.



S. S. "MARY AUSTIN"

S. S. "மேரி ஆஸ்டின்".

முகவுரையிற் கண்ட இக்கப்பல் நேரே இவ்விருந்து சென்னைப்பட்டணத்திற்கு ஒழுங்காய் யாத்திரைசெய்யுமாகையால் அங்கு போக்குவரவு செய்யும் பாசஞ்சர்களும் வியாபாரிகளும் இதனடியிற் கண்டவர்களிடம் வந்து சரசமாய் டிக்கட்பெற்றுக்கொள்ளலாம்.

பினாங்கு, } உத்தரவுப்படி
23 உ பிப்பிரவரி 1887 }

பயித்தாம், கஸ்தான் கம்பெனி.

"உலகநேசன்."

1887 ம் ளு மார்ச்சு மீ 28 உ

எம்பத்திரிகை.

எல்லா உயிர்களும் அபிவிர்த்தியடைவதற்கு உபயுக்தமாக, மழைபெய்யும் பருவத்திற் பெய்யவும், காற்றுவீசும் பருவத்தில் வீசவும், அஸ்தமிக்கும் பருவத்தில் அஸ்தமிக்கவும் கருணைபுரி சர்வவல்லமையுடையோனாகிய ஏகவல்லவன், சென்ற சிலகாலமாய் எம் பத்திரிகைக்குண்டாயிருந்த பிணிகளைத் தணிக்கும்பொருட்டு, தக்க ஔஷதங்களைப் பிரயோகிக்க எமக்கருள்புரிந்தமையால், இன்றுமுதல் எம்பத்திரிகை சாதுரியமாகிய பற்பல பழமொழிகளோடு வாசிப்பவர்களுடைய நாவிற்கு நயமும் செவிக்கின்பமும், மனத்துக்கு மகிழ்ச்சியும், அறிவுக்கு விர்த்தியுமுண்டாக்கு நற்குணமொழிகளுக் கிட்கொண்டு வாரமொருமுறை யொழுங்காய் நடைபெற்றுவரும். கல்விப்பொருள், செல்வப்பொருள் போல வெள்ளத்தோடு போகாததும், நெருப்பில் வேகாததும், கள்வர் அபகரிக்காததும், காவல்செய்யவேண்டாததும், அரசர்களால் வவ்வப்படாததும், தாயத்தாரால் பங்கிட்டுக்கொள்ள முடியாததும், விரும்பினவர்கட்கு எல்லாம் கொடையின்றி வழங்கினும் மேன்மேலும் வளர்வதன்றிக் குறைவுபடாததுமாம், அஞ்ஞானமாகிய பிணிக்கு நன்மருந்தமாயிருப்பதனால் அதனைச்செல்வப்பொருளினுஞ் சிறந்ததாகக்கருதி யாவரும் கற்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது. இத்தேசத்தால் இங்கு வந்து வாசஞ் செய்பவர்கள் அதிகமாயினும் முந்திய காலத்தில் அவர்களுள் கல்வியின்பேரில் விருப்புற்றவர்கள் சொற்பமென்று தெரிகின்றோம். ஆதலால் இதற்குமுன் இத்தீவில் இராவிடா விருத்திக்காக வேண்டியே உதயமான "வித்தியா விசாரிணி"

முதல் இதழ். மார்ச் 28, 1887. (பிரிட்டிஷ் நூலகம்)

சிங்கைநேசன்.

திங்கட்கிழமைதோறும் பிரகடனஞ் செய்யப்படும்.

The Tamil Journal "SINGAI NESAN" is designed to commemorate the Jubilee of Her Majesty the Queen-Empress VICTORIA.

"தன்குற்றநீக்கிப் பிறர்குற்றங்காண்கிற்பி னென்குற்றமாகு மிறைக்கு."

Vol, 1.] சிங்கப்பூர், 1887-ம் ஹு ஜூன்மீ 27-ந் உ. [No. 1.

Singai Nesan.

MONDAY, 27TH JUNE, 1887.

DEDICATION.

We, the Mohamedan and Hindoo residents in Singapore, have decided to start this Tamil Journal "SINGAI NESAN," as a memorial of the JUBILEE of Her Most Gracious MAJESTY VICTORIA, THE QUEEN OF THE UNITED KINGDOM OF GREAT BRITAIN AND IRELAND, EMPRESS OF INDIA, the Monarch whose sway extends to every quarter of the Globe, and whose beneficent reign will mark an epoch in the History of the world.

We rejoice at the opportunity afforded us of manifesting our loyalty and attachment to the British Throne, and of expressing our deep-felt interest in the prosperity of that Empire, of which we are proud to be subjects. Although India was one of the early seats of civilization, we are alive to the fact that it was the British wisdom, justice and enterprise, that rescued her from the hands of barbarism and tyranny, to which she was subjected at times, by the hands of irresponsible rulers. There are Indian fables of the existence, in ancient times, of kings and queens, during whose reigns, peace was so great, that the calf and the tiger drank together in amity at the same stream. The present generation feels justified in applying the same metaphor to the reign of Her Imperial Majesty, under which, people, whose differences of religion, opinion, caste, race and nationality comprise elements of discord which will justify the comparison in the fable, meet, act, and live together in peace under the mighty English flag.

A great Englishman has said "It is not the severity of the punishment, but the certainty of it which constitutes discipline." The hand of crime grows feeble beneath a just, though firm, Government but, we believe that much is due to the personal reverence towards an Empress, who protects other lives as her own and is so universally beloved and respected.

The past half century has been marked with improvements in trade education, sanitation and legislation, unexampled in the history of the world. It has seen Singapore develop from a mere trading station to a colony so important that its protection is considered of paramount necessity. The welfare of the colony is our own, and we, who form so large a portion of its settlers, express our feelings of indebtedness to Her Majesty for the liberty we enjoy, and the security to person and property so absolutely guaranteed. That we have no schools in which our children may receive education in their mother tongue, has been to many of us a source of regret, but we feel that we ourselves have been remiss in the matter, and hope that the means of interchanging idea afforded by our columns may soon supply this want. The assistance given to all matters relating to education, offers us every encouragement.

We pray the Supreme Being that Her Majesty's days be long in the interests of her subjects, that peace and happiness may be their lot and that He may pour His blessings on her and all her descendants.

கடவுள்வாழ்த்து.

[illegible]

இப்பத்திரிகையின் நோக்கம்.

[illegible]

2. பத்திரிகைக்குக் கையொப்பகாரர்களின் பெயர் விலாசம் ...

[illegible]

கையொப்பக்காரர்களுக்கு.

[illegible] ... 150 ... $ 30, $ 40, $ 50 ... 1-க்கு $ 3 ... [illegible]

மலர் 1, இதழ் 1. ஜூன் 27, 1887. (இராபில் நூலகம், சிங்கப்பூர். உதவி – ஜே.எம். சாலி)

ஆண்டுக்கு 4 அணா. 530 படிகள்.

சன்மார்க்க போதினி

மாதம் இருமுறை. சிதம்பரம். ஆசிரியர் - சீனிவாசன். டிசம்பரில் முதல் இதழ் வெளிவந்தது. வள்ளலார் வழியைப் பரப்புவது. அரசியல், பொருளாதாரம், சமுதாயத்துறைகளில் இந்தியர் ஒன்றுபட்டு முன்னேற வேண்டும் என்று வற்புறுத்தியது. 12 பக்கம். 200 படிகள். 1885 இல் யாழ்ப்பாணத்தில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

ஹாஸ்ய மஞ்சரி

வாரம். சென்னை. ஆசிரியர் - வைகுண்டம். விலை காலணா. விகடத் துணுக்குகளும், வேடிக்கைகளும் கொண்ட இதழ்.

புதுவை இந்துநேசன்

வாரம். புதுவை. சன்வரி 1 முதல் வெளிவந்தது. ஆசிரியர் - பு.வ.ஜேசிங். 4 பக்கம். விலை 1 அணா. ஆண்டுக் கையொப்பம் ரூ. 2-8-0. தமிழ் - பிரெஞ்சு இருமொழி இதழ்.

உலகநேசன்

வாரம். பினாங்கு. இசுலாமிய இதழ. முதல் இதழ் மார்ச்சு 28 இல் வெளிவந்தது. ஆசிரியர் - அ.மு.ம்ரைக்காயர்.

இவ்விதழ் "முசுலீம் விளக்கம்" அச்சகத்தில் அச்சிடப்பட்டது. "முசுலீம் விளக்கம்" என்று இரட்டைக் கொக்கியிட்டு காட்டப்படுவதால், இப்பெயரில் ஓரிதழ் வெளிவந்திருக்க வேண்டும்.

சிறீ மகாபாகவதம் தசமகந்த நாடகம்

மாதம். சென்னை. சனவரியில் தொடங்கியது. 16 இதழ் வெளிவந்தது. ஆசிரியை - லெட்சுமி அம்மாள். 24 பக்கம். விலை 4 அணா. 1000 படிகள். பாகவதத்தில் பத்தாவது பகுதியில் உள்ள கண்ணனின் லீலைகள் நாடக வடிவில் கூறப்பட்டன.

1891 இல் சென்னையில் "சிறீ பாகவத மகாபுராணம் தசம நாடகம்" என்ற இதழ் வெளிவந்தது.


புதுவை எதிரொலி

வாரம். புதுவை. பிரெஞ்சு - தமிழ்.

சிங்கை நேசன்

வாரம். சிங்கப்பூர். ஆசிரியர் - "சிகு" மகுதூம் சாயபு. முதல் இதழ் சூன் 27 இல் வெளிவந்தது. விக்டோரியா பேரரசி முடிசூட்டு வெள்ளி விழா நினைவாகத் தொடங்கப்பட்டது 1890 வரை இவ்விதழ் வெளிவந்த்து விற்பனை 150 படிகள்.

VOL. IV.—Nos. 3 & 4.] [OCT. & DEC., 1890.



புத்தகம் 4.] அக்டோபர்—டிசம்பர் 1890. [இலக்

இது மலர் 4, இதழ் 3, 4. அக்டோபர் – டிசம்பர், 1890. (ஆக்சுபோர்டு பல்கலைக் கழக நூலகம்)




THE MESSENGER OF TRUTH

சத்திய தூதன்.

MAN.

மலர்1, இதழ் 2. நவம்பர், 1887. (கிறித்துவ இலக்கியச் சங்க 125ஆம் ஆண்டு மலர்)



No. 2. நெ. உ.

விவேகசுந்தரம்.

VIVEKASUNDARUM.

இதழ் 2. "உத்தம போத ரஞ்சனி தொடர்ச்சி – " என்றும் இருக்கிறது. 1887 (ரோசா முத்தையா தொகுப்பு)

சுஜன ரஞ்சனி

வாரம். பாளையங்கோட்டை. விற்பனை 220 படிகள்.

தத்துவ விலாசினி

வாரம். சென்னை. தமிழ் ஆங்கிலம்.

பிரம்மஞானபோதினி

வாரம் இருமுறை. சென்னை.

லலிதப்பிரசோனதயா

நாளிதழ். சென்னை. ஆசிரியர் உ.தியாகரராயர்.

மகாராணி

இரு மாதம். சென்னை. மகளிர் இதழ். ஆசிரியர் கிருட்டினன். சூனில் முதல் இதழ் வெளிவந்தது. தெலுங்கிலும் இதே பெயரில் இவ்விதழ் வெளிவந்தது. 1891 இல் இவ்விதழ் வாசகர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்து அட்டை அனுப்பியது. அந்த வாழ்த்திதழ் பிரிட்டீசு அரும்பொருளகத்தில் இருக்கிறது. விற்பனை 400 படிகள். 28 பக்கம். விலை 1 அணா. வண்ணப்படங்கள் இடம் பெற்றன. இப்பொழுது "ராணி" என்ற பெயரில் ஒரு வார இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது.

சுகசீவனி

மாதம் இருமுறை. பெங்களூர். ஆசிரியர் - சோமசுந்தரம். கையொப்பம் ரூ. 2. விற்பனை 150 படிகள்.

குடந்தை மித்திரன்

வாரம். கும்பகோணம். விற்பனை 500 படிகள். அக்டோபர் 1 முதல் வெளிவரத் தொடங்கியது.

வேதாந்த தீபிகை

மாதம். சென்னை. ஆசிரியர் வாசுதேவன்.

சத்திய தூதன்

மாதம். சென்னை. அக்டோபரில் தொடங்கியது. 1970கள் வரை வெளிவந்தது. சென்னை கிறித்துவ சமயக் கல்விக்கழக வெளியீடு. தமிழ் ஆங்கில இருமொழி இதழ்.

சத்திய தூதன்

சென்னை. (இரு "சத்திய தூதன்"களும் ஒரே ஆண்டில் வெளிவந்துள்ளன). ஆசிரியர் இலாசரசு. விலை ஒரு பைசா. விற்பனை 5000 படிகள்.

ஞானாமிர்தம்

மாதம். சென்னை. ஆசிரியர் சபாபதி நாவலர். முதல் இதழ் பிப்ரவரி. 16 பக்கம். 6 பைசா. 1000 படிகள்.

இந்துதேசாபிமானி திருநெல்வேலி.

விவேகசுந்தரம்

முதல் இதழ் சூலையில் வெளிவந்தது. விலை 3 பைசா. 12 பக்கம். 1500 படிகள்.

விவேக போதினி

விலை 3 பைசா. முதல் இதழ் சூலையில் வெளிவந்தது. 12 பக்கம். 1000 படிகள். 1909 இல் இதே பெயரில் வேறொரு மாத இதழ் வெளிவந்தது.

கல்விக் களஞ்சியம்

விலை 6 பைசா. 16 பக்கம். 2000 படிகள்.

உத்தமபோத ரஞ்சநி

விலை 6 பைசா.

"ஒரே நேரத்தில் விவேகசுந்தரம், விவேகபோதினி உட்பட பத்து இதழ்களை ஒரு பரோபகாரி நடத்தினார்" என்று எஸ்.ஜி.இராமாநுசலு கூறியுள்ளார்.[1] அந்தப் பரோபகாரி இந்த இதழ்களை நடத்திய சை.இர.நமச்சிவாயந்தான். "விவேகசுந்தரம்" அட்டையில் நமச்சிவாயமே, "இஃது ஜனோபகாரமாய் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது" என்று அச்சிட்டுள்ளார். எல்லாம் சென்னையில் வெளிவந்தவை.

அவர் நடத்தியவை இதழ்களா? ஏடுகளா? ஆசிரியர் "புத்தகம்" என்றே கூறுகிறார். ஆனால், "விவேகசுந்தர"த்தில் பக்கங்களுக்குத் தொடர் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மகளிருக்கான கட்டுரைகள் அதிகம் இடம்பெற்றன. இரண்டாம் இதழில் பெண்கல்வி, பால் இல்லாத குழந்தைகளைக் காப்பாற்றும் முறை, பால் கொடுக்கும் பெண் இருக்கவேண்டிய பத்தியம் ஆகிய கட்டுரைகள் உள்ளன. சமையல், வைத்தியம், பழமொழித் தொகுப்பு முதலியவையும் இவ்விதழில் இடம்பெற்றன.

இதழ்கள் வரிசையில் சேர்க்க முடியாத காரணங்களும் உள்ளன. "விவேக சுந்தரம்" சில இதழ்கள் மூன்று பதிப்புக்கூட வெளிவந்துள்ளன. (இப்பொழுது காணக்கிடைக்கும் "விவேகசுந்தரம்" இரண்டாம் இதழில் "மூன்றாம் பதிப்பு" என்று காணப்படுகிறது). குறித்த இடைவெளியில் வரவில்லை. "கல்விக் களஞ்சியம்" தொடரில் ஒரே மாதத்தில் நாலைந்து கதைகள் (ஒவ்வொரு கதையும் தனியாக) வந்துள்ளன. 3 ஆவது இதழில் "மனமோகனராசன் சரித்திரம்" என்ற கதை இடம்பெற்றது. கிறித்துவ சமயத்தார் தரும் சலுகைகளில் இளைஞர்கள் ஏமாந்துவிடக்கூடாது என்று இக்கதை எச்சரிக்கிறது. முதல் கதை "கடன்பட்ட கந்தன் சரித்திரம்" என்பது.

நூல் பதிவாளர் அறிக்கையில் "இதழ்கள்" என்ற பகுதியில்தான் "விவேகசுந்தரம்", "விவேக போதினி" இரண்டும் இடம்பெற்றுள்ளன.[2]

ஒரு பைசா கதை நூல்களையும் நமசிவாயம் வெளியிட்டார். அவற்றில் சில: சத்துரு சகவாசம் நித்திய சங்கடம், நன்மை நலந்தரும், பேராசை பெருநட்டம், அடாது செய்தோன் படாது படுவான், மனக்கவலை பலக்குறைச்சல். குணபூசணி சரித்திரம். ஆசிரியர் நல்ல அறிவுரைக் கதைகளையே வெளியிட்டிருக்கிறார்.

---

1. "அமிர்தகுண போதினி" 12.3.1923

2. 1887 சூலை, ஆகஸ்டு, செப்டம்பர் காலாண்டுக்கான அறிக்கை. 1888 சனவரி 3-அரசிதழ் கூடுதல் இதழில் வெளிவந்துள்ளது.

"ஏசு கிறித்து மனிதனே", "இந்துவின் வெற்றி", "ஜனோபகாரம்", "கிறித்து மத கண்டனம்" ஆகிய நூற்களையும் அவர் எழுதியுள்ளார். இவர் சை. இரத்தினத்தின் மகன். 1.9.1891 "பிரம்மவித்தியா" இதழில் மகன் பற்றி இரத்தினம் கொடுத்துள்ள ஒரு விளம்பரம் – "எனது குமாரன் சை.இர. நமச்சிவாய செட்டி பேருக்கு ஜனரல் பவர் கொடுத்திருந்ததை ரத்து செய்து விட்டேன். ரத்து செய்துவிட்ட சங்கதியை இதற்கு முன்னும் பத்திரிகைகளில் தெரிவித்திருக்கிறேன். பிதுரார்ஜித சுயார்ஜித சொத்துகளையும் அவனுக்குப் பாகம் செய்து விட்டேன். சை. இரத்தினஞ்செட்டி, மதராசு ரிப்பன் பிரஸ் சொந்தக்காரரும், சவுளி வர்த்தகரும், சென்னை தம்பு செட்டி வீதி 255 ஆவது வீட்டிலிருப்பவரும்". அந்நாளைய இதழ்களில் இவர் "ஆரியன்", "இந்து" முதலிய புனைப்பெயர் களில் ஏராளமான வாதப்பிரதிவாத சமயக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவருக்கும், சைவ சமய சண்ட மாருதம் சூளை சோமசுந்தரத்துக்கும் பெரும் மோதல் ஏற்பட்டு, இராமநாதபுர மன்னர் சமாதானப்படுத்தி வைத்தார்.

இதிகாச மஞ்சரி

மாதம். சென்னை. ஆசிரியர் – வைகுந்தம். டிசம்பரில் தொடங்கியது. 32 பக்கம். விலை 2 அணா. 2000 படிகள். 48 இதழ்கள் தொடர்ந்து வந்தன. இராமாயண, மகாபாரதக் கதைகள் இடம்பெற்றன. 1886 முதல் இதே பெயரில் சென்னையில் தெலுங்கு இதழ் ஒன்றும் வெளிவந்தது. அவர்களே இத்தமிழ் இதழையும் வெளியிட்டார்கள்.

எம்பதம்ஆண்டவன்

வாரம். திருச்சி. விற்பனை 300 படிகள்.

1887 சூன் 18 இதழில் "சமய வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட மடங்கள் சாப்பாட்டு மடங்களாக ஆகிவிட்டன. மடங்களின் சொத்துகள் அழிகின்றன. கோயில் சொத்துக்களைக் காக்க சட்டம் செய்தது போல, மடங்களின் சொத்துகளைப் பாதுகாக்கவும் அரசாங்கம் சட்டம் செய்ய வேண்டும்" என்று எழுதப்பட்டிருந்ததை, அரசாங்க மொழி பெயர்ப்பாளர் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

ஐம்பதாமாண்டான்

"ஓர் இந்து" என்பவர் எழுதி, 1893 இல் வெளிவந்த "மாயாவாத சைவ சண்ட மாருதம்" (முதல் பகுதி) என்ற நூலில் பல இதழ்களின் பெயர்களைக் குறிப்பிடும் இடத்தில் "ஐம்பதாமாண்டான்" என்ற இதழின் பெயர் காணப்படுகிறது. வேறு எங்கும் இவ்விதழின் பெயரை இதுவரை (1992) காண இயலவில்லை.

பெயர் ஒற்றுமையைக் கொண்டு இவ்விதழும், "எம்பதம் ஆண்டவன்" என்ற இதழும் ஒன்றோ என்ற மயக்கம் ஏற்பட்டது. பேராசிரியர், முனைவர் து.சதாசிவம் "சென்னை மாகாணத்தில் பொதுமக்கள் கருத்து வளர்ச்சி"[1] என்ற தனது நூலில் "எம்பதம் ஆண்டவன்" என்றே குறிப்பிட்டுள்ளார். "தமிழ் இதழ்கள் – தோற்றம் வளர்ச்சி" என்ற நூலிலும் இதே பெயர்தான் இருக்கிறது.

---

1. சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.

இந்திய ஓசை.

சனிவாரந்தோறும் பிரசுரஞ்செய்யப்படும்.

புத்தகம் 1. } சென்னபட்டணம், 1888ளு ஆகஸ்டு மீ 4வ சனிக்கிழமை. { இலக்கம் - 1.

பத்திரிகையின் கிரயம்.

உள்ளூருக்கு.		ரூ.	அ.	வெளியூருக்கு.		ரூ.	அ.
வருஷம் 1 - க்கு	...	0	12	வருஷம் 1 - க்கு	...	1	8
6 - மாதத்திற்கு	...	0	6	6 - மாதத்திற்கு	...	0	12
3 - மாதத்திற்கு	...	0	3	3 - மாதத்திற்கு	...	0	6

இலங்கைக்கு வருஷம் 1 - க்கு ... 2 4 0
சிங்கப்பூர் மோரீசுக்கு ஷ 1 - க்கு ... 4 0 0

மூன்றுமாத முன் பணம் கட்டினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எந்த மாதத்தினிடையிலே சேர்ந்தாலும் அந்த மாதத்தின் முதலிலிருந்தே கணக்கர்க்கப்படும்.

பத்திரிகைக்கு கடிதங்கள் எழுதுவோர் உண்மையான விஷயமாயும் குதர்க்கத்துக் கிடமின்றியும், மததூஷணை முதலானவைகளின்றியும், சுருக்கமாயும், விநோதமாகவும், தெளிவ நடையாகவும், எழுதியனுப்ப வேண்டியது.

கடிதம் ஒருபக்கத்தில் வெண்மையானகாகிதத்தில் எழுதி தன் சொந்தப்பேர் இருப்பிடமுதலானவைகளைப் பத்திராதிபர் மாத்திரம் தெரிந்துகொள்ள ஒருதனிக்கடிதத்தில் எழுதி உள்வைத்து உறையுள் போடாமல் இருபக்கமும் திறந்தபடியாக புக்போஸ்ட் பண்ணி யனுப்பவேண்டியது.

பத்திரிகையில் பிரசுரிக்கப்படாத விஷயங்களைப்பற்றி மறு உத்திரவு கிடைக்கப்படமாட்டாது.

விளம்பர விகிதம் வரி ஒன்றுக்கு 1 - அணா வாங்கப்படும். ஒரு கலத்திற்கு 5 - ரூபா வாங்கப்படும்.

தபால் லேபில்களனுப்புவோர் ரூபாய்க்கு ஒரு அணாவாக வட்டம் சேர்த்து அனுப்பவும்.

இப்படிக்கு,
☞ C. N. விஜயராகவுலு நாயகர்.
இந்திய ஓசை மானேஜர்.
159, பிராட்[illegible] மதராஸ்.

மின்தபால்.

செயின்ட்பீடர்ஸ்பர்க் ஜூலை மீ 27வ.—[illegible] சக்கிரவர்த்தினிக்கு இந்த தேதியில் ஓர் குழந்தை பிறந்தது.

மெல்போர்ன் ஜூலை மீ 27வ.—[illegible] நகரத்தில் பிரசுரமான பட்ஜட்டில் வருகிற ஜனவரி மீ 1வ [illegible] மேற்படி [illegible] ரயில்தேயிலையின்மீது விதித்திருக்கும் வரி [illegible] ஒருபெனியாகக்குறைத்து விட்டிருக்கிறது. காபிக்கொட்டையின் மேல் விதித்திருந்த வரியை முழுமையும் எடுத்துவிடப்பட்டது.

லண்டன் ஜூலை மீ 28வ.—பெஹ்ரிங் கடலில் அமெரிக்கா விருண்ட்டியு இழுக்கும் கப்பலொன்று [illegible] பிரிடிஷ் படகுகளை பிடித்துக்கொண்டதாக லண்டனில் [illegible]கிறது.

டப்ளின் ஜூலை மீ 28வ.—போலீஸ் கமிட்டியில் தாக்கியவர் எதிர்த்துக்கொண்டு ஆஸ்திரேலியா நேசர்களை பயமுறுத்துகிறதோடு அந்தேசத்தின் சுற்றுப்புறத்தில் அநேக கிராமங்களை அழித்துவிட்டார்கள். அவ்விடத்தியதருப்புபலமற்றவர்களாயிருப்பதால் பட்டாளத்தாருக்கு மறுசெய்துக் கொண்டிருக்கிறார்கள்.

லண்டன் ஜூலை மீ 29வ.—டல்லமோர் ஜெயிலில் சிறைப்பட்டிருந்த ஐர்லாந்து பார்லிமென்ட் கட்சியைச்சேர்ந்த மிஸ்டர் மாண்டெவில் என்பவர் இறந்துபோனதாகத் தெரியவருகிறது. இவரை மரணபரிசோதனை செய்தபோது இவர் சிறையிலிருந்தபோது இவரை அக்கிரமமாய்பாராட்டினதால் இறந்துபோனாரென்று ஜூரிகள் அபிப்பிராயப்பட்டார்கள்.

கோபன்ஹேகன் ஜூலை 31வ.—ஜெர்மன் சக்கிரவர்த்தியானவர் கோபன்ஹேகனைவிட்டு சென்ற ஜூலைமாதம் 31வ இராத்திரி புறப்பட்டார்.

இந்திய ஓசை.

சென்னை.—1888ளு ஆகஸ்டு மீ 4வ.

இந்திய ஓசையின் பிரபாவம்.

இவ்விந்தியதேசமானது 15-லக்ஷம் மைல் சுற்றளவுள்ளதும்; அங்க, வங்க, கலிங்க, கௌசல, லாள, வங்கள, சேர, சோள, கௌள, பாஞ்சால, சிருஞ்சய, குந்தள, நேபாள, மலையாள, மாளவ, [illegible]ருவ, இந்தள, சைந்தவ, கொங்கண, டங்கண, காம்போஜ, கலிங, விராத, மூங்கல, மகத, மாருக, குருமுக, சிருதுந்த, திரிகர்த, சூரியாவர்த்த, போட, மஹாபோட, காரட, ஆம்பாட, பப்பர, சேதி, ஸௌபர, காவர, மத்திய, மஹாராஷ்டிர, சௌராஷ்டிர, குரு, காம்பீர, காஷ்மீர, சௌவீர, சால்வ, பாண்டிய, பாரசீக, யவன, ஆந்திர, திராவிட, கர்நாடக, அம்பஷ்ட மிலேச்சவென்னும் ஐம்பத்தாறுதேச கிரீடாதிபதிகளால் ஆளப்பெற்றது; நீர்வள நிலவள முதலியவைகளால் சிறந்து, அஷ்டலக்ஷ்மிகளும் தாண்டவமாட மஹாசிறப்பு வாய்ந்ததுவாயிருந்ததென்பது குன்றுதசத்தியம். இத்தன்மையசிறந்த நாடானது இடைக்கிடையே பல அன்னிய ராஜாக்களின் [illegible] செல்வாக்கில் தாழ்ந்துவருங்கால் ஈசனது கிருபையினால் மறுதிசை பாலிய அக்கிலேய ஜாதியாரின் ஆதரணைக்குட்பட்டு இப்போதும் அவர்கள் துரைத்தனத்தின்கீழ் ஆளப்பட்டுவருகிறது. இந்த அக்கிலேயர்கள் கூடியவரையில் நாகரீகமாகவும், நீதியாகவும், பரஸ்பர விரோதமின்றியும், தயாளத்வமுடனேயும் இத்தேசத்தை ஆண்டுவருகிறார்களென்பதில் சந்தேகமே யில்லாதிருந்தபோதிலும், இவர்களு

மலர் 1, இதழ் 1. 4.8.1888. (ரோமன் ரோலந்து நூலகம், புதுவை)

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம் சென்று, 1887 ஆம் ஆண்டுக்கான தாய்மொழி அறிக்கையை மீண்டும் பார்த்தேன். அதில் மே, ஜூன், ஜூலை ஆகிய 3 மாத அறிக்கைகளில் "எம்பதம் ஆண்டவன்" என்ற பெயர் ஆங்கிலத்தில் இருக்கிறது. மே மாதத்தில் "AIM" என்று பெயர் தொடங்குவதால், "ஐம்பதாமாண்டவன்" என்றும் இதனைப் படிக்க முடியும். மற்ற இரு மாதங்களில் "EIM" என்று தொடங்குகிறது. மூன்று இடங்களிலுமே "ஆண்டவன்" என்று எழுதும்பொழுது பெரிய எழுத்து "A" பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மூன்று இடத்திலும் "வார இதழ், திருச்சி, விற்பனை 500 படிகள்" என்று குறிப்பு இருக்கிறது. எனவே, இது "எம்பதம் ஆண்டவன்" இதழ்தான்.

"மாயாவாத சண்ட மாருதம்" நூலில் உள்ள பெயரை மீண்டும் பார்த்தேன். "ஐம்பதம்" என்று இல்லை; "ஐம்பதாம்" என்று இருக்கிறது. "ஆண்டவன்" என்று இல்லை; "ஆண்டான்" என்று உள்ளது. எனவே, "எம்பதம் ஆண்டவன்", "ஐம்பதாமாண்டான்" இரண்டும் வெவ்வேறு இதழ்கள் என்று கொள்ள வேண்டியிருக்கிறது.

என்றாலும், "ஐம்பதாமாண்டான்" என்ற பெயர் புதுமையாகவும், அந்நாளைய இதழ்களுக்குரிய பெயராக இல்லாது போன்றும் தோன்றுகிறது. ஆனாலும், வேறு ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடித்துதான், இரண்டும் ஒன்றா, வேறா என்று உறுதிப்படுத்தவேண்டும். அதுவரை இரண்டையும் வெவ்வேறாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

1888

மகாவிகட தூதன்

வாரம். சென்னை. ஆசிரியர் - இராசேந்திரன். மார்ச்சு 3 இல் முதல் இதழ் வெளிவந்தது. விற்பனை 1,500 படிகள். 1882 இல் தொடங்கப்பட்ட இதழ், நின்று, மீண்டும் வந்திருக்கிறது.

ஞானமித்திரன்

மாதம் இருமுறை. சென்னை. முதல் இதழ் மே 21 இல் வெளிவந்தது. விற்பனை 50 படிகள். இதே பெயரில் 1891 இல் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் இதழ்கள் வெளிவந்தன.

சுகிர்தவர்த்தமானி மாதம். சென்னை. மே மாதம் முதல் வெளிவந்தது.

சுஜநபோதினி

மாதம் இருமுறை. சென்னை. சனவரியில் தொடங்கியது. விற்பனை 350 படிகள்.

இந்திய ஓசை

வாரம். சென்னை. முதல் இதழ் ஆகஸ்டு 4 இல் வெளிவந்தது. ஆசிரியர் - விஜயராகவலு. 4 பக்கம். கையொப்பம் 12 அணா.

ஜனமித்திரன்

வாரம். சென்னை. ஆசிரியர் - நீலமேகம். செப்டம்பர் 8 முதல் வெளிவந்தது. தாய்மொழிகள் இதழ் அறிக்கையில் "தஞ்சை ஜனமித்திரன்" என்று பெயர் இருக்கிறது. ஆனால், 1891 இல்தான் தஞ்சையில்

சேசுநாதருடைய

திரு இருதயத் தூதன்.

முதல் புத்தகம்.

௲அ௸அ[illegible]ம்-ஹு

மலர் 1, இதழ் 1. சனவரி, 1888. (உதவி - "சேசுநாதருடைய திரு இருதயத் தூதன்," திண்டுக்கல்)

வெளிவந்தது. அப்பொழுது சிறப்பு மலர் ஒன்று வெளியிட்டது[1] (என்ன மலர் என்ற விவரம் இல்லை). அதே ஆண்டில் "பூமியின் மிராசு பாத்தியம் யாருக்கு?" என்ற நூலும் "ஜனமித்திரன்" வெளியீடாக வந்தது.

இதே பெயரில் 1924 இல் புதுக்கோட்டையில் ஒரு வார இதழ் வெளிவந்தது. ஆசிரியர் - விசுவநாதன். புதுக்கோட்டை நகரில் வெளி வந்த முதல் செய்தித்தாள், இது. 1930 இல் நாகர்கோவிலிலும் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

ஜனானுகூலன்

மாதம். திருவாடி. சூலையில் தொடங்கப்பட்டது. 1890 இல் இதே பெயரில் தஞ்சையில் ஒரு வார இதழ் வெளிவந்தது.

சுஜந நல்லாசான்

மாதம் இருமுறை. தஞ்சை. அக்டோபர் 20 இல் முதல் இதழ் வெளி வந்தது. 300 படிகள்.

சேசுநாதருடைய திரு இருதயத்தூதன்

மாதம். திண்டுக்கல். இப்பொழுதும் (1992) வெளிவந்து கொண்டிருக் கிறது.

ஆயுள்வேதபாஸ்கரன்

மாதம் இருமுறை. சென்னை. டிசம்பர் முதல் நாள் தொடங்கியது. 1923 இல் வேலூரில் "ஆயுள் வேதம்" என்ற இதழ் வெளிவந்தது.

விஜயதுவஜம்

மாதம் இருமுறை. பாளையங்கோட்டை. ஆசிரியர் - சி.தாமோதரன். கையொப்பம் உள்ளூர் 8 அணா. வெளியூர் ரூ. 1. சைவசமய இதழ். விற்பனை 1200 படிகள். ஆசிரியர் - ஈழத்தைச் சேர்ந்தவர்.

சிறீலோக ரஞ்சனி

மாதம் இருமுறை. பெல்லாரி. ஆசிரியர் - நாதமுனி. 12 பக்கம். 250 படிகள். கையொப்பம் மாணவர்களுக்கு ரூ. 1-4-0. மற்றவர்களுக்கு ரூ. 2.

கலா தரங்கணி

மாதம். சென்னை. ஆசிரியர் - இராசகோபாலன். மேயில் தொடங் கியது. 24 பககம். விலை 4 அணா. 150 படிகள்.

---

1. தமிழ் நூல் விவரப்பட்டியல் தொகுதி 1, பகுதி 4.

REGISTERED NO. 151.

சிவமயம்

இந்து நேசன்.

"Hindu Nasen."

மாதமிருமுறைபிரகடனஞ்செய்யப்படும்.

இந்துநேசனை யாவரும்புகழச் சந்ததங் கணபதி கந்தனுங் காப்பு.

கற்றறிந்தும்பொய் கொலைகள் கட்காமஞ்சூதைநீக்கறிந்தோர் மேன்மை நிலை.

VOL I. } பிறக்கு:—திங்கட்கிழமை, 6-உ பிப்ரவரி மீ 1888. { NO. 8.

SUBSCRIPTION.

பத்திரிகைக் கிரய வரலாறு.

உள்ளூரார்க்கு.			மலாய், அச்சை, ஜாவா, தேசத்தார்கட்கு, தபாற்கூலி யுள்பட.		
ஞூ 1-க்கு	—	$ 2. 00.	ஞூ 1-க்கு	—	$ 3. 00.
மீ 6-,,	—	,, 1. 25.	மீ 6-,,	—	$ 2. 00.
மீ 3-,,	—	,, 1. 00.	மீ 3-,,	—	$ 1. 00.

இந்தியா, இலங்கை, பர்மாதேசத்தார்கட்கு, தபாற்கூலியுள்பட.

ஞூ 1-க்கு	—	—	—	Rs 5. 00. 00.
மீ 6-,,	—	—	—	,, 3. 00. 00.
மீ 3-,,	—	—	—	,, 2. 00. 00.

"இந்துநேசன்."

பிறக்கு:—6உ பிப்ரவரி மீ 1888.

7-ம்-இலக்கம் 25-ம்-பக்கத் தடர்ச்சி.

பூமி.

பூஞ்சோலைகள் நாடகசாலைக்குச் சமானமாயிருக்கின்றன. மயில், அன்னம், கோழி, கொக்கு முதலிய பட்சிகள் நாட்டியப்பெண்கள்போல நடனஞ்செய்கின்றன. குயில், கிளி, பூவை, வானம்பாடி முதலிய பட்சிகள் பாடகர்கள்போலச் சங்கீதம்பாடுகின்றன. காகம், பருந்து, கழுகு கோழி முதலிய பறவைகளும், பல்லி அரணை முதலியவைகளும் வீடு சுத்தஞ்செய்கிற பெண்கள்போலப் பல பூச்சிகளையும், இறந்துபோன பல ஜெந்துவையும், அசுத்தத்தையும், பக்ஷிக்கின்றன. பருத்திச்செடி பட்டுப்பூச்சிமுதலியவைகள் நமக்கு வஸ்திர வியாபாரிகளாயும், நாய், புலி, காடி முதலியவைகள் சால்வை, போர்வை கம்பளம் இவைகளைத்தருகிற வர்த்தகர்களாயுமிருக்கின்றன. தேனீக்கள் தேன்தருகின்றன. பசு, எருமைமுதலியவைகள் பால்க்காரிபோல பால் தருகின்றது. காளை, குதிரை, ஆனை, ஒட்டகம்முதலியவைகள் வாகனங்களாய் நம்மைச் சுமப்பதுமன்றி இன்னும் பல வேலைகளுக்கும் உதவுகின்றன. அந்த மிருகங்களுக்குப் புல் வைக்கோல் முதலியவைகள் ஆகாரங்களாயிருக்கின்றன. எறும்புமுதலியவைகள் வீடுபெருக்கிறவள்போலப் பலவிதமாய்ச் சிந்திக் கிடக்கிறவஸ்துக்களைப் புசித்து வீட்டைச் சுத்தஞ் செய்கின்றன, நாய்கள் காவல்காரனைப்போல் வீடு காக்கின்றன. கழுதையும நமக்காக பலபாரங்களை சுமக்கின்றன. சேவல்களும், செம்போத்துகளும், காகங்களும் நமக்குச் சூரியராஜன் வருகையைக் காட்டுகிற கட்டியக்காரர்களாயிருக்கின்றன.

இன்னும் வரும்

7-ம் இலக்கம் 25-ம் பக்கத்தடர்ச்சி.

தருமம்.

நம்முடைய தேசத்தார்களுள் அநேகர் உலோபமின்றித் தருமஞ் செய்யப் புகுந்தும், தங்கள் சீடியகாலம் வருந்திச் சம்பாதித்த பெருஞ் செல்வமவற்றையும் மேற்சொல்லியபடியே பாழுக்கிறைத்து, குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வார்போலப் பாவத்தையே தேடிக்கொள்கிறார்கள். இவர்கள் ஆன்மகத்தை விரும்பாது, தற்காலத்திலே மூடர்களாலே சிறிதுபொழுது புகழ்ப்பெறுதலொன்றையே விரும்புகிறார்கள். இவர்களாலே எண்ணில்லாத சனங்கள் சோம்பேறிகளாய் மூடர்களாய்ப் பாவிகளாய், எரிவாய் நரகத்துக்கு இரையாகுகின்றார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் நல்லறிவில்லாமையேயாம் நல்லறிவு கல்வி கேள்விகளாலன்றி வாராது. ஆதலினாலே தருமஞ்செய்யப்புகுவோர், தருமங்களையும் தருமஞ்செய்யுங்கிரமங்களையும் கற்றறிந்து கொண்டாயினும், கற்றறிந்துகொண்டவரிடத்தில் கேட்டறிந்துகொண்டாயினும், விதிப்படி செய்யக்கடவர்கள்.

நல்லோரிணக்கமும் நல்லறிவுமுடையவர்கள், தங்கள்பொருளிலே தமக்களுக்கும் தங்கள் பிதா மாதா முதலிய பந்துக்களுக்கும், பெண்டீர் பிள்ளைகளுக்கும் வேண்டியவரையும் வைத்துக் கொண்டு மற்றதைத் தங்கள் ஆன்மகத்தின்பொருட்டு உத்தம தருமங்களிலே செலவுசெய்வார்கள். அப்படிச் செய்பவர்கள் ஆன்மகத்தை மாத்திரமன்றி, தற்காலத்திலும் பிற்காலத்திலும் அறிவுடையோர் வாய்ப்படும் நிலையுள்ள புகழையும் அடைவார்கள்.

பொருளினாலே அவசியகமாகச் செயற்பாலனவாகிய உத்தமதருமங்களைச் சொல்வோம்:—

க. பூர்வ காலத்திலே ஈசுராநுக்கிரகம் பெற்ற பெரியோர்களாலே செய்யப்பட்ட தேவாலயங்களுள்ளும் புண்ணியதீர்த்தங்களுள்ளும் சிலமாயுள்ளவைகளை முன்போலச் செய்வித்தல் வேணும். அப்படிச் செய்தவர் பெறும் பயன், முன் அவைகளைச் செய்தவர் பெற்ற பயனிலும், ஆயிரமடங் கதிகமாம். அத்தேவாலய முதலியவைகளுள்ளே பழுதடைந்த விடங்களைப் பழுதறப் புதுக்குவித்தல் வேண்டும். அப்படிப் புதுக்குவித்தவர் பெரும்பயன், அவைகளை முன் செய்தவர் பெற்ற பயனிலும் நூறு மடங்கதிகமாம்.

உ. பெரியோர்கள் ஸ்தாபித்த தேவாலயங்களுக்குள்ளே பூசை உற்சவமுதலிய நடவாத தேவாலயங்களிலே ஆகமவிதிப்படி வழுவறச்சிரத்தையுடன் பூசை உற்சவமுதலியவை செய்வித்தல்வேணும்.

ங. தேவாலயத்துத் திருமதில் திருக்கோபுர முதலியவைகளிலே அரச முதலியவை முளைத்து அவைகளுக்குச் சேதம் செய்யாவண்ணம் கூலியாட்களை நியோகித்து, அவர்கள் காலந்தோறும் பார்த்து அவ்வரச முதலியவற்றைக் களைந்தெறிந்து அடிக்கடி சுண்ணம்பு பூசிவரும்படி, செய்தல்வேணும்.

ச. தரிசனத்தினிமித்தம் சமீபத்தில் தேவாலயமில்லாத இடங்களில் மாத்திரம் நூதனமாக தேவாலயங்கட்டிவைத்து, இயன்றவளவில் பூசைமுதலியவைகளை விதிப்படி நடத்துவித்தல் வேணும்.

வரி 1 க்கு காசு 8

ஹிந்து.

பிரதானமான

விளம்பரம்

எலிக்சிர் கோதினோ வென்னும் உயிர்ப்பிக்கும் அமிர்தம்

அனேகவியாதிகளுக்கு குணத்தைத் தரும் பேர்பெற்ற Elixir Godineau எலிக்சிர் கோதினோவென்னும் அமிர்தம் புதுவையில் சென்னப்பட்டணத்து வீதியிலிருக்கும் ம-ள-ள-ஸ்ரீ அச்சுக்கூடம் நித்தின முனிசாமி முதலியாரிடத்தில் விற்கப்படுகிறது

இந்த Elixir Godineau எலிக்சிர் கோதினோவென்னும் அருமையான மருந்து சொல்லப்படக்கூடாத வியாதிகளையும் சொஸ்தப்படுத்துவதுடன் தேகத்தை தணியச்செய்யும் அற்புதமான சக்தியுண்டு

அதுவேண்டுபவர்கள் தாமதமின்றி ம-ள-ள-ஸ்ரீ நித்தின முனிசாமிமுதலியாரிடம் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம் இந்த அமிர்தத்தில் விற்பனை செய்தது போக இன்னம்கொஞ்சமிருக்கின்றது இந்த மருந்தின் குணத்தைப்பற்றி பற்பலபாஷைகளில் எழுதிய புஸ்தகங்களும் வந்திருப்பதால் வேண்டியவர்கள் அவைகளையும் வந்து பார்வையிட்டுக்கொள்ளலாம்

—

தருமம்,

—

இப்பாவிகள் எண்ணில்லாலம் நரக துன்பத்தை அனுபவித்தபின் பூமியிலே மலத்தின்பவர்களாகிய நாய் பன்றி காகம் முதலியவைகளாய் எண்ணில்லாத்தரம் பிறந்து உழல்வார்கள் அதன்பின் மனிதப்பிறவிகடோறும் இருமல் ஈளை சோகை வெப்பு முதலிய ரோகங்களினாலும் வறுமையினாலும் வருந்துவர்கள் பெரும்பசியாகிய அக்கினிக வாலிக்க ஒரு பிடியன்னமும் கொடுப்பாரின்றி கண்டவர்கள் சீச்சீ என்று ஓட்டநாய்போல்த் திரிவார்கள் வறுமை கொடிது கொடிது நரகினுங்கொடிது பூமியில் நரகமெனப்படுவோர் வறுமை நோயினாலே பீடிக்கப்படுவோரன்றி மற்றியாவர் அடுத்தவர்கள் அடி அடி என்று அடிக்க பெண்டிர் பிள்ளைகள் கதறுகுலை குலைந்து துன்பக்கடலின் மூழ்குவார்கள் இரக்கத்தகாத இடங்களெல்லாம் இரப்பர்கள் இக்குத்தொழிலே தங்களுக்குத் தொழிலாக எரிகின்ற பசிகனல் வருத்தக்காற்றுப்போலத் திரிந்து காகம்போல கதறிக் கால் கடுத்தோய வருந்தி ஐயோ பெற்றாயினும் பெறவில்லையே யாவர் எமக்கு அன்னமிடுவோர்கள் ஒரு துணையுமில்லையே யென்று அலறி அலறிக் கால் விக்கி மரிப்பர்கள் இப்படி மரித்தாலும் தருமஞ்செய்யாப்பாவம் விடுமோ விடாது பின்னரும் பலமுறை [illegible] பிறந்து, பார்த்தோர் செல்லாம் [illegible] சொல்லும் வண்ணம் சுழன்று திரிந்து வருந்துவார்கள்.

தாங்களே நெடுங்காலம் வருந்தித் தேடியபொருளைக் கொண்டு தருமஞ் செய்யாத உலோபிகள் படுந்துன்பம்

மலர் 2, இதழ் 10, 11. மார்ச்சு 16, 1896 (அரசு நூலகம், பாரிசு)

1900க்குப் பிறகு "கம்ப நாடர்" என்ற பெயரில் காரைக்குடியில் "மாதாந்த இராமாயண சஞ்சிகை" ஒன்று வெளிவந்தது.

திராவிடபானு

வாரம். தூத்துக்குடி. முதல் இதழ் மார்ச்சு 30. விற்பனை 750 படிகள்.

கோவைச்செய்தி

மாதம் இருமுறை. கோவை. முதல் இதழ் மே 4. விற்பனை 250 படிகள்.

ஜனவிநோதினி

வாரம். திருவாதி. முதல் இதழ் நவம்பர் 29. ஆசிரியர் – பஞ்சாப கேசன். கையொப்பம் ரூ. 3. 1870இல் இதே பெயரில் சென்னையில் ஒரு மாத இதழ் வெளிவந்தது.

சிறீபாகவத மகாபுராணம்

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் – ரெங்கன். 72 பக்கம். விலை 8 அணா. 1000 படிகள். இதே ஆசிரியர் 1891இல் "சிறீபாகவத மகாபுராணம் தசம நாடகம்" என்ற இதழை நடத்தினார்.

புதுவை இந்து

வாரம். புதுவை. ஆசிரியர் – இர. முனுசாமி. தமிழ் – பிரெஞ்சு. விலை 8 பைசா. புதுவையில் வெளிவந்த இதழ்கள் தங்கள் பெயருடன் ஊர்ப் பெயரையும் சேர்த்துக் கொள்வது வழக்கம். (புதுவை நீதி, புதுவை நாகரிக வர்த்தமானி, புதுவை இந்துநேசன், புதுவை நேசன்.) சென்னையில் "இந்து" இதழ் வந்து கொண்டிருந்ததால், இது "புதுவை இந்து" என்றும் பெயர் சூட்டிக் கொண்டிருக்கலாம்.

1896

தேசாபிமானி

திங்கள் இருமுறை. பேரா (மலேசியா). இதன் படி பிரிட்டீசு நூலகத்தில் இருக்கிறது. 1867இல் சென்னையில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

இந்து பூசணி

சென்னை. 1887இல் வெளிவந்த "இந்து சன பூசணி"யும் இதுவும் ஒன்றா என்று தெரியவில்லை.

சுஜனமனோ உல்லாசனி

மாதம். சென்னை. தமிழ் – தெலுங்கு. ஆசிரியர் – ஆதி நாராயணன். இதே பெயரில், இதே ஆண்டில் கதை ஒன்றும் வெளிவந்திருக்கிறது. இதே பெயரில் சென்னையில் 1886இல் தெலுங்கில் ஒரு வார இதழ் வெளிவந்தது.

ஞானபூசணி

சென்னை. நடராசன்.

ஆரிய சனப்பிரியன்

சென்னை. 1882இல் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது. இரண்டும்

ஒன்றா, வேறா என்று பார்க்க எந்த விவரமும் கிடைக்கவில்லை.

மனோகரன்

மாதம் மும்முறை. சென்னை. மார்ச் 10இல் முதல் இதழ்.

மாணவன்

மட்டக்களப்பு (இலங்கை). ஆசிரியர் - பாலா. மாணவர் இதழ்.

ஜனப்பத்திரிகை

வாரம். சென்னை. இராவ் பகதூர் பி. அனந்தாச்சார்லு (இதே இதழை இவர் 1884இல் நாகப்பட்டினத்தில் நடத்தினார்)

கம்ப இராமாயணம் அயோத்தியா காண்டம்

மாதம். சென்னை. ஆசிரியர் - சண்முகம். 48 பக்கம். விலை 4 அணா. 1000 படிகள். முதல் இதழ் சூன். 1893இல் "வால்மீகி இராமாய -ணம் பால காண்டம்" என்ற இதழ் வெளிவந்தது.

கந்தபுராணம்

மாதம். சென்னை. ஆசிரியர் - சுப்பராயன். ஏப்ரலில் முதல் இதழ். 40 பக்கம். 3 அணா. 1000 படிகள்.

ஆன்றோர் மித்திரன்

மாதம். சென்னை. பிப்ரவரியில் தொடங்கப்பட்டது.

திராவிட பாண்டியன்

வாரம். சென்னை. முதல் இதழ் சனவரி 4. இதே பெயரில் 1885இல் சென்னையில் ஓர் இதழ் வெளிவந்தது.

லோக பந்து

மாதம் இருமுறை. சென்னை. மார்ச்சு 25இல் முதல் இதழ். விற்பனை 1,600 படிகள்.

இந்து மதாபிமானி

வாரம். சென்னை. ஏப்ரல் 2இல் முதல் இதழ் வெளிவந்தது. விற்பனை 500 படிகள். இதே பெயரில் 1899இல் கும்பகோணத்தில் ஒரு மாத இதழ் வெளிவந்தது.

சஜ்ஜனம்

வாரம். நாகை. மார்ச்சு 2இல் முதல் இதழ். விற்பனை 800 படிகள். செய்தி இதழ். "சஜ்ஜன பத்திரிகை" என்றும் சொல்லப்பட்டது. "சஜ்ஜனம்" என்றால், "அணி ஓசை" (போர் ஒலி) என்று பொருள்.

விஜய துவஜம்

வாரம். தேவகோட்டை. நவம்பர் 1இல் முதல் இதழ். விற்பனை 1000 படிகள். இதே பெயரில் 1892இல் மாதம் இருமுறை இதழ் ஒன்று வெளிவந்தது. 1888இல் பாளையங்கோட்டையில் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

வைத்திய போதினி

மாதம். பெங்களூர். மே 15இல் முதல் இதழ் வெளிவந்தது. விற்பனை

REGISTERED. M. No. 215. (Annual Subscription Rs. 2 only)

செங்கதிரோன்.

LE SOLEIL.

JOURNAL BI-MENSUEL

மாதந்திருமுறை வேதந்துறைபல நீதந்துரைபகர் ஜோதிக்கதிரவன்.

Vol — XVIII	KARIKAL MOIS DE FEVRIER 1913	2 Quinzaine.	No.—4
புத்தகம் - ௰௮	காரைக்கால், [illegible] ௵ பெப்ரவரி ௴	பிற்பாகம்.	இலக்கம்-௪

கடவுள் வணக்கம்

விருத்தம்

இங்கு மங்கு மெங்கு மொன் றெங்கு நின் றொருங்குளாய்
தங்கு கின்ற வெங்குறை தாகமி நீதி வீடட
வங்க மொன் றிபற்றி யங்கு முத கானிவன்
பொங்குகின்ற வின்பொடுன் பூம்பதங்கள் போற்றினேன்

LE SOLEIL
செங்கதிரோன்.

1913-ஆம் பெப்பரவரி-௴ பிற்பாகம்.

தமிழ் ஒரு தொன்மொழியாம்.

(முன்றொடர்ச்சி)

இனி அத்தமிழ்மொழி, வடமொழி இலத்தீன் முதலான மற்றை யெல்லாச் சொற்களினும் முற்பட்டுத் தோன்றிய பழமையுடைத்தென்பது ஒரு சிறிதுரைப்பாம். தமிழ் மொழியிலேயுள்ள சொற்களெல்லாம் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிருயிரெழுத்துக்களையும், இவ்வுயிர்களோடுகூடிய க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்னும் பத்து மெய்யெழுத்துக்களையும் முதற்கொண்டு தொடங்குகின்றன; ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்னும் எட்டு மெய்யெழுத்துக்களைக்கொண்டு அவ்வாறு தொடங்குகின்றில. ஆரியம், இலத்தீன் முதலிய மொழிகளோ இவ்வெழுத்துக்களையும் முதலிட்டுத் தொடங்குஞ் சொற்களுடையனவாய்க் காணப்படுகின்றன. ஆரிய மொழியிற் காணப்படும் டம்பம், ரத்கம், லவணம் முதலிய சொற்களை அம்மொழியிற் கிடந்தவாறே கூறாது, இடம்பம், அரதனம், இலவணம் முதலியனவாகத் திரித்துத் தமிழ்மக்கள் வழங்குகின்றார். நன்னூல் முதலான இலக்கண நூல்களும் அவ்வாறே வழங்குமாறு விதிக்கின்றன. அச்சொற்களை அம்மொழியிற் கிடந்தபடியே கூறாது அங்ஙனந் திரித்துக்கூறல் வேண்டுவதென்னை யெனவும், தமிழ்ச் சொற்கள் ட், ண் முதலான அவ்வெட்டு மெய்யெழுத்துக்களை முதல் நிறுத்துத் தொடங்காமை என்னை யெனவும் நுணுகி யாராயும்வழித் தமிழ்மொழி மற்றெல்லாப் பாடைகளினும் பழமைத்தாமென்று முறைப்பொருள் தெற்றென விளங்காநிற்கும். அவ்வாறாதல் காட்டுதும்.

இனி, ஒருபாடையி னுற்பத்திக்கிரமத்தை நோக்கவல்ல நுண்ணறிவாளர்க்கு, விலங்கினங்களைப்போல் அநாகரிக நிலையிலிருந்து சொற்சொல்லுமாறறியாது குறிப்பானுணர்த்திப் பின்னும் விலங்கனையான இயற்கையினிகழும் ஒலிவகைப்பற்றிக் கூற்று நிகழ்த்திச் சிறிதுசிறிதாய்ச் சொற்சொல்லுமாறறிந்து அறிவு கூடப்பெற்றுவரும் மக்கட்டன்மையும், தாய் தந்தையர் கூட்டுறவானே சொற்சொல்லுமாறறிந்து அறிவுகூடிவருஞ் சிறுமகாரியல்புந் தம்முளொத்த பெற்றிமையுடையவாமா றினிது விளங்கும். எனவே, ஒருபாடையி னுற்பத்திமுறை கண்டாராயத் தலைப்படுதற்கு இன்றியமையாப் பெருஞ்சாதனமாய் முன்னிற்பது சிறுமகார் வளர்ச்சிமுறையை யுற்றுநோக்கி யுணர்தலேயாம். உயிரெழுத்துக்களொழிய மெய்யெழுத்துக்களுட் சிறுமகாரான் முதன்முதன் மொழியப்படும் ஒலி யெழுத்து இதழிரண்டனையுஞ் சிறிது மெல்லென்று கூட்டுதலானே பிறக்குமாம் ம என்பதேயாம். அங்ஙனம் இதழ் கூட்டித் தந்தாயைக் கூவும்வழி அடுத்தடுத்து மா மா என்று சொல்லுதலானே அம்மா எனுஞ் சொற்றோன்றுவதாயிற்று. இனி அவர் அம்மா எனுமச்சொற் கற்றதன்பின்னே, தம்மிதழ்களையேனுஞ் சிறிது வலித்து இயக்குமாறறிந்து தந்தையைக்காண்டோறும் பா பா என்றழைத்தலானே அப்பா எனுஞ் சொல் உற்பத்தியாயிற்று. இங்ஙனம் மெல்லென்றொலிக்கும் ஒலி நுட்பம்பற்றி மகரத்தையும் அதனோடோரினப்பட்ட எழுத்துக்களையுந் தமிழ்நூலார் மெல்லெழுத்தென்றவ்வா றோதுவாராயினர்; வல்லென்றொலிக்கும் வகைபற்றிப் பகரத்தையும் அதனோடோரினப்பட்ட எழுத்துக்களையும் வல்லெழுத்தென்றவ்வாறோதினர். இங்ஙனஞ் சிறுமகாரான முதன்முதன் மொழியப்படும் மெய் ஒலியெழுத்துக்கள் மகரமும் பகரமுமாதல்பற்றியே, உலகத்தின்கட்பரந்து வேறுவேறு வழங்கப்படும் மொழிகளிலெல்லாம் தாய் தந்தையரை யழைக்குஞ் சொற்கள் அம்மா அப்பா எனுமிரண்டேயாயின. உலகவியற்கைத் திறம்பற்றி மொழியப்படும் அம்மா அப்பா வென்னுஞ் சொற்பெற்றி தேறமாட்டாத வடநூல்வல்லார் சிலர் அவ்விரண்டும் மாதா பிதா வென்னும் வடமொழிச் சொற்களின் சிதைவாய்த் திரிந்து தமிழில் வழக்குமுறுவனவென் றுரைத்தார் [illegible]. இதுநிற்க. (வரும்)

மலர் 18, இதழ் 4. பிப்ரவரி பிற்பாகம், 1896.

(அரசு நூலகம், பாரிசு)

100 படிகள்.

ஆஸ்திக தூதன்

மாதம் இருமுறை. மன்னார்குடி. அக்டோபர் 15இல் முதல் இதழ் வெளி வந்தது.

தர்ம சம்வர்த்தினி

வாரம். திருவாதி. நவம்பர் 7இல் தொடங்கியது. விற்பனை 500 படிகள்.

செங்கதிரோன்

திங்கள் இருமுறை. காரைக்கால். 1896 நவம்பரில் தொடங்கியது. தமிழ் இதழ். பிரெஞ்சும் இடம் பெற்றது. "மாதத்திருமுறை வேதத்துறை பல நீதத்துரைபகர் ஜோதிக்கதிரவன்" என்ற முழக்கத்துடன் வெளி வந்தது. ஆங்கில மாதத்தின் முற்பகுதியில் ஓரிதழும், பிற்பகுதியில் ஓரிதழும் வெளிவந்தன. ஆண்டுக் கையொப்பம் ரூ. 2.

தியாசெபிஸ்டு

திங்கள். சென்னை. ஆங்கில இதழ். தமிழும் இடம் பெற்றது.

1897

லோகோபகாரி

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் - சாமி. சிதம்பரனார். பழைய "லோகோபகாரி"யின் தொடர்ச்சி.

தமிழ்க்கல்விப் பத்திரிகை

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் - பார்த்தசாரதி. 16 பக்கம். விலை 3 அணா. 500 படிகள்.

ஆரிய தூதன்

காலாண்டு. காஞ்சிபுரம்.

ஞானபோதினி

மாதம். சென்னை. முதல் இதழ் செப்டம்பரில் வெளிவந்தது. ஆசிரியர் - மு.சி. பூர்ணலிங்கம். பரிதிமாற்கலைஞன் ஈராண்டு ஆசிரியராக இருந்தார். கையொப்பம் ரூ. 2-8-0. தனி இதழ் 4 அணா. 40 பக்கம். 1000 படிகள். தமிழ்ப்பற்று நிறைந்த இதழ். "தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்ற குறளை முழக்கமாகக் கொண்டிருந்தது.

ஞானசந்திரிகா

மாதம். சென்னை. கையொப்பம். ரூ. 1-4-0. ஆசிரியர் - வே. நடராசன். "லோகோபகாரி" ஆசிரியர் நடத்திய மாத இதழ். விற்பனை 1, 200 படிகள். அக்டோபரில் தொடங்கியது.

வித்தியா வர்த்தமானி

மாதம். சென்னை. அக்டோபரில் தொடங்கப்பட்டது. விற்பனை 150 படிகள். ஆசிரியர் - பார்த்தசாரதி. கல்வி இதழ்.

ஞானபோதினி.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

ஸம்புடம் I.] ஆகஸ்டுமீ 20உ. [புத்தகம் I.

விஷயங்கள்.

பத்திராதிபர்:— பூர்ணலிங்கம் பிள்ளை, பி. எ.

சென்னை:

தாம்ஸன் அண்டு கம்பெனியாரால்
பதிப்பிக்கப்படுகின்றது.

1897.

முதல் இதழ். ஆகஸ்டு 20, 1897. (பிரிட்டீசு நூலகம்)

Registered No. M.—75.

THE TAMIL JOURNAL OF EDUCATION MADRAS.

சென்னை
வித்தியா வர்த்தமானி,

VOL. III. No. 7.8.] APRIL, MAY 1899. [புத். ௩. தொ. ௭.௮.

CONTENTS. அட்டவணை.

	Rs. A. P.		ரூ. அ. பை.
For Patrons (minimum)	3 0 0	அத்தியக்ஷகர்களுக்கு	3 0 0
Annual Subscription in advance.	1 8 0	வருஷத்தியகையொப்பம். முன்னிட்டுக்கொடுக்கவேண்டும்.	1 8 0
Single copy 3 annas.]		ஒருபத்திரிகை விலை 3-அணா	

Edited by K. PARTHASARATHY AIYENGAR.

Printed at the City Press, Madras.

மலர் 3, இதழ் 7,8 – ஏப்ரல், மே, 1899 (தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம்)

சிவஞான சித்தியார்

மாதம். சென்னை. ஆசிரியர் - நல்லசாமி.

பினாங்கு வர்த்தமானி

வாரம். பினாங்கு (மலேசியா). இதன் படி பிரிட்டீசு நூலகத்தில் இருக்கிறது.

உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை

மாதம். சென்னை. ஆசிரியர் - நாகரத்தினம். சூனில் தொடங்கியது. 24 பக்கம். 500 படிகள். ஆண்டுக்கு ரூ. 4. 1872இல் இதே பெயரில் சென்னையில் ஓர் இதழ் வெளிவந்தது.

சித்தாந்த தீபிகா

மாதம். சென்னை. ஆங்கிலம் - தமிழ். ஆசிரியர் - வேதாசலம். 24 பக்கம். 300 படிகள். ஆண்டுக்கு ரூ. 4. சூனில் தொடங்கியது. ஆதரவாளர் ரூ. 100. திருவாங்கூர் மன்னர் ஓர் ஆதரவாளர்.

இவ்விதழின் 20.10.1900ஆம் நாளைய வெளியீட்டில் ஜி.யு. போப் எழுதியுள்ள ஓர் அஞ்சலில்தான் "என் கல்லறை மீது 'போப் ஒரு தமிழ் மாணவன்' என்று பொறிக்கப்படவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"உண்மை விளக்கம்", "சித்தாந்த தீபிகா இரண்டும் முதலில் குழப்பம் தந்தன. இரண்டும் ஒரே பக்கம். ஒரே விலை. ஆசிரியர் மட்டும் வேறு வேறு. 1898ஆம் ஆண்டுக்கான "நூல் பதிவாளர்" ஏட்டைப் பார்த்த பின்புதான் குழப்பம் நீங்கியது. "சித்தாந்த தீபிகா ஆங்கில இதழ். தமிழும் இடம் பெற்றது. எனவே, "உண்மை விளக்கம்", என்ற பெயரையும் இணைத்துக் கொண்டார்கள். தமிழ் இதழை வெளியிட்டவர்களே ஆங்கில இதழையும் வெளியிட்டார்கள்.

சுதந்திரன்

வாரம். புதுவை. தமிழ் - பிரெஞ்சு.

சிவமகாபுராணம்

மாதம். சென்னை. வியாசர் எழுதிய சைவபுராணம் தொடர்ந்து 22 இதழ்களில் வெளியிடப்பட்டது. ஆசிரியர் - இரத்தினவேலு. ஆகஸ்டில் தொடங்கியது. 40 பக்கம். விலை 4 அணா. 1000 படிகள்.

சரசுவதி பீடாதிபதி வசந கிரந்தத்திற்கு மொழி பெயர்ப்பு

இது ஓர் இதழின் பெயர்தான். மைசூர் சாரதா பீடத்தலைவரின் அறிவுரைகள் தமிழில் வெளியிடப்பட்டன. மாதம். சென்னை.

சிவஞான சித்தியார்

மாதம். சென்னை. ஆசிரியர் - நல்லசாமி.

[illegible]
[illegible]

சா. ராம. சித. இராமசாமிசெட்டியார், [illegible]

இங்ஙனம்,
ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பக்த
ஜனசபையார்கள் உத்திரவின்படி,
தி. பெ. இராமலிங்கம்.
காரியதரிசி.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமாந் சா. ராம. சித. இராமசாமிசெட்டியாரவர்கள் முன்னிலையில்
ஸ்ரீமாந் டிஸ்திரிக்ட் முன்சீப் ஜே. எம். நல்லசாமி பிள்ளை, பி.ஏ. பி. எல்.
அவர்களால் ஸ்ரீதாயுமான சுவாமிகள் திருமடாலயக் கட்டிட அஸ்திவாரம்
ஸ்தாபிக்கப்பெற்றபொழுது ஷை சபையார்களிலொருவராகிய ம-ா-ா-ஸ்ரீ
தி. கு. சோமசுந்தர வாத்தியாயர் அவர்கள் கூறிய
[illegible] ஆசிரியவிருத்தம்.

[illegible]

இங்ஙனம்,
ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பக்தஜன சபையார்.

THE

SIDDHANTA DEEPIKA

OR

The Light of Truth.

A Monthly Journal, devoted to Religion, Philosophy, Literature, Science, &c.,

Commenced on the Queen's Commemoration Day, 1897.

Vol. VIII NOVEMBER 1907. No. 8

THE TODAS: THEIR ORIGIN AND AFFINITIES. V.

(*Continued from page 219 of Volume VIII.*)

The mands that are generally situated in such well-selected picturesque spots usually comprise five (5) buildings or huts, three of which are used as dwellings, one as a dairy or temple and the other for sheltering the calves at night. Besides there is also a *tuel* or a circular enclosure built of stones within which the buffaloes are kept at night. This enclosure is generally surrounded by a low wall of loose stones and is provided with an entrance guarded by powerful wooden stakes, so that the cattle may not stray away. The calf-house is a small thatched shed without any mark of stability and intended only to afford a temporary shelter from wind and weather to the young ones until they become strong enough to join their parents in the common *tuel*. Excepting these, the dwelling huts and the dairy are generally more solidly built, and their plan of construction is quite uniform throughout the Nilgiris, wherever the Todas have settled. With the solitary exception of the house of a Toda headman pointed out to the writer in what is called the Governor Shola, to the west of Ootacamund,—a *house* which bears all the marks of the higher civilisation of the advanced town-folk, superimposed upon the primitive notions of an ancient hill-tribe—with brickwalls, windows, doorways, frames and all, in right modern fashion, together with diminutive dimensions and dark chambers, all the huts of the Todas are of one pattern throughout

"சித்தாந்த தீபிகா" (மலர் 8, இதழ் 8. நவம்பர், 1907) ஆங்கில இதழ். தமிழும் இடம்பெற்றது. (மறைமலையடிகள் நூலகம்.)

உண்மை விளக்கம்

அல்லது

சித்தாந்த தீபிகை.

1897ஆம் மகாராணியார் வைர ஜுபிளி தினத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

புத்தகம் க } 1897ஆம் ஜூன்மீ 21உ திங்கட்கிழமை. { இலக்கம்-க

திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரம்.

அன்புடைமை.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

(இதன் பொழிப்புரை). அறிவிலார் அன்புஞ்சிவ (இன்பநிலை) மும் வேற்றுமையுடையவென்று நினைப்பர். அன்பு குணமும் சிவம் குணியுமாகலான் அவையிரண்டும் வெவ்வேறு பொருள்களாகாது ஒரே பொருளாதலை அவர் அறிகிலர். அவ்வாறவை யொன்றாதலை யறிந்தபின், தாம் வேறொன்றன் வயமாகாது அன்பேயாய் அவ்வன்பே சிவமாதலின், அன்பேயான தாமும் சிவமாய்ப் பொலிந்திருப்பர்; என்றவாறு.

(குறிப்புரை). வனப்புடைய மடவாளொடு நிலைக்கும் ஆடவன் இன்புறும் அமயத்து அவளதுறுப்பு நலனைநோக்குந் தன்மையிழந்து அவ்வின்பமே தானு மாதல்போல, ஆன்மாவும் சிவத்தோடொன்றி யின்பந் துய்க்கு முறைமையறியப்படுமென்க. அன்பு இன்ன தன்மைத்தென்று சுட்டிக்காட்ட லாகாமையின், வாளா அன்பென் றொழிந்தார்; குழவியின்மீதுள்ள அன்பால் தாய்க்குப் பால் பெருகுமாறு போலவும், அன்புடையார் தம்மா லன்புசெலுத்தப்பட்டாரைக் கண்டவிடத்துத் தமக்கு இயல்பானே கண்ணில் நீரொழுகுமாறு போலவும், அன்புடைமைக் குறிகள்கண்டே அன்புண்டென்றும் அது இன்ன இயல்பினதென்றும் அறிதற்பாலது. சிவம் என்பது இன்பத்திற்கு இலக்கணமாகவுள்ளது. அன்பு சிவத்தின் இயற்கைப்பொருளாயின் 'அன்பேசிவ' மென்னாது, அங்கொருகாலத்துச் சிவமாயது அல்லது ஆகும் எனும் பொருள்போதர "அன்பேசிவமாவது" என்று ஆக்கச்சொல் கொடுத்துக் கூறிய தென்னையெனின்;—அன்பு சிவத்தின் இயற்கைப் பொருளாயினும், இவ்வியல்பறியாது அவையிரண்டும் வேறு பொருளென்று திரியக்கருதிய அறிவிலான் பின்பவை ஒன்றேயாதலைக் கருதுமிடத்து அவன் மனவுணர்ச்சியான் அது செயற்கைப்படுதலின் அவ்வாறு கூறினாரென்பது. அன்பே சிவமாயமர்தல், பேரின்பவெள்ளத்துள் நிலைத்தல். அவ்விரண்டன் உண்மையியல் பறிந்தார்க்கு இப்பெரும்பேறு எய்துதல் உறுதியாகலான் 'அமர்ந்திருப்பாரே' என்னாது "அமர்ந்திருந்தாரே" என இறந்த காலத்தாற் கூறினார்; "வாராக்காலத்து வினைச்சொற்கிளவி, இறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத்தோன்றும், இயற்கையுந் தெளிவுங் கிளக்குங்காலை," என்றார் தொல்காப்பியனாராகலின்; 'இக்காட்டுச்செல்லுவ் போனால் நீ புலியிழந்தாய்.' என்பதுபோல. (க)

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரு மிளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.

(இ-ரை.) பொன்வண்ண மழியத்திகழும் புலித்தோலையுடையனும், திருமுடி யசையுந்தோறும் மின்போற் பிறழ்ந்து ஒளிவிளங்கும் மூன்றாம்பிறை நெருங்கிக்கிடந்த சடைமுடி யுடையனுமாயும், எல்லாப் பொருளுந் தன் கைத்தலத்துள்ள தியால் அழிக்குங்காலத் தவற்றின் சாம்பரைத் திருமேனியிற் பூசிக் கூத்தாடிய இறைவன்பால் என் அன்பு பிரிக்கக் கூடாவாறு ஒன்றிக்கிடந்தது; எ-று.

(கு-ரை.) மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே முதலாயினோர் பிறரிருக்கவும், இறைவன்பாலே அன்பு செலு

இது முதல் இதழ் – 21.6.1897 (பிரிட்டிஷ் நூலகம்)

வித்யாபிவிருத்தினி

மாதம். புதுவை. புதிய வேதாந்தக்கருத்துகளில் ஆர்வமுள்ள ஒரு குழுவினர் இவ்விதழை நடத்தினார்கள்.

தசோபநிசத் திராவிட பாசியம்

மாதம். சென்னை. ஆசிரியர் - சீனிவாசதாதா. செப்டம்பரில் தொடங்கியது. 64 பக்கம். விலை 8 அணா. 1000 படிகள்.

சோதிட கணித சாத்திரம்

மாதம். திருநெல்வேலி. ஆசிரியர் - கிருட்டின சோசியர். 30 பக்கம். கையொப்பம் ரூ. 3-8-0.

நவமான சீர்திருத்தம்

மாதம். சென்னை. ஆங்கில இதழ்.[1] தமிழும் இடம்பெற்றது.

1898

தியாகி

வாரம். புதுவை.

சித்தாந்த ஞானபோதினி

மாதம். சென்னை. ஆசிரியர் - மறைமலையடிகள். அக்டோபரில் தொடங்கியது. 112 பக்கம். 500 படிகள். 8 அணா.

உபநிசத்வித்தியா

மாதம். நடுக்காவிரி. ஆசிரியர் - சீனிவாசன். விலை 4 அணா. 32 பக்கம். 1000 படிகள். சூனில் தொடங்கியது.

இல்லற ஒழுக்கம்

மாதம், ஆசிரியர் - சீனிவாசன்.

பிரபஞ்ச மித்திரன்

வாரம். சென்னை. ஆசிரியர் - தா. குப்புசாமி. முதல் இதழ் டிசம்பர் 16. விற்பனை 2000 படிகள். (இதே பெயரில் 1916இல் சென்னையில் ஒரு வார இதழ் வெளிவந்தது.)

பிரபஞ்ச தாரகை

வாரம். சென்னை.

தமிழ்ப்பிரதிநிதி

வாரம். சென்னை. உ.கோ. வைத்திலிங்கம். புதன்தோறும் வெளி

---

1. THE REFORMER

வந்தது. 1900இல் வாரம் இருமுறை வெளிவந்தது.

கூர்ம புராணம்

மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர் - கதிர்வேலு. 24 பக்கம். விலை 4 அணா. 1000 படிகள். 1884இல் பாளையங்கோட்டையில் ஒரு "கூர்ம புராணம்" வெளிவந்தது.

இந்திய மித்திரன்

வாரம். தஞ்சை. சனவரி 1இல் தொடக்கம். விற்பனை 100 படிகள்.

தென் இந்திய மித்திரன்

மாத மும்முறை. திண்டுக்கல். சனவரி 25இல் தொடங்கப்பட்டது. விற்பனை 600 படிகள்.

அக்கினி குலாதித்தன்

வாரம். சென்னை. முதல் இதழ் மார்ச்சு 25. விற்பனை 700 படிகள்.

வார வர்த்தமானி

வாரம். பொள்ளாச்சி. முதல் இதழ் மார்ச்சு 19. விற்பனை 450 படிகள். 1855இல் சென்னையில் "தின வர்த்தமானி" என்ற இதழும், 1897இல் பினாங்கில் (மலேசியா) "வர்த்தமானி" என்ற இதழும் வெளி வந்தன.

விக்டோரியா வைரவிழா இதழ்

"இதழ்" என்று பெயர் இருந்தாலும், இது இதழ் அல்ல. விக்டோரியா அரசியின் வைர விழா பற்றி சுப்பராயலு என்பவர் எழுதிய கட்டுரை களின் தொகுப்பு.[1]

உபநிசத் அர்த்த தீபிகை

மாதம். சென்னை. ஆசிரியர் - சிவன். முதல் இதழ் டிசம்பரில் வெளிவந்தது. 32 பக்கம். 500 படிகள். ஆண்டுக்கு ரூ. 3-8-0.

நித்தியானு சந்தானம்

காலாண்டு. சென்னை. ஆசிரியர் - சீனிவாசன். தமிழ். 28 பக்கம். விலை 3 அணா. 3000 படிகள். தமிழ் - ஆங்கிலம். 32 பக்கம். விலை 4 அணா. 1000 படிகள். கன்னடம் - ஆங்கிலம், தெலுங்கு - ஆங்கிலம் மொழிகளிலும் வெளிவந்தது.

நித்தியானு சந்தானம்

காலாண்டு. சென்னை. ஆசிரியர் - சீனிவாசன். தமிழ் - வடமொழி - ஆங்கிலம். 36 பக்கம். விலை 4 அணா. 1000 படிகள்.

நித்தியானு சந்தானம்

காலாண்டு. சென்னை. ஆசிரியர் - சீனிவாசன். தமிழ் - தெலுங்கு - வடமொழி. 28 பக்கம். விலை 3 அணா. 3000 படிகள்.

---

1. தமிழ் நூல் விவர அட்டவணை. (முதல் தொகுதி, நாலாம் பகுதி)

(ஒரே பெயர் என்றாலும், நூல் பதிவாளர் ஏட்டில், மூன்றும் தனித்தனியே பதிவாகியுள்ளன).

சுமிருதி முத்தா பாலா

மாதம். நடுக்காவிரி. ஆசிரியர் – சீனிவாசன். சுமிருதிகளை விளக்கும் வடமொழி இதழ். தமிழும் இடம் பெற்றது.

1898இல் பினாங்கில் "ஹாஸ்ய மஞ்சரி" என்ற பெயரில் ஓர் இதழ் வந்ததாகச் சொல்லப்படுவது உண்டு. ஆனால், அது இதழ் அல்ல, நூல். ஆசிரியர் – காதர் சாகிப்.

1899

சிறீமத் பகவத்கீதை கீதார்த்த சந்திரிகா

மாதம். சென்னை. ஆசிரியர் – எண்பது கவனர் லெட்சுமணன். பெப்ரவரியில் தொடங்கியது. தமிழ் – வடமொழி. 32 பக்கம். விலை 1 அணா 6 பைசா. விற்பனை 400 படிகள். தெலுங்கு – வடமொழியிலும் இதே பெயரில் தனியே வெளிவந்தது.

கிராம வியவகாரிணி

காலாண்டு. சித்தூர். விஜயராகவன். இவ்விதழ் இருபகுதியாக வெளிவந்தது. முற்பகுதியில் இலக்கியம், வேடிக்கை, விநோதம் இடம் பெற்றன. பிற்பகுதியில் கிராம நிர்வாகச் செய்திகள். கையொப்பம் ரூ.2-2-0. சனவரியில் தொடங்கியது. 90 பக்கம். 1000 படிகள்.

பண்டிதமித்திரன்

மாதம். சென்னை.

மதறாஸ் டெம்பரன்சு எரால்டு

மாதம். சென்னை. ஆசிரியர் – இமானுவேல். தமிழ் – ஆங்கிலம். முதல் இதழ் சூனில் வெளிவந்தது. 16 பக்கம். ஆண்டுக்கு ரூ. 1. 800 படிகள். இதே இதழ் 1909இல் சுந்தரத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

திராவிட கோகிலம்

காலாண்டு. யாழ்ப்பாணம். தமிழ் ஆங்கில இருமொழி இதழ். ஆசிரியர் – சதாசிவம். (1907இல் சென்னையில் இதே பெயரில் ஓர் இதழ் வந்தது)

விநாயகர் புராணம்

மாதம். சென்னை. விநாயகர் புராணம் 7 இதழாக வெளியிடப்பட்டது. ஆசிரியர் – இரத்தினவேலு. பெப்ரவரியில் தொடங்கியது. 96 பக்கம். விலை 4 அணா. 1000 படிகள்.

மாதர் மனோரஞ்சனி

மார்தம். சென்னை. ஆசிரியர் – இராமசாமி. "அந்தப்புரத் தமிழ் இதழ்" என்ற முழக்கத்துடன் வெளிவந்தது. அரசாங்கம் உதவிப்பணம் அளித்

"Registered" No. M—146.



THE TAMIL ZENANA MAGAZINE.

A Monthly Journal devoted to Female Education.

மாதர் மனோரஞ்சினி.

(என்றும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.)

VOL. 2. | MADRAS: SEPTEMBER 1900. | No. 7.
புஸ்த. உ. | சென்னப்பட்டணம்: 1900ஞூ செப்டம்பர். | இல. எ.

CONTENTS.

PAGE.

அட்டவணை.

பக்கம்.

PUBLISHED BY
C. S. RAMASWAMY IYER,
Triplicane, Madras.

இது இதழ் 2, மலர் 7. செப்டம்பர், 1900. (ஆக்சுபோர்டு பல்கலைக் கழக நூலகம்)

தது. விலை 2 அணா 6 பைசா. 16 பக்கம். விற்பனை 400 படிகள். முதல் இதழ் மார்ச்சு. கையொப்பம் : கனமான தாள் ரூ. 2-8-0. சாதா ரூ. 1-12-0. 1918இல் காரைக்குடியில் "மனோரஞ்சனி" என்ற மாத இதழ் வெளிவந்தது. ஆசிரியர் - செய்யூர் சார நாயகி. அதே ஆண்டில் சென்னையிலும் ஒரு "மனோரஞ்சனி" வெளிவந்தது. ஆசிரியர் - துரைசாமி.

சர்வ சன மித்திரன்

வாரம். கும்பகோணம். ஆசிரியர் - வைத்தியநாதன். உள்ளூர்ச் செய்தி இதழ்.

சென்னை மதுவிலக்குத் தூதன்

மாதம். சென்னை. ஆசிரியர் - தி. மானியல். தமிழில் முதல் மதுவிலக்கு இதழ். விற்பனை 500 படிகள். 1929இல் "விமோசனம்" என்ற மதுவிலக்கு இதழை இராஜாஜி நடத்தினார்.

வைத்திய சிந்தாமணி

மாதம். பெங்களூர். ஆசிரியர் - இராசகோபாலன். கன்னட இதழான இதில் மூலிகை - மருந்துகளின் பெயர்கள் தமிழிலும் தரப்பட்டன.

பாரிஜாதம்

வாரம். சென்னை. கல்வி இதழ். கையொப்பம் ரூ. 3. விற்பனை 1000 படிகள்.

இந்து மதாபிமானி

மாதம். கும்பகோணம். குடந்தை இந்து மதாபிமானி சங்க வெளியீடு. ஆசிரியர் - அதன் செயலர் சுந்தரராகவன். இதே பெயரில் 1896இல் சென்னையில் ஒரு வார இதழ் வெளிவந்தது.

பக்திசங்கிரகம்

மாதம். கும்பகோணம். ஆசிரியர் - சீனிவாசன். பக்தர்களின் வரலாறு தொடர்ந்து வெளியிடப்பட்டது. 16 பக்கம். விலை 6 பைசா. விற்பனை 1000படிகள்.

தட்சண தீபம்

வாரம். சேலம். முதல் இதழ் டிசம்பர் 30.

இந்து நேசன்

வாரம் இருமுறை. சென்னை. ஆசிரியர் - மு. வீரராகவன்.

க. சுப்பிரமணியமும், மு. வீரராகவனும் சேர்ந்து "இந்து" ஆங்கில இதழை நடத்தினார்கள். 1898 அக்டோபரில் "இந்து"வில் இருந்து க. சுப்பிரமணியம் விலகினார். அவர் தனது "சுதேசமித்திர"னில் சில நேரம் "இந்து"வை குறைகூறி எழுதினார். அதற்குப் பதில் அளிக்க "இந்து" நிர்வாகியாக நீடித்த மு. வீரராகவன் "இந்து நேசன்" இதழைத் தொடங்கினார். அப்படி ஒருமுறை கண்டித்து எழுதும்பொழுது, தனிப்பட்ட முறையில் சுப்பிரமணியம் பற்றித் தரக்குறைவாக எழுத, அவர் மான இழப்பு வழக்குத் தொடர, வீரராகவன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

1887இல் புதுவையிலும், 1888இல் பினாங்கிலும் இதே பெயரில் இதழ்கள் வெளிவந்தன.

பு-க.] ஜூன் க௯00. [இ-க.

ஜனப்பிரியன்.

மாதமொருமுறை வெளியாகும்.

பொருள் அட்டவணை.

Published by K. KRISHNASWAMI AIYAR. B.A.

PRINTER AND PUBLISHER.

Central Book Depot,

MADRAS.

வருஷத்துக்குச் சந்தா [தபாலகூலி யுள்பட] ரூபா. 2 4 0.

இது முதல் இதழ். ஜூன், 1900 (பிரிட்டிசு நூலகம்)

விஞ்ஞானோதயம்

மாதம். சென்னை. ஆசிரியர் - குப்புசாமி. 16 பக்கம். விலை 3 அணா. முதல் இதழ் மார்ச்சில் வெளிவந்தது. விற்பனை 500 படிகள்.

தமிழ் சனப் பத்திரிகை

மாதம். சென்னை. ஆசிரியர் - இராமசாமி. கையொப்பம் ரூ. 1-8-0. "சனப் பத்திரிகை" என்பதும், இவ்விதழும் ஒன்றா என்பது தெரியவில்லை.

தொடர்கதை இதழ்கள்

தமிழின் முதல் கலைக்களஞ்சியமான "அபிதான சிந்தாமணி" 1910இல் வெளிவந்தது. அதன் ஆசிரியரும், அச்சிட்டு வெளியிட்டவருமான ஆ. சிங்காரவேலு, 1899 ஆம் ஆண்டிலேயே அதன் சில பக்கங்களை அச்சிட்டு சிலருக்கு அனுப்பி வைத்தார். இதனைத் தமது முன்னுரையில், "இதனைச் சஞ்சிகை வாயிலாக வெளியிட ஓர் அறிக்கை பத்திரம் வெளியிட்டேன். அதன் பொருட்டுப் பலரிடம் கையொப்பம் கேட்டேன். அவர்கள் இது தொடர்ந்த கதையாயின் வாங்கலாமெனவும், சிலர் முற்றுறப் பல நாள் பிடிக்கும் எனவும், சிலர் கையொப்பமிட்டும் சென்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார். 1,050 பக்கமுள்ள இந்நூலை மாதாமாதம் சில பக்கமாக ஓர் இதழ் போலத் தொடர்ந்து வெளியிட அவர் முயற்சித்தது இதிலிருந்து தெரிகிறது. அது மட்டுமல்ல; அந்நாளில் சில தொடர்கதைகள் அப்படி மாதாமாதம் வெளிவந்ததும் புலப்படுகிறது. முதலில் இவர் சில மாதிரிப் பக்கங்களை அச்சிட்டு சிற்றேடாகப் பலருக்கும் அனுப்பிவைத்தார். அதனை "அறிக்கைப் பத்திரிகை" என்று இதே முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார்.

1900

வால்மீகி இராமாயண வசனம்

மாதம். சென்னை. ஆசிரியர் - சீனிவாச இராகவன். சூலையில் தொடக்கம். 20 பக்கம். விலை 3 அணா. 500 படிகள்.

இதே ஆசிரியர் இதே பெயரில் 1877இலிலும் இதழ் வெளியிட்டார். 1900 ஆம் ஆண்டிலும் நூல் பதிவாளர் ஏட்டில் 'முதல் இதழ்' என்று இவ்விதழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பூலோக வியாசன்

விவரம் இல்லை.

பெண் கல்வி

மாதம். சென்னை. ஆசிரியை - தாயாரம்மா. பாரதியார் "பெண்கள் சமத்துவக்கும்மி" என்ற பாட்டை மனைவி செல்லம்மாள் பெயரில் இவ்விதழில் (1916 சனவரி) எழுதியுள்ளார்.

ஜனப்பிரியன்

மாதம். சென்னை. ஆசிரியர் - க. கிருட்டினசாமி. கையொப்பம் ரூ. 2-4-0. முதல் இதழ் சூலையில் வெளிவந்தது. 32 பக்கம். 500 படிகள்.

கடவுள் துணை.

விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் வரு

புஸ்தகம் 1.] ஜனவரிமீ 1உ திங்கட்கிழமை. [No. 1

நமது கருத்து.

சர்வவல்லபமுடைய கடவுளருளால் இன்றையத்தினம் இப்பத்திரிகையை எழுதத் தொடங்குகின்றோம். இப்பத்திரிகையையும் இதை நேசிக்கும் பத்திரிகாபிமானிகளையும், சகல ஆபத்துக்களினின்றும் நீக்கி எல்லாச் சம்பத்துக்களுடன் நீடூழிவாழ்ந்துவரும்படி சர்வவல்லபராகிய கடவுள் கருணைபுரிவாராக.

எனைய பத்திராதிப சகோதரர்களுக்கு வந்தனங்கூறுகின்றோம். இப்பத்திரிகையின் முக்கியக்கோட்பாடென்னவெனில், மானிடர்களாகிய நாமனைவரும் இவ்வுலகத்தில் ஜீவிக்கிறவரையிலே சுகசரீரிகளாகவும், தனவான்களாகவும், புத்திரபௌத்திர சம்பன்னர்களாகவும், எவராலும் மதிக்கத்தக்க மேம்பாட்டினர்களாகவும், நிரம்பிய வித்வான்களாகவும், நுண்ணறிவினர்களாகவும் வாழ்ந்திருந்து, மேலுலகத்திலும் நித்யானந்தவாழ்வடைந்து சுகிப்பதற்குப் பலவழிகளைத் தேடிக்கொள்ளவேண்டுமென்பதே. இக்கோட்பாட்டை நிறைவேற்றுவதற்காக, வெகுநாள்தேடி அனேக அரிய நூல்களின் ஆராய்ச்சியாற்கண்டுணர்ந்த பலவேறுவகையான அபூர்வவிஷயங்களெவற்றையும் ஒருவாறுபாகுபடுத்தி, தற்காலம் இதனடியிற்குறித்த ஆறுவகைகட்குள்ளடக்கி, அவ்வவற்றிற்குரிய விஷயங்களை விவரமாய் எழுதிவருவதன்றியும் காலத்திற்குக்காலம் அதிகஉபயோகமான நூதனவிஷயங்களும் எழுதப்படும்.

முதல் இதழ்.சனவரி, 1900 (ரோசாமுத்தையா தொகுப்பு)

Registered No. M.—236.

கிராமாதிகாரி.

சென்னை இராஜதானியின் கிராமபரிபாலனம்
சீர்ப்படும்பொருட்டுப் பிரசுரிக்கப்படும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

நெ. 1] மணக்குடி:—1900-ஆகஸ்டு-மீ [புத். 1.

விஷயங்கள்.

பத்திராதிபர்,

S. கோதண்டபாணித் தஞ்சராயர்,

மணக்குடி, திருத்துறைப்பூண்டித்தாலூகா
தஞ்சாவூர்ஜில்லா.

கைபயாப்ப விபரம்:— வருஷம் 1-க்கு, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 3. இதரர்களுக்கு ரூ. 4. போஷகர்களுக்கு ரூ. 10.

Printed by:—T. B. Rengasami Pillay at the "Neelalochani Press" Negapatam, and Published by S. Kothandapani Thanjarayar
Manakudy, Tiruturaipundi Taluk, Tanjore District.

இது முதல் இதழ். ஆகஸ்டு, 1900 (பிரிட்டீசு நூலகம்)

Junuary 1917 Registered No. M. 163.

The Water of Life

ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து
ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.' யோவான் 7: 38.

Vol. XVIII ஜனுவரி 1917

A HAPPY NEW YEAR

1. Praise the Lord. கர்த்தர் நம்மேல் வைத்த மிகுந்த கிருபைக்
காக அவருக்கு ஸ்தோத்திரம். கடந்த வருஷத்திலே நமக்கு நேரிட்ட
அநேக வியாதிகளிலிருந்தும், மோசங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும்
நம்மைக் காத்து இம்மட்டும் சுகபத்திரமாய்க் கொண்டுவந்த சுத்த தயவுக்
காக அவருக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக. கடந்த வருஷத்திலே நம்
மோடிருந்த அநேக சகோதரர்கள் இப்பொழுது நம்முடைய மத்தியில்
இல்லை. அவர்களைப் பார்க்கிலும் நாம் நீதிமான்கள் என்று அல்ல; நாம்
இந்தப் புது வருஷத்திலாகிலும் குணப்படாதவர்கள் குணப்பட்டு,
பாவத்தில் குடிகொண்டிருக்கிறவர்கள் பாவத்தை விட்டு, ஆவியின் வளர்ச்சி
யில்லாதவர்கள் அதிகமதிகமாய் அவருக்குள் நெருங்கிய பரிசுத்த ஜீவியம்
பண்ணத்தக்கதாக அவர் நம்மேல் வைத்த நீடிய பொறுமையினாலும் மிகுந்த
கிருபையினாலும் நம்மை இம்மட்டும் உயிரோடே வைக்கச் சித்தங்கொண்டி
ருக்கிறார். அவருக்கே சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக.—ஆமென்.
'என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்
களையும் மறவாதே.'

2. Life is transitory. வருஷங்கள் கடந்துபோகிறதையும்
காலங்களின் பலவித மாறுதல்களையும் நாம் கவனிக்கும்போது, மனுஷனு
டைய ஆயுள் எவ்வளவு நிச்சயமற்றது என்பதைப் பார்க்கிறோம். நேற்று
இராவில் நம்மோடுகூட போஜனம்பண்ணின சகோதரன் இன்று காலையில்
மறைந்துபோகலாம். காட்டுப் புல்லாவது சில மணி நேரம் இருக்கும்

விநோத விசித்திரப் பத்திரிகை

மாதம். சென்னை. ஆசிரியர்கள்—அக்கீம் முகமது, நிசாமுதீன் சாகிபு. விகட இதழ். கையொப்பம் ரூ. 1.52 பக்கம். விற்பனை 3000 படிகள். முதல் இதழ் சனவரியில் வெளிவந்தது. "சர்வ வல்லமையுடைய கடவுளருளால் இன்றையத்தினம் இப்பத்திரிகையை எழுதத் தொடங்குகின்றோம். இப்பத்திரிகையையும் இதை நேசிக்கும் பத்திரிகாபிமானிகளையும் சகல ஆபத்துகளினின்றும் நீக்கி எல்லாச் சம்பத்துகளுடன் நீடூழி வாழ்ந்து வரும்படி சர்வ வல்லபராகிய கடவுள் கருணை புரிவாராக" என்று முதல் இதழின் முதல் பக்கம் தொடங்குகிறது.

கிராமாதிகாரி

மாதம். நாகை. ஆசிரியர் - தஞ்சை கோதண்டபாணி. ஆகஸ்டில் தொடக்கம். 32 பக்கம். ஆண்டுக்கு ரூ. 4. விற்பனை 1200 படிகள். (1903இல் "கிராமாதிகாரி கெசட்டு" என்ற பெயரில் ஓர் இதழ் வந்தது. ஆசிரியர் - பார்த்தசார்ரதி)

ஜீவரத்தம் சென்னை. ஆசிரியர் - இராமலிங்கம்.

ஜீவத்தண்ணீர்

மாதம். நெல்லை. ஆசிரியர் - இராவ்சாகிப் மறைத்திரு ஆசீர்வாதம். 1959இல் அவர் இறந்தபின்பு இவ்விதழ் "நற்போதக"த்துடன் இணைக் கப்பட்டது.

புதுவை நேசன்

புதுச்சேரி. சூனில் தொடங்கியது. விலை 6 பைசா. கையொப்பம் ரூ. 2-4-0. "பத்திரிகை வேண்டுவோர் "புதுவை நேசன்" மனேஜர் பொனனு. கனகசபைபிள்ளை பேருக்கு முன்பண மனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுவை விநோதன்

புதுச்சேரி.

முசுலிம் பாதுகாவலன்

வாரம். இலங்கை. ஆசிரியர் - ஐ.வே.ம. அப்துல் அசீசு.

இதகாரிணி

மாதம். சென்னை. ஆசிரியை - பண்டித விசாலாட்சி அம்மாள். ("லோகோபகாரி" ஆசிரியை)

சுதேச மித்திரன்

சனவரி 2 முதல் நாளிதழாக வெளிவரத் தொடங்கியது. ஆசிரியர் - க. சுப்பிரமணியம். விற்பனை 1050 படிகள்.

சென்னை தாரகை

வாரம். சென்னை. சனவரி 8இல் முதல் இதழ். விற்பனை 1000 படிகள்.

LIBERTÉ — ÉGALITÉ — FRATERNITÉ

REGISTERED Nº m-221

பத்திரிகை வேண்டுவோர் "புதுவைநேசன்" மானேஜர் பொன்னு - கணகசபையின்ன பேருக்கு முன்பணமனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

சந்தாவிபரம்.

புதுவைநேசன்

POUDOUVE NESSIN

சனிக்கிழமைதோறும் பிரசுரஞ்செய்யப்படும்.

புஸ்தகம்—க] , புதுவை 1900 ஆ நவம்பர் மீ 17 உ சார்வரி ஆடு கார்த்திகை மீ 3 உ சனிக்கிழமை [நெ.—24.



உ

கடவுளினை.

விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

ஆசிரிய விருத்தம்.

புதுவைநேசன்.

கோம்சேயில்ஜெனரால் கூட்டம்

செக்கிரத்தேர் வேலைகள்.

செக்ரேர்.

நிருவில் கொம்மிசியம்.

நிகோலஸ் கொம்மிசியம்.

மேற்படி கொம்மிசியத்திற்கு

பொதுவிஷயம்.

மலர் 1, இதழ் 24. நவம்பர் 17, 1900. (அரசு நூலகம், பாரிசு)

சக்கர வர்த்தினி

வாரம் மும்முறை. சென்னை. மார்ச் 1 முதல் வெளிவந்தது. (இதே பெயரில் 1905இல் சென்னையில் ஒரு மகளிர் மாத இதழ் வெளிவந்தது. ஆசிரியர் – நாட்டுக்கவி பாரதியார்.)

பை பத்திரிகை

வாரம் மும்முறை. பின்பு நாளிதழ். பிப்ரவரி 17இல் தொடங்கப் பட்டது. விற்பனை 500 படிகள். இதே இதழ் தெலுங்கில் "பை பேப்பர்" என்ற பெயரில் வெளிவந்தது. ஒரு பைசா (1/192 ரூபாய்) விலையில் வெளி வந்ததால், "பை பத்திரிகை" என்று பெயர் பெற்றது. 1907இல் சென்னை யில் "ஒரு பைசாத் தமிழன்" என்ற இதழ் வெளிவந்தது.

"தமிழ்ப்பொழில்" என்ற இதழில் ப. கலியாணசுந்தரம் என்பார் "தமிழ் பத்திரிகைகளின் வரலாறு" என்ற தொடர் கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் தாது ஆண்டு (1936) வைகாசி இதழில் (துணர் 12, மலர் 2) "பை பத்திரிகை" பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அது : "தென்னாப்பிரிக்காவில் போயருக்கும் ஆங்கிலேயருக்கும் பெரும் போர் மூண்டது.[1] இந்நாட்டில் உலாவிவரும் ஆங்கிலப் பத்திரிகைகளில் அப்போர் நிகழ்ச்சிகள் பெரிய கண்ணெழுத்துகளால் பொறிக்கப்பட்டு, மக்கள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தன. ஆங்கிலம் கல்லாத பொதுசனங்களும் போயர் யுத்தத்தைப் பற்றிய செய்திகளை அறிய ஆவலுற்றார்கள். காலணா விலையில் பல தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்தன. 'பை பத்திரிகை' என்ற பெயரோடு ஒரு பைசா விலைக்கும் ஒரு தினசரிப் பத்திரிகை சென்னையில் புறப்பட்டது."

புதுவை மித்திரன்

வாரம். புதுவை. அக்டோபர் 6இல் முதல் இதழ்.

சிவார்ச்சனா தீபிகை

மாதம். கும்பகோணம். ஆசிரியர் – சத்தியசதாசிவன். கையொப்பம் ரூ. 3. 28 பக்கம். 500 படிகள். டிசம்பரில் தொடங்கியது. தமிழ்–வடமொழி.

ஜந்து வர்த்தமான சாரம்

காலாண்டு. மாதம். ஆசிரியர் – திவான் பகதூர் கிருட்டினன். 18 பக்கம். விலை 12 அணா (ஆண்டுக்கு.) 300 படிகள். முதல் இதழ் டிசம்பர்.

யதார்த்தவசனி

வாரம். கும்பகோணம். ஆசிரியர் – உ. இரா. சாமிநாதன். விலை காலணா.

1. தென்னாப்பிரிக்காவில் குடியேறிய போயர்களான டச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே நடந்த 2ஆவது போர். 1899இல் தொடங்கி, 1902இல் முடிந்தது.

விவேகபாநு.

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

வால்யூம்—I

செப்டம்பர் 1900—ஆகஸ்டு 1901

பத்திராதிபர்,—வள்ளிநாயக சுவாமி.

திருநெல்வேலி

நூருல் இஸ்லாம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டுக்

குற்றாலம் அகஸ்தியர் ஆசிரமத்தி

பிரசுரிக்கப்படுகின்றது.

முதல் தொகுதி - செப்டம்பர், 1900 (உ. வே. சா. நூலகம்)



Registered No. M. 673.

EDITED BY PANDIT C. IYOTHEE THASS.

ஒரு பைசாத் தமிழன்

ONE PICE TAMILIAN

Vol. 1. | 23th June 1907 | No. 2.

"ஒரு பைசாத் தமிழன்" (மலர் 1, இதழ் 2. ஜூன் 23, 1907) உதவி: எம்.ஏ. முனுசாமி

திருக்குடந்தையை அடுத்த உமையாள்புரத்தில் 1884இல் ஆசிரியர் பிறந்தார். தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு செட்டிநாடு சென்று காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டத்தார் பலவன் குடியில் நடத்திய "சிவநேசன்" என்ற இதழுக்குத் துணையாசிரியராக இருந்தார். அதன் பின் குடந்தை திரும்பி, "யதார்த்தவசனி"யைத் தொடங் கினார். 1958இல் காலமானார்.

1878இல் இதே பெயரில் சென்னையில் ஒரு மாத இதழ் வெளிவந்தது. 1931இல் திருவரங்கத்தில் "யதார்த்த வசனீ என்ற ஒரு மாதாந்திரப் பத்திரிகை" வெளிவந்தது. ஆசிரியர் - வித்துவான் வங்கீபுரம் இராமா நுசன். "ரெங்கநாதனுடைய கோயில் விஷயங்களையெல்லாம் யதார்த்த மாக வெளியிடவும் சீர்திருத்தவுமே இப்பத்திரிகை வெளிவருகிறது" என்று அறிவித்துக் கொண்டது.

விவேக பாநு

மாதம். குற்றாலம். அகத்தியர் ஆசிரம வெளியீடு. ஆசிரியர் - வள்ளி நாயக அடிகள். இதே பெயரில் 1901இல் தூத்துக்குடியில் ஒரு மாத இத ழும், 1905இல் ஒரு மாத இதழும், 1928இல் ஒரு மாத இதழும் வெளிவந்தன.

பட்டினத்தார் புராணம்

மாதம். சென்னை. ஆசிரியர் - வடிவேலு. மே மாதம் தொடங்கப் பட்டது. 40 பக்கம். 1050 படிகள். 3 அணா.

தனி சுலோகம்

மாதம். சென்னை. ஆசிரியர் - பெரியவாச்சான் பிள்ளை. தமிழ் - வடமொழி. வால்மீகி இராமாயணப் பாடல்கள் உரையுடன் வெளிவந்தன. மார்ச்சில் தொடங்கியது. 40 பக்கம். விலை 3 அணா. விற்பனை 500 படிகள்.

சிறீமத் இராமாயணம் உரையுடன்

மாதம். சென்னை. ஆசிரியர் - சீனிவாச ராகவன். சூலையில் தொடங் கியது. 20 பக்கம். விலை 3 அணா. விற்பனை 500 படிகள்.

மாதர் இதோபதேசம்

திங்கள். சென்னை. பிரம்மசமாச வெளியீடு. பெண்களுக்கான அறிவு ரைகள் இடம்பெற்றன. *

1. இவ்விதழ் பற்றிய விவரம் கிடைக்கவில்லை.

6. விவரம் இல்லாத இதழ்கள்

கீழ்க்கண்ட இதழ்களும் 19ஆம் நூற்றாண்டில் வெளிவந்துள்ளன. எந்த ஆண்டில் என்ற விவரம் காண இயலவில்லை.

மயிலை சீனி. வெங்கடசாமி, "சோமலெ" ஆகியவர்களும் இத்தகைய பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அப்பட்டியலில் கொள்ளத்தக்கவற்றை விவரம் கண்டு, 19ஆம் நூற்றாண்டாக இருந்தால், இந்நூலில் சேர்த்துள்ளேன். 19ஆம் நூற்றாண்டு இல்லையென்றால், தள்ளிவிட்டேன். (அவர்கள் பட்டியலில் உள்ள "ஜனமித்திரன்" 1891இல் தஞ்சையில் வெளி வந்திருக்கிறது. ஆசிரியர் - நீலமேகம். "சுதேசி" 1904இல் சென்னையில் வாரம் இருமுறை செய்தி இதழாக வெளிவந்தது. ஆசிரியர் - சங்கர லிங்கம். "நேசன்" 1926இல் திருச்சியில் திங்கள் இருமுறை இதழாக வெளி வந்தது. ஆசிரியர் - பார்த்தசகன்.)

அதன் பின்னும் விவரம் காண இயலாத இதழ்களை மட்டுமே இங்கே கொடுக்கிறேன். ஆர்வம் உள்ளவர்கள் தேடிக் கண்டுபிடிப்பார்களாக! எனக்கும் தெரிவித்தால், நன்றியுள்ளவனாக இருப்பேன்.

சு(ய) தரிசிணி, கோவை

ஞானப்பிரகாசம், (யாழ்ப்பாணம். ஆசிரியர் - ஆ. சண்முகரத்தினம்)

தூதன், கோவை.

வித்தகம், (யாழ்ப்பாணம். ஆசிரியர் - பண்டித கந்தையா)

விவேகதிவாகரன், (யாழ்ப்பாணம்)

அத்துவைத விளக்கம், சென்னை.

முசுலீம் எரால்டு, சென்னை.

தத்துவசாதனி, சென்னை.

பாண்டியன் கிராணிகல், மதுரை.

ராணிகள், மதுரை (மகளிர் இதழ்)

சதர்ன் ஸ்டார், தஞ்சை

நசார்த்தமானி, விவேகசிந்தாமணி, (இரு இதழ்களும் வடக்கே வந்தன.)

வடார்க்காடு அபிமானி

ஜனமித்திரன் (நாகர்கோவில். ஆசிரியர் - சிவராசன்)

சைவ சூக்குமார்த்த போதினி, (மாதம். யாழ்ப்பாணம். ஆசிரியர் வேலணைகந்தன்.)

கிறிஸ்தோபகாரி, (யாழ்ப்பாணம்.)

சிவநேசன், காரைக்குடி. (ஆசிரியர் - உ. இரா. சாமிநாதன்.)

சம்சுல் அக்பர் சென்னை

7. நோக்கும் போக்கும்

19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள் எப்படி இருந்தன என்று சீர்தூக்கிப் பார்க்க அன்றைய இதழ்கள் அனைத்தும் இன்று நமக்குக் கிடைத்தில. 70-80 இதழ்களையே பார்க்க முடிகிறது. இவற்றிலும் படிக்கக்கூடிய பக்குவத்தில் இருக்கும் இதழ்கள் இன்னும் குறைவு. பல இதழ்கள் தொட்டாலே அப்பளம் போலப் பொடிந்து போகக்கூடியவை. தமிழ்நாட்டில் பார்க்கக் கிடைப்பவை 30-40 இதழ்களே. இந்த இதழ் களைக் கொண்டுதான் அந்நாளைய இதழ்களின் நோக்கையும் போக்கை யும் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும் அல்லவா?

அந்நாளைய இதழ்கள் எப்படி நடைபோட்டன, எந்தத் திசையில் சென்றன என்பதை ஒரே வரியில் சுருக்கமாகச் சொல்லிவிடமுடியும். "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" என்று வள்ளுவர் சொன்னாரே, அப்படி அன்றைய இதழ்கள் இருந்தன. "பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்றால்" அந்த இதழ்கள் மக்களுக்குப் பயன்பட்டன. தொட்டனைத்தூறும் மணற்கேணியாக, மக்களின் அறிவு வளர்ச்சியே அவற்றிற்கு நோக்கமாக இருந்தன. தொழிலாக அல்ல, ஆதாய நோக்க மற்றத் தொண்டாக இதழ்கள் நடத்தப்பட்டன. பொழுது போக்குக்காக அல்ல; புத்தி ஆக்கத்துக்காக இதழ்கள் உலா வந்தன.

1841இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்ட "உதயதாரகை" இதழ் தனது நோக்கமாகக் கூறுவது - "உதயதார்ரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான கல்வி, பயிர்ச் செய்கை, அரசாட்சி மார்க்கம் முதலான வையைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக் கப்படும்" ("உதயதாரகைப் பத்திரம்" என்று இருப்பது கவனிக்கத்தக்கது).

1895இல் வெளிவந்த "லோகோபகாரி" கூறுவது - "இந்த லோகோபகாரி என்னும் பத்திரிகை யாதொரு இலக்கணப் பிழையுமின்றி நல்ல தெளிவான செந்தமிழ் நடையில் ஒரு அக்ஷ்ரமேனும் பயனற்றதாயிராமல் அர்த்தபுஷ்டியும் - ஜனங்களுக்கு அவசியமான விஷயங்களும், இராஜாங்க சமாசாரங்களே முக்கியமாயிருக்கப் பெற்றதாயும், படிப்பவர்களுக்கு நன்னடக்கையும் லௌகீக யுக்தியும், பாஷா ஞானமும், சர்க்கார் விஷயங்களும், சிவில் கிரிமினல் விவகார ஞானமும், ஈசுவர பக்தியும் ஆழ்ந்த யோசனையும் உண்டாக்கக்கூடியதாய் இங்கிலீசும் தமிழும் நன்றாகக் கற்ற பண்டிதர்களால் நடத்தப்பட்டு, தமிழ் ஜில்லாக்கள்★ முழுவதும் ஜொலிக்கும்படியாயிருக்கும்".

"உலாவி"கள்

அந்நாளைய இதழ்களை "உலாவிகள்" (சஞ்சிகைகள்) என்று உரைத் தார்கள்.

"சஞ்சாரம்" என்பதில் இருந்து இந்த "சஞ்சிகை" என்பது தோன்றியது: "சஞ்சாரம்" என்றால், இயங்குதல் - உலாவுதல் என்றுதானே பொருள்?

புதிய இதழான "பிரபஞ்சமித்திரன்" பற்றி 1899 மார்ச்சு இதழில்

★ மாவட்டம்

எழுதிய "வித்தியாவர்த்தனி" இதழ். "இவ்வித பத்திரிகையொன்று நம் தமிழ் பாஷையில் உலாவி வருவது பெறுவதற்கரிய நற்பேறு என்றே சந்தேகமற நிர்ணயிக்கலானோம்" என்று குறிப்பிடுகிறது.

"யதார்த்தவதனீ என்ற ஒரு மாதாந்திரப் பத்திரிகை" (ஆசிரியர்: வித்துவான் வங்கீபுரம் இராமானுசன், திருவரங்கம்) "சிறீரங்கம் சிறீரங்கநாதனுடைய கோயில் விஷயங்களையெல்லாம் யதார்த்தமாக வெளியிடவும் சீர்திருத்தவுமே இப்பத்திரிகை வெளிவருகிறது" என்ற அறிவிப்புடன் 1931இல் வெளிவந்தது. அதன் இரண்டாம் இதழில் அவ்விதழ் பற்றி இரு தோழர்கள் பேசிக்கொள்கிறார்கள். அந்த உரையாடல் "மித்திரா! யதார்த்தவதனீ என்ற ஒரு பத்திரிகை சிறீரங்கம் என்ற நகரத்தில் உலாவுகின்றதே! அதைப்பார்த்தீர்களா?" என்று தொடங்குகிறது.

இவ்விதம் இதழ்கள் ஊரில் உலாவியதால் அவை "உலாவி"கள் என்று பெயர் பெற்றன.

செய்தித்தாள் அல்லாத இதழ்களை ஆங்கிலத்தில் "மேகசின்" என்று சொல்லுவது உண்டு. அதை ஒலி பெயர்த்து "மாசிகை" என்றும் தமிழ் இதழ்களைக் கூறினார்கள்.

மாசிகை, சஞ்சிகை இரண்டும் பின்பு "பத்திரிகை" ஆயின. சில காலம் செய்தி இதழ்களைப் 'பத்திரிகை' என்றும், மற்ற இதழ்களை "சஞ்சிகை" என்றும் சொன்னார்கள். கோப்பாய்சிவம் எழுதிய நூல் "இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஒரு கையேடு" (1985) என்று பெயர் பெற்றது.

முதலில், எழுதப்பட்ட அச்சிட்ட எல்லாமே "பத்திரிகை" என்றுதான் சொல்லப்பட்டது. விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை, இலக்கினப் பத்திரிகை, குசலப்பத்திரிகை, குற்றப்பத்திரிகை, காரியப்பத்திரிகை என்று எத்தனையோ பத்திரிகைகள். விளம்பரத்தைப் "பிரசித்த பத்திரிகை" என்றார்கள். வள்ளலாரின் "சங்கம் விளங்கும் காலம்" என்ற அறிக்கை, "பெருமான் திருக்கரத்தால் எழுதித் தந்த பிரதமப் பத்திரிகை" என்று சொல்லப்படுகிறது. திருவனந்தபுரம் பல்கலைக்கழக நூலகத்தில் "வீரபோக வசந்தராயர் மகத்துவப் பத்திரிகை" என்ற பெயரில் ஏடு ஒன்று இருக்கிறது.

1937இல் வெளிவந்த மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் "பத்திரிகை" என்பதற்குப் பின்வரும் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓலை, ஒற்றை, ஓலையுறுதி, திருமுகம், திருமணப்பத்திரிகை, விஷயப் பத்திரிகை. இன்றும் திருமண அழைப்பிதழை "விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை" என்றும், அழைப்பிதழ் கொடுப்பதை "பத்திரிகை வைத்தல்" என்றும் சொல்லும் வழக்கம் இருக்கிறது. "பத்திரிகை" என்பதற்கு செய்தித்தாள் என்ற பொருள் கடைசியாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும், செய்தித்தாளையே (விஷயப்பத்திரிகை) "பத்திரிகை" குறித்தது என்பதும் கவனிக்கத் தக்கவை.

இதே அகர முதலியில் "சஞ்சிகை" என்பதற்கு "மாதாமாதம் வெளிவரும் புத்தகம் அல்லது பத்திரிகையின் தொகுதி" என்று பொருள் தரப்பட்டுள்ளது. அந்நாளில் (1937 இல்) செய்தித்தாள்களை "பத்திரிகை"

என்றும், பருவ இதழ்களை "சஞ்சிகை" என்றும் குறிப்பிடும் வழக்கம் இருந்ததை இதுவும் உறுதிப்படுத்துகிறது.

ஆங்கிலத்தில் "செர்னல்" என்பது நூற்களையும் குறிக்கும். அதைப் பின்பற்றித் தமிழிலும் சில நூற்கள், "யேமல சாமி பத்திரிகை" (யேமல சாமி என்ற ஞானியின் அறிவுரைகள் அடங்கிய நூல் 1871), "பெற்றோர் களுக்காகப் பத்திரிகை" (பெற்றோர் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும் நூல் 1875), "வீரபோக வசந்தராயர் அவதரித்த கலியுகப் பிரஸ்தமான சாஸ்திரமாகிய சண்டமாருதப்பத்திரிகை 16-★ என்று பெயர் பெற்றன.

சில இதழ்கள் "மாதாந்த சட்டப்பத்திரிகை", "தமிழ் கல்விப் பத்திரிகை", "சஜ்ஜன பத்திரிகா" என்று தங்கள் பெயருடன் "பத்திரிகை" யும் சேர்த்துக் கொண்டன. கோவை "கலாநிதி", "கோயமுத்தூர் கலாநிதி மாதாந்தரச் சஞ்சிகை" என்று சொல்லப்பட்டது.

வடமொழிச் சொல்லான "பத்திரிகை" தான் பின்பு "இதழ்" என்று இனிய தமிழ் ஆயிற்று. "பத்திரிகை" (பத்ரம்) என்றால் இலை என்று பொருள். "இதழ்" என்பதோ மலரின் தாள்கள். பின்பு "பத்திரிகை" எப்படி "இதழ்" ஆயிற்று?

இதழ்கள் ஒன்றாக இருக்கும்பொழுது, "மலர்" என்கிறோம். தாள் தாளாக உதிர்ந்துவிட்டால், "இதழ்" என்போம். அந்நாளில் உதிர்ந்த தாள்களையே "இதழ்" என்றார்கள். 1875இல் சென்னையில் ஊ.புட்பரதம் என்பார் நெடுங்கணக்குகளை தாள் தாளாக அச்சிட்டு வெளியிட்டார். அவை "நெடுங்கணக்கு இதழ்கள்" என்று பெயர் பெற்றன. 1898இல் சுப்பராயலு என்பார் வெளியிட்டக் கட்டுரைகள் "விக்டோரியா வைரவிழா இதழ்கள்" என்று சொல்லப்பட்டன.

1937இல் வெளிவந்த மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் "இதழ்" என்பதற்குப் "பத்திரிகை" என்று பொருள் இல்லை; "புத்தகத்தின் தாள்" என்றே இருக்கிறது. அந்நாளில் இதழ்களும் தனித்தனித்தாளில் அச் சிட்டுச் சேர்க்கப்பட்டன. இதனால் அவையும் "இதழ்கள்" என்று பெயர் பெற்றன.

உதிர்ந்த இதழ்கள் "தாள் " என்று சொல்லப்பட்டன. வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் எழுதிய ஒரு நூல் "ஏகத்தாள் இதழ் அகல் அந்தாதி" (1889). இதழ்கள் (உதடுகள்) பொருந்தா எழுத்துகளால் ஆனது, இது.

அழகான பெயர்கள்

இன்றைக்குத் தமிழ் இதழ்களின் பெயர்கள் "டெரர்", "ஹரர்", "கோஸ்ட்" என்று எல்லாம் நம்மைப் பயமுறுத்துகின்றன. ஆனால், அன்றைக்கு அழகான அருமையான பொருள் நிறைந்த பெயர்களைச் சூட்டி னார்கள்.

தொடக்க நாளில் ஐரோப்பியரே தமிழ் இதழ்கள் தொடங்கி வழி காட்டியதால், "தமிழ் மேகசின்", "அரோரா" என்று ஆங்கிலத்தில் பெயர்கள் சூட்டப்பட்டன. தமிழ்ப்பெயர்களும் இருந்தன என்றாலும்,

★ காசுமீர் மன்னர் செய்சங்குவின் மகன் வீரபோக வசந்தராயர். இவரை திருமாலின் அவதாரமாகச் சொல்வதுண்டு. இந்நூல் 16 பாகம் கொண்டது. ஒவ்வொரு பாகமும் 5 பைசா. மதுரையில் வெளியிடப்பட்டது. வெளிவந்த ஆண்டு விவரம் இல்லை.

ஆங்கிலப் பெயர்களே வழக்கில் விளங்கின. இதனால் அவற்றின் தமிழ்ப் பெயர்கள்கூட வழக்கிழந்து, இன்று அறிய முடியாமலே அழிந்துவிட்டன.

ஆங்கிலப் பெயர்கள் அப்படியே தமிழ்ப்படுத்தப்பட்டன என்று சொல்ல முடியாது; தமிழ்ப் பெயர்கள் அப்படியே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன என்றும் கூற இயலாது. "சத்தியவர்த்தமானி"யின் ஆங்கிலப் பெயர், "ட்ரூ நியூஸ்" என்பது. இதனை, "சத்தியவர்த்தமானி" கிடைத்திராவிட்டால், "உண்மைச் செய்தி" என்றுதான் இன்று மொழி பெயர்ப்போம்! அல்லது "ட்ரூ நியூஸ்" என்ற ஆங்கிலப் பெயரையே பயன்படுத்திக் கொண்டிருப்போம். ஆங்கிலப் பெயர் அகப்பட்டு, தமிழ்ப் பெயர் கிடைக்காத பொழுது, இது ஆங்கில இதழா, தமிழ் இதழா என்ற மயக்கம்கூட ஏற்படுகிறது. தெளிவுபெற வேறு ஆதாரங்களைத் தேட வேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டின் முதல் தமிழ் இதழான "மாசத்தினச் சரிதை"யின் பெயரில் "இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்ற கோட்பாடு இருப்பதை முன்பே பார்த்தோம்.

செய்தித்தாள்கள் "வர்த்தமானி" என்று பெயர் சூட்டிக்கொண்டன.

மக்களுக்கு நண்பனாக விளங்கிய இதழ்கள், "மித்திரன்" ஆயின.

நல்ல கருத்துகளை எடுத்துச்சொல்லி அறிவுறுத்தியவை, "போதினி" கள்.

அறியாமை இருளகற்றி அறிவுச்சுடர் பரப்பியவை, "தீபிகை"கள்.

நாட்டுப்பற்றுக்கொண்டவை, "தேசாபிமானி"யாகவும், "நேசன்" ஆகவும் திகழ்ந்தன.

"லோகோபகாரிப் பத்திரிகை", "தமிழ்க்கல்விப் பத்திரிகை" என்று சில பத்திரிகைகளாக விளங்கின.

"சத்தியதூதன்", "விகடதூதன்" என்று சில இதழ்கள் தூது சென்றன.

"மனோரஞ்சனி", "சுஜனரஞ்சனி" என்று சில இதழ்கள் மக்களின் மனதுக்குப் பிடித்தவையாக விளங்கின.

"சு(ய)ஜன அபிமானி", "சு(ய)ஜன உல்லாசனி" என்று சில இதழ்கள் சொந்தம் கொண்டாடின.

"ஆரிய ஜனப்பிரியன்", "ஜனோபகாரி", "ஜனானுகூலன்", "சர்வஜன நேசன்" என்று சில இதழ்கள் மக்களுடன் உறவு உண்டாக்கிக்கொண்டன.

"சரசுவதி பீடாதிபதி வசந கிரந்தத்திற்கு மொழி பெயர்ப்பு", "ஆரம்பகாலம் முதல் உள்ள இந்திய சரித்திரம்", "பெரிய புராணம் உரையுடனும் விளக்கங்களுடனும்" என்பவையும் இதழ்களின் பெயர்களே!

"ஞானதீபம்" என்று ஒருவர் இதழ் தொடங்க, இன்னொருவர் அதற்குப் பதில் அளிக்க "ஞானதீப சங்காரம்" என்ற பெயரில் இதழ் தொடங்கியதும் உண்டு!

திரிசிரபுரம் தமிழ்ச்செல்வன், நாகை நீலலோசினி, குடந்தை மித்திரன், சேலம் தேசாபிமானி, திருவாங்கூர் அபிமானி என்று சில இதழ்கள் தாங்கள் பிறந்த ஊரையும் தங்கள் பெயருடன் சேர்த்துப் பெருமைப்படுத்தின.

"கந்தபுராணம்", "கூர்மபுராணம்" என்று சில இதழ்கள் புராணமாக இலங்கின.

ஒரே பெயரைப் பல இதழ்கள் சூட்டிக் கொண்டதும் உண்டு. ஒரே நேரத்தில் ஒரே பெயரில் இரு இதழ்கள் வெளிவந்ததும் உண்டு.

பெயர்களுக்கு மேலே உ சிவமயம், ஈசுவரமயம், பரமபதிதுணை, கடவுள் துணை, சுபமஸ்து, பிரமனே சரணம் என்றெல்லாம் சில இதழ்களில் காணப்படுகின்றன! பினாங்கு "உலகநேசன்" பெயருக்கு மேல் "பிஸ்மில்லா" இருக்கிறது.

பெயர்ப் போட்டிகள் பின்னாளில் வழக்குகளாகவும் மாறியுள்ளன. "ஆனந்த குணபோதினி" என்ற பெயரை எதிர்த்து, "ஆனந்த போதினி" வழக்குத் தொடர, "ஆனந்த குணபோதினி" தனது பெயரை "அமிர்தகுணபோதினி" என்று மாற்றிக்கொண்டது, பின்னாளைய வரலாறு ஆகும்.

பக்கங்கள்

இன்றைய "தினத்தந்தி"யை இரண்டாக மடித்த அளவில் அன்றைய செய்தித்தாள்கள் வெளிவந்தன. சாதாரணமாக 8 பக்கம் வரை இருந்தது. "திருவாங்கூர் அபிமானி" 24 பக்கத்துடன் வெளிவந்தது. ஒவ்வொரு பக்கமும் 3 அல்லது 4 பாத்தியாகப் பிரிக்கப்பட்டு, செய்திகள் வெளியிடப்பட்டன.

இன்றைய "ராணி", "குமுதம்", "கல்கி", "கலைமகள்" போன்று அன்றைய பருவ இதழ்களும் பல அளவுகளில் வெளிவந்தன. 16 பக்கம் முதல் 24 பக்கம் வரை இருந்தது. ஒரே பத்திதான். அகன்ற இதழ்கள் பக்கங்களை இரு பாத்தியாகப் பிரித்துக்கொண்டன.

பருவ இதழ்களின் பக்கங்கள் ஓர் ஆண்டுக்குத் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டன. முதல் இதழ் 24 ஆம் பக்கத்துடன் முடிந்தால், அடுத்த இதழ் 25 ஆம் பக்கத்துடன் தொடங்கும். ஓராண்டு இதழ்களை ஒரே கட்டிடமாகச் செய்து கொள்ள இது வசதி என்று கருதப்பட்டது. இதழ்களேகூட இப்படிக் கட்டிடம் செய்து விற்றன. ஓராண்டுக்குப் பொருளடக்கமும் சேர்க்கப்பட்டது.

விளம்பரங்கள் இறுதியில் சேர்க்கப்பட்டு, தனி பக்க எண்கள் கொடுக்கப்பட்டன. கட்டிடம் செய்யும்பொழுது விளம்பரங்கள் நீக்கப் பட்டன.

தொடர்கதை, தொடர் கட்டுரைகளுக்குத் தனி தொடர் எண் கொடுக்கப் பட்டது. முதல் அதிகாரம் 5 ஆம் பக்கத்தில் முடிந்தால், அடுத்த அதி காரம் 6 ஆம் பக்கத்தில் தொடங்கும். தொடர்களைத் தனியே எடுத்துக் கட்டிடம் செய்து கொள்ள இது வசதி என்று கருதப்பட்டது.

பக்கங்களிலும் மற்ற இடங்களிலும் க,உ.ங,சு (1,2,3,4) என்று தமிழ் எண்கள் பயன்படுத்தப்பட்டன.

அட்டை

இதழ்களின் அட்டையாக மெல்லிய வண்ணத்தாள் விளங்கியது. அட்டையை "மேல் போர்வை" என்று "ஜநவிநோதினி" குறிப்பிடுகிறது.

அட்டையில் இதழின் பெயர் (முதலில் ஆங்கிலத்தில் பிறகு தமிழில்) அச்சிடப்பட்டிருக்கும். இதழின் முத்திரையும், முழக்கமும் இருக்கும்.

விலையும் அச்சிடப்படும். சில இதழ்களில் அட்டையில் பொருளடக்கமும் காணப்படுகிறது. அதுவும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில்.

இதழ் வெளியாகும் நாளும் அட்டையில் அச்சிடப்பட்டது. ஆனால், தொடக்க நாளில் இதழ்களில் மலர் - இதழ் விவரம் இல்லை. பின்பு இலக்கம் - புத்தகம் என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் குறிப்பிட்டார்கள். "இலக்கம்" என்பதைச் சில இதழ்கள் "சம்புடம்" என்று குறிப்பிட்டன. "சம்புடம்" என்றால், 'சிறு செப்பு' என்று பொருள். இதழ்கள் அதைப் பயன்படுத்தத் தொடங்கியதும், "புத்தகப் பகுதி" என்றும் பொருள் ஏற்பட்டது.[1]

ஆண்டுக்கட்டிடம் செய்யும்பொழுது அட்டையை நீக்கிவிட்டார்கள். இன்று நமக்கு இந்தக் கட்டிடங்களே பெரும்பாலும் கிடைப்பதால், அட்டையைக் காண இயலவில்லை.

ஒரு ரூபாய்க்கு இருநூறு இதழ்கள்!

ஒரு ரூபாய்க்கு ஒரு மூட்டை (150 கிலோ) அரிசி விற்ற காலம், அது! இதழ்களின் விலையும் அப்படித்தான் இருந்தது.

ஒரு பைசா விலைக்குக்கூட இதழ்கள் விற்றன. அந்நாளில் ஒரு ரூபாய்க்கு 192 பைசா. அதாவது ஒரு ரூபாய்க்கு 200 இதழ் வாங்கலாம்!

1859இல் "தர்மப்பள்ளிபோதம்" என்ற மாத இதழ் வெளிவந்தது. அதன் விலை ஒரு பைசாதான்! ஆண்டுக் கையொப்பம் ஒரே ஓர் அணா! (ஒரு ரூபாய்க்கு 16 அணா. ஓர் அணாவுக்கு 12 பைசா).

(கல்கத்தாவில் 1870இல் வெளிவந்த "சுலப சமாசார்" என்ற இதழின் விலையும் ஒரு பைசாதான். "முதல் ஒரு பைசா இதழ்" என்று இதனை "இந்திய இதழ்களின் வரலாறு"[2] கூறுகிறது. இது தவறு. இந்தியாவின் முதல் ஒரு பைசா இதழ் "தர்மப்பள்ளிப்போதம்" என்ற தமிழ் இதழ்தான்).

1887இல் வெளிவந்த "சத்தியதூதன்" இதழும் ஒரு பைசாவுக்கு விற்பனை ஆயிற்று. அப்பொழுது தமிழில் அதிகம் (5000 படிகள்) விற்பனையான இதழ், இதுவே.

"சிறீலோக ரஞ்சனி அனுபந்தம்" (1887) என்ற திங்கள் இருமுறை இதழும் ஒரு பைசாவுக்கு விற்கப்பட்டது. நூறு இதழ் வாங்கினால், 6 அணா. அதாவது 72 பைசா. ஓரிதழ் முக்கால் பைசாவுக்கும் குறைவாக ஆகிறது!

1899இல் "பை பத்திரிகை" என்ற பெயரில் ஒரு நாளிதழ் வெளிவந்தது. (1907இல் "ஒரு பைசாத்தமிழன்" என்ற பெயரில் ஓரிதழ் வெளிவந்தது). "பாலியர் நேசன்" என்ற சிறுவர் திங்களிதழ் இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால், ஆண்டுக்குக் குறைந்தது 6 பைசா "காணிக்கை"யாகச் செலுத்த வேண்டும். இது குறித்து அவ்விதழின் 1910 மே இதழில் காணப்படும் ஓர் அறிவிப்பு,-

நோட்டீஸ்

திருநெல்வேலி பாலியர் வேதாகம ஐக்கியக் கூட்டத்துக் கிளைச் சங்கங்களுக்கு மாசந்தோறும் இலவசமாய் அனுப்பப்

---

1. மதுரைத் தமிழ்ப் பேரகராதி உ.ஏ.பி.சி. வெளியீடு - 1959

> படுகிற பாலியர் நேசன் என்னும் பத்திரிகை 6000 பிரிதிகள்[1] அச்சிடப் பட்டும் அவைகள் இப்போது இருக்கிற மெம்பர்கள் யாவருக்கும் கொடுக்கப்படப் போதுமானவைகளல்ல. கிளைச் சங்கங்களி லிருந்து வருஷாந்தரம் அனுப்பப்படும் காணிக்கை மேற்படி சங்கத்தின் மெம்பர்களுடைய எண்ணத்திற்கு சராசரி 6 பைக்குக் குறையுமானால் அப்படிப்பட்ட கிளைச் சங்கங் களுக்கு இலவசமாய் பாலியர் நேசன் அனுப்பப்படமாட்டாது".

ஆண்டுக்கு 6 பைசா என்றால், ஓரிதழ் அரைக்காசு ஆகிறது! அதாவது இன்றைய (1992) விலையில் ஒரு ரூபாய்க்கு 400 இதழ்!

1872இல் "அமிழ்த வசனி", "உண்மை விளக்கம்" ஆகிய இதழ்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்தியாவில் விலையின்றி இலவசமாகக் கொடுக்கப்பட்ட முதல் இதழ்கள், இவையே.

அந்நாளில் பொதுவாக இதழ்களின் விலை காலணா, அரையணா என்று இருந்தது. பிறகு அது ஓர் அணா, இரண்டு அணா என்று உயர்ந்தது. இந்தியா விடுதலை அடைந்த வரையிலும்கூட நாளிதழ்கள் ஓர் அணா விலையில்தான் விற்கப்பட்டன. பிறகு அது 10 புதிய காசு ஆயிற்று. "ராணி" வார இதழ் 1962இல் தொடங்கப்பட்டபொழுது அதன் விலை 13 காசுதான்.

பின்னாளில் வெளிவந்த "சமரசமும் கிராமக் கல்வியும்" (1933-மன்னார்குடி) என்ற இதழ், பண்டமாற்று முறையில் விற்கப்பட்டது. அந்த இதழுக்கு ஆண்டுக்கையொப்பம் 8 அணா. இது பற்றி அந்த இதழில் கீழ்க்கண்டவாறு அறிவித்திருந்தார்கள்.

> "மன்னார்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் தபால் செல வின்றி நேரில் கொடுக்கப்படும். கிராமங்களில் பணத்திற்குப் பதிலாகப் பெறுமான தானியம் வாங்கிக் கொள்ளப்படும்".

கையொப்பம்

இந்நாளில் போன்று அந்நாளில் இதழ்கள் கடைகளில் விற்கப்பட வில்லை. வாசகர்களுக்கு நேரடியாக அஞ்சலில் அனுப்பி வைக்கப் பட்டன. வாசகர்கள் கையொப்பக்காரர்களாகச் சேர்த்துக்கொள்ளப் பட் டார்கள்.

(சந்தா, சந்தாதார் என்பவற்றையே கையொப்பம், கையொப்பக்காரர் என்று அந்நாளில் நல்ல தமிழில் குறிப்பிட்டார்கள்).

இந்தக் கையொப்பம் - கையொப்பக்காரர்கள் பற்றித் தனி நூலே எழுதலாம். அவ்வளவு செய்திகள் உள்ளன. எத்தனையோ ஆசிரியர் களைக் கண்ணீர்விட்டு அழ வைத்திருக்கிறார்கள், இந்தக் கையொப்பக் காரர்கள்!

பல இதழ்களில் தனி இதழுக்கு விலையில்லை. கையொப்ப விவரமே காணப்படுகிறது. இந்தக் கையொப்பக்காரர்களை நம்பித்தான் இதழ்கள் வாழ்ந்தன. இவர்களாலேயே இதழ்கள் வீழ்ந்தன.

கையொப்பக்காரர்களைக் கவர்வதில் இதழ்கள் இடையே கடுமையான போட்டியிருந்தது. கையொப்பம் செலுத்துகிறவர்களுக்குப் பரிசுகள்

---

1. 'பிரிதிகள்' என்றே இருக்கிறது.

வழங்கப்பட்டன. பத்து கையொப்பக்காரர்களைச் சேர்த்து அனுப்புகிற வர்களுக்கு ஓர் இதழ் இலவசமாகக் கொடுக்கப்பட்டது. மாதிரி இதழ்கள் இலவசமாக அனுப்பப்பட்டன. "விலையுடை அஞ்சல் கட்டு" (வி.பி.பி.) முறையில் இதழ்களை அனுப்பிக் கையொப்பக்காரர்களைச் சேர்க்கும் வழக்கமும் இருந்தது. பின்னாளில் கையொப்பக்காரர்களைச் சேர்க்கத் "திராவிடன்" இதழ் தொண்டர்பட்டை அமைத்திருந்தது. "லோகோபகாரி பத்திரிகை" கையொப்பக்காரர்களுக்குத் திருமணச் செலவுக்குப் பணம் கொடுத்தது.

இதழ்கள் சாதாத் தாளிலும், கெட்டித் தாளிலும் அச்சிடப்பட்டன. அதற்கு ஏற்பக் கையொப்பக்கட்டணம் இருந்தது. "மாதர் மனோரஞ்சனி" ஆண்டுக்கையொப்பம், சாதாரணத்தாள் 5 அணா 6 பைசா; கெட்டித்தாள் 7 அணா 6 பைசா.

"சுகுணபோதினி" என்ற மகளிர் கல்வி இதழின் ஆண்டுக் கையொப்பம் ஆசிரியைகளுக்கு 2 ரூபாய் 8 அணா. மற்றவர்களுக்கு 3 ரூபாய் 8 அணா.

"தினவர்த்தமானி" ஆண்டுக்கையொப்பம் தமிழர்களுக்கு ரூ. 3, ஐரோப் பியருக்கு ரூ. 5.

பின்னாளில் "இந்தியா" இதழுக்குப் பாரதியார் வைத்திருந்த கையொப்பக்கட்டணம், இதழியல் வரலாற்றில் இடம்பெற்ற ஒன்று. அது அரசுக்கு ரூ. 50, அரசர்கள், சமீன்தார்கள் ரூ. 30. மாதம் ரூ. 250க்குமேல் வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 15. மற்றவர்களுக்கு ரூ. 3.

அந்நாளில் இதழ்கள் அனுப்ப அஞ்சல் கட்டணமும் குறைவாக இருந்தது. 20 "தர்மப்பள்ளிப்போதம்" அனுப்ப ஓர் அணா அஞ்சல் தலை போதுமானதாக இருந்தது. அதே ஓர் அணா அஞ்சல் தலையில் "சுவிசேச பிரபல்ய விளக்கம்" இதழ் ("கல்கி" அளவு - 12 பக்கம்) 25 படிகள் அனுப்ப முடிந்தது.

கையொப்பத் தொகையை அஞ்சல் தலையாக அனுப்பவும் வசதி இருந்தது. "அப்படிக்கு அனுப்பும் பக்ஷத்தில் ரூ. 1க்கு வட்டம் அணா 1 சேர்த்து அனுப்ப வேண்டியது" என்று "கலாவர்த்தினி" (15.11.1899) கூறுகிறது.

கையொப்பத் தொகையை யாருக்கு அனுப்புவது? அதே "கலா வர்த்தினி" - "இப்பத்திரிகை மாசத்திற்கு ஒன்றாகப் பிரசுரம் செய்யப் படும். இதை வாங்க வேண்டியவர்கள் சென்னைப்பட்டணம் முத்தியாலு பேட்டை தம்பு செட்டியார் வீதியில் காளியம்மை கோயிலுக்குத் தென் புறம், 65 ஆவது கதவிலக்கமுள்ள வீட்டிற்காவது, ஷை பேட்டையில் செம்புதாசு தெருவில் 67 ஆவது கதவிலக்கமுள்ள கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்காவது கலாவர்த்தந சபா காரியதரிசியாகிய ஊ.புஷ்பரத செட்டியார் பேரால் கடிதம் அனுப்ப வேண்டியது".

"வித்தியாவர்த்தமானி" ஆதரவாளர் கட்டணம் என்று ரூ. 3 வைத் திருந்தது. (கையொப்பம் ரூ. 1-8-0).

இதழை முன்கூட்டியே அனுப்பிவிட்டு, கையொப்பத் தொகையைப் பின்பு வாங்கிக் கொள்ளும் வழக்கமும் இருந்தது. அப்படி வாங்கும்பொழுது "திருவாங்கூர் அபிமானி" வட்டி வாங்கியிருக்கிறது!



ஆண்டாள் ஓவியம் (மரச்செதுக்கு.

(“குரு பரம்பரா பிரபாவம்” –*1878* உதவி: மா. சரவணன், திருச்சி.)

அதன் 20.2.1886 இதழில், "மூன்று மாசத்துக்குப் பின் பணம் கொடுக்கிறவர்கள் கால் ரூபாயும், ஆறு மாசத்துக்குப்பின் அரை ரூபாயும், ஒரு வருசத்துக்குப் பின் ஒரு ரூபாயும் கூட்டிச்செலுத்தவேண்டும்" என்ற அறிவிப்பு இருக்கிறது.

அந்நாளில் இலங்கை, மலாயா, சிங்கப்பூர், பர்மா முதலிய நாடுகளுக்கும் தமிழ்நாட்டில் இருந்து இதழ்கள் நிறையச் சென்றன. சிறிய அளவில் தென் ஆப்பிரிக்கா, மொரிசுத் தீவு முதலிய இடங்களுக்கும் அனுப்பப்பட்டன. இவற்றுக்குத் தனிக் கையொப்பக் கட்டணம் இருந்தது.

உள்ளூர், வெளிநாட்டுக் கையொப்ப விவரங்களை **"பத்திரிகைக்கிரய வரலாறு"** என்ற தலைப்பில் "இந்து நேசன்" என்ற பினாங்கு இதழ் வெளியிட்டது.

திருவாங்கூர் மன்னர் ஆளுகையில் இருந்த நாகர்கோவிலிலிருந்து வெளிவந்த **"திருவாங்கூர் அபிமானி"**யின் விலை 2 அணா. ஆண்டுக் கையொப்பம் 2 ரூபாய் 8 அணா. இதுவே இலங்கைக்கு 4 ரூபாய் 12 அணா. உள்நாட்டில் பிரிட்டீசு தபால்கூலி உட்பட ஒரு ரூபாய் 10 அணா. "அஞ்சல்கூலி உட்பட ஒரு ரூபாய் 12 அணா 9 பைசா" என்று ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. "தபால்"தானே அஞ்சல்? அல்லது, "அஞ்சல்" என்பது வேறா? ஆராய்ச்சிக்கு உரிய ஒன்று, இது.

"உலகநேசன்" (1887 - பினாங்கு) என்ற இதழ் வெளியூர்களில் விற்பனையாளர்களை நியமித்தது. அவர்களை **"முகாமைக்காரர்கள்"** என்று விளம்பரப்படுத்தியது. கடல் கடந்து காரைக்காலிலும் (தமிழ்நாடு) முகாமைக்காரர் இருந்தார். இவர்களிடமே கையொப்பம் செலுத்தி, இதழ் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கையொப்பக்காரர்களுக்கு "விளம்பரம்" என்ற தலைப்பில் **"உலக நேசன்"** (28.3.1887) விடுத்த வேண்டுகோள் :

> "இப்பினாங்குவாசிகளாகிய மஹான்களே இப்பத்திரிகையை யாம் வெளியிட முயன்ற காலத்தே, கையொப்பஞ் சேர்க்க முயன்றுஞ் சில வேலைத் தொந்தரையின் காரணம் பற்றி சிலரிடங் கையொப்பம் வாங்கியும் பலரிடம் வாங்காமலும் போன போதிலுந்தங்களுள் ளொவ்வருக்கு மெம்பத்திரிகையை முறையாகச் சேர்ப்பிக்கும்படி நமது வேலைக்காரருக்கு யாம் கட்டளையிட்டிருக்கின்றோம். கனவான்களே! தயைகூர்ந்தங்கீ கரிக்க வேண்டுகின்றோம்".

"பிரம்மவித்தியா" 1891 செப்டம்பர் 1 இதழில் வந்த வாசகர் அஞ்சல் ஒன்று, அந்நாளைய கையொப்பக்காரர்களின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது -

மனிதரன்று மற்ற ஜன்மமே

> இங்கிலாந்து முதலிய தேசங்கள் சகலவளங்களின் மேன்மை படைத்திருப்பதுபோலச் சாமாசாரப் பத்திரிகை களிலும் மேன்மை யடைந்திருக்கின்றதென்பது யாவரும் உணர்ந்த உண்மையான விஷயம். இந்து தேசமோ அதற்கு எதிர்மறை ஸ்தானத்திலிருந்து எல்லா வளங்களுங் குறைந்

திருத்தலோடு பத்திரிகை விஷயத்திலும் மிகக்குறைந்து அத்தேசத்தார் இகழ்ச்சி பண்ணத்தக்க நிலைமையிலிருக்கிறது. இந்த இகழ்ச்சி இந்து தேசவாசிகள் தலைமேல்தான் ஏறி நிற்கிறது. எவ்வளவு இகழ்ச்சி நேரிட்டாலும் எவ்வளவு இகழ்ந்து பரிகசித்தாலும் நமது தேசத்தாருக்குச் சற்றும் உறைக்காது. இவ்வளவு ஈன நிலைமையி லிருக்கும்போதே பத்திராதிபர் தங்களுக்குந் தெரியாமல் தவறுதலா யெழுதி அடிக்கடி பிடிபடுகின்றார்கள். பிடிபட்டு அபராதமும் இறுக் கின்றார்கள். சிறைச்சாலைக்குஞ் செல்லுகின்றார்கள். பத்தி ராதிபர் நமது தேச மதங்களைக் காக்கத் துவஜங்கட்டிக் கொண்டு பாடுபடுகின்றார்கள். அவர்களுக்கு வந்த ஆபத்து நமக்கு வந்தது போலவேயாம். அவர்களுக்கு நீதிப்படி எந் தெந்த விதத்தாலுதவி செய்யக்கூடுமோ அந்தந்த விதத்தி னாலெல்லாம் உதவி செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யா விடில் தேசாபிமான மதாபிமான மிருக்கிறதாகச் சொல்ல வொண்ணாது. "தேசாபிமான மதாபிமானமிருப்பதாய் எவரும் நம்மைச் சொல்ல வேண்டாம். நமது பொருளை யொருவர்க்குக் கொடுப்பானேன். நமது காலத்தை யொருவருக்குச் செலவழிப் பானேன், நமது புத்தியை யொருவர்க்கு இழப்பானேன், நமது வாக்கை யொருவர்க்கு உபயோகப்படுத்துவானேன், நமது லாபத்திற்காகப் படும் சரீரபிரயாசையை யொருவருக்குத் தருவானேன், எல்லாம் நம் சொந்த இலாபத்தின் பொருட்டே படுவோ மென்னில் இப்படிப்பட்ட வொதியமரம் போன்றாரைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை. மற்றப் பரோபகாரி களுக்குச் சொல்லுகிறோம். நமக்குக் கவர்ன்மெண்டார் வாயிலா கவாவது கவர்மெண்டு உத்தியோகஸ்தர் வாயிலாகவாவது திருடர்களாலாவது இடையூறு நேரிட்டால், அதை வெளிப் படுத்தி அதனால் நேரிடும் இடையூறுகளைக் காட்டி அவ்வி டையூறுகளை நீக்கி வைப்பவர் பத்திராதிபர் என்றும், பத்திராதிபரது வேலை ஜனங்களுக்கு நன்மை செய்வதே அன்றிக் கவர்ன்மெண்டுக்கும் குடிமக்களுக்குமிடையில் நின்று நட்பையுண்டாக்கிக் குற்றங்குறைகளை நீக்கி இரண்டுபக்கத்துக் கும் துன்பத்தை நீக்கிச் சுகத்தையுண்டாக்குவதே. இப்படிப்பட்ட பத்திராதிபரை நாம் தங்கத் தட்டிலேந்திக் காக்கவேண்டும். நம் தேசத்தார் அவ்வாறு செய்யாவிட்டாலும் பத்திராதிபர்க் குச் சேர வேண்டிய பணத்தையாவது கொடுத்துவிட்டால் பத் திராதிபரைத் தங்கத் தட்டிலேந்திக் காத்தமை போலும். அவ் வாறு பணத்தைச் சரியாய்க் கொடுக்கின்றா ரில்லையே; நிற்க,

இப்போது இந்தியாவில் சிறந்த சுதேசபாஷா பத்திரிகையான பங்கபாசி பத்திரிகையானது கவர்ன்மெண்டார் பேரில் ஜனங் களுக்கு அதிருப்தியுண்டாக்க ஏதோ அவதூறாகப் பேசியதாகப் பிராஸிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவோ சாக்கி ரதையா யெழுதவேண்டியிருக்கிறது. குடிகளும் சுகப்பட

வேண்டும்; கவர்ன்மெண்டுக்கும் விரோதமிருக்கப்படாது. பத்திராதிபராயிருப்பது நெருப்பாற்றில் மயிர்ப்பாலத்தின் பேரிலேறுவது போலாம். இவ்வளவு கஷ்டத்தோடு பிரசுரிக்கும் பத்திராதிபர் பணத்தை வாயில் போட்டுக் கொள்ளுகிறவர்கள் மனித ராயினும் மனிதரன்று; மற்ற ஜன்மமேயாம்.

பத்திராதிபர் பணத்தை
வாயிற்போட்டுக்கொள்ளாதவன்

அந்நாளில் இதுபோன்ற புனைப்பெயரில் ஆசிரியருக்கு அஞ்சல் எழுதுவதே வழக்கம்!

பன்மொழி இதழ்கள்

தொடக்கக் காலத்தில் கிறித்துவ சமயத்தார் நடத்திய இதழ்களில் தமிழும் ஆங்கிலமும் இடம்பெற்றன. இருமொழி இதழாகவே பல இதழ்கள் வெளிவந்தன.

இந்துக்கள் நடத்திய சில இதழ்களில் தமிழ் - வடமொழி, தமிழ் - தெலுங்கு என்று இரு மொழிகள் இடம்பெற்றன. தமிழ் - தெலுங்கு - வடமொழி என்று மும்மொழி இடம் பெற்ற இதழ்களும் இருக்கின்றன.

புதுவையில் இருந்து வெளிவந்த சில இதழ்கள் தமிழ் - பிரெஞ்சு ஆகிய இருமொழி இதழ்களாக இருந்தன.

அந்நாளில் ஐரோப்பியரும் தமிழ் இதழ்களை விரும்பிப் படித்தார்கள். அவர்களுக்கு வசதியாகத் தமிழுடன் ஆங்கிலமும் சேர்க்கப்பட்டது. கிறித்துவ சமய இதழ்களின் ஆசிரியர்களாகவும் ஐரோப்பியரே இருந்தனர். இதனாலும் இருமொழி தேவைப்பட்டது. இந்து சமயக் கருத்துகளைச் சொல்லத் தமிழ் - வடமொழி தேவைப்பட்டன.

சமய இதழ்கள்

கிறித்துவ சமயத்தார்தான் முதன் முதலில் தமிழ் இதழ்களைத் தொடங்கினார்கள். அமெரிக்கத் திருச்சபை, லூத்ரன் திருச்சபை, இங்கிலாந்துத் திருச்சபை என்று அவர்கள் பல பிரிவினராக இருந்தார்கள். ஒவ்வொரு பிரிவினரும் இதழ்கள் நடத்தினார்கள். சமயப் பிரசாரம் முதலிடம் பெற்றாலும், கல்வியிலும் அவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

மதுரையில் அமெரிக்கத் திருச்சபை நடத்திய "சத்திய வர்த்தமானி" என்ற இதழ், மக்கள் கருத்துகளை அரசுக்கு எடுத்துரைப்பதிலும் சிறந்து விளங்கியது. அரசின் தாய்மொழி செய்தித்தாள் அறிக்கை முழுக்க இந்த இதழைக் காண முடிகிறது. அதன் 15.9.1874 வெளியீட்டில் மதுரை, திண்டுக்கல் நகரசபை அதிகாரிகள் சரியில்லை என்று கண்டித்துத் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. 1.7.1879 வெளியீட்டில் வெளியான ஒரு வாசகர் அஞ்சல், "மைல் கற்கள் ஆங்கிலத்தில் உள்ளன. ஆங்கிலம் அறியாதவர்களுக்குப் பயனில்லை. இதற்காகவா மக்கள் சாலை வரி தருகிறார்கள்?" என்று இடித்துக் கேட்கிறது.

கிறித்துவர்களைப் பார்த்து இந்துக்களும் தங்களுக்கு இதழ்கள் தேவையென்று உணர்ந்து தொடங்கினார்கள். இந்துக்கடவுள்கள், மறைகள், புராணங்களைக் குறைகூறிய கிறித்துவர்களுக்குப் பதில்

அளிக்கவும் இந்துக்களுக்கு இதழ்கள் தேவைப்பட்டன. 1864இல் வெளிவந்த "தத்துவ போதினி"தான் முதல் இந்து சமய இதழ்.

1869இல் இலங்கையில் வெளிவந்த "அகமத் இலங்காதுரை" என்ற இதழ் தமிழில் வெளிவந்த முதல் இசுலாமிய இதழ். 1887 அல்லது அதற்கு ஓரிரு ஆண்டுக்கு முன் பினாங்கில் வெளி வந்த "முசுலீம் விளக்கம்" என்ற இதழ் பற்றி இப்பொழுது விவரம் கிடைக்கவில்லை 1888இல் கொழும்புவில் வெளிவந்த "முசுலீம் நேசன்"இதழ் தனிச் சிறப்புடையது.

சமய இதழ்களைத் தொடர்ந்து சாதி இதழ்கள் தோன்றின. உலகில் வேறு எங்கும் இல்லாத ஒன்று அல்லவா, இந்த சாதி? எனவே, சாதி இதழ்கள் தமிழ்நாட்டுக்கே உரியவை. தமிழ் இதழியல் வளர்ச்சியில் சாதி இதழ்களுக்கும் பங்கு உண்டு. நூற்றுக்கணக்கான சாதிகள்! சாதிக்கு ஓரிரு இதழ்கள்!! எனவே, இதழியல் வளர்ச்சியில் சாதி இதழ்களின் பங்கைக் குறைத்து மதிப்பிட முடியாது. 1889இல் வெளிவந்த "சான்றோர் குல தீபம்" சாதி இதழ்களைத் தொடங்கி வைத்தது.

1869இல் வெளிவந்த "சூரியோதயம்" தான் ஆதி தமிழரின் முதல் இதழ்.

சமய இதழ்களுக்கு ம்க்களிடம் அவ்வளவாக ஆதரவு இருக்கவில்லை. சமயக்கட்டுரைகளை அதிக அளவில் புகுத்தியதால் "தமிழ் மேகசின்" இதழின் விற்பனை வீழ்ச்சி அடைந்ததை ஜான் மர்டாக் குறிப்பிட்டுள்ளதை ஏற்கனவே பார்த்தோம். அரசு அறிக்கை ஒன்றும் இதை உறுதிப்படுத்துகிறது. சென்னை மாநில அரசு கல்வித்துறை 12.6.1874 ஆம் நாளைய அறிக்கை ஒன்றில், 1873 ஆம் ஆண்டில் வெளிவந்த நூற்கள், இதழ்கள் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 1872இல் 38 பருவ இதழ்கள் வெளிவர, 1873இல் 22 பருவ இதழ்களே வெளிவந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. "சிறிய சமயத் திங்கள் இதழ்கள் நின்று விட்டதால், எண்ணிக்கை குறைந்துவிட்டது" என்று அதற்குக் காரணமும் கூறப்பட்டிருக்கிறது.

சமய இதழ்களின் ஒரு சிறப்பு அம்சம், வாதப்பிரதிவாதம், இந்து - கிறித்துவ கருத்துகள் இடையே மோதல் நடந்தது. இந்துக்களிலும் சைவ - வைணவப் பிரிவுகள் இடையே பெரும் போர். இதன் இடையே சமயச் சீர்திருத்த இதழ்களும் தோன்றின.

காரைக்காலில் வெளிவந்த "இந்தியா விகடவிநோதன்" என்ற வார இதழ் (1888), "சமயக் குதர்க்க லிகிதங்களை காண்டிடில் கண்புதைத்து அகற்றப்படும்" என்று அறிவித்திருந்தது.

செய்தி இதழ்கள்

தமிழின் முதல் இரு இதழ்களே ("அரசாங்க வர்த்தமானி", "மாசத் தினச்சரிதை") செய்தி இதழ்கள்தான் என்றாலும், செய்தி இதழ்களின் வளர்ச்சி மெதுவாகத்தான் இருந்தது. சென்னை மாநில அரசு கல்வித் துறையின் 14.3.1867 ஆம் நாளைய அறிக்கை ஒன்று, தமிழில் வெளிவரும் செய்தித்தாள்கள் என்று தினவர்த்தமானி, தத்துவபோதினி இரண்டையும்

குறிப்பிடுகிறது. 1874இல் "சத்தியவர்த்தமானி", "சுதேசபூசணி", "தினவர்த்த மானி", "வெற்றிக்கொடியோன்" ஆகிய செய்தித்தாள்கள் அரசாங்கத்தின் பார்வைக்கு வந்துள்ளன.

செய்தித்தாள் அல்லாத இதழ்களும், "வர்த்தமான சமாசாரம்" என்ற தலைப்பில் செய்திகளைத் தொகுத்துக் கொடுத்தன.

அந்நாளையச் செய்திகள் எப்படி இருந்தன என்று ஒன்றிரண்டு பார்க்கலாமா?

சுதேசமித்திரன் (9.8.1886)

சென்னை மகாஜன சபை

மேற்படி மகாசபை இவ்விராச்சியத்து ஜனங்களின் க்ஷேமத்தை விர்த்தி செய்யும் பொருட்டு இப்பட்டணத்து பல பெரிய மனுஷர்கூடி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அச்சபையார் இத்தேசத்து பற்பல விஷயங்களைப்பற்றி கவர்மெண்டாருக்கும், ஆங்கிலேய நாட்டு பார்லிமெண்டு மெம்பர்களுக்கும் மகஜர்க ளனுப்பி வருகிறார்கள். இச்சபையில் எல்லா வித்தகர்களும், மிராசுதார்களும், வக்கீல்களும் சேரலாம். அப்படி இதில் சேர விரும்புவோர் சபையின் காரியதரிசிகளுக்கு காயிதம் கார்டில் எழுதலாம். இச்சபையார் செலவில் எல்லா கிரந்தங்களும் அவர்களுக்கு அவ்வப்போது அனுப்பப்படும்.

திருவாங்கூர் அபிமானி (20.2.1884)

இந்நாட்டு வர்த்தமானம்.

திருவனந்தபுரம் காலேஜின் புரொபெஸராகிய மேஸ்தர்றாஸ் துரையவர்கள் இம்மாதம் 10 ஆம் தேதி கோட்டாறு ஹைஸ்கூலில் சென்று கனம் டதி அம்மாளவர்கள் வழியாய் மாணாக்கருக்கு பரிசு கொடுத்து திருவனந்தபுரம் ஏகினார்.

இந்திய ஓசை (4.8.1888)

மின் தபால்

மெல்போர்ன் ஜூலை மீ 27உ - மெல்போர்ன் நகரத்தில் பிரசுரமான பட்ஜெட்டில் வருகிற ஜனவரி மீ 1உ தொடங்கி மேற்படியூரில் தேயிலையின் மீது விதித்திருக்கும் வரியினை ஒரு பென்னியாகக் குறைத்து விட்டிருக்கிறது. காபிக்கொட்டை மீது விதித்திருந்த வரியை முழுமையும் எடுத்துவிட்டது.

தந்தி வழியில் வந்த செய்திகளை "மின் தபால்" குறிக்கிறது. இதுபற்றிய ஒரு செய்தி 9.8.1886 "சுதேசமித்திர"னில் "சமாசாரக்குறிப்பு" என்ற தொகுப்பில் காணப்படுகிறது. அது "நாளது சூலை மாதம் முதல் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கனுப்பப்படும் மின் தபால்கூலி மொழி யொன்றிற்கு 10 அணா 8 பையும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு ஒரு ரூபாயுமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது".

"பறையன்" (9.10.1897) இதழிலிருந்து ஒரு சுவையான செய்தி -

சென்னையில் கொள்ளைக் காய்ச்சல்

சென்ற வாரம் வெள்ளிக்கிழமை காலை ஜெனரல்

ஆஸ்பத்திரியில் ஒருவன் கொள்ளைக்காய்ச்சலில் இறந்து போனான். இறந்துபோனவன் பூனாவிலிருந்து ஒரு துரையுடன் வந்து தேனாம்பேட்டையில் "கிலாஸ்டர்" என்னும் பங்களாவில் தங்கியிருந்தான். காய்ச்சலால் அவன் வருந்துவதைக்கண்ட அவன் எஜமான் அவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார். இந்த சமாசாரம் நமது முனிசிபல் பிரசிடண்ட்டு கர்னல் சர் ஜார்ஜ் மூர் துரைக்கு அறிவிக்கப்பட்ட உடனே அவர் பிளேக் இன்ஸ்பெக்டருக்கும் சானிடெரி இன்ஸ்பெக்டருக்கும் ஆள் அனுப்பி கிலாஸ்டருக்கு வரச் சொல்லிவிட்டுத் தாம் டாக்டர் வாக்கர் வீட்டுக்குப் போய் அவரைக் காணாததால் அவரையும் தேனாம்பேட்டைக்கு வரச்சொல்லிவிட்டு கில்ாஸ்டருக்கு வந்து சேர்ந்தார். லாங்கர் பார்ப்பான் ஆஸ்பத்திரி பிளேக் காய்ச்சல் காரருக்காகச் சித்தஞ் செய்யப்பட்ட இடம். இந்த இடத்தில் பக்கிங்காம் கனால் இஞ்சீனிரும் லைட் அவுஸ் இன்சீனிரும் குடியிருந்தார்கள். அவர்கள் ஆறு மணி நேரத்துக்குள் அந்தக் கட்டடத்தைக் காலி பண்ண வேண்டுமென உத்தரவு கொடுத்து விட்டார். முதலாவது டிவிசன் சர்ஜனுக்கு எழுதி இராய புரத்தில் கொள்ளைக் காய்ச்சலுக்கு நியமித்த உத்தியோகஸ் தர்களை ஆஜரில் இருக்கும்படிச் செய்தார். அப்படியே 4 ஆவது டிவிசன் சர்ஜனுக்கும் எழுதி கிருஷ்ணாம்பேட்டையில் சித்த மாக இருக்கச் செய்தார். தேனாம்பேட்டை கிலாஸ்டர் பங்களா வுக்கு வந்தபோது அங்கிருந்த வேலைக்காரர்களின் பேர்களை எழுதச் சொல்லி விட்டு டாக்டர் கிங் துரையைக் கூட்டிக் கொண்டு சைதாப்பேட்டைக் கலெக்டரிடம் போனார். மூவரு மாக கெண்டி[1] பந்தயக்குதிரை லாயத்திற்கு பூனாவிலிருந்து வந்திருந்த இரண்டு குதிரைக்காரரை கிலாஸ்டருக்கு அனுப்பினார்கள். செங்கல்பட்டு டாக்டருக்கு தந்தியடித்து சைதாப்பேட்டைக்கு வந்து தகுந்த காபந்து செய்யச் சொன்னார்கள். மூவரும் கிலாஸ்டருக்கு வந்தபோது டாக்டர் வாக்கர் இறந்து போனவனுடைய வஸ்திரத்தைத் தகனம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். அந்த கொள்ளை மாரி அணுகாதபடி அங்கு தூபம் கொடுத்துவிட்டு கிலாஸ்டரில் குடியிருக்கும் துரை மிஸ்டர் டிகிளேர் மான்ட் தனிமையாக சிலதுநாள் மட்டும் துறவியைப் போலிருக்க வாக்கியாபித்து விட்டார்கள். போலீஸ் கமிஷனரைக் கண்டுப் பேசி போலீஸ் காபந்துக்குக் கட்டளைப் பிறப்பித்தார்கள். இராயப்பேட்டை டாக்டரைக் கண்டு கிலாஸ்டர் பங்களாவிலிருந்து வெளுக்க வண்ணானுக்குப் போட்டிருந்த வஸ்திரங்களைக் கொண்டு வந்து புகைபிடித்து சுத்தஞ் செய்ய சித்தம் செய்தார்கள். ஒரு அஜிஸ்டண்டு எல்த் ஆபீசரை மிஸ்டர் டிகிளேர் மாண்டுக்குக் காவலாக வைத்தார்கள். அப்படிக் காவலிலிருக்க இந்த துரை செய்த பாக்கியமே. அறுகோணத்தில்[2] ஒருவனை சந்தேகத் தின் பேரில் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவ்வளவு அட்டகாசமும் ஒரு நாளைக்குள் நடத்திவிட்டார் கர்னல் மூர் துரை.[3] ஒரு கேசை விட கேஸ் கிடையாது. நமக்கினிமே

1. கிண்டி 2. அரக்கோணம் 3.இவர் பெயரில்தான் மூர் அங்காடி கட்டப்பட்டது.

பயமேது, நமது மூர்துரை உதவியிருக்கும்போது என்றே சொல்லவேண்டும்.

"சிங்கைநேசன்" என்ற சிங்கப்பூர் இதழ். 4.6.1887 வெளியீட்டில் இருந்து ஒரு செய்தி –

சிங்கப்பூர்

ஜூபிலிக் கொண்டாட்டம்

மகாகனம் பொருந்திய விக்டோரியா சிங்காசன மேறிய ஐம்பதாம் வருடோற்சவம் சிங்கப்பூரிலே பல சாதியாராலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வெள்ளைக்காரர் வேடிக்கை

ஜனவரித்திடலிலே வாணவேடிக்கை மிக நூதனமாக நடந்தது. வாணத்தினாலே மகாராணியாருடைய ரூபமும் கடவுள் மகாராணியை இரட்சிப்பாராக என்ற வசனமும் இன்னும் அனேகவித சித்திரமான வாணவேடிக்கைகள் காட்டப்பட்டன.

3000 ஸ்கூல் பிள்ளைகள்

இந்தப் பிள்ளைகள் செவ்வையா யிருந்து வாணவேடிக்கை பார்க்க இருப்பிடமும், பிள்ளைகளுக்கு பிஸ்கோத்து, றொட்டி, தேய்த்தண்ணீர், சர்பத்தும் தாராளமாகக் கொடுக்கப்பட்டன.

குதிரைப்பந்தயம்

குதிரைப் பந்தயத்திடலிலே வழக்கப்பிரகாரம் குதிரைப் பந்தயம் நடந்தது. மழையாயிருந்தபடியால் சுதேசிகள் அனேகர் குதிரைப்பந்தயம் பார்க்கப் போகவில்லை.

விளக்கு வேடிக்கை

சீனர்கள் இலட்சக்கணக்கான சுதேசி விளக்குகள் மீன் வடிவமாகவும், பாம்பு வடிவமாகவும், பழவகை வடிவமாகவும் செய்து உள்ளே மெழுகுத் திரிகள் வைத்து ஊர்வலம் வந்து பெரிய கொண்டாட்டம் கொண்டாடினார்கள்.

புதுவை இதழான "ஜெர்னல் ஆபீசியல்" (5.7.1895) இதழில் விளம்பரமாக வெளியிடப்பட்ட ஒரு செய்தி

செர்வீஸ் முனிசிப்பால்

புதுவை மாநகரம்

குடியரசுப் பண்டிகை

குடியரசுப் பண்டிகைக்காகச் சுலாயி மீ 14௨ நடத்தப்படும் விளையாட்டு விநோதங்களின் விளம்பரம்.

9 மணிக்கு தொம்பர் விளையாட்டு, பற்பல நூதனமான படங்கள் காட்டுவித்தல்.

10 மணிக்கு சுழல் ராட்டிண விளையாட்டு, சறுக்கு மரம் ஏறுதல்

இரண்டரை மணிக்கு கண்மூடி விளையாட்டு.

3 மணிக்கு வில்லடித்தல், ஜல சூஸ்திர விளையாட்டு.

4 மணிக்கு சூர் ஷபுரோவில் குதிரைப் பந்தயம், ரேக்ளாப்

பந்தயம், கழுதை பந்தயம், பூஸ்பூஸ் பந்தயம், சாக்கு கட்டியும் சாதாரணமாயும் ஓடுகிறப் பந்தயம், வெலொசி பேத் வண்டி பந்தயம் (காலால் ஓட்டும் இரண்டுருளை வண்டி).

ஐந்தரை மணிக்கு குவேர்னீமா[1] பிளாசில் கோலாட்டக் கச்சேரி, பதுமைகள் ஆட்டம்.

7 மணிக்கு பொதுக்கட்டடங்களில் தீபம் யேத்துதல்

ஒன்பதரை மணிக்கு வாணவேடிக்கை.

பத்தரை மணிக்கு வாசகப்பா

காலை 9 மணி முதல் பலவித விளையாட்டுகள், குதிரை ராட்ணம், தொட்டி ராட்ணம் இதுகளில் பிள்ளைகள் யினாமாக வந்து விளையாடலாம்.

மேர்[2]

க-பியேர்[3]

செய்தியாளர்

அந்நாளில் செய்தி இதழ்களுக்கு உள்ளூர் செய்தியாளர் கிடையாது. ஆங்கில செய்தித்தாள்களில் இருந்து செய்திகளை எடுத்துக் கொள் வார்கள். அல்லது ஆசிரியர் காதுக்கு எட்டிய செய்திகளை எழுதுவார். வெளியூர் வாசகர்களும் செய்திகளை எழுதி அனுப்புவார்கள். இது குறித்து, புதுவை "இந்து நேசன்" *(8.1.1887)* இதழில் வெளிவந்த ஓர் அறிவிப்பு.

வேண்டுகை

பொதுஜனோபகாரார்த்தமாக இயற்றிய இப்பத்திரிகைக்குச் சமாச்சாரக் கடிதங்களனுப்ப விரும்புவோர் பிறரை நிந்தித் தாயினுந் தனிநன்மையைக் கோரியாயினுமில்லாமல் பொது நன்மையையே விசேஷித்தெழுதிய சகல விஷயங்களையும், நூதன சமாச்சாரங்களையும், நவீன உற்பவங்களையும் வரைந் தனுப்பக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"சுதேசமித்திரன்" ஆசிரியர் க. சுப்பிரமணியம் இதுபற்றிக் கூறுவது -

"இப்பத்திரிகையால் விளையும் நன்மைகள் அநந்தம் என்றாலும், இதை நடத்தும் விஷயத்தில் ஏற்படும் சிரமம் மிகுதி. இங்கிலீஷ் பத்திரிகைகளானால் மற்ற பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களைக் கத்தரிக்கோலால் துண்டுப்படுத்தி கோந்து போட்டு ஒட்டிக் கொடுத்துவிட்டால், கம்பாசிட்டர்கள் வேலையை முடித்துவிடுவார்கள். தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அவ்வாறு செய்யத்தக்கப் பத்திரிகைகள் அதிகமில்லை. இங்கிலீசும் தமிழும் தெரிந்தவர்களே இதற்கு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இங்கிலீசை மொழிபெயர்த்து எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தமிழ்ப்பத்திரிகைக்கு சப்-

---

1. கவர்னர். 2. மேயர். 3. "க" என்பது மேயர் பியேரின் முன் எழுத்து. ஆங்கிலத்தில் "ஜி". அதைக்கூடத் தமிழில் கொடுத்திருக்கிறார். "கஸ்தோம். பியேர்" என்பது அவரது முழுப்பெயர்.

எடிட்டர் வேண்டுமென்றாலும் கிடைப்பதில்லை".[1]

ஆங்கிலச் செய்திகளைத் தமிழ்ப்படுத்தவேண்டிய நிலையில்தான் இன்றும் (1992) தமிழ் இதழ்கள் இருக்கின்றன. ஆனால், நாளை நிச்சயம் மாறுதல் ஏற்படும். இந்திச் செய்திகளைத் தமிழில் மொழி பெயர்ப் பார்கள்!!

மக்கள் குரல்

இதழ்களின் பணி என்ன என்பதை அந்நாளிலேயே தமிழ் இதழ்கள் தெரிந்து வைத்திருந்தன. மக்கள் குரலை வெளியிட்டன; அரசின் குறை களை எடுத்துக்காட்டிக் கண்டித்தன. இத்தனைக்கும் அன்று அயலார் (ஆங்கிலேயர்) ஆட்சி நடந்துகொண்டிருந்தது. இன்றுபோல அன்று இதழ்களுக்கு உரிமைகளும் கிடையாது. என்றாலும், இதழ்கள் வாய்மூடிக் கிடக்கவில்லை. காவல் நாய்களாகக் குரைத்துக்கொண்டிருந்தன.

தாய்மொழி செய்தித்தாள்களின் அறிக்கையைப் புரட்டினால், வரிக்கு வரி இந்தக் காவல்நாய்களின் குரலைக்கேட்க முடிகிறது. ஆனால், தமிழில் அல்ல; ஆங்கில மொழி பெயர்ப்பில். அதை மீண்டும் தமிழ்ப் படுத்தும்பொழுது, அந்தக்குரலை நாம் அப்படியே கேட்க முடியாதுதான். மொழியைக் கேட்க முடியாது; ஒலியைத்தான் கேட்க இயலும்.

"வெற்றிக்கொடியோன்" *(20.6.1874)* மதுவிலக்கை ஆதரித்து எழுதியிருக்கிறது. "மதுக்கடைகளை மூடினால் வருமானம் போய்விடுமே என்று அரசாங்கம் நினைக்கிறது".

"சுதேசபூசணி" *(28.6.1874)*: "ரெயில் நிலையங்களில் உள் அறைகளில் ஐரோப்பியர் தங்குகிறார்கள். தமிழர் வெளியறைகளில் தங்க வைக்கப் படுகிறார்கள். இந்த வேற்றுமை ஏன்?"

"அமிர்தவசனி" *(15.7.1874)*: "திருச்சி கண்டோன்மெண்டு பகுதியில் புதிய ரெயில்நிலையம் கட்ட இருக்கிறார்கள். இது நகருக்கு மையமாக இல்லை. எனவே, ஐரோப்பியருக்கு மட்டுமே இது பயன்படும். மக்க ளுக்குப் பயனில்லை".

"சுஜநரஞ்சனி" *(13.5.1876)*: "ரெயிலில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. ஒருவர் மனைவி, கைக்குழந்தையுடன் ரெயில் ஏற வந்தார். அவர் முண்டியடித்து ஏறிவிட்டார். மனைவி ஏறுமுன் ரெயில் கிளம்பிவிட்டது. காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை மனைவியும், கைக்குழந்தை யும் அடுத்த ரெயிலுக்காக ரெயில் நிலையத்தில் காத்துக்கிடந்தார்கள். கூட்டத்தைச் சமாளிக்க அதிக ரெயில்விடவேண்டும்".

"வெற்றிக்கொடியோன்" *(3.6.1896)*: "குழந்தை மணத்தைத் தடுக்க அரசாங்கம் முன் வராதது ஏன்?"

பஞ்ச காலத்தில் "கஞ்சி இல்ல"ங்களை அரசு அமைத்திருந்தது. அதுபற்றி "திருவாங்கூர் அபிமானி" *(10.4.1877)*: "மக்கள் 'கஞ்சி இல்ல'ங் களுக்குச் செல்வதில்லை. அங்கு கொடுமைப் படுத்தப்படுகிறார்கள்.

---

1. "சுதேசமித்திரன்" வெள்ளிவிழா மலர்

மக்கள் சிறு திருட்டுகள் நடத்தி, சிறைசெல்ல விரும்புகிறார்கள். சிறையில் நல்ல சாப்பாடு கிடைக்கும் என்று மக்கள் எண்ணுகிறார்கள்".

இந்திய மொழி இதழ்ச் சட்டத்தை எதிர்த்து "சுதேசாபிமானி" (1.4.1878): "இந்திய மொழி இதழ்களைச் சாதாரண மக்கள் பெரும்பாலும் படிக்கி றார்கள். அந்த இதழ்களோ அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் தூண்டுகின்றன. எனவே, புரட்சி ஏற்பட வாய்ப்புண்டு என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, இந்திய மொழி இதழ்களைத் தடுக்க அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இது இந்திய மொழி இதழ்களுக்குச் சாவுமணி".

"சிறீரங்க தலபூசணி"(9.10.1880): "ரெயில் காலை 7 மணிக்கு வருகிறது. ஆனால், அஞ்சல்கள் மாலைதான் பட்டுவாடாச் செய்யப்படுகின்றன. காலையே பட்டுவாடாச் செய்ய ஏற்பாடு பண்ண வேண்டும்".

சேலம் "சுதேசாபிமானி" (16.10.1880): "ஆங்கிலேயர்களான மேலதி காரிகள் இனத்தால், மதத்தால், பழக்க வழக்கத்தால் மாறுபட்டவர்கள். கீழ் அதிகாரிகள் முட்டாள்கள். படிப்பறிவு இல்லாதவர்கள். இவர் களுக்குப் பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லை. எனவே, இவர்கள் கையூட்டுப் பெறுகிறார்கள். இதைத் தடுக்கக் கீழ் அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும்".

"சுதேசமித்திரன்" (11.12.1881), "தத்துவ விசாரணி" (4.12.1881) இதழ்கள் உப்பு வரியை எதிர்த்துக் கடுமையாக எழுதியுள்ளன. "உயிர்வாழ உப்பு தேவை. உப்புக்கு வரி என்றால், அது உயிருக்கு வரிதானே?" என்று "தத்துவ விசாரணி" கேட்கிறது.

"எம்பதம் ஆண்டவன்" (8.6.1887): "இந்து சமயத்தைப் பரப்ப மடங்கள் தோன்றின. ஆனால், அந்தப் பணி இப்பொழுது இல்லை. சிலர் உண்டு தீர்க்கிறார்கள். மடங்களின் சொத்துகள் காலியாகின்றன. இதைத் தடுக்க, கோயில் சொத்துகளைப் பராமரிக்கச் சட்டம் செய்தது போல, மடங்களின் சொத்துகளைப் பராமரிக்கவும் அரசு சட்டம் செய்ய வேண்டும்".

பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டணம் உயர்த்தப்பட்டதைக் கண்டித்து "திராவிட அபிமானி" (மே, 1884) எழுதியிருக்கிறது.

"வெற்றிக்கொடியோன்" (21.6.1879): "ஏழை உழவர்கள் வரி கொடாவிட் டால், அவர்களின் வீட்டுக் கதவுகளை அதிகாரிகள் பிடுங்கிப் போகி றார்கள். அரசாங்கக் கருவூலம் கதவுகளால் நிறையுமா? அதிகாரிகளின் ஊதியத்தைக் குறைத்தால், பணம் கிடைக்குமே!"

"திராவிட வர்த்தமானி" (22.12.1887) – "சில ஆங்கிலேயரின் முறையீட்டின் பேரில் லிட்டன் பிரபு இந்தியமொழி இதழ்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தார். ரிப்பன் பிரபு அந்தச் சட்டங்களை மாற்றினார். பழைய சட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று இப்பொழுது சில ஆங்கிலேயர்கள் பெருமுயற்சி செய்கிறார்கள். இந்த நேரத்தில் ஒவ் வொருவரும் நம் தாய்மொழி இதழ்களின் விற்பனையைப் பெருக்க உதவ வேண்டும். இந்திய மொழி இதழ்களின் விற்பனை பெருகினால், ஆங்கி லேயரின் முயற்சி முறியடிக்கப்படும். இந்திய மொழி இதழ்கள் பெருமை

யும் செல்வாக்கும் பெறும்".

சென்னை பெரம்பூரில் மாதா கோயில் கட்ட அரசு உதவிப்பணம் கொடுத்ததை எதிர்த்து "தரங்கை நேசன்" (7.9.1889) எழுதியது. "அரசுப்பணம் என்பது மக்களின் பணம். அதை ஒரு சமயத்துக்கு அரசு கொடுப்பது எப்படி சரியாகும்" என்று இடித்தது.

இந்தியர்கள் படைக்கருவிகள் வைத்துக்கொள்ளக் கட்டுப்பாடு விதித்த சட்டத்தை எதிர்த்து "விவேக வர்த்தினி" (1881 பிப்ரவரி) எழுதியது. "விக்டோரியா அரசியின் பதவி ஏற்பு விழாவுக்கு வாண வேடிக்கை நடத்திய பணத்தை அரசு ஏழைகளுக்கு செலவிட்டு இருக்கலாமே?" என்று "தினவர்த்தமானி" (21.10.1876) கடாவியது. "கல்கத்தா உயர்நிலை மன்றத்தில் வங்காளிகள் நீதிபதிகளாக நியமிக்கப்படும் பொழுது சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏன் தமிழர்களை நீதிபதிகளாக நியமிக்கக் கூடாது?" என்று "வெற்றிக்கொடியோன்" (28.9.1876) உரிமை முழக்கம் செய்தது. "ஆங்கிலேயருக்கு ஒப்பத் தமிழர்களுக்கும் அரசுப் பதவிகள் அளிக்கவேண்டும்" என்று "இந்து ஜனபூசணி" (25.12.1886) எழுதியது. அரசு அறிக்கைகளைத் தமிழிலும் வெளியிடவேண்டும் என்று "சுதேசாபிமானி" கோரியது. சென்னை மாநில அரசின் தலைமைச் செயலகத்தை கோடை காலத்தில் ஊட்டிக்கு மாற்றுவதை "தத்துவ விவேகினி" (1876) எதிர்த்தது.

அந்நாளிலேயே இதழ்களில் வாசகர் அஞ்சல்கள் வெளியிடப்பட்டன. அவையும் மக்கள் குரலாக ஒலித்தன. சேலம் "தேசாபிமானி" (1.6.1881) இதழில் வெளிவந்த ஒரு வாசகர் அஞ்சல் – "ஓமலூர் உதவி தாசில்தாரும், உதவி மாஜிஸ்திரேட்டுமான சீனிவாசன் கையூட்டுப் பெறுகிறார். கையூட்டுக் கொடுத்தால், விடுதலை. இல்லாவிட்டால், சிறைவாசம்".


தஞ்சையில் 1890இல் "ஜனானுகூலன்" என்ற காலணா (1/64 ரூபாய்) இதழ் வெளிவந்தது. அது உள்ளூர் அதிகாரிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தியது. அதற்காக அதன் ஆசிரியர் கிருட்டினதாசுக்கு ஆறு மாதச் சிறைதண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு முன் சில ஆசிரியர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், சிறைதண்டனை பெற்ற முதல் தமிழ் இதழ் ஆசிரியர் கிருட்டினதாசுதான்!

பொது இதழ்கள்

பொது இதழ்கள் தமிழ் இலக்கியத்தை வளர்த்தன; மக்களுக்குப் பயன்தரும் கட்டுரைகளை வெளியிட்டன. சமயக்கருத்துகள் அலசப் பட்டன. தமிழ் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்கின.

"தமிழ் மேகசின்" எப்படி இருந்தது என்று இன்று நாம் அறிய இயலவில்லை. ஆனால், "தினவர்த்தமானி"யில் "செய்திகளுடன் இலக்கிய – அறிவியல் கட்டுரைகளும் வெளியிடப்பட்டன. சங்க இலக்கியப் பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன. தமிழ் மக்களின் குரல் தாராளமாக ஒலித்தது" என்று ஜான் மர்டாக் குறித்து வைத்துள்ளார்.

நாகர்கோவிலில் வெளிவந்த "தேசோபகாரி" இதழில், பயனுள்ள கட்டுரைகள் வெளியிடப்பட்டன. படங்களைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் – அவ்வளவு அழகானவை. இன்றைக்குப் பார்த் தாலும் அந்த அழகு குறையவில்லை. இன்றைய இதழ்களில்கூட


Cax. 75 4-1-6

Cartilha que cõtẽ breuemẽte ho q̃ todo christão deue aprẽder pera sua saluaçam. A qual el rey dom Iohã terceiro deste nome nosso senhor mandou imprimir ẽ lingoa Tamul ꝛ Portugues cõ ha decraraçam do Tamul por cima de vermelho.

1554இல் போர்த்துக்கலில் அச்சான "லூசே தமிழ் வினா–விடை" ("கார்டிலா") என்ற தமிழ்நூலின் முகப்புப்படம்.

munioné. Remissionem peccatorum. Carnis re-
surrectionem. Vitam eternam. Amen.

Dos ceos — e da terra — criador — todo —
Agájamũm bũmium paracheuán çáravanũm
Creo em — deos — padre todo — poderoso —

poderoso — padre — em deos — creo : — E assy —
ánauané : pidáue tambiráne vizvácam. Auuanám
criador dos ceos e da — terra : — E em —

em nosso — senhor — Jesu — xpo — seu — filho — hũ
ènnarè cartãue iesu christo auuanarè pũtrane oru-
Jhũ — xpo seu — vnico filho — nosso —

sso : — Do sancto — spũ — pola graça —
uané. Xuddamána xitatinoreá carunecónddu
senhor : O qual foy — concebido — do spũ sancto

concebido — foy — da virgem — maria — naceo : —
guerbám ai : caniástri mariatil perándauán :
naceo — de maria — — virgem — : —

"லாசே தமிழ் வினா-விடை" நூலின் ஒரு பக்கம். தமிழ்ச் சொற்கள் ரோமன் எழுத்துகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இப்பக்கத்திலுள்ள வரிகள் : ஆகாசமும். பூமியும் படைச்சவன் சர்வமும் அவனே பிதாவே தம்பிரானே விசுவாசம். அவ்வண்ணம் என்னேட கர்த்தாவே யேசுகிறிஸ்து அவனோட புத்ரனே ஒருவனே. சுத்தமான சித்தத்தனுடைய கருணை கொண்டு கர்பம் ஆயி கன்னியாஸ்திரி மரியத்தில் பிறந்தவன்...


அவ்வளவு அருமையான படங்களைப் பார்க்க முடிவதில்லை.

1886 மே இதழில் "அரித்துவாரம்" என்று ஒரு கட்டுரை. இந்துக்களின் புண்ணியபூமி, அரித்துவார். அதைப்பற்றி இந்தக் கிறித்துவ இதழில் ஓர் அருமையான கட்டுரை. அதுவும் படத்துடன். அதை அப்படியேத் தரு கிறேன்.

அரித்துவாரம்

"விஷ்ணுவின் வாசல்" என்னும் அர்த்தமுடைய அரித்துவாரம் என்ற நகரம் டில்லியிலிருந்து 105 மைல் தூரமாய் இமாலய மலைகளின் அடிவாரத்தில் கங்கை நதியோரமாய் நிற்கிறது. மேற்படி நதி இந்நகரத்தையடுத்து அழகிய தெளிபுனலாக இந்தியாவின் பெரிய மைதானத்தில் பிரவேசிக்கிறது. கங்கா நதியில் தீர்த்தம் ஆடுகிறது சம்பந்தமாய் அரித்துவாரம் இந்துக்களுடைய புண்ணிய யாத்திரையின் ஒரு முக்கிய ஸ்தலமாக எண்ணப்படுகிறதுமுண்டு. இந்நகரத்தின்கீழ் நதிக் கரை எங்கும் விக்கிரகக்கோயில்களும் ஸ்நானத்துறைகளும் மிகுதியாய் காணலாம். அரித்துவாரத்தை தங்களுக்கு நிலை யான வாசஸ்தலம் ஆக்கிக்கொள்ளுகிற பக்கிரிகள் கணவாய்க்கு மேலான கற்பாறையில் கெபிகள்[1] தோண்டிக்கொண்டு, ஏணி கள் மூலமாய் மாத்திரம் அவற்றில் ஏறி இறங்குகிறார்கள். மேற் படி புண்ணியத் தீர்த்த ஸ்தலத்துக்குப் பக்கத்துக்குப் பக்கம் நாலுபேர் மாத்திரம் செல்லத்தக்க ஓர் இடுமுடுக்கு வழியாய்ப் போகவேண்டும். தீர்த்த யாத்திரைக்குரிய காலத்திலோ 2 லட்சம், 3 லட்சம் தொழும்பர் வரையும் பரிசுத்த நதியில் முந்திப்போய் இறங்குவதற்காகக் குத்துப்பிடியாய் நெருக்கிக் கொண்டு போவார்கள். 1819-ம் ஞ இப்படியாக ஜனக்கும்பல் நெருக்கி மல்லுக்கட்டினதின் பேரில் 420 ஜனங்கள் நசுங்கிச் செத்துப் போனார்கள். ஸ்நானம் பண்ணுகிறதின் விசேஷித்த சடங்கொன்றும் இல்லாமல், வெறும் முழுக்காடுதல் மாத்திரம் நடக்கிறது. சரியான தீர்த்தக் காலத்தில் ஜலத்தின் ஆழம் 4 அடி மாத்திரம் இருக்கும். ஆண்களும் பெண்களும் வித்தியாசமின்றி ஒரே இடத்தில் ஸ்நானம் பண்ணுவார்கள். இந்தத் தீர்த்த யாத்திரையோடு ஏக காலத்தில் ஒரு பெரிய சந்தை அங்கே கூடும். அப்போது இந்தியாவின் நானாபாகத்திலுமிருந்து பற் பல வயசுள்ளவர்களும் பற்பல உடைதரித்தவர்களும் பற்பல முகரூபமுள்ளவர்களுமான எண்ணிறந்த ஜனங்கள் அங்கே கூட்டம் கூடுவார்கள். சிவிங்கிகள், கரடிகள், புலிக்குட்டிகள், குதிரைகள், யானைகள், ஒட்டகங்கள், எருமைகள், பசுக்கள், செம்மறியாடுகள், நாய்கள், பூனைகள், குரங்குகள் முதலான நானாவித உயிர்ப்பிராணிகளும் உலகத்தின் நானாதிசைகளிலு மிருந்து கொண்டுவரப்படும். இதுவுமன்றி, காஸ்மீரத்திலிருந்து சால்வைகளும், இங்கிலாந்திலிருந்து கம்பிளி வஸ்திரங்களும் கறிவகைகளும், பிரான்சியாவிலிருந்து கைக்கடிகாரங்களும், சீனாவிலிருந்து ஊறுகாய்களும், அரபியாவிலிருந்து பிசின்

1. குகைகள்.



HORDWAR, WHERE THE GANGES ENTERS THE PLAINS.

"தேசோபகாரி" 1886 மே இதழில் வெளிவந்த அரித்துவாரம் படம்.

சுந்தவர்க்கங்களும், பார்சியாவிலிருந்து பன்னீரும் சங்கையில்லாமல் வந்திறங்கும். ஒரு விற்பனை நடக்கப் போகையில், கொள்ளுகிறவனும், விற்கிறவனும் பக்கத்திலே நிற்கிறவர்கள் சங்கதியை அறியாதபடிக்குத் தங்கள் கைகளை ஒரு சீலைத் துணியால் மூடிக்கொண்டு ஒருவருக்கொருவர் கைவிரல்முளிகளை நெருக்குவதினால் ரகசியமாய் விலைபேசிக் கொள்வார்கள். வருஷவாரி அரித்துவாரத்துக்கு யாத்திரை பண்ணும் தேசாந்திரிகளின் தொகை 20 லட்சம் என்று கணக்கிட்டிருக்கிறது.

"விவேக சுந்தரம்" (1887) என்ற இதழில் இருக்கிற கட்டுரைகளில் ஒன்று "பால் கொடுக்க வேண்டிய ஸ்திரி இருக்கவேண்டிய பத்திரம்". மற்றது, "பாலில்லாத குழந்தைகளைக் காப்பாற்றும் விதம்".

"விநோத விசித்திரப்பத்திரிகை" 1900 சனவரி இதழில் "எரிக் கரும்புகள்" என்று ஒரு கட்டுரை. ஆனால், கரும்புகளை எரிக்கவில்லை. சமையலுக்கு ஏற்ற விறகு எது என்று சொல்லப்படுகிறது. இதோ –

எரிக்கரும்புகள்

சமைப்பதற்கு ஈரமான விறகுகளை உபயோகித்தால் புகைந்து கொண்டிருப்பதனாலே பதார்த்தங்களின் உருசி கெட்டுப் புகைவாசனை உண்டாய்விடும். இவ்வாறு நேரவெட்டாமல் எப்போதும் காய்ந்த விறகாகவே உபயோகிக்கவேண்டும். இன்னும் சந்தனக்கட்டை, தேவதாறு, வேம்பு, தேக்கு முதலிய கட்டைகளாலும் பதார்த்தங்களின் உருசி கெட்டுப்போகின்றமையின் அவைகளையும் நீக்கிவிடவேண்டும். இன்னும் சீமையிலிருந்து சாமான்கள் பாக் பண்ணி வருகின்ற ஜாதிக்காய்ப் பலகையையும் அத்தி, ஆல், கள்ளி, முருங்கை முதலிய கனமில்லாத இலேசானக் கட்டைகளையும் நீக்க வேண்டுவதன்றியில் சிலர் கிரோஸன் ஆயில் என்னும் எண்ணெயை ஊற்றி அடுப்புப் பற்றவைக்கும் துர்வழக்கத்தையும் நீக்கி விட வேண்டும். செவ்வனேயுலர்ந்ததும் பழைமையானதும் கனதியுள்ளதும் தைலப்பசையுடையதுமான கருவேல், வெள்வேல், புளி, காசான், சவுக்கு முதலிய கட்டைகளும் இவைகளைப் போன்றவைகளுமே உபயோகிக்கவேண்டும். மேற்கூறியவை யாவும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியாகலின் இவ்விடத்திலெழுதவேண்டிய தவசியமாயிற்று. இனி அடுத்தப் பத்திரிகை முதல் பாகவகைகளை எழுதிக்கொண்டு வருவோம்.

இதழின் பெயரைப் பார்த்தீர்களா? "விநோத விசித்திரப் பத்திரிகை". அதில் இவ்வளவு பயனுள்ள கட்டுரை. அறிவித்தபடி சமையல் குறிப்புகளும் பின்பு வெளியிடப்பட்டன.

"சுகுணபோதினி" 1888 மார்ச்சு இதழில் "புருஷர்கள் செய்யவேண்டிய கடமை" என்று ஒரு கட்டுரை. அது, "இல்வாழ்க்கைக்கு இன்றி அமையாதவளாகிய மனைவியைக் கல்வி கேள்விகளால் நிறைந்திருக்கும்படிச் செய்து அவளை மேலும் மேலும் நன்னெறி முறையில் நடக்கச் செய்வது கணவனைப் பொறுத்ததேயாம். கஷ்டமோ சுகமோ,

எந்தக்காலத்திலும் நகமுஞ் சதையும் போலக் கூடவேயிருப்பவள் மனைவியாதலால், அவள் விஷயத்தில் கொழுநன் என்னதான் செய்ய லாகாது?" என்று தொடங்குகிறது.

நாகரிகத்தால் நாடு கெட்டுவிட்டது என்று நவில்வோர் அன்றும் இருந்தார்கள். அவர்களுக்குப் "பெண்மதிபோதினி" பதில் அளித்து, "நாகரிகம்" என்ற கட்டுரையை வெளியிட்டது. 1893 ஆகஸ்டு இதழில் அது சொல்லுகிறது – "நாகரிகத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் நாற்காத தூரமென்பர் சிலர். உலக நடவடிக்கையைக் கவனிக்கின் அப்படியே தோன்றும். ஆயினும் நன்றாய் ஆராயின் நாகரிகமும் நல்லொழுக்கமும் கைகோர்த்துலாவும் தோழிப் பெண்களுக்கு ஒப்பனவேயன்றி பகைஞருக்கு ஒப்பன அல்லவென விளங்கும்" வெள்ளைத்துணியில் அற்ப அழுக்கும் துலக்கமாய்த் தோன்றுவது போல, நாகரிகத்தின் குறைகள் பெரிதாகத் தெரிகின்றன என்று தொடர்ந்து கூறுகிறது.

"ஜனவிநோதினி"என்று ஓர் இதழ். இன்றைக்குக்கூடத் தமிழில் அப்படி ஓர் இதழ் இல்லை. அந்த நாளிலேயே உயர்ந்த தாளில் சிறந்த அச்சுடன், படங்களோடு வெளிவந்த இதழ், இது. சென்னைப் பாட்நூல் – தாய்மொழி இலக்கியக் கழகம் வெளியிட்டது. "சமயத் தொடர்பு இல்லாத இதழ்" என்ற அறிவிப்புடன் வெளிவந்தது. அரசு உதவிப்பணம் வழங்கியது. நல்ல தமிழில் பயனுள்ள கட்டுரைகள் வெளிவந்தன. 1880 மார்ச்சு – ஏப்ரல் இதழ் (இந்த ஆண்டில் இருமாதத்துக்கு ஓர் இதழ் வீதம் வெளிவந்தது). பொருளடக்கத்தைப் பார்த்தாலே இதன் சிறப்பை அறிந்துகொள்ளலாம். முதல் பக்கத்தில் "அட்டவணை" தமிழிலும் ஆங்கிலத்திலும் காணப் படுவது –

புகைக்கூண்டு அல்லது கும்மட்டம்

இலண்டன் நகரில் பளிங்கு மாடம் கட்டியச் சிறுவன்

தோல் பதப்படுத்துவது

ஷேக்ஸ்பியர் சொன்ன பெர்டிட்டா என்பவள் கதை

விருந்தோம்பல்

சிந்துபத்திரன் செய்த கப்பல் யாத்திரை

நாணயங்களும் முத்திரைச் சீட்டுகளும்

உண்மை


சிறுவர்க்கான கதை

சமாசாரம்

பொருளடக்கத்தைப் பார்க்கவே ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? அதைவிட "ஆச்சரியம்" என்வென்றால், இந்த இதழுக்கு வாசகர்களிடம் ஆதரவு இல்லாமல்போனதுதான்!

1870-71 ஆம் ஆண்டுக்கான அரசு நிர்வாக அறிக்கை, "ஜனவிநோதினி" எதிர்பார்த்த அளவு வெற்றி அடையவில்லை. உயர்ந்த நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. ஆனால், அதை எட்ட முடியவில்லை" என்று கூறு கிறது.

இதழின் விலை 2 அணா. 1870 முடிவில் மொத்த கையொப்பத்தார்,



"ஜனவிநோதினி" 1880 மார்ச்சு இதழில் வெளிவந்த "புகைக்கூண்டு" (பறக்கும்பலூன்) படம்.

186. அவர்களில் ஐரோப்பியர் 22 பேர், தமிழர் 164 பேர், இதழ் வெளியிட ஆண்டுச் செலவு ரூ. 2 ஆயிரம், வரவு ரூ. 200 கூட இல்லை. இந்த விவரமும் அந்த அறிக்கையில் இருக்கிறது.

1872-73 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் காணப்படும் விவரம் - ஆண்டுச் (1872) செலவு ரூ. 4,278-7-0, வரவு - ரூ. 515-6-0. அரசாங்கம் ரூ. 2 ஆயிரம் உதவிப்பணம் கொடுக்கிறது.

"ஜனவிநோதினி" ஏன் விற்பனையாகவில்லை? "ஆங்கிலத்தில் படித்து அறிந்துகொள்ள முடிவதைத் தமிழில் படிக்கமாட்டார்கள்" என்று 1872-73 ஆம் ஆண்டு அறிக்கை கூறுகிறது!

திரைப்படச் செய்திகள்

இன்று திரைப்படச் செய்தி இல்லாத தமிழ் இதழே இல்லை. ஆனால், 19 ஆம் நூற்றாண்டில் எந்தத் தமிழ் இதழிலும் திரைப்படச் செய்தி இடம் பெறவில்லை. ஏனென்றால், முதல் திரைப்படம் தயாரானதே 20 ஆம் நூற்றாண்டில்தான்!

ஆடல் பாடல், கூத்து போன்ற கலைகள் பற்றியச் செய்திகளைக்கூட 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்களில் காண இயலவில்லை. (நமது பார்வைக்குக் கிடைத்த இதழ்களே மிகக்குறைவு என்பதையும் மறந்து விடக்கூடாது).

1902இல் யாழ்ப்பாணத்தில் "சுதேச நாட்டியம்" என்ற இதழ் வெளிவந்தது. "நாட்டியம்" என்று பெயர் இருந்தாலும், இது கலை இதழ் அல்ல. "நமது நாட்டின் கூத்து" என்று பொருள்படும் பெயரை வைத்துக் கொண்டு, உடல்நலம் பற்றி மிகுதியாக எழுதி வந்தது.

1911இல் சென்னையில் "திரைக்காதலர்" என்ற இதழ் வெளிவந்தது. "கலை, சங்கீதம், நாடகம் ஆகியவை பற்றிய செய்திகளை வெளியிடும் ஓர் ஆங்கில - தமிழ்த் திங்கள் இதழ்" என்று "தமிழ் நூல் விவர அட்டவணை" (தொகுதி - 3, பகுதி - 3) குறிப்பிடுகிறது. ஆனால், அப்பொழுதும் தமிழ்த் திரைப்படம் வெள்ளித்திரையில் தோன்றவில்லை. என்றாலும், "திரைக்காதலர்" என்று பெயர். "சினிமா இரசிகன்" என்பதையே "திரைக்காதலர்" குறிப்பிடுகிறது. இவ்விதழின் ஆங்கிலப் பெயரின் தமிழ் மொழிபெயர்ப்பு போலும், இது.

முதல் தமிழ்ப் பேசும்படமான "காளிதாசு" 1931இல் திரையிடப்பட்டது. அது முதல்தான் திரைப்படச் செய்திகள் தமிழ் இதழ்களில் வெளியிடப் பட்டன. முதல் படத்தையே "சுதேசமித்திரன்" மதிப்பீடு செய்தது. அது முதலே திரைப்படச் செய்திகளுக்கும் வாசகர்களிடம் வரவேற்பு இருந்தது.

1935இல் தமிழில் முதல் திரைப்பட இதழ் வெளிவந்தது. அதற்கு "சினிமா உலகம்" என்று பெயர் சூட்டப்பட்டது. ஆசிரியர் பி.எஸ். செட்டியார். 1937இல் சென்னையில் இருந்து வெளிவந்த "கலியுகம்" என்ற மாத இதழ், "திரைப்படச் செய்திகள், படங்களுடன் வெளிவருகிறது" என்று தன்னை விளம்பரப்படுத்திக்கொண்டது. ("கலியுகம்" அல்லவா!) அதே ஆண்டு பழநியில் இருந்து வெளிவந்த "சித்தன்" என்ற இதழும் "திரைப்பட மதிப்பீட்டுடன் வெளிவருகிறது" என்று தம்பட்டம் அடித்துக்கொண்டது!

அன்று தொடங்கிய மோகம்தான் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அரசியல் செய்திகள்

சொந்த அரசு கொண்டு, அரசுகள் எவ்வாறு நடக்க வேண்டும் என்று இலக்கணம் கண்டு உலகுக்கு உணர்த்திய மூத்த மகன், தமிழ் மகன். உலக வரலாற்றிலேயே நீண்ட நெடுங்காலம் அரசாண்டப் பரம்பரை பாண்டியர் பரம்பரைதான். இந்தப் பரம்பரைக்குச் சொந்தக்காரர் களான தமிழர்களுக்கு, 19 ஆம் நூற்றாண்டில் அரசியலும் புதிதாகவே இருந்தது! அதற்கு ஆறு, ஏழு நூற்றாண்டுக்கு முன்பே தமிழர்கள் அரசுரிமையை இழந்துவிட்டதே இதற்குக் காரணம்.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்ககால இதழ்களில் நாம் அரசியலைக் காணமுடியவில்லை. மக்களின் குரலை இதழ்கள் எதிரொலித்தது உண்மைதான். அரசின் குறைகளை இதழ்கள் எடுத்துக்காட்டியதும் மெய்தான். இவையுங்கூட மயில்தோகையால் அடிப்பது போலத்தான் நடந்தன. அதோடு இதுமட்டும் அரசியல் ஆகிவிடாது. அப்பொழுது எந்த இதழுமே அந்நிய ஆட்சியை எதிர்க்கவோ, விடுதலை கேட்கவோ, சொந்த அரசுரிமை கோரவோயில்லை. 1871இல் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் "அரசாங்கம் கவனிக்கும் அளவுக்குத் தமிழ் இதழ்களில் எதுவும் இல்லை" என்று கூறியுள்ளார்.

அந்நாளில் சென்னையில் காசுலு லெட்சுமிநரசு என்ற வணிகர் இருந்தார். "இது நமது நாடு. இந்த ஆட்சியில் நமக்கும் பங்கு வேண்டும்" என்று முதன் முதல் உணர்ந்தவர், அவரே. அதற்காக "மதியம்" (1844) என்ற தமிழ் - தெலுங்கு - ஆங்கில மும்மொழி, மாத மும்முறை இதழைத் தொடங்கினார். தமிழ்நாட்டில் மக்கள் குரலை ஒலிப்பதற்கு என்றே தொடங்கப்பட்ட முதல் இதழ், இதுவே.

அவரே சென்னையில் 1852இல் "சென்னை மக்கள் கழகம்" என்ற அமைப்பைத் தொடங்கி, தலைமை தாங்கி நடத்தினார். தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட முதல் அரசியல் அமைப்பு, இதுவே. ஆட்சியில் இந்தியருக்கும் பங்கு வேண்டும் என்பதே இந்த அமைப்பின் நோக்கமாக இருந்தது.

1870இல் சென்னையில் அரசர் சர்.டி.மாதவனும், அவருடைய நண்பர் பேராசிரியர் ரெங்கநாதனும் சேர்ந்து, "பொது ஜன பிரசாரணி" என்ற தமிழ், தெலுங்கு, ஆங்கில மும்மொழி இதழை வெளியிட்டார்கள். இவ்விதழும் மக்கள் குரலை ஒலிக்கவே தொடங்கப்பட்டது. இவ்விதழின் நோக்கமும் ஆட்சியில் இந்தியர் பங்கு பெறுவதே.

1876இல் தொடங்கப்பட்ட "வெற்றிக்கொடியோன்", மக்கள் குரலை உரக்க ஒலித்தது. அரசைப் பலமாக இடித்தது. சே.ப.நரசிம்மலுவின் "சேலம் தேசாபிமானி" (1878) கோவை கலாநிதி (1880) ஆகிய இதழ்கள் அரசு அதிகாரிகளின் ஊழல்களை வெளிப்படுத்துவதில் அஞ்சாது செயல் பட்டன.[1] சே.ப.நரசிம்மலு சிறந்த நாட்டுப் பற்றாளர். க.சுப்பிர மணியத்துக்கு முன்னோடி என்றுகூடச் சொல்லலாம்.

---

1. "அரசாங்கத்தின் ஊழல்களை அம்பலப்படுத்துவது இதழ்களின் முக்கியப்பணி" என்பார், அண்ணல் காந்தியடிகள். ("யங் இந்தியா" 2.7.1925).

1868இல் காசுலு லெட்சுமிநரசு காலமாக, அவர் தொடங்கிய சென்னை மக்கள் கழகம் செயலற்றிருந்தது. அரசியல் விழிப்புணர்வு நிறைந்த க.சுபபிரமணியம் அதன் தலைமைப் பொறுப்பேற்று செயல்பட வைத்தார். தமிழ்நாட்டில் அரசியல் விதையைத் தூவியவர் இந்த சுப்பிரமணியமே. 1882இல் இவர் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து அரசியல் பிரசாரம் செய்தார். தமிழ்நாட்டில் முதல் அரசியல் பயணமும், அரசியல் கூட்டங் களும் இவையே. 1883இல் "சுய அரசாட்சி வினா - விடை" என்ற நூலை எழுதி, இலவசமாக வழங்கினார். தமிழில் வெளிவந்த முதல் அரசியல் வெளியீடும் இதுவே. தமிழில் முதல் அரசியல் இதழைத் தொடங்கிய வரும் இந்த க.சுப்பிரமணியமே. அவர் தொடங்கிய இதழ்தான் "சுதேச மித்திரன்". ஆம், 1882இல் க.சுப்பிரமணியம் தொடங்கிய "சுதேசமித்திரன்" வார இதழ்தான் தமிழ்நாட்டின் முதல் அரசியல் இதழ். "நாட்டுக்கும் ஏட்டுக்கும் தொடர்பிருக்க வேண்டும்"[1] என்பதை மெய்ப்பித்த இதழ், இது.

இந்திய தேசிய காங்கிரசு தோன்றுவதற்கு முன்பே சுப்பிரமணியத் தின் நெஞ்சில் விடுதலைக்கனல் வீறுகொள்ளத் தொடங்கிவிட்டது. அவரது "சுதேசமித்திரன்" இதழும், அரசியல் சுற்றுப்பயணங்களும், "சுய அரசாட்சி வினா-விடை" நூலும் அந்தக் கனலின் சுடர்களே!

இந்திய தேசிய காங்கிரசு பிறந்ததே தமிழ்நாட்டில்தான். 1884 டிசம்பரில் சென்னையில் நடந்த பிரம்மஞான சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த 17 நாட்டுப்பற்றாளர்கள், திவான்பகதூர் இரகுநாதன் இல்லத்தில் தனியே கூடி, இந்தியர் உரிமைக் கோரிக்கைகளை ஒரே குரலில் ஒங்கி ஒலிக்க அனைத்து இந்திய அமைப்பு ஒன்றைத் தோற்றுவிக்கத் தீர்மானித்தார்கள். அதன்படி 1885 மார்ச்சில் அனைத்து இந்திய மாநாடு நடக்க இருக்கிறது என்று அறிக்கை வெளியிடப்பட்டது. 1885 டிசம்பர் 27இல் முதல் மாநாடு பம்பாயில் கூடியது. மொத்தம் 72 பேர்தான் கலந்துகொண்டார்கள். தமிழ்நாட்டின் பேராளர்களில் ஒருவ ராக க.சுப்பிரமணியம் சென்றார். இந்த முதல் மாநாட்டின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்தவரும் சுப்பிரமணியமே. இதுவே இந்திய தேசிய காங்கிரசின் தொடக்கம்.

1878இல் "இந்து" ஆங்கில இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகவும் இருந்த சுப்பிரமணியம், 1882இல் "சுதேசமித்திர"னைத் தொடங்கினார். எதற்காக? விடுதலைப்போர் வெற்றிபெறச் சாதாரண மக்களின் ஆதரவும் தேவை என்பதை அவர் உணர்ந்ததே காரணம்.

"சுதேசமித்திரன்" தொடங்க இருப்பது பற்றித் தனது "இந்து" இதழில் "சுதேசமித்திரன்" - வரலாற்றுப் பத்திரிகை" என்ற தலைப்பில் ஒரு விளம்பரம் வெளியிட்டார். "இந்த ராஜதானியில் இங்கிலீஷ் அறியாத ஜனங்கள் வாசிக்கத் தகுந்த ஒரு தமிழ் சமாசாரப்பத்திரிகை வெகு நாளாய் இல்லை. அதைப்பற்றிப் பல தடவை பல எத்தினங்கள் செய்தும் முடியாமல் இப்போது வயதிலும் அனுபோகத்திலும் முதிர்ந்த சிலரும், பி.ஏ.முதலான இங்கிலீஷ் பரீட்சை தேறின சிலரும் இன்னும் ஒருமுறை முயற்சி செய்ய வேண்டுமென்கிற எண்ணத்துடன் சுதேசத்தாருடைய உதவியைத் தேடுகிறார்கள்" என்று அந்த விளம்பரம் தொடங்குகிறது. "தபால் கூலி உட்பட வருஷம் ஒன்றுக்கு நாலேகால் ரூபாய்தான்

1. அறிஞர் அண்ணா - "நாடும் ஏடும்".

கையொப்பம்" என்று அறிவித்து கையொப்பம் அனுப்பி ஆதரிக்கும்படி விளம்பரம் முடிகிறது.

"இந்து" ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வந்த அவர், தமது வெளியூர் சுற்றுப்பயணத்தின்போதும், மேடையில் தமிழ்ப்பிரசங்கம் செய்யும்போதும், தமிழர் படிக்கத் தமிழில் ஒரு பத்திரிகை வேண்டும் என்பதை உணர்ந்தார். அதன் விளைவே "சுதேசமித்திரன்" என்பார், எழுத்தாளர் துமிலன்.[1]

"தேசாபிமானமும் பாஷாபிமானமும் இன்னவை என்று எவரும் அறியாத அந்தக் காலத்தில் க.சுப்பிரமணியம் தாம் நடத்திக்கொண்டு வந்த "இந்து" என்ற ஆங்கிலப் பத்திரிகையை விட்டுவிட்டு, சாதாரண ஜனங்களுக்கு அறிவைப் பரப்பும் பொருட்டுத் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தது மிகவும் வியக்கத்தக்கது" என்பார், சுப்பிரமணிய சிவா.[2]

"இந்து பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாக இருப்பதால், இங்கிலீஷ் பாஷை தெரியாத தமிழ் ஜனங்களுக்கு தேச சமாசாரங்களை அறிந்து கொள்ள மார்க்கமில்லாதிருப்பதை யோசித்து, "சுதேசமித்திரன்" பத்திரிகையை 1882 ஆம் வருடம் மார்ச்சு மாதத்தில் தொடங்கினேன். தமிழ் ஜன சமூகத்தாரின் அறிவை வளர்ப்பதே மேன்மையென்று கருதினேன்" என்று சுப்பிரமணியமே சொல்லுகிறார்.[3]

"வெளியீடுகள் தமிழில் வேண்டும்; கூட்டங்கள் தமிழில் நடக்க வேண்டும்; அப்பொழுதுதான் விடுதலைப்போராட்டம் மக்களை எட்டும் என்று காங்கிரசு மேடைகளிலும், மற்ற கூட்டங்களிலும் சுப்பிரமணியம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்" என்று அந்நாளைய **"விகட தூதன்"** (19.4.1898) தெரிவிக்கிறது.

"சுதேசமித்திரன்" என்று பெயர் சூட்டியதிலிருந்தே சுப்பிரமணியத்தின் நோக்கத்தை நாம் தெரிந்து கொள்ளலாம். "நாட்டு நண்பன்" என்று அதற்குப் பொருள். "சுயதேசம் - சொந்த நாடு. மித்திரன் - நண்பன். அந்நாளில் இந்தியர்களை "சுதேசிகள்" என்று குறிப்பிடுவது வழக்கம். அந்த சுதேசிகளின் உரிமைக்காக - விடுதலைக்காகத் தொடங்கப்பட்டதே, **"சுதேசமித்திரன்"**.

"சுதேச மித்திரன்" மேலாளராக இருந்த மு. வீரராகவன், 1891இல், பால்ய மணத்தடைச் சட்டம் பற்றி "ஸ்திரீ சம்போக நிர்ணய காலம்" என்ற சிறு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். ("ராணி"வார இதழ் அளவில் 8 பக்கம். முதல் பதிப்பு பத்தாயிரம் படிகள். விலை 6 பைசா.) அதில் "சுதேசமித்திரன்" பற்றி கீழ்க்கண்ட விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

சுதேசமித்திரன்

என்னும் தமிழ்ப்பத்திரிகை வாரமிருமுறை சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. அப்பத்திரிகையில் இத்தேசத்தில் அங்கங்கு நடந்துவரும் முக்கிய சமாசாரங்களைக் காணலாம்.

---

1. "தமிழ்நாட்டுச் செய்தித்தாள்கள்" - தொடர் கட்டுரை - "குமுதம்" 22.2.1962.
2. "ஞானபாநு" (நவம்பர், 1915)
3. "சுதேசமித்திரன்" - வெள்ளிவிழா மலர்.

அப்பத்திரிகை சுமார் பத்து வருஷ காலமாய் இச்சென்னையில் பிரசுரப்படுத்தப்பட்டு எங்கும் வியாபித்து வருகின்றது. அப்பத்திரிகையில் இத்தேசத்தில் 9 வருட காலமாய்க் கூடிவரும் காங்கிரெஸ் சபை விஷயமாய் அங்கங்கு நடக்கும் கிரந்தங்களையும் ஆங்கிலேய நாட்டில் அச்சபை விஷயமாய் நடத்தப்படும் கிரந்தங்களையும் படிக்கலாம். இப்போது பங்காளத்திலும் பொம்பாய் முதலிய இராஜதானிகளிலும் அங்கங்கு பிரசுரமாகும் சுதேசபாஷை பத்திரிகைகளை ஜனங்கள் ஆயிரமாயிரமாக வாங்கிப் படித்து பொது விஷயங்களை அறிகிறார்கள். இங்குள்ளவர்களோ அப்படியில்லை. இங்குள்ளவர்கள் நமது மித்திரனை வாங்கிப் படித்து இத்தேசத்தில் நடக்கும் சங்கதிகளை அறிய வேண்டும். மித்திரன் வேண்டியவர்கள் அடியில் கையொப்பம் செய்தவருக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

மு. வீரராகவாசாரியார்,
மானேஜர்
மவுண்டுரோட்டு, சென்னபட்டணம்.

சந்தா விபரம்

வருடம் 1-க்கு	ரூபா 500
ஆறு மாதத்திற்கு	ரூபா 280
மூன்று மாதத்திற்கு	ரூபா 140

"சுதேசமித்திரன்" காலத்தில் "வித்தியா வர்த்தமானி" என்ற தமிழ்க் கல்வி இதழ் வெளிவந்து கொண்டிருந்தது. அவ்விதழ் 1898 நவம்பர் - டிசம்பர் வெளியீட்டில் "ஜி.சுப்பிரமணிய அய்யர் அவர்களும் சுதேசமித்திரன் பத்திரிகையும்" என்ற தலைப்பில் நீண்ட செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதை இங்கே எடுத்துக்காட்டுவது மிகப் பொருத்தமாக இருக்கும். அந்தச் செய்தி -

"ஜி.சுப்பிரமணிய அய்யர் அவர்கள் இன்னாரென்பதை அனைவர்களும் அறிந்திருக்கலாமென்று எண்ணுகிறோம். அவர் இச்சென்னை நகரின்கண் வெளியாகும் "இந்து" என்னும் ஆங்கிலேயதினவர்த்தமானிக்குப் பத்திராதிபராக இருந்தவர். அவர் அப்பத்திரிகையைச் சுமார் இருபது வருடங்களுக்கு முன் பிரசுரிக்கத் தொடங்கி அதைச் சென்ற மாதம் வரையில் மிக ஒழுங்காக நடத்தி நற்பெயர் பெற்றவர். அவர் ஏதோ ஒரு காரணம் பற்றி இதுவரையில் நடத்திவந்த "இந்து" பத்திரிகையின் சகல சுதந்திரங்களையும் அவரோடு கூட்டாக இருந்த மு.இராகவாச்சாரியார் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு விலகியதற்குச் சிறிது விசனமடைகிறோம். ஆனால், அவருடைய பத்திராதிபத்துவமோ அப்பத்திரிகையோடு நீங்காது சுதேசிகள் அனைவர்களுக்கும் பெருநன்மை விளைவிக்கத்தக்க மற்றொரு சிறந்தப் பத்திரிகையை நடத்த நேர்ந்திருப்பதற்கு அதிக சந்தோஷமடைகிறோம். நமது நண்பர் "இந்து" பத்திரி

கையைப் பிரசுரிக்கத் தொடங்கியதற்கு இரண்டு மூன்று வருசங்களுக்குப் பின் "சுதேசமித்திரன்" என்னும் ஓர் தமிழ்ப் பத்திரிகையை வெளியிடத் தொடங்கினார். அப்பத்திரிகை வரவர விருத்தியாகி, இப்போது வாரம் மும்முறை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. அவர் "இந்து" பத்திரிகையிலிருந்து விலகியதால், இனிச் "சுதேசமித்திரன்" அபிவிருத்திக்கேற்ற பிரயத்தனங்களில் மிகப் பற்றுடையவராகலாமென்று பலரால் நம்பப்படுகிறது. நம் இந்துத் தேசத்தின் இதர ராஜதானிகளில் செல்வாக்குள்ள பல பண்டிதோத்தமர்களால் சுயபாஷைகளில் அனேக தினவர்த்தமானப் பத்திரிகைகள் நடைபெறுகையில் இவ்விராஜதானியில் மட்டும் அவ்விதப் பத்திரிகைகளில் ஒன்றேனும் நாளது வரையில் வெளியாகாதிருப்பது ஒரு பெருங்குறையாக இருக்கிறது. இனி நமது நண்பர் காலம் முழுவதையும் இத்தமிழ்ப்பத்திரிகை விஷயத்திலேயேச் செலவிட நேர்ந்ததால் அடுத்த வருஷம் முதல் அப்பத்திரிகையை தினவர்த்தமானியாய் மாற்றப்போவதாய் 'ஸ்டாண்டர்டு' என்னும் பத்திரிகை கூறுகிறது.[1] அவ்விஷயம் உண்மையாக இருக்கின் நமக்கேயன்றிப் பொதுவாகச் சுதேச பாஷாபிமானிகள் அனைவர்களுக்கும் அதிகச் சந்தோஷத்தை விளைவிக்கக்கூடியதே".

இரண்டு பக்கத்துக்குப் பத்தி பிரியாமல் எழுதப்பட்டிருக்கும் இந்தச் செய்தியிலிருந்து, ஆங்கிலம் அறியாத் தமிழ் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தவே "சுதேசமித்திர"னை சுப்பிரமணியம் தொடங்கினார் என்பது குன்றின் மேலிட்ட விளக்காகக் குறைவின்றித் தெரிகிறது.

தானே தொடங்கி, ஆசிரியராக இருந்து அரும்பாடு பட்டு வளர்த்த "இந்து" இதழில் இருந்து சுப்பிரமணியம் ஏன் விலகினார் என்பதையும் தெரிந்து கொள்ளலாமா? சுப்பிரமணியம் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாகவும் இருந்தார். வாய்ப்பந்தல் போடவில்லை; செயலில் காட்டினார். பத்தே வயதில் விதவையாகிவிட்ட தன் ஒரே மகள் சிவப்பிரியாவுக்கு 1889இல் பம்பாயில் நடந்த இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டு மேடையில் சுப்பிரமணியம் மறுமணம் செய்து வைத்தார். தொடர்ந்து, சென்னையில் விதவை மணத்தை ஓர் இயக்கமாகவே நடத்தி வந்தார். "இந்து"வில் அவருடைய கூட்டாளியாக இருந்த மு.வீரராகவனுக்கு இது பிடிக்கவில்லை. இருவருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சுப்பிரமணியத்தின் சீர்திருத்தச் செயல்களால் "இந்து"வின் விற்பனையும் பாதித்தது. இதனால் சுப்பிரமணியத்துக்கும் வீரராகவனுக்கும் இடையே பிளவு ஏற்பட்டது. கொள்கை பெரிதென்று கருதிய சுப்பிர மணியம், "இந்து"வில் இருந்து விலகிக்கொண்டு, "சுதேசமித்திர"னுக்குத் தனது முழு நேரத்தையும் செலவிட்டார்.

விடுதலைப் போருக்குப் படைக்கலனாக "சுதேசமித்திரன்" விளங்கியது. நாளிதழாக ஆன நாள்முதல் மக்களின் ஆதரவும் பெருகியது. மக்களிடம் நீறுபூத்த நெருப்பாக இருந்த விடுதலை உணர்வை

---

1. ஜி.பரமேசுவரன் நடத்திய "மெட்ராஸ் ஸ்டாண்டர்டு" என்ற ஆங்கில நாளிதழ்.

Reg. No. M. 1736. Price Tw[o] [A]nnas.

The Swadesamitran

ENGLISH WEEKLY

Editor: A. Rangaswami Iyengar. Annual Subscription Rs. 6

Vol. II.] SUNDAY, 25TH MAY, 1924. [No. 13

Principal Contents:

The Final Understanding

The Mannargudi Decisions

ஆங்கில "சுதேசமித்திரன்" (வாரம். மலர் 2, இதழ் 13. மே 25, 1924.) ரோசா முத்தையா தொகுப்பு.

சுப்பிரமணியம் விசிறிவிட்டு கொழுந்துவிட்டு எரியச் செய்தார். தமிழ் நாட்டின் முதல் அரசியல் இதழாக, முழு அரசியல் இதழாக சுதேச மித்திரனை நடத்தினார்.

அரசாங்கத்தின் தாய்மொழி இதழ் அறிக்கைகளில் "சுதேசமித்திரன்" இடம்பெறாத நாளேயில்லை. அரசாங்க மொழிபெயர்ப்பாளராக இருந்த டி.பாலசுந்தரத்தின் *24.4.1898* ஆம் நாளைய அறிக்கையில் இருந்து 'சுதேசமித்திர'னின் போக்கு நன்கு புலனாகிறது. அந்த அறிக்கையில் -

> பெரும்பான்மையான தமிழ் இதழ்கள் அரசாங்க நிர்வாக எந்திரம் பற்றி ஒன்றுமே அறியாதவையாக உள்ளன. உண்மைக்கு மாறான பரபரப்பான செய்திகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டுகின்றன. ஆனால், ஆட்சியாளரிடம் வெறுப்பையும், அவநம்பிக்கையையும் கொள்ள இந்த இதழ்கள் தூண்டுவதில்லை.
>
> சுதேசமித்திரனும், விகடதூதனும் அரசாங்கத்தையும், அரசு அதிகாரிகளையும் கண்டிப்பதில் இன்னும் சற்று மிதமான போக்கைப் பின்பற்ற வேண்டும். பொதுவாக சுதேசமித்திரனில் 'இந்து'வில் இருந்து மொழி பெயர்க்கப்படும் செய்திகளே பெரும்பான்மையாக உள்ளன. இதனால் சுதேசமித்திரனை "இந்து"வின் எதிரொலி என்று கூறலாம்.
>
> ஆங்கிலம் அறிந்தவர் உதவியுடன் "சுதேசமித்திரன்" நடந்து வருவதால், இதில் வெளியாகும் வாதங்களில், விகடதூதன், வெற்றிக்கொடியோன், பறையன், ஆரிய ஜனப்பிரியன், ஜனானுகூலன் முதலான பிற இதழ்களில் காணப்பெறும் பொருத்தமற்ற தவறான வாதங்கள் காணப்படுவதில்லை. இந்த இதழ்கள் அரசாங்கத்தைக் கண்டிப்பதில் சுதேசமித்திரனைப் பொதுவாகப் பின்பற்றினாலும், அரசியல் கருத்துகளை எழுதுவதில் திறமையற்று உள்ளன. இதனால் சற்று உயர்கல்வி பெற்றவர்கள் இந்த இதழ்களை விரும்பிப் படிப்பதில்லை.[1]

அந்நாளில் வேறு சில இதழ்களும் அரசியல் செய்திகள் வெளியிட்டன. *1887*இல் காங்கிரசின் *3* ஆவது மாநாடு சென்னையில் நடந்தபொழுது, அதை வரவேற்று இந்து ஜனபூசணி, வெற்றிக்கொடியோன், குடந்தை மித்திரன் ஆகிய இதழ்கள் எழுதின. என்றாலும், சுதேசமித்திரனைப் பற்றி மட்டுமே அந்நாளைய அரசு கவலைப்பட்டது என்பது இந்த அறிக்கையில் இருந்து தெரிகிறது. அரசியலில் மற்ற இதழ்களுக்கு முன்னோடியாகவும் "சுதேசமித்திரன்" விளங்கியிருக்கிறது.

அரசாங்கத்தின் உப்பு வரியை எதிர்த்து சுதேசமித்திரன் எத்தனையோ முறை எழுதியிருக்கிறது. "இந்தியரை ஆள இங்கிலாந்தில் இருந்துதான் ஆள் வரவேண்டுமா? இங்கே திறமைசாலிகள் இல்லையா?" என்று துணிந்து கேட்டது. திருக்குறள் கண்ட நாட்டுக்கு இங்கிலாந்தில் இருந்து நீதிபதிகள்கூட இறக்குமதி செய்யப்பட்டார்கள். இதை எதிர்த்து, *1887*இல் "இத்தேசத்து நியாயாதிபதிகள்" என்று சுதேசமித்திரன் தலையங்கம் எழுதியது. "இப்போது ஆங்கில நாட்டிலிருந்து இந்தத்

---

1. "பத்திரிகையாளர் பாரதியார்" - பெ.சு.மணி.

தேசத்திற்கு சிவில் சர்வீஸ் பரீட்சை தேறிவிட்டு வரும் சிறுவர்களைக் கவர்மெண்டார் எந்த வேலைக்கும் நியமித்து விடுகிறார்கள். இது நமக்குச் சரியானதாகத் தோன்றவில்லை. அவர்கள் என்னதான் புத்திசாலி களாக இருந்தபோதிலும் அனுபோகமில்லாமல் எப்படித்தான் கலெக்டர், ஜில்லா ஜட்ஜ், கமிஷனர் வேலைகளைப் பிழையின்றிப் பார்க்க முடியும்?" என்று அந்தத் தலையங்கத்தில் சுப்பிரமணியம் கணை தொடுத்தார்.

4.5.1887 சுதேசமித்திரனில் "ஆங்கிலேயருக்கு இந்தியா ஒரு பெரிய கடையா?" என்று ஒரு தலையங்கம். அத்தலையங்கம் அந்நியப் பொருட்களைப் புறக்கணிக்கக் கோரியது. "நம் தேசக்கடைகளில் அரிசி, பருப்பு, காய்கறி தவிர மற்றவையெல்லாம் ஆங்கிலேயர் சாமான்களே அன்றி, நமது சாமான்கள் அல்லவே? அப்படிப்பட்டச் சாமான்களை சிருஷ்டிக்க, நமது தேசமக்களுக்குத் திறமை இல்லையோ?" தேசாபிமானம் இல்லையோ? தைரியமில்லையோ? ரோஷமில்லையோ?" என்று மக்களைத் தட்டி எழுப்பவும் செய்தது.

அரசாங்கத் தமிழ் மொழிபெயர்ப்பாளர் சி.டி.மக்லின் 11.1.1887இல் அரசுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில், தமிழில் இருந்தால்தானே தமிழ் மக்கள் அரசியலை, அரசு நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ள முடியும் என்று "சுதேசமித்திரன்" உரிமைக்குப் போராடிய ஒரு செய்தி காணப்படுகிறது. அது –

> "சட்டசபையில் தாக்கல் ஆகும் மசோதாக்கள் தமிழ்ப் படுத்தப்பட்டு, மக்களின் கருத்துகள் – ஆலோசனைகளைக் கேட்பதற்கு முன்பே சட்டமாக்குவதில் என்ன பயன் என்று 'சுதேசமித்திரன்' ஆசிரியர் கேட்கிறார்.
>
> ஆங்கிலம் அறிந்த மக்கள் மிகக்குறைவு. அவர்களின் கருத்துகளை அறிந்தபின்பு அரசு மசோதாக்களைச் சட்டம் ஆக்குகிறது. இது எப்படி எல்லா மக்களின் ஒப்புதலையும் பெற்றது ஆகும்? மசோதாக்களை ஏன் ஒரே நேரத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடக்கூடாது? ஆங்கிலம் அறிந்த ஒரு சிலரின் கருத்துகளை மட்டும் கேட்டு சட்டங்கள் செய்வது பேரரசியின் வாக்குறுதிக்கு[1] மாறுபட்டது ஆகும். ஆங்கில இதழ்களின், ஆங்கிலம் அறிந்த மக்களின் கருத்துகளை மட்டும் அறிந்து கொண்டால் போதுமா? தமிழ் இதழ்களின் கருத்துகள் பரிசீலிக்க ஏற்றவை அல்ல என்று அரசு கருதுகிறதா? மசோதாக்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எல்லா இதழாசிரியர்களுக்கும் இலவசமாக அளித்து, அவர்களின் கருத்துகளைக் கேட்பதே சிறந்த வழியாகும்" என்று 'சுதேசமித்திரன்' சொல்லுகிறது.

தமிழ் இதழ்களின் உரிமைக்காகச் சுப்பிரமணியம் போராடியதும் இதிலிருந்து தெரிகிறது.

"இந்தியாவின் தந்தை" என்று போற்றப்படும் அண்ணல் காந்தியடிகளை அவர் தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்து

---

1. 1858 இல் இந்தியாவைப் பிரிட்டீசுப் பேரரசுடன் இணைத்துக் கொண்டபொழுது, பேரரசி விக்டோரியா கொடுத்த உறுதிமொழி.

இந்தியர்களின் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருந்த நாளிலேயே தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது, "சுதேசமித்திரன்"தான். காந்தியின் தென்னாப்பிரிக்காப் போராட்டம் பற்றி மட்டும் சுதேசமித்திரனில் எண்பது தலையங்கங்களைச் சுப்பிரமணியம் எழுதினார். தொடர்ந்து செய்திகள் வெளியிட்டார். அந்நாளில் டர்பனில் (தென்னாப்பிரிக்கா) "ஞானபாநு" இதழை நடத்தி வந்த தில்லையாடி வேதியப்பன்[1] சுதேசமித்திரன் செய்தியாளராக இருந்து, அந்தச் செய்திகளை அனுப்பி வந்தார்.

மதுரையில் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்த பாரதியாரைச் சென்னைக்கு அழைத்து வந்து சுதேசமித்திரனின் துணை ஆசிரியர் ஆக்கியவரும், 'சுப்பிரமணியமே. அரசியலில் ஈடுபட்டுப் பாரதியார் நாட்டுக் கவிஞர் ஆனதற்கு இதுவே பிள்ளையார் சூழி! கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் அல்லவா? பாரதியாரை விடுதலைப் போர்க் கவிஞர் ஆக்கியது, சுதேசமித்திரனே.

1908 சனவரி 13 முதல் 25க்குள் "தியாகம் கேள்வி – பதில்", "தியாகிகள் அரசாங்க வேலையில் சேரலாமா?" ஆகிய இரு தலையங்கங்களை சுப்பிரமணியம் எழுதினார். தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் ஆற்றிய அனல் பறக்கும் சொற்பொழிவுகளை வெளியிட்டார். இதற்காக நாட்டுத்துரோகக் குற்றச்சாட்டில் சுப்பிரமணியத்தை அரசாங்கம் கைது செய்தது. அப்பொழுது அவர் (21.8.1908) உடல் நலம் இல்லாமல் குற்றாலத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். அங்கு கைது செய்யப்பட்டு, சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, காவலில் வைக்கப்பட்டார். உடல்நலம் மோசமாக இருந்ததால், செப்டம்பர் 5இல் பொறுப்பில் விடுதலை செய்யப்பட்டார்.

1915இல் காந்தியடிகள் சென்னைக்கு வந்தபொழுது, சுப்பிரமணியம் முதுமையில் தளர்ந்து நோயில் வளர்ந்து படுத்தப் படுக்கையாக இருந்தார். அவரைக் காண அவரது வீட்டுக்கே காந்தி வந்தார். அவரைப் பார்த்ததும், "நாட்டுக்குத் தொண்டு செய்ய முடியாமல் படுத்து விட்டேனே" என்று சுப்பிரமணியம் கண்ணீர் வடித்தார். "நீங்கள் வேண்டிய அளவு நாட்டுக்கு உழைத்துவிட்டீர்கள். இனி அமைதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவரது கண்ணீரைத் தன் கைகளால் காந்தி துடைத்துவிட்டார்.[2]

கண்ட பலன் என்ன?

இவ்வாறெல்லாம் இன்னல்பட்டும் அந்நாளைய ஆசிரியர்கள் கண்ட ஆதாயம் என்ன? க.சுப்பிரமணியத்தின் சமகால ஆசிரியரும், அவரைப் போலவே விடுதலைப் போராட்ட வீரரும், சிறை சென்ற தியாகியுமான சுப்பிரமணிய சிவா[3] அந்த "ஆதாய"த்தைச் சொல்லுகிறார்:

"வறுமை வியாதி மரணம் பஞ்சம்
சிறுமை இவற்றால் சீர்கழிகின்ற

---

1. காந்தியின் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த தில்லையாடி வள்ளியம்மையின் சிற்றப்பா. 2. "தமிழ் நாட்டில் காந்தி" – அ. இராமசாமி (1969).
3. "பிரபஞ்சமித்திரன்", "இந்திய தேசாந்திரி", "ஞானபாநு" இதழ்களின் ஆசிரியர்.

தமிழாம் மக்களைத்தட்டி யெழுப்பி
அமிழ்தாம் ஞான ஆநந்த மூட்டி
வீரம் ஆண்மை வெற்றி பெருமை
தீரம் முதலாம் தேசு புகுத்திச்
சிறந்தோர் என்றே சீரியோர் செப்ப
அறந்தான் செய்ய அன்புடன் முயன்று
பத்திரிகை புத்தகம் பலவழியாக
உரிமை வேண்டி உரிமை வேண்டி
வரவும் என்கை வலிக்குது ஐயோ
மனமும் உடைந்தது மார்பும் நோகுது"[1]

இதனால்தான் "தேசாபிமானத்துக்கு உழைத்த இந்த உத்தமர்களுக்கு விருத்த வயதில் பென்சன் கொடுத்து காப்பவர் யார்? கடவுள்தான் காக்க வேண்டும்" என்றார், இதழாளரான சே.ப.நரசிம்மலு.[2]

வாசகர் மனநிலை

இதழ்கள் இத்துணை அரும்பெரும் பணியாற்றியும், தமிழ் மக்களிடம் அவற்றுக்கு வரவேற்பு எப்படி இருந்தது?

தமிழில் இதழ்கள் வெளிவரத் தொடங்கிய காலத்தில் தமிழ்நாட்டில் எத்தனையோ அறிஞர்கள் இருந்தார்கள். யாராவது இதழ்களைப் பற்றி ஏதாவது எழுதியிருக்கிறார்களா? இல்லை!

"விற்பனர் வேதநாயகம்" என்று சிறப்புப்பெற்ற பெருங்கதை எழுத்தாளர், கவிஞர், அருந்தமிழ்ப்புலவர், அந்நாளிலேயே நீதிமன்றத்தில் தமிழ் முழங்க வேண்டுமென்று போராடியவர், அருமையான அறவுரை அறிவுரைகளை அள்ளி அள்ளி வழங்கியவர், மயிலாடுதுறை நீதிபதி வேதநாயகர். அவரிடம் செய்தித்தாள் படிக்கும் வழக்கம் இருந்தது. 1872இல் நடந்த இது தொடர்பான ஒரு நிகழ்ச்சியை "மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம்" என்ற நூலில் தமிழ்த்தாத்தா உ.வே.சா.குறிப்பிடுகிறார். அது - "கல்யாணத்திற்குப் பின்பு சில தினம் இவர்,[3] மாயூரத்தில் இருந்தார். அக்காலத்தில் ஒருநாள் இவர் வேதநாயகம் பிள்ளையைப் பார்க்கச் சென்றார், நானும் உடன் சென்றேன். அவர் ஏதோ ஒரு சமாசாரப்பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார்".

உலக அறிவு நிறைந்த வேதநாயகனாரே இதழ்களைப் பற்றி எதுவும் எழுதிவைக்கவில்லை. உ.வே.சா.கூட "ஏதோ ஒரு சமாசாரப்பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார்" என்கிறாரே தவிர, அந்த இதழின் பெயர் என்ன என்பதைச் சொல்லக்கூட ஆர்வம்காட்டவில்லை. தமிழறிஞர்களே இப்படி என்றால், சாதாரண மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

---

1. "தமிழ் இதழ்கள் தோற்றம் - வளர்ச்சி" - அ.மா.சாமி.

2. "தட்சண தேச யாத்திரை" - 1901.

3. பெரும்புலவர் மீனாட்சி சுந்தரனார். இவருடைய மகன் சிதம்பரத்தின் திருமணம் 1872இல் மயிலாடுதுறையில் நடந்தது.

இதழ்களின் விற்பனையைப் பார்த்தாலே அவற்றுக்கு மக்களிடம் இருந்த "வரவேற்பு" தெரிந்துவிடும். எந்த இதழும் மூன்று இலக்கத்தைத் தாண்டவில்லை! இரண்டு இலக்க இதழ்களும் இருந்தன! மூன்று இலக்கத்தைத் தாண்டிய இதழ்கள் மூன்றுகூட இருக்காது!

1861 ஆம் ஆண்டுக்கான சென்னை அரசு பொதுத்துறை அறிக்கையில் காணப்படும் இதழ்கள், விற்பனை விவரத்துடன் -

மதியம்	- 150 படிகள்
இராசவிருத்தி போதினி	- 286 படிகள்
தினவர்த்தமானி	- 500 படிகள்
ஜனோபகாரப்பத்திரிகை	- வெறும் 34 படிகள்

<u>1877 பிப்ரவரி தாய்மொழி செய்தித்தாள்கள் அறிக்கையில்</u> -

ஞானபாநு	—	- 300 படிகள்
வெற்றிக்கொடியோன்	-	- 250 படிகள்
சத்தியவர்த்தமானி	-	- 430 படிகள்
திருவாங்கூர் அபிமானி		- 316 படிகள்

<u>1887 பிப்ரவரி தாய்மொழி செய்தித்தாள்கள் அறிக்கையில்</u> -

இந்து ஜன பூசணி	-	- 200 படிகள்
வெற்றிக்கொடியோன்		- 250 படிகள்
சுதேசாபிமானி (சென்னை)-		- 480 படிகள்
சுஜனமனோரஞ்சனி		- 220 படிகள்
தத்துவவிவேகினி		- 140 படிகள்
திருவாங்கூர் அபிமானி		- 350 படிகள்
கலாநிதி		- 275 படிகள்
சுதேசாபிமானி (சேலம்)		- 150 படிகள்
சுதேசமித்திரன் (வாரம் இருமுறை)		- 1,120 படிகள்
லலித பிரசோனதயா (நாளிதழ்)		- 150 படிகள்
பிரம்மஞானபோதினி		- 110 படிகள்

மற்ற இதழ்களைவிட "சுதேசமித்திர"னுக்கு நல்ல ஆதரவு இருந்தது இதிலிருந்து தெரிகிறது. சேலம் "சுதேசாபிமானி" 150 படிகள் விற்க, சென்னை "சுதேசாபிமானி" 480 படிகள் விற்றதிலிருந்து, பட்டணத்தில் வாசகர்கள் அதிகம் என்று தெரிகிறது. அதோடு அந்நாளில் ஒரே நேரத்தில் ஒரே பெயரில் இரு இதழ்கள் வெளிவந்ததையும் நாம் அறிய முடிகிறது. வெளிவந்த இடத்தில் மட்டுமே பெரும்பாலும் விற்பனை இருந்ததால், ஒரே பெயரில் மோதல் ஏற்பட வழி இருக்கவில்லை.

இதழ்களின் விலை குறைவாக இருந்தும், விற்பனை அதைவிடக் குறைவாக இருந்ததற்குக் காரணம், மக்களின் கல்வி அறிவு குறைவாக இருந்ததுதான். நீரளவேதானே நீர் அம்பல் ஆகும்? கல்வி அறிவில் சென்னை மாநிலத்தில் நாலாம் இடம் பெற்றிருந்த திருநெல்வேலி மாவட்டத்தில் 1901 ஆம் ஆண்டில் கல்வி கற்றோர் 10.4 விழுக்

காடுதான்[1] என்றால், அதற்கு முந்தைய நூற்றாண்டில் தமிழ்நாடு முழுவதுமாகக் கல்வியறிவு எவ்வளவு குறைவாக இருந்திருக்க வேண்டும்?

இந்தக் கீழான நிலையிலும், "தேசோபகாரி" (1861) இதழ் 16,800 படிகள் விற்றதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. இதை அந்நாளைய சாதனை என்றே சொல்லவேண்டும். சாதாரண சாதனை அல்ல; மூக்கில் விரல் வைக்கக்கூடிய இமாலய சாதனை!

19 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டான 1900 ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்களில் தாய்மொழி செய்தித்தாள்கள் அறிக்கையில் –

மாதர் மனோரஞ்சனி	– 400 படிகள்
மதுவிலக்குத் தூதன்	– 500 படிகள்
விஞ்ஞானோதயம்	– 500 படிகள்
நற்போதகம்	– 1000 படிகள்
பாரிஜாதம்	– 1000 படிகள்
சென்னை தாரகை	– 1000 படிகள்
தட்சண தீபம்	– 800 படிகள்
சர்வஜனமித்திரன்	– 1000 படிகள்
பை பத்திரிகை	– 500 படிகள்
சுதேசமித்திரன் (நாளிதழ்)	– 1050 படிகள்

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டெறும்பு வளர்ந்து கழுதையானதைக் காணுகிறோம்.

"சுதேசமித்திரன்" செய்தி

"சுதேசமித்திரன்" 6.8.1886 இதழில் முதல் பக்கத்தில் "சுதேசபாஷா பத்திரிகைகள்" என்ற தலைப்பில் "தேசோபகாரி" என்பவர் எழுதிய ஒருசிறு துண்டு இடம் பெற்றிருக்கிறது. துண்டுச் செய்திதான் என்றாலும், அது அந்நாளைய வாசகர்கள் – இதழ்களின் நிலையை அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. அது –

சுதேச பாஷா பத்திரிகை

இத்தேசத்தார்க்குப் பத்திரிகையின் பயன் தெரியாது. படியாதவர்களுக்குத் தெரியாதென்பது உண்மைதான். படித்தவர்க்கோ அவர்க்கும் தெரியாதுதான். சிறுவயதில் படித்த படிப்பையெல்லாம் அதோடு கட்டிவைத்துப் பொருள் சம்பாதிக்கப் புறப்பட்டபோது படிக்கும் காலம் போய்விட்டதே, இன்னும் படிக்கிறதா? இக்காலத்தில் படிப்பது அவமான மன்றோ என்று சொல்வார்கள். மேலும், 'படித்த வித்துவான்களுக்கு வேலையில்லை, பிழைப்புமில்லை, அதனால் பேப்பர் வேலையை எடுத்துக் கொண்டார்கள். இந்தப் பேப்பர் ஓங்கப்போகிறதா? பேப்பரை வாங்க வேலையில்லாதவன் எவனிருக்கிறான்' என்றுரைப்பதோடு, பேப்பர் வாங்கி வாசிப்போரை நாலுபேர் கூடிக் கேலி பண்ணுவார்கள். வித்துவான்களோ சுத்தமாய்ப் பேப்பரை லக்ஷியஞ் செய்வதில்லை.

1. சென்னை மாநில மாவட்ட கெசட்டியர்கள் – திருநெல்வேலி (1917)

'பேப்பரில் இலக்கண இலக்கியக் குற்றங்களிருக்கின்றன; கண்டவனெல்லாம் எழுத ஆரம்பிக்கிறான்; அதையா வாங்கிப் படிக்கிறது?' என்றிகழ்ச்சி செய்கிறார்கள். தப்பி வாங்கு பவரோ பணம் சரியாகத் தருவதில்லை. என்ன இடித்திடித்து பத்திராதிபர் கதறினும் செவிடர் போலிருந்து விடுகிறார்கள். பத்திரிகையில் கதறுவதோடு கார்டும் எழுதித் தொலைக் கிறார்கள். பதில் கிடையாது; பேப்பர் வேண்டுவதில்லை யெனவும் பதில் கொடுப்பதில்லை. பத்திராதிபர் பணத்தை விழுங்கிவிட்ட கையொப்பக்காரர்களுக்குக் கணக்கில்லை. இதனால் இத்தேசத்தில் பத்திரிகைகள் தலையெடுக்காது தோன்றித் தோன்றி நசிகின்றன. பத்திரிகை விருத்தியாகும் தேசங்களில் குடிகளுக்கு க்ஷேமமுண்டாய் வருவதைக் காண்கிறோம். போஸ்டாபீசாரும் பத்திரிகையின் போஸ்டு சார்ஜைக் குறைத்தார்கள். குறைத்தும் பத்திரிகை பெருக வில்லை. பத்திரிகைக்கு விஷயம் எழுதுவோர் ஏராளமாயிருந்தும் செலவாகாமையாலும் பலன் தராமையாலும் சோர்வடை கிறார்கள். இது நமது தேசத்திற்குத் துர்ப்பாக்கியமே. இங்கிலீஷ் காரர் சொற்ப ஜனமிருந்தும் அவர் பத்திரிகைகள் எவ்வளவோ பெருத்த தொகையாகின்றன. நம்மவர் ஜனத்தொகை மிதமிஞ்சி யிருந்தும் பத்திரிகை அவ்வளவாக விற்கவில்லை. நியாயமாய் நடக்கும் உத்தமரைப் பற்றி யாது முரைத்தோமில்லை.

— தேசோபகாரி

"திராவிட வர்த்தமானி" *(18.12.1887)* இதழும் தமிழ் இதழ்களை மக்கள் ஆதரிக்கவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறது. ஆனால், இதற்கு இவ்விதழ் கூறும் காரணம் வேறு. "திராவிட வர்த்தமானி" கூறுகிறது –

இதழ்கள் இப்பொழுது உறுதியான கால்களுடன் நிற் கின்றன. அரசாங்கம் முன்பு இதழ்களைப் புறக்கணித்தது. இப்பொழுது அரசாங்கத்தின் கவனம் இதழ்கள் மீது விழுந்திருக்கிறது.

தமிழர்கள் நடத்தும் ஆங்கில இதழ்களைப் பார்த்து ஆங்கிலேயரோ, அரசாங்க அதிகாரிகளோ அஞ்சமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் மிகச் சிலர். எனவே, அவர்கள் விழிப்புணர்வு பெற்றாலும் அரசாங்கம் அஞ்சாது. ஆனால், சாதாரண மக்கள் தங்கள் உரிமைகளை அறிந்தால், பிறகு அவர்களின் கைப்பாவையாக ஆங்கிலேயர் ஆட வேண்டி யிருக்கும்.

மக்கள் தமிழ் இதழ்களைப் படிக்க வேண்டும். அப்பொழுது தான் தங்களின் உரிமைகளையும், அரசுடன் தங்களுக்குள்ள உறவையும் உணர முடியும்.[1]

இதழ்களின் இப்படியான குரல் செவிடன் காதில் ஊதிய சங்காகப் போய்விடவில்லை என்பதை இன்று இலட்சக்கணக்கில் விற்பனையாகும் தமிழ் இதழ்கள் உறுதி செய்கின்றன.

---

1. ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தது.

நூற்றாண்டின் இறுதியில்

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் இதழ்களின் நிலை என்ன என்பதை அந்நாளில் வெளிவந்த ஓர் இதழைக் கொண்டே நாம் அறிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. நூல்பதிவாளரின் ஆண்டு அறிக்கை பற்றி "வித்தியாவர்த்தமானி" 1899 சூன் இதழில் எழுதியது. அது -

"நம் சென்னை ராஜதானியில் வெளியாகும் சுதேசபாஷா பத்திரிகைகளைப் பற்றிய சென்ற வருஷாந்த ரிப்போர்ட்டின்பேரில் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் உத்தரவில் இங்கு பிரசுரமாகி வரும் சுதேசபாஷா வர்த்தமானப் பத்திரிகைகளும் (நியூஸ் பேப்பர்ஸ்) சாதாரணப் பத்திரிகைகளும் (பிரியாடிகல்ஸ்) சேர்ந்த மொத்தத்தொகை தொண்ணூற்றாறு என்றும், அவைகளில் தமிழில் முப்பதும், தெலுங்கில் இருபதும், மலையாளத்தில் பதினைந்தும், இந்துஸ்தானியில் ஏழும், கன்னடத்தில் ஆறும், கலப்படமாகப் பதினெட்டும் வெளியாகின்றன என்றும் குறித்திருப்பதோடு இவைகளில் முன்வருஷத்தைப் போலவே தமிழ், தெலுங்கு பாஷைகளில் வெவ்வேறாக வெளியாகி வரும் சத்தியதூதன் என்னும் பத்திரிகைதான் அதிகமாகப் பரவி வருகிறதென்றும் கண்டிருக்கிறது. இப்பத்திரிகைகளின் தொகையை இவ்விராஜ தானியில் அவ்வப் பாஷை பேசும் சனசங்கியைக் கொண்டு பார்க்கையில் நம் நாட்டில் சுதேச பாஷைப் பத்திரிகைகளின் தொகை அதிகக் குறைவாகவே காணப்படுகிறது. ஏனெனில், இங்கு தமிழ் பேசுவோர் 1 கோடியே 50 இலட்சம் பேருக்கு 30 பத்திரிகைகளும், தெலுங்கு பேசுவோர் 1 கோடியே 30 1/2 இலட்சம் பேர்களுக்கு 20 பத்திரிகைகளும் வெளியாகின்றன. மலையாள பாஷையோ 201/2 இலட்சம் பேரால் மட்டும் பேசப்படுவதாக இருந்தும் அப்பாஷையில் 15 பத்திரிகைகள் உலாவிவருதல் சிறிது மேன்மையே. இதனால் நம் மேனாட்டு மலையாளவாசிகள் சுயபாஷைப் பத்திரிகைகள் விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்துவதாக ஏற்படுவதால், நாம் அதிகமாகச் சந்தோஷிக்கிறோம். இவ்விராஜதானியில் கன்னட பாஷை பேசுவோரின் தொகை 20 1/2 இலட்சத்துக்கு 6 பத்திரிகைகளும் சற்றேறத்தாழ அதே தொகையுள்ள மகமதியர்களுக்கு 7 பத்திரிகைகளும் வெளியாகின்றன. சாதாரணமாக நம் நாட்டில் சுதேசபாஷாப் பத்திரிகைகள் நல்ல நிலைமைக்கு வராமலிருப்பதற்கு முக்கியக் காரணம் நம்மில் இங்கிலீஷ் பாஷையைக் கற்ற சுதேசிகள் தம் சுயபாஷைப் பத்திரிகைகளை அலட்சியம் செய்வதும், அப்பாஷைப் பழக்கமற்ற மற்றவர்கள் பத்திரிகைகளின் பெரும் பயன்களை நன்கு உணராமையுமாம்".

பத்தியில்லாமல் அனுமார் வால் போல எழுதப்பட்டிருக்கிறது. அந்நாள் வழக்கம், இது.

8. இதழ்கள் வளர்த்த இன்பத் தமிழ்

உலகின் மூத்த மொழிகளில் முத்தமிழும் ஒன்று. இன்றும் உயிரோடு உள்ள, வரலாற்றுக் காலத்துக்கு முந்திய இரண்டு, மூன்று மொழிகளில் தமிழும் ஒன்று என்ற சிறப்பும் உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகால இலக்கண இலக்கிய வளம் நிறைந்த மொழி என்ற பெருமையும் கொண்டது, தமிழ்.

அந்தத் தமிழ் 15 ஆம் நூற்றாண்டு வரை ஏட்டுத் தமிழாகத்தான் இருந்தது. கற்றோர் தமிழ், அது. மற்றோருக்கு அது பேச்சுத்தமிழ் மட்டுமே. அச்சுக் கண்ட பின்புதான் ஏட்டுத்தமிழ் நாட்டுத் தமிழ் ஆயிற்று.

முதன் முதலில் அச்சுக்கண்ட உலக மொழிகளில் தமிழும் ஒன்று. உருசியாவில் 1563இல் முதல் நூல் அச்சாயிற்று. அமெரிக்காவிலும், சீனாவிலும் 1584இல். சப்பானில் 1890இல். ஆனால், தமிழில் 1554லேயே முதல் நூல் அச்சேறிவிட்டது. தமிழுக்கு இந்தச் சிறப்பைத் தேடித் தந்தவர்கள், போர்த்துக்கீசியர்.

இந்தியாவில் முதன் முதலில் ஏசுநாதரின் "நற்செய்தி"யைப் பரப்பிய வர்களும் போர்த்துக்கீசியரே. 1505இல் கொச்சியில் போர்த்துக்கீசியரின் ஆளுமை ஏற்பட்டது. திருச்சூரை அடுத்த அம்பலக்காட்டில் 1550இல் அவர்கள் திருச்சபை அமைத்தார்கள். கொச்சி முதல் தூத்துக்குடிவரை கடற்கரை ஓரமாக வாழ்ந்த தமிழ் மீனவர்களிடம் கிறித்துவின் "நற் செய்தி"யைப் பரப்பினார்கள். இதற்குத் தமிழ் மொழியில் அச்சிட்ட நூற்கள் அவர்களுக்குத் தேவைப்பட்டன.

இந்த நிலையில் போர்த்துக்கீசில் இருந்து கோவாவுக்கு 1556இல் ஓர் அச்சகம் வந்து சேர்ந்தது.[1]

இந்த அச்சகம் வருதற்கு முன்பே கோவாவில் அச்சடிக்கும் வேலை நடந்து கொண்டுதான் இருந்தது. கிறித்துவ வணக்கங்களையும், புனிதர் களின் படங்களையும் மரப்பலகைகளில் பக்கம் பக்கமாகச் செதுக்கி அச்சிட்டார்கள். 1539இல் கோவாவில் இருந்து போர்த்துக்கலுக்கு திருத் தந்தையர்கள் எழுதிய அஞ்சல்களில் இந்த விவரம் காணப்படுகிறது.[2]

கோவா வந்த அச்சகத்தில் முதலில் உதிரித்தாள்களும், நாலுபக்க சிற்றேடுகளும்[3] அச்சிடப்பட்டன. உதிரித்தாள்கள் ஆலய வாசலில் ஒட்டப்பட்டன. 1556இல் முதன் முதலில் "தத்துவம்" என்ற சிற்றேடு அச்சிடப்பட்டது. அடுத்து 1557இல் "தம்பிரான் வணக்கம்" என்ற சிற்றேடு தமிழில் அச்சிடப்பட்டது.[4]

அது புனித சேவியர் எழுதியது. கோவாவைத் தலைமையிடமாகக் கொண்ட இவர், தூத்துக்குடி வரை வந்து மிகவும் செல்வாக்குப் பெற்றார்.

---

1. 1510 முதல் கோவா போர்த்துக்கீசியரின் ஆளுமையில் இருந்தது.
2. கோவா – வரலாற்றுக் குறிப்புகள் – அந்தோனி டிமெண்சிசு (ஆங்கில நூல் – 1978)
3. Booklets
4. இந்திய அச்சு-பதிப்பு வரலாறு (பி.எசு.கேசவன்)



CONCLUSIONES
PHILOSOPHICAS
De Universalibus,
VIRGINIS DEIPARÆ
PARENTIBUS SANCTISSIMIS,
SCILICET
JOACHIMO
ET
ANNÆ
DICATAS
Præside Fr. ANTONIO QUADROS
Sacræ Theologiæ Doct. et Professore Colegii D. Pauli
D & C
FRANCISCUS CABRAL
Alumnus in Collegio D. Pauli ejusdem Ordinis defensurus die hujus mensis vespere
DISPUTABITUR
Utrum *Abstracta natura eo ipso abstrahantur illius proprietates negentur?*
CONCLUSIO I.
De Distinctionibus & Universali materialiter sumpto

DISTINCTIO quæ idem valet, atque Unum non esse aliud, dividitur

கோவாவில் அச்சான முதல் நூல் (1556)

மீனவர்களிடம் பேச்சுத்தமிழ் கற்றார். அந்தத் தமிழறிவைக் கொண்டு இந்தச் சிற்றேட்டை எழுதினார். 1561 டிசம்பர் 4 ஆம் நாள் கோவாவில் இருந்து இலிசுபனுக்கு எழுதிய ஓர் அஞ்சலில் இலூயிசு என்ற திருத்தந்தை இந்தச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். "தமிழர்களின் சொந்த மொழியில் கோவாவில் அச்சிடப்பட்டத் 'தம்பிரான் வணக்கம்' கொண்டு, அவர்களுக்குத் தமிழிலேயே படித்தும் பாடியும் காட்டப் பட்டன" என்று அவர் எழுதியிருக்கிறார்.

அந்நாளில் தமிழ் அச்சு எழுத்துகள் வார்க்கப்படவில்லை. எனவே, 1554 இல் இலிசுபனில் 'லூசே வினா-விடை' அச்சிட்டது போல, உரோமன் எழுத்துகளைக் கொண்டு இத்தமிழ் நூல் அச்சிடப்பட்டது. போர்த்துக் கீசிய மொழி அறிந்த தந்தையர் படித்துக்காட்ட மட்டுமே இந்நூல் பயன்பட்டது. தமிழர்கள் தாங்களே படித்துக் கொள்ளும்படியாக இல்லை. இக்குறையை அறிந்த தந்தையர், தமிழ் எழுத்துகளை வார்க்க வேண்டிய தேவையை உணர்ந்து, அந்த முயற்சியில் ஈடுபட்டார்கள். 1577 இல் அம் முயற்சியில் வெற்றியும் பெற்றார்கள்.

1577 இல் "தம்பிரான் வணக்கம்" மீண்டும் கோவாவில் அச்சிடப்பட்டது. இப்பொழுது தமிழ் எழுத்துகளைக் கொண்டே அச்சிட்டார்கள். இப் பொழுதுதான் தமிழ் எழுத்துகள் முதல் முறையாக அச்சுக்கண்டன.

இந்நூலின் ஒருபடி 18 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை லேடன் (ஆலந்து) பல்கலைக்கழகத்தில் இருந்தது.[1] அதன்பின் காணவில்லை. சுவான் கொன்வால்சு என்ற இசுபானியர் இந்நூலுக்கான தமிழ் எழுத்துகளை வார்த்த செய்தியை ஏற்கனவே பார்த்தோம். பின்னால் வந்த "தம்பிரான் வணக்கம்" பதிப்புகளுக்கு இது ஒரு முன்னோடிப் பதிப்பாகக் கருதப்படுகிறது.

"1575 ஆம் ஆண்டில் கோவா நகரில் கூடிய சேசுசபை மாநிலக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய வலிஞ்ஞானோ என்ற அடிகளார் தமிழ் மொழியில் கிறித்துவத் திருமுறையின் அறிவுரைகளைப் படிப்பிக்கும் நூல் ஒன்றும் இல்லாது கண்டு, மிகவும் மனம் நொந்து, அக்குறையைப் போக்குமாறு அண்டிறீக்குப் பாதிரியார் என்ற அடிகளாருக்கு உத்தரவு இட்டார்" என்று முனைவர் ச. இராசமாணிக்கம் அவர்கள் கூறும் தக வல்[2] இங்கு குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கலில் இருந்து கோவாவுக்கு வந்த அச்சகத்துடன், அச்சடிப்பதில் நன்கு பயிற்சிப்பெற்ற தமிழர் ஒருவரும் வந்திருந்தார். ஆனால், அவரது பெயர் முதலான விவரங்கள் வரலாற்று ஏடுகளில் இடம்பெறாமலே போய்விட்டன. 1554இல் போர்த்துக்கலில் "லூசே தமிழ் வினா-விடை" என்ற தமிழ் நூல் அச்சாக உதவிய தூத்துக்குடித் தமிழர்களில் ஒருவராகத்தான் இவர் இருக்க வேண்டும். இவர்தான் இத் "தம்பிரான் வணக்கம்" நூலை அச்சிட்டார்.

1577இல் கோவாவில் அச்சான இந்தத் "தம்பிரான் வணக்கம்" நூலின் ஒரே ஒருபடி 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரிசில் உள்ள சேசுசபையில் இருந்தது. அது ஜோசப் ஸ்காலிங்கர் என்ற நூல் சேகரிப்

---

1. ஜி. டபிள்யு.ஷா – "நூலகம்" (ஆங்கில இதழ் – 1981)

2. "அடியார் வரலாறு" – முன்னுரை. (1967)

பவர் கைக்குப் போயிற்று. அவர் அதை லேடன் (ஆலந்து) பல்கலைக் கழக நூலகத்துக்கு வழங்கினார். 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அந்நூலகத்தில் இந்நூல் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. அதன்பின் காணவில்லை. இலண்டனில் பிரிட்டீசு நூலகத்தில் துணை இயக்குநராக இருக்கும் ஜி. டபிள்யூ. ஷா என்ற இந்தியர் இதனை ஆதாரங் களுடன் "நூலகம்" என்ற ஆங்கில இதழில் 1981இல் எழுதியிருக்கிறார்.

கொல்லத்தில் தனியே அச்சகம் நிறுவப்பட்டு, 1578இல் அங்கு மீண்டும் "தம்பிரான் வணக்கம்" அச்சாயிற்று. இதற்கான எழுத்துகளை தந்தை சான் பரியா வார்த்தார். இது 16 பக்கமுள்ள சிறுநூல். புனித சேவியர் ஏற்கனவே தமிழில் எழுதிய 4 பக்க சிற்றேட்டின் விரி வாக்கம், இது. புனித சேவியரே போர்த்துக்கீசிய மொழியில் விரிவு படுத்திக் கொடுக்க, தந்தை அண்டிறீக் தமிழ்ப்படுத்தினார். தந்தை மானுவேல் என்ற தமிழர் அவருக்கு உறுதுணையாக இருந்தார்.

கோவாவிலும் கொல்லத்திலும் பெரோ லூயிசு என்பவரின் மேற் பார்வையில் இந்நூற்கள் அச்சாயின. கிறித்துவ சமயத்தைத் தழுவிய முதல் பிராமணர், இவரே![1] தமிழ்ப் புலமை உள்ளவர்.

இந்நூலின் ஒரே ஒரு படி அமெரிக்காவில் ஆவர்டு பல்கலைக்கழக நூலகத்தில் இருக்கிறது. அவர்கள் 1951இல் இலண்டனில் ஓர் ஏலக் கடையில் இதனை வாங்கினார்கள். அதன் பின்அட்டையின் உட்புறம் "இந்தியாவில் இருந்து அனுப்ப, பொன்சேகா அடிகள் 1579 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பெற்றுக்கொண்டது" என்று போர்த்துக்கல் மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. உரோமையில் சேசுசபைத் தலைவரின் போர்த்துக் கீசிய பகுதி உதவியாளர், பொன்சேகா அடிகளார். இந்நூலை "வணக்கம்" என்ற பெயரில் 1963 ஆம் ஆண்டில் மீண்டும் வெளியிட்டுள்ள முனைவர் ச.இராசமாணிக்கம் அவர்கள் இதனை 17 ஆம் பக்க மாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்நாளில் கோவாவிலும், தமிழ் நாட்டிலும் அச்சான எல்லா நூற்களும் போர்த்துக்கல், உரோம் முதலான தலைமையிடங்களுக்கு அனுப்பப்பட்டன. அங்கு அவை நூலகத்தில் வைக்கப்பட்டன. தனிநாயக அடிகள் போன்ற தமிழார்வலர்கள் அந்நூலகங்களுக்குச் சென்று, அந்நூற்களில் பல இன்றும் இருப்பதை நேரில் பார்த்து வந்திருக்கிறார்கள்.

1579 இல் அச்சகம் கொச்சிக்கு மாற்றப்பட்டு, அங்கு மீண்டும் "தம்பிரான் வணக்கம்" அச்சிடப்பட்டது. இப்பொழுது "கிரீசித்தியானி வணக்கம்"[2] என்று பெயர் மாற்றப்பட்டதுடன், 122 பக்கமுள்ள பெரிய நூலாகவும் விரிவுபடுத்தப்பட்டது. இதன் ஒருபடி பாரிசில் உள்ள அரசு நூலகத்தில் இருக்கிறது. 1580இல் "கொம்பொனியோனாயரு"[3] என்ற தமிழ் நூலும் கொச்சியில் அச்சிடப்பட்டது. இந்நூலின் ஒருபடி இலண்டனில் ஆக்சுபோர்டு பல்கலைக்கழக நூலகத்தில் இருக்கிறது.

தமிழில் நூற்கள் அச்சிட மீனவர்கள் பண உதவி செய்தார்கள்.

---

1. இந்திய அச்சு – பதிப்பு வரலாறு (பி.எசு.கேசவன்)
2. "கிறித்துவன்" என்பதையே "கிரீசித்தியானி" என்றார்கள்.
3. "பாவ மன்னிப்பு" என்று பொருள்.

“பலபல பொத்தகங்கள், அச்சிலே உண்டாக வேணுமென்று அனேக முதல் அச்சுண்டாக்கச் சிலவளித்தீர்களே, ஆகையினால் இந்தப் புத்தகம் உங்களுக்கு நன்கொடையாக வரவிட்டோம். அனேக முதல் சிலவளித்து அச்சுண்டாக்கிவித்ததினாலே சங்கையும் கீர்த்தியும்' லோகர் முன்பாகப் பெற்றீர்களே” என்று “கிரீசித்தியானி வணக்கம்” என்ற நூலின் முன்னுரையில் அண்டிறீக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு நூலையும் எழுதிய திருத்தந்தை அண்டிறீக், தூத்துக்குடியை அடுத்த புன்னைக்காயலில் பணியாற்றி வந்தார். அங்கே அச்சகம் மாற்றப்பட்டது. அவர் எழுதிய “அடியார் வரலாறு “என்ற 668 பக்கமுள்ள பெரிய நூல் ஒன்று 1586 இலும், “பாவசங்கீர்த்தனம்” என்ற நூல் 1590இலும் புன்னைக்காயலில் அச்சாயின. அவர் 1600இல் காலமானபின் அச்சகம் அம்பலக்காட்டுக்கு மாற்றப்பட்டது.

“தத்துவ போதகர்” எழுதிய “ஞானோபதேசம்” முதலிருகாண்டம் (1665), 3 ஆவது காண்டம் (1667) புரோயென்கா என்பவர் எழுதிய தமிழ் - போர்த்துக்கீச அகரமுதலி (1679) [1] ஆகியவை அம்பலக்காட்டில் அச்சாயின.

இதன் இடையே 1663 இல் கொச்சியை டச்சுக்காரர்கள் பிடித்துக் கொண்டார்கள். இதைத் தொடர்ந்து போர்த்துக்கீசியரின் திருச்சபைப் பணிகளும் தடைப்பட்டன. அடுத்த சில ஆண்டுகளில், அம்பலக்காட்டில் இருந்த அச்சகம் கோவாவுக்கு எடுத்துச் செல்லப் பட்டுவிட்டது. [2] தமிழ் அச்சு நடவடிக்கைகள் தடைப்பட்டன. இந்தியர்கள் அச்சகம் நடத்தக்கூடாது என்று போர்த்துக்கீசிய அரசு தடையும் விதித்திருந்தது.

1707 இல் தரங்கம்பாடியில் சீகன் பால்கு அமைத்த அச்சகத்துடன் தமிழ் அச்சு வரலாறு மீண்டும் தொடங்கியது. இந்த வரலாறு முடிவில்லாமல் வளர்ந்து கொண்டே வந்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாட்டில் 198 அச்சகங்கள் இருந்தன.

அப்பொழுதே அச்சுக்கலை நூற்கள்கூடத் தமிழில் வெளிவந்துவிட்டன. திருச்சி வி.ஏ.சாமிநாதன் எழுதிய “அட்சேந்திர விளக்கம்” என்ற நூல் 1889இல் வெளிவந்தது. 1892 இல் சி.வி.முனுசாமி என்பார் எழுதிய “அச்சு விளக்கம்”, “பதிப்பு இலக்கண வினா-விடை” என்ற இருநூற்கள் வெளிவந்தன. அச்சுக்கலைக்கு உறுதுணையாகப் புகைப்படக் கலை பற்றி சக்கையா என்பார் எழுதிய “ஒளிச்சித்திர நயனம்” என்ற நூல் 1884இல் வெளிவந்தது.

(1906 இல் “பைண்டர்சு மேகசின்” (ஆசிரியர் - பார்த்தசாரதி), 1926 இல் “அச்சுத்தொழில்”(மாதம். காரைக்குடி) ஆகிய இதழ்களும் வெளிவந்தன).

அச்சு எழுத்துகளை “எழுதா எழுத்து” என்று தமிழ்ப் புலவர்கள் குறிப்பிட்டார்கள். 1858 இல் சாமுவேல் என்பார் பதிப்பித்த “தொல் காப்பியம் - நன்னூல்” என்ற நூலுக்குச் சாற்றுக்கவி பாடிய புரவை எண் கவனர் சபாபதி,

---

1. தமிழில் அச்சேறிய முதல் அகர முதலி.

2. அந்நாளில் இந்தியாவில் ஐரோப்பியர் இடையே நடந்த போர்களில் அச்சகங்களைக் கைப்பற்றிக் கொள்வதும் வழக்கமாக இருந்தது.

"இந்நூல் இயற்றி எழுதா எழுத்தில்
பன்னூல் நெறியில் பதித்து நல்கினான்"

என்கிறார்.

இந்த அச்சகங்களில் இருந்து சமய நூற்களே அதிகம் வெளிவந்தன. அடுத்து பாடல்கள். பெரும்பாலும் அரைத்த மாவையே அரைத்தார்கள்.

கற்றவர்கள் மட்டுமே நூற்களை வாங்கினார்கள். விலை அதிகமாக இருந்ததால், படித்தவர்களிலும் பணம் படைத்தவர் மட்டுமே நூற்களை வாங்க முடிந்தது. (100 பக்கமுள்ள நாடக நூல் 2 1/ 2 அணா; 394 பக்கமுள்ள இராமாயணக்கதை 12 அணா; 389 பக்கமுள்ள திருக்குறள் ரூ. 1-4-0 என்று ஜான் மர்டாக் குறிப்பிட்டுள்ளார்)[1] எனவே, அச்சு நூற்கள் சாதாரண மக்களுக்கு எட்டாக் கனியாகவே இருந்தன.

இதழ்களின் பணி

தமிழ் அச்சுக் கண்டது ஒரு வளர்ச்சிதான் என்றாலும், தமிழ் இதழ்கள் தோன்றியது மற்றொரு வளர்ச்சி. மற்றொரு வளர்ச்சி மட்டுமல்ல; தமிழின் மாபெரும் வளர்ச்சியும்கூட. இதழ்கள் தோன்றிய பின்புதான் "மக்கள் தமிழ்" பிறந்தது.

அச்சைப் பயன்படுத்தித் தமிழை ஆல்போலத் தழைக்கச் செய்தவை, இதழ்களே.

ஏட்டுத் தமிழை வீட்டுத் தமிழ் ஆக்கியவை, இதழ்களே!

வீட்டுத் தமிழை ஏட்டில் ஏற்றியவையும், இதழ்களே!

கற்றோர் தமிழை மற்றோருக்கும் பொதுவுடைமை ஆக்கியவை, இதழ்களே!

இலக்கணத் தமிழ் என்று ஏற்றப்பட்ட, இலக்கியத் தமிழ் என்று போற்றப்பட்டத் தமிழை, மக்கள் தமிழ் ஆக்கியவை, இதழ்களே!

19 ஆம் நூற்றாண்டில் தமிழை வளர்த்தவை, இதழ்களே! இதழ்கள் இல்லை என்றால், தமிழில் புதிய இலக்கியங்கள் தோன்றியிருக்கா. சிறுகதை, பெருங்கதை போன்ற இலக்கியத்தின் புதியத் துறைகளும் வளர்ச்சி அடைந்திருக்கமாட்டா.

தொழில் புரட்சி, அரசியல் புரட்சி, அறிவியல் புரட்சி, புதுமைப் புரட்சி நடந்த புரட்சிக்காலமான இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்பத் தமிழை வளர்த்து, வளப்படுத்தியவை, இதழ்களே.

மக்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, அடிமைத்தளை அறுக்க விதை தூவியவையும், இதழ்களே.

இதழ்கள் மலிவான விலையில் - பைசாக் கணக்கில் விற்கப்பட்டன. மாதம் ஒன்று - இரண்டு, வாரம் ஒன்று - இரண்டு, ஏன், நாள்தோறும் ஒன்று என்றும்கூட இதழ்கள் வெளிவந்தன. ஒரே நேரத்தில் பல இதழ்கள். எனவே, இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு எளிதாக உதவ முடிந்தன.

நூற்கள் இலக்கியத் தமிழில், இலக்கண மரபோடு எழுதப்பட்டன.

1. ஒரு ரூபாய்க்கு 20 கிலோ அரிசி விற்ற காலம், அது.

இதழ்களோ எவரும் பேசக்கூடிய எளிய தமிழைப் பயன்படுத்தின. மக்கள் அன்றாடம் பேசிய பேச்சுத்தமிழ் இதழ்மொழி ஆயிற்று.

இதழ்கள் எல்லா மக்களும் படிக்கக்கூடிய எளிய தமிழில் இருந்தன. இதற்காகப் புதிய சொற்களையும் படைத்துக் கொண்டன. சில நேரம் ஆங்கிலச் செய்திகளைத் தமிழ்ப்படுத்தவும் புதிய சொற்களைப் படைக்க வேண்டியிருந்தது. இது காலத்தோடு ஒட்டி கன்னித்தமிழை வளர்ச்சி அடையச் செய்ததோடு, "இதழ்த் தமிழ்" என்ற புதிய பிரிவையும் தோற்றுவித்தது.

நூற்களை மேட்டுக்குடியினர் மட்டுமே படித்தார்கள்; படிக்க அனுமதிக்கப்பட்டார்கள். அவர்கள் படிப்பதைக் கேட்டால்கூட, மற்றவர் களின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினார்கள். பெண்கள் ஏட்டைத் தொடுவது பாவம் என்று தடுக்கப்பட்டார்கள். இதழ்களையோ ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லா மக்களும் வாங்கிப் படித்தார்கள் - புகைவண்டியில் பயணம் செய்வதுபோல. இதன் வாயிலாகக் கல்வியில் இருந்த வேண்டாதத் தீண்டாமையை நீக்கி, சமத்துவத்தை இதழ்கள் கொண்டுவந்தன.

படிப்பு மேட்டுக்குடியினருக்கு மட்டும் சொந்தமாக இருந்தபொழுது, வடமொழியில் கலந்து தமிழை எழுதுவது பெருமையாகக் கருதப்பட்டது. 'தண்ணீர்' என்று எழுதுவது தாழ்வு. "ஜலம்" என்று எழுதுவது உயர்வு. "பூ" என்று எழுதுவது அறியாமை; "புஷ்பம்" என்று எழுதுவது மேதாவிலாசம் என்று எண்ணப்பட்டது. இன்று தமிழிலே வடமொழிச் சொற்கள் பெருமளவு கலந்திருப்பதற்கு இந்தப் போலித்தனமே காரணம்.[1] இதழ்கள் இந்த அறியாமையை நீக்கின. படிப்பு பொதுவுடைமை ஆனதும், பொது மக்களின் மொழியில், பொதுமக்களுக்குப் புரியக்கூடிய மொழியில் இதழ்கள் எழுதத் தொடங்கின. "ஜலம்" தண்ணீராக மாறியது. "புஷ்பம்" பூவாக மலர்ந்தது. இவ்விதம் தனித்தமிழ் இயக்கத்துக்கும் இதழ்கள் அன்றே வித்திட்டன.

"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்பார், வள்ளுவர். அதனால்தான் "கற்றலில் கேட்டல் நன்று" என்றார்கள். வள்ளுவரும் "கற்றிலன் ஆயினும் கேட்க" என்றார். கல்வி என்பது வெறும் ஏட்டுப்படிப்புதான். "ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதாவது" என்பார்கள். கேள்வியோ உலக அறிவு ஊட்டக்கூடியது. அதனால்தான் அறிஞர் பெருமக்களை "கல்வி கேள்விகளில் சிறந்தவர்" என்கிறோம்.

படிப்பறிவு இல்லா மக்களுக்கு இந்தக் கேள்வி ஞானத்தை இதழ்கள் தந்தன. படித்தவர் ஒருவர் இதழ் படித்தால், பத்துப்பேர் பக்கமிருந்து கேட்கும் வழக்கம் அன்றே இருந்தது. "இதழ்கள் அச்சிடப்படும் எண்ணிக்கையைவிடக் குறைந்தது பத்து மடங்கு வாசகர்கள் இருந் தார்கள்" என்று இதனை "இந்து" முதன்மை ஆசிரியர் ரெங்கசாமி தெரிவிக்கிறார்.[2]

---

1. இன்றும்கூட நாம் 'சாதம்'தானே போட்டுக் கொள்ளுகிறோம்? பிச்சைக்காரி தானே 'சோறு' கேட்கிறாள்!

2 "இந்தியாவில் செய்தி இதழ்கள்" - ஆங்கிலம், 1933.

இதழ்கள் வழியே கிடைத்த கேள்வி ஞானத்தால் மக்கள் உலக அறிவு பெற்றார்கள். அவர்களின் பொது அறிவு வளர்ந்தது. தாங்களும் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள முயற்சித்ததுடன், தங்கள் பிள்ளைகளைக் கட்டாயம் படிக்க வைத்தார்கள். கற்றோர் தொகை தலைமுறைக்குத் தலைமுறை வளர்ந்தது. இது தமிழ் வளர்ச்சிக்கு எவ்வளவு பெரிய துணை என்பதை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ!

மக்களிடம் கல்வி வளர்ச்சி பெருகியது, இதழ்களுக்கேகூட ஆதாயமாக அமைந்தது. அவரைக் கொடிபோல ஆறுமாதப் பயிராக இதழ்களுக்கு அற்ப ஆயுள் இருக்க, "சுதேசமித்திரன்" நூற்றாண்டு விழா கொண் டாடியது எப்படி? அரசியல் என்று மட்டும் சொல்லிவிட முடியுமா? எழுத்தறிந்தோர் எண்ணிக்கை ஏறியதாலும் அல்லவா!

சமய இதழ்களுக்கு மக்களிடம் ஆதரவு இல்லை என்று பார்த்தோம். இருந்தும், "நற்போதகம்", "பாலதீபிகை", "தேசோபகாரி", "சேசு நாதருடைய திரு இருதயத்தூதன்", "அருணோதயம்", "போர்ச்சத்தம்" போன்ற இதழ்கள் நூறு ஆண்டு கடந்தும் இன்றும் வெளிவந்து கொண் டிருக்கின்றன என்றால், கற்றோர் தொடர்ந்து ஆதரவு அளிப்பதுதானே காரணம்?

கோவையில் தொடங்கப்பட்ட "போர்ச்சத்தம்" (1885) சென்னையில் ஒரு பதிப்புத் தொடங்கியது. திருச்செங்கோடு தி.அ.முத்துசாமி 1893இல் ஒரே நேரத்தில் "விவேக திவாகரன்", "பாண்டிய குலபோதினி", "சத்திரிய குலமணி" ஆகிய மூன்று இதழ்களை வெளியிட்டார்.[1] இவையெல்லாம் எப்படி இயன்றன? மக்களிடம் கல்வி அறிவு பெருகி, இதழ்களுக்கு ஆதரவு பெருகியதால் அல்லவா?

நூல் வெளியீடு

சில இதழ்கள் நூற்களையும் வெளியிட்டன.

"மோகனதாஸ் காந்தியின் ஜீவிய சரித்திரம்", "தாதாபாய் நவ்ரோஜியின் ஜீவிய சரித்திரம்" ஆகிய நூற்கள் "ஜனாபிமானி" வெளியீடுகளாக வந்தன.

"வித்தியா வர்த்தமானி" வெளியீடு - "எழுவாய் பயனிலை செயப்படு பொருள் விளக்கம்". "லோகோபகாரி" இதழ் "ஞானத்திரட்டு" முதலான நூற்களை வெளியிட்டது. கையொப்பக்காரர்களுக்கு அந்நூற்களை இலவசமாக அளித்தது.

இதழ்களில் வந்த கட்டுரைகள், கதைகள் தொகுக்கப்பட்டுத் தனி நூலாக வெளிவந்தன.

பின்னாளில் "சுதேசமித்திரன்" வெளியீடுகளாக ஏராளமான நூற்கள் வந்தன. அவற்றில் அரசியல் வெளியீடுகளும் அடங்கும். "கதாரத்னம்" (1921) போன்ற கதைத் தொகுதிகளும் உண்டு. "கதாரத்னாகரம்" (சித்திரப் படங்களுடன் ஒரு மாதாந்தரப் பத்திரிகை) என்ற கதை இதழையும் "சுதேசமித்திரன்" வெளியிட்டது.

---

1. தமிழில் முதல் சங்கிலித் தொடர் இதழ்கள்.

1922இல் "புஸ்தக சமாசாரம்" என்ற காலாண்டு இதழை "சுதேச மித்திரன்" வெளியிட்டது ஆச்சரியமான சமாசாரம் ஆகும். "மூன்று மாதத்துக்கொருமுறை சென்னை சுதேசமித்திரன் ஆபீசு புத்தக சாலையிலிருந்து வெளியாகிறது. விலையில்லை. தபால் செலவுக்கு அரையணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்" என்ற அறிவிப்புடன் அந்த இதழ் வெளிவந்தது.

இவ்விதம் நூற்கள் வழியாகவும் தமிழ் வளர்ச்சிக்கு இதழ்கள் துணையாக நின்றன.

உரைநடை வளர்ச்சி

தமிழ் உரைநடையை வளர்த்தவை முழுக்க முழுக்க இதழ்களே. தமிழ் உரைநடைக்கு வலிவும் பொலிவும், அழகும் ஆற்றோட்டமும் சேர்த்தவை, இதழ்களே. தமிழ் உரைநடையின் இன்றைய வளர்ச்சிக்கும் வளத்துக்கும் இதழ்களே காரணம்.

முத்தமிழில் மூத்தத் தமிழான இயற்றமிழ், உரையும் பாட்டும் உள்ளடக்கியது என்றாலும், சங்க காலம் முதல் செய்யுள் மட்டுமே இயற்றமிழாக இருந்து வந்தது. "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்", "இறையனார் அகப்பொருளுரை" என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர, பேச்சு வழக்கில் மட்டுமே உரைநடை வழங்கியது. "உரை" என்பதற்கு "ஒலி" என்று பொருள்.[1] வாய் ஒலியான பேச்சை "உரைத்தல்" என்றார்கள். சாதாரண மக்களுக்குப் பாடல் புரியாமல் போகவே சிலர் அவற்றின் பொருள் உரைத்தார்கள். அதுவே உரை ஆயிற்று.

அச்சுத் தோன்றிய பின்புதான் தமிழில் உரைநடை தோன்றியது என்று உரைப்பதே சாலப்பொருத்தமாக இருக்கும். சாதாரண மக்களிடம் அவர்களுக்குப் புரிகிற மொழியில் தங்கள் நற்செய்தியைப் பரப்ப விரும்பிய கிறித்துவர்கள், அதற்கான நூற்களை உரைநடையிலேயே எழுதி அச்சிட்டார்கள். அந்த நற்செய்திகள் பிற மொழிகளில் உரை நடையில் இருந்ததும் இதற்கு ஒரு காரணம்.

மேல்நாடுகளிலிருந்து கிறித்துவ சமயத்தைப் பரப்பத் தமிழ்நாட்டுக்கு வந்த மேல் நாட்டவர்களே தமிழ் கற்று, தங்கள் தாய் மொழியைப் போலவே தமிழையும் உரைநடையில் எழுதத் தொடங்கினார்கள். தமிழ்ப் புலவர்களோ செய்யுள் நடையில்தான் வல்லவர்களாக விளங்கினார்கள். 1862 இல் தமிழ் – ஆங்கில அகர முதலியை வெளியிட்ட வின்சுலோ இதைத் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் –

> தமிழ் உரைநடை இப்பொழுதுதான் வடிவம் பெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே அதனைச் செம்மையாக உருவாக்குவதற்குத் திட்ப நுட்பம் வாய்ந்த அறிஞர்கள் இருப்பார்களானால் அம்முயற்சி தக்க பலன் தரும். சுதேசிகள் பலர் விரைவாகச் செய்யுள் இயற்ற வல்லவராயினும் பிழையின்றி உரைநடை ஒரு பக்கந்தானும் எழுதமாட்டாராய் இருக்கக் காணலாம்.

---

1. "குன்றம் குமுறிய உரை" – பரிபாடல்

ஈழத்துச் சபாபதி நாவலரும் தமது "திராவிடப் பிரகாசிகை" என்ற நூலில் இதே கருத்தைத் தெரிவிக்கிறார். "தமிழ் மொழியார் சூத்திரம் - செய்யுள் என்னும் இரண்டால்தானே நூல் இயற்றுபவ. உரையான் இயன்ற தொல்லாசிரியர் தமிழ்நூல் அரிதென்று உணர்க".

அச்சுடன் உரைநடை தோன்றியது என்றாலும், அதை சீராக வளர்த்து, செம்மையாகச் செழிக்கச் செய்தவை, இதழ்களே. "ஆசிரியர்" என்று சிறப்புப்பெற்ற "தினசரி" ஆசிரியர் சொக்கலிங்கம் இது பற்றிச் சொல்லு கிறார்·

"தற்கால தமிழ் வசன நடையின் பெருமையைப் பத்திரிகை களே சிரமப்பட்டுத் தேடிவைத்திருக்கின்றன.

50 வருஷங்களுக்கு முன்னர் இருந்த தமிழ் வசன நடைக்கும் இப்போது இருப்பதற்கும் ரொம்ப வித்தியாசமுண்டு. இவ் வளவு எளிய நடையில்கூடத் தமிழை எழுத முடியுமா என்று ஆங்கிலத்தில் மட்டுமே உழன்று கொண்டிருந்தத் தமிழர்கள் ஆச்சர்யப்படுகிறார்கள். ராஜீய அபிப்பிராயங்களையெல்லாம் தமிழில் எழுத முடியும் என்பதைப் பார்க்கும்போது அவர் களுக்கு வியப்பு ஏற்படுகிறது.

'இண்டர்நாஷனல் சிட்டுயேஷனைப் பற்றி ஜவஹர்லால் அனலைஸ் பண்ணினது ஒன்டர்புலாய் இருந்தது' என்று சொல்ல வேண்டிய அவசியமே தற்சமயம் இல்லை. "சர்வதேச நிலைமையைப் பற்றி ஜவஹர்லால் ஆராய்ச்சி செய்து பேசியது அற்புதமாய் இருந்தது" என்று சுலபமாய் சொல்லலாம். இவ்வளவுக்கும் காரணம் தமிழ்ப் பத்திரிகைகள்தான்.

பத்திரிகைத் தமிழ் என்றால் ஏதோ தனித்தமிழ் என்று யாரும் எண்ணவேண்டாம். அதுதான் அசல் தமிழ்; அது மட்டுமல்ல, அதுதான் தமிழ்.

மற்றொரு முக்கியமான அபிவிருத்தி பத்திரிகைகளால் ஏற்பட்டிருக்கிறது. ஓர் ஊரில் 'எங்கிட்டுப் போராப்பலே' என்று பேசுவது வழக்கமாயிருக்கலாம். மற்றொரு ஊரில் "எங்கே போகிறீர்கள்" என்றே சொல்லுவார்கள். எனவே, பேசும் தமிழ் ஜில்லாவுக்கு ஜில்லா[1] கொஞ்சம் மாறுபட்டிருந்தாலும், எழுதும் தமிழ் அநேகமாய் எல்லா ஜில்லாக்களிலும் ஒரே விதமாய் அமைந்துவிட்டது. எழுதும் தமிழ், தமிழ்நாட்டில் ஒன்றுபட்ட தற்குக் காரணம் பத்திரிகைகள்தான்"[2]

ஈழத்திலும் இதே நிலைதான். ஈழத்தைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் நா.சுப்பிரமணியம் தமது "ஈழத்துத்தமிழ் நாவல் இலக்கியம்" என்ற நூலில் (1978) கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

---

1. மாவட்டம்

2. "எனது ராஜினாமா" – 1943.

"19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 25க்கும் மேற்பட்ட இதழ்கள் தோன்றின. குறிப்பாக இலங்கைக்காவலன், இலங்காபிமானி, புதினாதிபதி, புதினாலங்காரி, முசுலீம் நேசன் போன்ற இதழ்கள் பொதுமக்களின் வாசனை ஆர்வத் தைத் தூண்டும் வகையில் இயங்கின.

"தமிழ் இலக்கியத்துறையிலே செய்யுள் மரபு வகித்துவந்த முதன்மை படிப்படியாக உரைநடை மரபுக்கு மாற்றம் பெறும் காலமாக 19 ஆம் நூற்றாண்டு அமைந்தது. பொதுமக்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய இலகுவான நடையை இதழ் துறையைச் சேர்ந்தோர் மேலும் வளர்த்தனர்!"

ஒற்றுப்பெற்ற மெய்யெழுத்துகள்

இதழ்த் தமிழால் இன்னொரு நன்மையும் ஏற்பட்டது. ஒற்றெழுத்து களுக்கு இன்று நாம் புள்ளி வைத்து எழுதுகிறோமே, இந்த முறையை மக்களிடம் பரப்பியவை, இதழ்களே.

16 ஆம் நூற்றாண்டிலே தமிழ் அச்சேறிவிட்டது என்றாலும்கூட, 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை தமிழ் மெய்யெழுத்துகள் ஒற்றில்லாமலே எழுதப்பட்டன; அச்சிடப்பட்டன.

18 ஆம் நூற்றாண்டில் சென்னை மாநகராட்சியின் கணக்கு வழக்குகள் தமிழில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. கணக்கு ஏடு தொகுதி 82, பக்கம் 40 இல் உள்ள ஒரு கணக்கு –

> 1792 அறபசிமீ 18 உ
>
> சொககபப செடடியாா குமாரரான அருணாசல செடடி பறறு வரவு

1811இல் "தமிழ் விளக்கம்" என்ற நூல் வெளிவந்தது. திருவேற்காடு சுப்பராயன் எழுதியது. உரை நடையில் எழுதப்பட்ட முதல் தமிழ் இலக்கண நூல், இது. கேள்வி-பதில் வடிவில் அமைந்தது. அதன் அட்டையில் அச்சிடப்பட்டிருப்பது –

> தமிழுடைய வியலபைக கேழவியுமுதாரமுமா யெழுதபபடட ஒரு சுருககமான வயமை அடஙகிய
>
> "தமிழ விளககம"
>
> திருவேறகாடு சுபபறாய முதலி யாரால உணடு பண்ணி யிங்கிலீசு பாஷையில மொழி பெயர்ககப்பட்டது செனனை படடணததில அசசு போடடது"[1]

ஏறத்தாழ அதே காலத்தில் (1812) வெளிவந்த "மாசத் தினச்சரிதை" கூடப் புள்ளியில்லாமல் இருப்பதை ஏற்கனவே பார்த்தோம். 1849 இல் வெளிவந்த "நற்போதகம்" இதழில்கூட பல ஒற்று எழுத்துகளுக்குப் புள்ளி யில்லை. அதன் பிப்ரவரி இதழில் –

---

1. "19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்" – மயிலை சீனி.வேங்கடசாமி – 1962.

திருச்சபைச் சரிததிரததைப பறறிய குறிபபுகள.

பாயிரம்

க.[1] திருசசபையைக் குறிததுச் சொல்லியது.

க. அபபோஸ்தலருடைய விசுவாசப பிரமாணததில் பொதுவாயிருக்கிற பரிசுதத சபையுணடு என்று விசுவாசிப பதை அறிக்கையிடுகிறோம்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து முழுக்க முழுக்க மெய்யெழுத்துகள் ஒற்று வைத்து எழுதப்பட்டன. இந்த ·வழக்கை மக்களிடம் பரப்பியவை, இதழ்களே.

குறைகள்

19 ஆம் நூற்றாண்டு இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு எவ்வளவோ உதவியாக இருந்தாலும், சில குறைகளும் இருக்கத்தான் செய்தன. பெருங்குறையாகச்சுட்டிக்காட்டுவது, இலக்கணப்பிழை. அதனால்தான் பாவேந்தன் பாரதிதாசன்,

"இலக்கணமும் இலக்கியமும் தெரியாதான்
ஏடெழுதல் கேடு நல்கும்"

என்கிறார்.

உண்மையாகவே, அன்றைய ஆசிரியர்களில் பலர் இலக்கிய இலக்கணம் அறியாதவர்கள். அவர்கள் அச்சக அதிபர்கள். அச்சகம் இருந்ததால், இதழ் அச்சிட்டு வெளியிட்டார்கள். அவர்களே ஆசிரியர்கள் ஆகவும் இருந்தார்கள். தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆகிவிட்டான்.

"சுதேசமித்திரன்" துணை ஆசிரியராக இருந்தவரும், "சர்வஜன மித்திரன்" (1904), "கேசரி" (1908) இதழ்களின் ஆசிரியராக இருந்தவருமான குருமலைசுந்தரம், 1907இல் எழுதிய க.சுப்பிரமணியத்தின் வரலாற்றில் "பத்திரிகைத் தொழிலானது, கேவலம், கேள்வி கேட்பாரற்ற ஒரு வியாபாரத் தொழில்போல் நினைக்கப்பட்டு, கல்வியறிவற்ற எவரும் கைக்கொள்ளக்கூடிய ஒரு சாதாரணத் தொழில் அன்று" என்றும், "பத்திரிகைகளெல்லாம் பத்திராதிபத்தியத் தொழிலின் இயல்பறியாத அதிசாதாரண மனிதர்களால் நடத்தப்பட்டு வந்தன" என்றும் தெரிவிக்கிறார்.

கல்வி அறிவற்றவர்கள் கையில் எழுதுகோல் பிடித்ததால்தான், "தற்காலம் வழங்கும் நம்முடைய தமிழ்ப் பத்திரிகைகள், சில பத்திரிகைகள் நீங்கலாக, அநேக பத்திரிகைகள் நன்றாய் நடத்தப்படாமல் இலக்கணப் பிழைகள், அச்சுப்பிழைகள் நிரம்பியதாயும் சமாசாரம் அதிகமாயிராமல் வீண்வார்த்தைகள் பலவாயுமாயிருப்பதால் அநேகர்கள் பத்திரிகைகளைக் கைசோரவிடுகிறார்கள்" என்று "லோகோபகாரி" (1895) எழுதுகிறது. "எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்ற கதையாகத்தான் அந்நாளில் சில இதழ்கள் இருந்தன.

1. ஒன்று.

இதழ்கள் இந்த நிலையில் இருந்ததற்கு என்ன காரணம்? இதோ. பாரதியார் உளம் நொந்து உரைக்கிறார்.

பத்திரிகைத் தமிழ்

தமிழர்கள் அரசிழந்து, ஆண்மை குன்றி, வறுமையிலும், நோயிலும் வீழ்ந்து, அரிச்சுவடியை மறந்து நாசமடைந்துவரும் இக்காலத்தில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் மட்டும் உன்னத நிலையிருத்தல் எப்படி சாத்தியமாகும்?

ஆயினும், பத்திராதிபர்கள் கொஞ்சம் மனமிரங்கியும், ஜனங்களிடமிருந்து தாம் திரவியம் வாங்குவதைக் கருதியும் இயன்ற வரை தமது தொழிற்கூடங்களிலே நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்த மனிதர்களை நியமிப்பது தர்மமாகும்.

தமிழர்கள் சுதந்திரமுடையவர்களாகவும், தமிழ்நாடு முன் போல நாகரிகமுடையதாயும் இருந்தால், பத்திராதிபர்களாகிய நாம் எல்லாம் இப்போதிருப்பது போலச் சாய்நாற்காலியில் இன்புற வீற்றிருக்க முடியாது. நம்மை, நமது தகுதி நோக்கிப் பஞ்சாலைகளில் வேலைக்கனுப்பியிருப்பார்கள்.

பெரிய பெரிய தமிழ்ப் பத்திரிகையாபீசுகளில்கூட தற்காலத்தில் சொந்தக்காரர்கள் திரவியலாபத்தைக் கருதி நிரட்சரகுட்சிகளை நியமித்துவிடுகிறார்கள்".

— "இந்தியா" *(24.4.1909)* [1]

அந்நாளில் இதழ் உரிமையாளர்களே ஆசிரியர்களாகவும் இருந்ததால், ஆசிரியர்கள் 'பத்திராதிபர்கள்' என்றே அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உதவியாக இருந்தவர்களோ ஆனா ஆவன்னாகூட அறியாத கைநாட்டுகள் என்பதைப் பாரதியார் புட்டு வைக்கிறார்.

சென்னை அரசு கெசட்டில் வெளிவந்த ஒரே ஒரு விளம்பரத்தைப் பார்த்தால் போதும்; கைநாட்டுகளிடம் அகப்பட்டுக்கொண்டு கன்னித் தமிழ் எவ்வளவு களங்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அந்த விளம்பரம் –

கமிசேரியாட்டு விளம்பரம்

மதறாசு 1850 ஞ அக்டோபர் மீ 28 உ

இதுனாலே பிரசித்தப்படுத்துகிற தென்னமென்றால் செனவரி மாதம் முதல் தேதி வருகிற வருஷத்துக்குத் தேவையான முதல் தறம் நாட்டரிசியும் – இறண்டாந்தரம் தெற்கித்தரிசியும் – வெள்ளைச் சர்க்கரையும் – உப்பும் சற்பறா பண்ணுவதற்காக குத்தகை 1850 ஞ நவம்பர் மாதம் 10 உ திங்கள் கிழமை பகல் பன்னிரண்டு மணிக்கு யிந்த ஆபீசில் பிறசித்தமான யேலம் போட்டு யேலத்தில் இத்தகைய குறைந்த விலையாக

1. "பாரதி புதையல் பெருந்திரட்டு" – இரா.அ.பத்மநாபன்.

கேழ்க்குறவருக்கு கமிசேரி செனறல் துறையவர்கள் ஒத்துக் கொண்டதன் பேரில் குத்தகை கொடுக்கப்படும்.

பிரதிதினம் தேவையானது யிவ்வளவென்று குத்தகை காரருக்கு தெரிவெத்ததின் பேரில் - பிரசைடென்சியிலும் - பறங்கி மலையிலும் - பல்லாவரத்திலும் - பூந்தமல்லியிலுமிருக் கிற யீறோபியான்றாணுக்களுக்கும் - ஆசுபத்திறியன் முதலிய யிடங்களுக்கும் குத்தகை காரன் மேல்கண்ட தினுசுகள் சற்பறா பண்ணவேண்டியது.

மதாந்தரம் - தேவையான சறாசறி மொத்தம் - யிதினடியில் வவறித்திருக்குறபடி போற்ட்டு செயின்டு சாற்ச்சில் முதல் தறம் னாட்டரசிமரக்கால்"[1]

பிழைகள் நிறைந்ததுதான்; ஆனால், 1850 ஆம் ஆண்டிலேயே, ஆங்கிலேயரின் ஆதிக்கம் இருந்த நாளிலேயே, ஓர் ஆங்கில அதிகாரியே தமிழில் விளம்பரம் கொடுத்திருக்கிறார் என்றால், அதைப் போற்ற வேண்டுமா? தூற்றவேண்டுமா?

அந்நாளைய இதழ்த் தமிழும் அப்படிப்பட்டதுதான். அது மழலைத்தமிழ். எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் ஆர்வத்தில் எழுதியது. இலக்கணம் என்றால் என்னவென்றே அவர்களுக்குத் தெரியாது. சின்னரானா, பெரிய றானா என்று இருப்பதுகூடப் புரியாதவர்கள். எனவே, "குணம் நாடி குற்றமும் நாடி அவற்றில் மிகை நாடி மிக்கக் கொளல்" என்றபடி, அவர்களின் முதல் முயற்சியை நாம் சீராட்டவேண்டுமே தவிர, சிறுமைப்படுத்தக்கூடாது. பிழை இருந்தாலும் விளைவு சிறப்பானது. பயிருடன் சேர்ந்து களையும் வளரத்தான் செய்யும். செடி ஒரளவு வளர்ந்தபின்தான் களை எடுக்க முடியும்.

ஆனால், அதற்கு 150 ஆண்டு கழித்து இன்று "அவனது மனைவி" என்றும், "ஆடும் மாடும் வந்தது" என்றும், "சுவற்றில் ஆணி அடிச்சான்" என்றும் எழுதுகிறார்களே! இதைப்பார்த்துதான் தமிழ்ப்பெரியார் திரு.வி.க.வேதனைப்பட்டார்.


"தமிழைப்போல் உயர்ந்தமொழி
தரணியெங்கும் கண்டதில்லை
தமிழரைப் போல் மொழிக்கொலையில்
தலைசிறந்தோர் எவருளரே!"

ஆங்கிலக் கலப்பு

க.சுப்பிரமணியம் போன்ற படித்தவர்கள் - பட்டதாரிகள் ஆசிரியர் ஆனதும் இதழ்களில் பிழைகள் திருத்தப்பட்டன. இதழ்த் தமிழ் பிழையற்ற தமிழ் ஆயிற்று. ஆனால், வேறொரு பிழை ஏற்பட்டது. அது, ஆங்கிலக் கலப்பு. தமிழ் - ஆங்கிலம் கலந்த புதிய "மணியிடையிட்ட பவள" நடை தோன்றியது. ஆங்கிலம் படித்த அவர்களால் தனித் தமிழில் எழுத இயலவில்லை. மாநாடு நடந்தால் அதை அப்படியே தமிழில் "கான்பரன்சு" என்று எழுதிவிடுவார்கள்!

---

1. "19 ஆம் நூற்றாண்டின் தமிழ் உரை நடை வளர்ச்சி" – பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் (1966)



"ஆலமத் இலங்காபுரி" இலங்கையில் வெளிவந்த மலாய்மொழி இதழ்.

அந்தநாளில் இந்த ஆங்கிலக் கலப்பில் "சுதேசமித்திரன்" முன்னணியில் விளங்கியது. இதைக் கிண்டல் செய்து "கல்கி" கிருஷ்ணமூர்த்தி "சுதேசமித்திரன் செய்தி" என்று கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்.

> "பெங்கால்புரொவின்சியல் கான்பரன்சில் மிஸ்டர் அம்பிகா சரண் மஜூம்தாரின் பிரசிடென்சியல் அட்ரசில் இந்தியப் பிரஜைகளின் தேசிய அபிலாசைகளை அடக்கி இந்திய கவர்ன் மெண்ட் கையாண்டு வரும் ரிபரசன் முறைகளின் உபயோக மற்றத் தன்மையைப் பற்றி விஸ்தாரமாய்க் கூறியிருப்பது ஹிஸ் எக்செலன்சி வைஸ்ராய் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்று நம்புகிறோம்".[1]

சுப்பிரமணிய சிவா இதற்கு மேலே ஒரு படிபோய், "தமிழ் ஜனங்களுக்கு 'சுதேசமித்திரன்' அறிவைப் பரப்புகிறதா? அல்லது, ஆங்கில பாஷையைப் பரப்புகிறதா? சுயபாஷையை ஆதரியாத பத்திரிகைகள் சுயதேசத்தை எங்ஙனம் முன்னேற்றத்துக்குக் கொண்டு வரப் போகின்றனவோ?" என்று கேட்டார்.[2]

இதற்குக் குருமலை சுந்தரம் பதில் அளித்தார். "சுதேசமித்திரன் பத்திராதிபர் எழுதும் தமிழ்நடை அவ்வளவு செவ்வையாக இல்லை என்று சிலர் குறை கூறுகின்றனர். "சுதேசமித்திரன்" தமிழ் நடை அழகாய் இல்லை என்பது சிறிது உண்மையேயாயிலும் அக்குறையைப் பத்திராதிபர் மீது ஏற்றுவதிலும் நமது பாஷையின் மீது ஏற்றுவதே பெரிதும் நியாயமாகும். ஏனெனில் நமது தமிழ் பாஷையானது முக்கியமாய் மத சம்பந்தமான விஷயங்களுக்கும் பாடல்களுக்கும்தான் இயைந்த தாயிருக்கிறதேயன்றி ராஜாங்க சம்பந்தமான விஷயங்களைத் தெளிவாய் வெளியிடற்கேற்றச் சொல்வளமும், விசாலமும், இளக்கமும் அதனிடம் இல்லை. தமிழ் எப்போதாவது ஒரு காலத்தில் ஒரு பிரசித்த ராஜ பாஷையாய் இருந்திருக்கும் பக்ஷத்தில் இக்குறை நீக்கப்பட்டிருக்கும்" என்கிறார், அவர்.[3]

இக்கூற்றில் உண்மை இருக்கவே செய்கிறது. 600 – 700 ஆண்டுக்கு முன்பே அரசு இழந்து, அந்நிய ஆட்சிகளுக்கு அடிமையாகிப் போனத் தமிழர்களுக்கு 'அரசியல்' என்பது புதிதாகவே இருந்தது.

"சுதேசமித்திர"னோ அரசியல் இதழ். அரசியலும் புதிது, இதழியலும் புதிது. இரண்டுமே ஆங்கில வழியாக வந்தவை. ஆங்கில ஆட்சி வேறு நடந்துகொண்டிருந்த நேரம், அது. சுப்பிரமணியமோ ஆங்கிலம் கற்றவர். எனவே, தமிழில் ஆங்கிலம் கலந்ததில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அரசியலை அழகுத் தமிழில் எழுதியவர், தமிழ்த்தென்றல் திரு.வி.க. தான். அவர் ஆசிரியராக இருந்த "தேசபக்தன்" (1917–நாளிதழ்) இதற்கு முன்னோடியாக விளங்கியது.

---

1. "எழுத்தாளர் கல்கி" – சுந்தா.
2. "ஞானபாநு" (1915)
3. "ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்"

வளர்ச்சி பாரீர்

இதழ்த் தமிழ் எப்படி வளர்ந்தது என்பதை இனி இதழ்களில் இருந்தே பார்க்கலாமா?

19 ஆம் நூற்றாண்டில் ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ் இதழ்கள் வெளிவந்த போதிலும், இப்பொழுது நமது பார்வைக்குக் கிடைப்பவை 70-80 இதழ்கள்தாம். இவற்றுள் மிகப்பழைமையாக இருப்பது, 1841இல் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த, "உதயதாரகை".

அதன்பின்னும்கூட ஆண்டு வாரியாகத் தொடர்ச்சியாக இதழ்கள் கிடைக்கவில்லை. 1880 முதல் அப்படித் தொடர்ச்சியாக அகப்படுகிறது.

கிடைத்த இதழ்களைக் கொண்டு, 19 ஆம் நூற்றாண்டின் தமிழின் வளர்ச்சியைப் பார்ப்போம். முழுக்கட்டுரையாக இல்லாமல், ஓரிரு பத்திகள் காட்டினால் போதும் என்று கருதுகிறேன். அந்நாளில் தமிழ் எண்களைப் பயன்படுத்தினார்கள். இன்று அந்த எண்களின் அச்சுக்கூட இல்லாததால், அந்த இடங்களில் மட்டும் இன்று வழக்கில் உள்ள எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வேறு எவ்வித மாறுதலும் செய்ய வில்லை. இவை மொழிபெயர்ப்பும் அல்ல; இதழ்களில் இருந்து வரிக்கு வரி அப்படியே எடுத்துத் தரப்படுகின்றன - தந்தை பெரியார் தந்த தமிழ் எழுத்துவடிவில்.

"உதயதாரகை" (4.2.1841)

இந்து தேசச் சரித்திரம்

Principal mountains in Hindustan.

"இந்து தேசத்தில் இமையம், மந்தரம், விந்தம், காத்தாடி என்னும் விசேஷித்த மலைகளுண்டு. அவற்றுள், முதலாவது இமைய பருவதம் வட அட்சம் (35) பாகையில் சிந்து நதி யிற்றுவங்கி, இந்து தேசத்தின் வடமேற்கந்தமாகிய காசுமீரத் துக்கு ஊடாகச் சென்று தெற்காக, (1000) மயில்தூரத்துக்குக் கர்வால், நேபாளமென்னும் தேசங்களுக்கு வடபக்கமாய் ஒடி பிரம்மபுத்திர நதிக்கப்பாலே இந்து தேசத்தின் கிழக்கந்தத்தி லுள்ள அரக்கன் தேசத்தில் முடிகிறது. இப்பருவதத்தில் பாறுவதி தேவி[1] பிறந்தாளென்றும் இந்து மதத்தவர்களுடைய புராண காவியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பருவதம் தீபேத்துத் தேசத்தையுந் தென்பக்கத்திலுள்ள இந்து தேசத் தையும் பிரிக்கிறது. காசுமீரத்துக்கு நேராகச் சங்கிலித் தொடர் பாய் ஆவுக்கான் தேசத்துக் கூடாகச் செல்லுகிற இமையத்தின் ஓர் பகுதியை அத்தேசத்தார் இந்துக்கூஸ் (Hindu Coosh) எனச் சொல்லுகிறார்கள். முன்னோர் இம்மலையை இமோற்பருவதம் (Imout or Imous which is the same with the Indian concosus) எனச் சொல்லி வந்தார்கள். இந்து மதத்தவர்கள் பரிசுத்தமென்

1. பார்வதி தேவி

றெண்ணுகிற கங்கைநதியும் இம்மலையின் ஓர் ஊற்றேயாம்".

தமிழ்நாட்டில் வெளிவந்த இதழ்களில் நமது பார்வைக்குக் கிடைக்கும் மிகப்பழைய இதழ், "நற்போதகம்" (1849). அதில் சில வரிகளைக் காண லாம்.

"நற்போதகம்" (1849) பிப்ரவரி) –

திருச்சபையானது, கண்ணுக்குரியதுங் காணுதற்கரியதுமான இருவகையர்கச் சொல்லப்படுவதாகும்.அல்லாமலும் திருசசபை யார் சிலர் இவவுலகததிலே போராடுகிறவர்களாகவும மற்றைய சிலர் மறுமையிலே வெறறி சிறநதவர்களாகப் பிரவேசித் தவர்களாவுமிருப்பதால் போராடுஞ் சபையென்றும் வெற்றி சிறந்த சபையென்றும் சொல்லப்படும்.

தெரிந்து கொள்ளப்பட்டவர்களே காணுதற்கரிய திருசசபை யாம் அவர்களின்னாரென்று பராபரொனொருவரே யறிவார்.

1841இல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த "உதயதாரகை"யில் மெய்யெழுத்துகள் புள்ளி பெற்றிருக்க, 1849இல் வெளிவந்த "நற்போதக"த் தில் ஒற்றெழுத்துகள் புள்ளிபெற்றும் பெறாமலும் பயன்படுத்தப்பட் டிருப்பதைக் காணமுடிகிறது. ஒற்றுகளைப் புள்ளிவைத்து எழுதும் முறையை வீரமாமுனிவர் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினாலும், அது ஈழத்தில்தான் பெருமளவில் ஏற்றுச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று ஊகிக்க இது இடம் தருகிறது.

1852இல் சென்னை மாநில அரசிதழான "புனித ஜார்ஜ் கெசட்"டில் வெளியான ஒரு விளம்பரம் –

டெண்டர் விளம்பரம் 8–1–1852

இதனால் அறிவிக்கிற தென்னவென்றால், பிளாக் டவுனில் மீதியாய் நிற்கும் தண்ணீர் பழைய நாற்றமான கால்வாய் வழியாய்ப் போகாமல் சென்னைப்பட்டணங் கோட்டை மேல்பாரிசத்திலுள்ள பல்சட்டி (Esplanade) வழியாய் கூவம் ஆற்றுக்குப் போகும்படி ஷ செங்பூவிலிருந்து தற்காஸ்துகள் (Tenders) 1852 ளு ஜனவரி மீ 23 உ வெள்ளிக்கிழமை வரைக்கும் இந்த ஆபீசில் வாங்கப்படும்.

எ.எச்.வோப்.

ஆக்டிங் செக்ரெடேரி,

மிலிடரி போர்டாபீசு.

W.H.BAYLEY,

Tamil Translation of Govt. Gazette,

6.1.1852.

"புனித ஜார்ஜ் கெசட்"டில் 10.7.1860 அன்று வெளிவந்த ஒரு செய்தி -

விளம்பரம்

மகா கனம் பொருந்திய ஸர்.ஹென்ரி-லார்டு கவர்னர் துரை யவர்கள் நாளது மீ 17உ செவ்வாய்க்கிழமைதினம் மத்தியானம்

11 மணிக்கு பேட்டி கொடுப்பதற்குத் தர்பாரில் விஜயம் பண்ணு வார். அந்த காலத்தில் பேட்டி பண்ணிக்கொள்ள வேணுமென் கிற அபேட்சையுள்ள இந்து தேசத்தரான பெரிய மனிதர்கள் ஷ தினத்துக்குமுன் திங்கள் கிழமை தினத்திலாவது அல்லது அதற்கு முன்னாவது தங்கள் தங்கள் பேர்களை பிறைவேட்டு செக்ரிட்டேரி யிடத்துக்கு எழுதியனுப்பும் படியாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கவர்ன்மெண்டு அரசு, 1860 ளு சூலை மீ 5 உ.

இச்செய்தியில் பேட்டி என்பதிலுள்ள "ட்டி" என்ற இரண்டு எழுத்துகள் ஒரே கூட்டு எழுத்தாக "டடி" என்று அச்சிடப் பட்டிருக்கிறது. அந்நாளில் "ட்டி", "த்த", "க்க" போன்ற எழுத்து கள் ஒரே எழுத்தில் கூட்டெழுத்தில் எழுதும் வழக்கம் இருந்தது.

இச்செய்தியில் "அறிவிப்பு" என்ற பொருளில் "விளம்பரம்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ("விளம்பு" (சொல்) என்ற சொல்லிலிருந்து பிறந்ததுதான் "விளம்பரம்" என்ற சொல்)

முதல் இந்து சமய இதழான "தத்துவ போதினி" (1864) –

இந்தப் பத்திரிகையில் சகல சமயத்தாருக்கும் பொது வான விதமாக நம்முடைய வேதங்களின் தாத்பரியங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட நாங்கள் நிச்சயித்தோம்.

வேதத்தை பிராமணன் தவிர மற்றவர்களுக்குச் சரிக்கக்கூடா தென்பதற்கு வேதத்தில் பிராமணமுண்டோ இல்லையோ வென்பதை இப்பொழுது விசாரிக்க வேண்டிய அவசியமில்லை.

அப்படி நிஷேதமிருப்பதாய்[1] சாதாரணமாய்க் கொள்ளப் பட்டிருக்கின்றமையால், அப்படியே வைத்துக் கொண்ட போதிலும், வேதார்த்தங்களைக்கூட இதராள் அறியக் கூடா தென்கிற விதியுமில்லை; அறியலாமென்பதற்குப் பிரமாணமும் உண்டு! சடகோபர் பாடிய திருவாய்மொழியென்னும் தமிழ்ப் பிரபந்தம் தமிழ் வேதமென்றும், அது ஸ்திரி, சூத்திரர்களுக் காகவே உண்டானதாயும் எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்பட் டிருக்கிறதல்லவா?

இன்றும் (1992) வெளிவந்து கொண்டிருக்கும் "அருணோதயம்" (1863 சூலை) –

மத்தேயு 28, 18-20

அப்போது இயேசு சேர்ந்து அவர்களுடனே பேசிச் சொன்னதாவது, வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆகையால் நீங்கள் போய் சகல சாதிகளையும் சிஷராக்கிப் பிதாக்குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்தையும் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள். இதோ, நான் லோகமுகிவு மட்டாகச் சகல நாள்களிலும் உங்களுடனேகூட இருக்கிறே

1. நீக்கப்பட்டதாக

னென்றார்.

இந்த வேதவாக்கியத்தை இந்தப் பத்திரிகையைத் தொடங்கு கிற வார்த்தையாக்கிக் கொள்ளுகிறது ஞாயந்தான். அதே னென்றால் உயிரோடெழுந்த இயேசுநாதர் பரமண்டலங்களுக் கேறாததற்கு முன் திருவுளம்பற்றின இந்த வார்த்தையினால் தம்முடைய மிசியோனையும் ஞானஸ்நானத்தையும் ஏற்படுத்தி னார்.

"கலாவர்த்தினி" (1866 நவம்பர் 15)

143 – நந்நான்கு – நான்கு நான்கு; ஒவ்வொன்றுக்கும் நான்கு என்னுங் கருத்தாலிரட்டியது. இது அல்வழியிலோர்தழாத் தொடர். அச்சம், அவலம், உவகை, விரைவு என்கிற பொருள் பற்றி இரட்டாமையின் அடுக்குத் தொடரன்று. "ஒன்பதொழித்த வெண்ணான்பதுமிரட்டின், முன்னதின் முன்னலவோடவுயிர் வரின், வவ்வு மெய்வரின் வந்தது மிக னெறி" என்கிற சூத்திரத்தாலானது. அடைப்பை – அடை – வெற்றிலை, அது வைக்கும் பை "ஒருமொழி யொழி தன்னினங் கொளற்குறித்தே" என்கிற சூத்திரத்தால் பாக்கு முதலியவைகளையும் கொள்க. வெற்றிலை தின்றான், தாம்பூலம் போட்டுக் கொண்டான் என வழங்குவதும் காண்க.

ஆங்கில ஆண்டு 1866 இல் பிரபாவதி ஆண்டு வரிசையில் அட்சய ஆண்டு நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பஞ்சம் பற்றி 1866 ஆகஸ்டு "தத்துவ போதினி" இதழில் பெங்களூர் ஆ.ஐயாசாமி எழுதிய ஒரு பாடல் வெளிவந்தது. அந்நாளையப் பாடல் ஒன்றையும் பார்ப்போமே –

அட்சய வருடத்தின் அகவிலை

எங்கும் நிறைந்தருளும் ஓங்கார பிரும்மமே
ஈரும் அட்சய ஆண்டிலே
எழிலிமழை பொழியாத குறைவினால் லோகத்தில்
எளியர் முதலோர்கள் நொந்து
அங்குமிங்கும் ஒடி அலையினும் ரூபாய்க்கு
ஆறுபடி அரிசிதானும்
ஆனகேழ்வரகு பத்துப்படி தானுமே
அகப்படுவ தருமையாகி
பொங்கும் மனந்தளர்ந்து உன்புகழெதோத்திரம்
புரிகின்றோம் நாங்கள் முன்னம்,
புன்மையார் புத்தியால் செய்ததும்
பொறுப்பதுன் பாரமையா
கங்கு பகலின்றியே மழைபொழிந்து ஏரிகுளம்
கரைபுரண்டு உலகமெங்குங்
கனமான தானியம் விளைந்தோங்கச் செய்தருள்

கருணாகரக் கடவுளே..

அந்தப் பஞ்ச காலத்தில் ரூபாய்க்குப் பத்துக்கிலோ அரிசிதான் அகப் பட்டதாம்!

இப்பஞ்சம் இந்தியா முழுக்கப் பரவியிருந்ததோடு, இலங்கை, சிங்கப்பூரிலும் தலைவிரித்தாடியது. யாழ்ப்பாணத்தில் மட்டும் பஞ்சத் தாலும், நோயாலும் 12 ஆயிரம் பேர் மாண்டார்கள். அப்பொழுது ஈழத்துப் புலவரான உடுப்பிட்டி குமாரசாமி "எந்தெய்வம்" என்ற பாடலை இயற்றி னார். அதனை இங்கே ஒப்புநோக்குவது பொருத்தமாக இருக்கும்.

ஆயிரத் தெண்ணூற்றறு பத்தாறு அட்சயத்தே ழெட்டு
ஆரம்பிக்குங் கொள்ளை நோய்க்கு எந்தெய்வமே
பாயிரஞ் சொல்ல நாவோராயிரமும் போதாவாம்
பார் மன்னர் குணிப்பாராம் எந்தெய்வமே
வையகத்துய்யுமனுச் சென்மமழிக்கக் கொள்ளை
வந்து நுழைந்தந்தோ எந்தெய்வமே
பையப்பைய நுழைந்து பாரெங்குஞ் சேரவாரிப்
படபடென்றடிக்கிதே எந்தெய்வமே
சிங்கைஇலங்கை சென்னை சேர சோணோடு பாண்டி
தேசாதேசமெங்குமாம் எந்தெய்வமே
கங்கைக்கரை வங்காளங்காசி முதல்தலங்கள்
கலக்கமலக்கமாம் எந்தெய்வமே
பஞ்சப்பசியில் உண்ணாப் பலவுண்ணல் கொள்ளை
படர்கொழுகொம்பிங்கென்பர் எந்தெய்வமே
கஞ்சி கெஞ்சியுங் கிடைக்காதிந்தக்காலம் காட்டுக்
காய் கிழங் கேனுண்ணாரோ எந்தெய்வமே.

1867 முதல் சென்னையில் வெளிவந்த 'தேசாபிமானி' தமிழுக்கு முதலிடம் கொடுத்தது. "தேசாபிமானி" என்ற பெயர் முதலில் தமிழிலும், அதன் அடியில் ஆங்கிலத்திலும் காணப்படுகிறது. பொருளடக்கத்தில்கூட தமிழுக்கே முதலிடம். இடப்புறம் தமிழ், வலப்புறம் ஆங்கிலம். தாயகக் கிறித்துவ வளர்ச்சிக்கழகம் நடத்திய இதழ், இது. அதன் 1877 செப்டம்பர் இதழில் காணப்படும் பொருளடக்கம் –

"நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை"

தமிழுக்கு முதலிடம் அளித்த இந்த இதழில், தமிழ் எண்களைப் பயன்படுத்தவில்லை. அரபு எண்களைப் (1,2,3,...) பயன்படுத்தியிருக்கிறார்கள். இதன் பின் வந்த மற்ற இதழ்களும் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ் எண்களைக் கைநழுவவிட்டன.

அந்நாளைய மிகச்சிறந்தத் தமிழ் இதழ்களில் "தேசோபகாரி"யும் ஒன்று. அதன் 1879 சன்வரி இதழில் –

Extinct Animals (See Frontispiece)

நிர்மூலமான பிராணிகள்

(முகப்புப்படம் பார்க்க)

> "நமது காலத்தில் சில உயிர்ப்பிராணிகள் வரவர அபூர்வமாகின்றன. டோடோ முதலிய சில பட்சிகள் இந்த நூற்றாண்டில்தானே ஒழிந்து போனது. நாகரிகம் அதிகரிக்கவே, காட்டு மிருகங்கள் அருகுகின்றன. காப்பிக்கிருஷிக்காக் காடு வெளியாக்கப்படுகிற மலைகளில் யானைகள் தொலைகிறது. தென் ஆப்பிரிக்காவில் வெள்ளாண்மை பரம்பவே, வானரங்கள், மான்கள் முதலிய மிருக ஜீவன்கள் மனித தாபரத்தினின்று அகன்றகன்று ஒற்றிப் போகின்றன. இன்னும் கொஞ்சம் காலத்துக்குள் யானைகள் நிர்மூலமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை".

தமிழில் வெளிவந்த முதல் சட்ட இதழ், "சித்தாந்த சங்கிரகம்" (1878). அதன் 1878 பிப்ரவரி இதழில் –

> 7. கிரிமினல் ரிபர்கேஸ்.
>
> – – – – –
>
> (Full Bench) எல்லா நீதிபதியவர்கள் முன்பாக.
>
> 1877 ம் ளு ஆகஸ்ட் மீ 3உ
>
> (இ-லா-ரி – 461-465[1])
>
> ஹிந்துதேச சக்கரவர்த்தினி .... வாதி
>
> டர்பா வகைராக்கள் ....குற்றவாளிகள்
>
> விஷயம் – குற்றவாளிகளுக்கு விதிக்கும் அபராதமானது கொடுபடாதவரையில் அதற்காக இ.பி.கோடின் 6 ஆவது பிரிவுப்படி விதிக்கும் காவல் தண்டனையானது இ.பி.கோடின் 309 ஆவது பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஷ இ.பி.கோடின் 70 ஆவது பிரிவில்கண்ட காலத்திற்கு மேற்படக்கூடாது என்பதேயாம்.

19 ஆம் நூற்றாண்டில் தமிழில் வெளிவந்த சிறந்த இதழ்களில் "ஜனவிநோதினி" ஒன்று என்று பார்த்தோம். அதன் 1880 மார்ச்சு – ஏப்ரல் இதழில் –

சமாசாரம்

இங்கிலாந்தில் பார்லிமெந்து சபையும்
மந்திராலோசனைச் சபையும்

ஏழு வருஷத்துக்கொருதரம் இங்கிலாந்தில் பார்லி

---

1. இந்திய லா ரிப்போர்ட் பக்கம் 461 – 465

மெந்து என்னும் மகாசபையின் அத்தியக்ஷர்கள் மாறவேண்டு மென்கிற விதிப்படியே மார்ச்சு மீ 24 உ மேற்படி சபை கலைந்து போயிற்று. புதிய சபிகர்களை[1] நியமிக்கும்படி நாடுநகரங் களில் அன்றைய தினமே விளம்பரம் செய்துவிட்டார்கள். இதுவரையில் மந்திரியாயிருந்த லார்டு பீகன்ஸ்பீல்டு என்பவர் தம்முடைய உத்தியோகத்தைப் பற்றி இத்தருணத்தில் அஞ்சும் படியாயிருக்குமெனத் தோன்றுகிறது. லார்டு பீகன்ஸ் பீல்டு என்பவர் தம்முடைய மந்திரி உத்தியோகத்தைப் பற்றிப் பரித் தியாகப் பத்திரிகையை மகாராணியவர்கள் சமூகத்திற் சேர்ப்பா ரானால் அந்தக்ஷணமே லார்டு லிட்டன் பிரபுவும் தமது கவர்னர் ஜனரல் உத்தியோகத்தை விட்டுவிடுவாரென வதந்தியுண்டாகி யிருக்கிறது.

19 ஆம் நூற்றாண்டின் 80களுக்கு வந்துவிட்டோம். "சித்தாந்தரத்நாகரம்" (1881) என்ற சைவ சித்தாந்த இதழிலிருந்து –

'சித்தாந்தம்' முடிவு எனப் பொருள்படும். எனவே, தனக்குமேல் ஒரு கொள்கையற்றது. இம்முடிவு பெறப்பட்ட முடிவே முடிவெனவும், அதுவே சித்தாந்தம் எனவும் பெறப்பட்டது. ஆகவே, இது 'ஆகம முடிவு' எனப்படும். வேதம் சிவபெருமானால் சொல்லப்பட்டது. வேதமே சிவாகமம்.

ஆங்கில ஆட்சி நடந்த தமிழ்நாட்டில் வெளிவந்த தமிழ் இதழ்களில் ஆங்கிலத்தின் தாக்கம் இருந்ததுபோல, பிரெஞ்சு இந்தியப் பகுதியான புதுவையில் வெளிவந்த தமிழ் இதழ்களில் பிரெஞ்சு மொழியின் தாக்கம் இருந்தது. புதுவை (பிரெஞ்சு) அரசின் ஒரு பகுதி யாகக் காரைக்கால் விளங்கியது. ஆனாலும், அங்கே பிரெஞ்சு மொழி யின் தாக்கம் இல்லை. காரைக்கால் "சத்தியாபிமானி" 13.12.1882 இதழி லிருந்து ஒரு செய்தி –

ஓர் இங்கிலீஷ் வைத்தியர்

எம்மூரில் நல்ல வைத்தியர் பலரில்லாதிருப்பது ஓர் பெரிய குறைவென்பதை யாவருமறிந்திருக்கின்றார்கள். அதன் நிவர்த்தி காலங்கிட்டியதாற்போலும் ஆங்கிலே – வைத்திய நூல் களைத் தெளிவுறக் கற்றுப் பரீக்ஷையில் தேறிய ஓர் வயித்திய ரிவ்விடத்தில் வந்திருக்கின்றார். அவர் பலவிடங்களிலிருந்து வைத்தியாப்பியாசம் செய்தவர். நல்ல பாத்திர பத்திரமும் (சர்டிபிகேட்டு) பெற்றிருக்கின்றார். அவரிடத்தில் வைத்திய சகாயம்பெற விரும்புவோர் அவரை மகா-ள-ள-ஸ்ரீ சீனிவாச பிள்ளையவர்கள் ஷாப்பில் கண்டு பேசிக்கொள்ளலாம்.

திருவாங்கூரில் இருந்து ஓர் அபிமானி வெளிவந்தது. அது "திருவாங்கூர் அபிமானி". அதன் 20.2.1884 இதழில் வெளிவந்த ஒரு வாசகர் அஞ்சல் –

கடிதம்

(கடிதக்காரரின் அபிப்பிராயங்களுக்கு பத்திராதிபர் உத்தர வாதியல்ல).

---

1. சபையினரை (உறுப்பினர்களை)

திருவாங்கூர் அபிமானிக்கு நான் வந்தனம் செய்வதுமன்றி மற்றவர்களும் வந்தனம் செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளு கிறேன். ஐயா, பத்திராதிபரே, சிறியோனாகிய அடியேன் பின் வரையும் சில வரிகளை எங்கும் பராபரித்து இருக்கின்ற தங்கள் பத்திரிகையின் ஒரு மூலையில் பதிப்பிக்கப் பிரார்த்திக் கிறேன்.

அகஸ்தீசுர சுவாமியின் சந்நிதியும் ஆனந்தவல்லியென்னும் அம்மன் சந்நிதியும் விளங்கா நிற்கின்ற ஒரு ஈசுவரன்கோயில் இம்மகா புண்ணிய க்ஷேத்திரத்திலிருக்கின்றது. பிருங்கு மகா முனியும் அகஸ்திய மகாமுனியுமிருந்து புரந்தாவனமாகிய இடத்தில் இப்பொழுது கோயிலிருக்கிறது. இப்பொழுது இருக் கிற கோயில் இக்காலம் முந்தி ஒருவருடைய திரவியத்தால் மாத்திரமே கட்டப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அந்தக் கோயில் சொந்தக்காரர் சந்ததியார் தற்காலத்தில் சென்னை மாபுரியிலிருக்கிறார்கள். அந்தக் கோயிலில் முக்கிய விசேஷம் என்னவென்றால் வருடமொரு தடவை வசந்த காலத்தில் மிகுந்த நேசத்துடன் இவ்வூர் விஷ்ணுவும் அக்கோயில் ஈசுவரனும் சந்திக்கிற வழக்கம். அந்த உற்சவத்திற்குப் பெயர் சந்திப்பு உற்சவம் என வழங்கும். ஆனால், அக்கோயில் இப்பொழு திருக்கிற தாழ்ந்த ஸ்திதியை நான் சொல்ல மாட்டேன். இவ்வூர் ஜனங்கள் அக்கோயிலை விர்த்தி செய்யும் பொருட்டு கொஞ்சம் திரவியம் சேர்த்தார்கள். அந்தக் கோயிலுக்குச் சொந்தக்காரர் என் கோயில் விஷயத்தில் ஒருவரும் சம்பந்தப்படவேண்டுவ தில்லை என்று சொல்லிப் போட்டார். அதுவும் தவிர உற்சவத்திற்கென்று ஏதேனும் கொடுத்தால் அப்பணத்தை கோயிலர் தங்கள் சொந்த செலவு செய்கிறார்கள்.

ஐயா, பத்திராதிபரே எங்கேயாகிலும் இப்படிப்பட்ட அக்கி ரமம் பார்த்ததுண்டா? அக்கோயிலை பொது விசாரணையில் வைத்துவிட்டால் மிகவும் நலமாயிருக்கும் என்கிற சங்கதியை உம்முடைய பத்திரிகை மூலமாக அக்கோயில் சொந்தக் காரருக்குத் தெரிவிக்கலானேன்.

பொன்னேரி, இப்படிக்கு,
பெப்.82 பொய்சொல்லாமடையன்

அந்நாளைய வாசகர் அஞ்சல் எப்படியிருந்தது என்று பார்த்தோம். அஞ்சல் எழுதுவோருக்கு ஆசிரியர் ("உலகநேசன்" 28.3.1887) விதித்த நிபந்தனைகளைப் பாருங்கள்:-

கடிதமனுப்புவார்க்கு

1. கடிதங்களின் மொழிகட்கும் கடிதமுடையாரபிப்பிராயங் கட்கும் எழுத்து வழுவுக்கும் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

2. கடிதங்கள் பிழைகளற்றும், பிறர் மனதுக்கு வருத்த முண்டாக்காமலும், வன்மையான தாளினொரு பக்கமட்டுந் துலக்கமாயெழுதல் வேண்டும்.

3. கடிதங்களிலெப் பெயரையிடினுஞ் சொந்தப் பெயரை விலாசத்துடன் பத்திராதிபருக்கறிவித்தாலன்றி அங்கீ கரிக்கப்படா.

4. எம்பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிய எவ்விதக் கடிதங் களையும் "பினாங்கு உலகநேசன் பத்திராதிபர் அ.மு.மரைக் காயரவர்கள், 124 நம்பர் ஆபிசு சோலியாஸ் டிரீட் என்றநுப்பவதவசியம்".

இனி நூல் மதிப்பீடு ஒன்றைப் பார்ப்போமா? 1.5.1885 "வேதாந்த நிர்ணயப் பத்திரிகை"யில் வெளிவந்தது.

அர்ச். தேவமாதாவின் பேரின்ப சதகம்

"இவ்வரிய நாமகரணத்தை மகுடமாகப் பூண்ட புத்தகப் பிரதியொன்று நமக்கனுப்பப்பட்டது. அதனை நாம் அன்போடு கைப்பற்றினோம். இதில் பஞ்சரத்தினம், பிரார்த்தனைக் கீர்த்தனம், அர்ச். சூசையப்பர் பேரில் பாடல்கள், சகல அர்ச்சி யஷ்டர்களின் பிரார்த்தனைக்கவிகள் மற்றும் அடங்கியிருக் கின்றன. இவ்வரிய செய்யுளானது புதுவை நகரவாசியும், பரிஸ் [1] நகரத்திலுள்ள அக்காடிமி என்னும் சாஸ்திர சங்கத் தாருள் ஒருவரும், தேம்பாவணி பிரசங்கியெனச் சிறந்த பேர் பெற்ற வருமாகிய மகாவித்துவான் செ.சவராயலு நாயகரவர் களால் காவியநடையில் இயற்றப்பட்டுப் புதுவை மேற்றிராசனத் தின் உதவிமேற்றி ராணியார் மகாகனம் பொருந்திய மோசேப் அதோல்பு காந்தி என்னும் மேற்றி ராணியார் அவர்களுக்கு ஒப்புக் கொடுத்து அந்த ஆண்டவரின் உத்தரவுப்படி அச்சிடப் பட்டிருக்கிறது. இவ்வரிய காவியத்தை அதிக அன்போடும் பற்றுதலோடும் வாசித்துப் பார்த்தவரான சங்.மரிய ஆரோக்கிய நாதர் என்னுஞ் சுதேசக்குருவானவர் அங்கீகரிப்பான பத்திர மொன்று பிரெஞ்சுப் பாஷையில் தந்ததற்கிணங்க இங்கிலீஷ் பாஷையில் மொழிபெயர்த்து இதனடியில் தருகிறோம். காரிருள் அடர்ந்த உலகத்தை அருணனானது ஒளிபெறச் செய்வதுபோல இந்த மகாவித்துவானாகிய செ.சவராயலு நாயகரவர்கள் இனிமையோடு வேதானுசாரமாய் இன்னுமனேகம் பாடலைச் செய்து அஞ்ஞான அந்த காரத்தை நீக்கக்கடவுளானவர் - இவருக்கு நீடிய ஆயுளைத் தர நாம் ஆசிக்கிறோம்".

அதே ஆண்டு புதுவையில் வெளிவந்த "மானிட்டர் அபீசியல்" (24.4.1885) இதழில் காணப்படும் ஒரு விளம்பரம் -

இறைவரி விசாரணை செர்வீசு.

பிரசித்த பத்திரிகை.

வருகிற மே மீ 2ந்தேதியாகிற சனிக்கிழமை காலை 8 மணிக்கு இறைவரி தண்டாதிபதி சாயர்தாரை [2] கூட வைத்துக்கொண்டு

1. பாரிசு
2. தாசில்தார்

அதமினிஸ்திராகிய[1]. செர்வீசின் ஏன்ஸ்பெக்தருக்கு[2] ஒழுங் குடன் தெரிவித்து பரிமுதல்[3] செய்த புகையிலைகளையு மின்னமைத்த சாம்ான்களையும் அந்தர் போலில் யேலம் போடுவார்.

ஏலமெடுப்பவர்கள் ஆட்சேபனை யொன்றுஞ் சொல்லாமல் யேலக் கொமியத்தாரிடத்தில்[4] யேலத் துகையை செலுத்தி உடனே சாமான்களை எடுத்துக்கொள்ள வேண்டியது.

ஏலம் விட்டபின் யாதோராட்சேபனையும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

"சுதேசமித்திரன்" தமிழ்நடை எப்படியிருக்கும் என்பதை முன்பே பார்த்தோம். 1886 ஆகஸ்டு 9 இல் வெளிவந்த "சுதேசமித்திரன்" செய்தி அதை உறுதிப்படுத்துகிறது. அந்தச் செய்தி –

போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜெட்

1886 ளு சூலை மீ 9உ வெள்ளிக்கிழமை.

மஹாராஜாவின் கீழ் வேலைக்கு அனுப்பியதின் பேரில் செய்யப்பட்ட ஏற்பாட்டில் கொஞ்ச காலத்துக்கு ஸப் ஜட்ஜிகளாக ஆக்டிங் வேலை பார்த்துவரும்படி நியமிக்கப்பட்ட ம-ள-ள-ஸ்ரீ ஏ.ஜெ.மங்களம் பிள்ளை, ம-ள-ள-ஸ்ரீ வெங்கட ரெங்கய்யர் ஆகிய இவர்கள் முறையே இரண்டு மூன்றாவது கிரேட் ஸப் ஜட்ஜிகளாக காயமாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடல் கடந்த நாட்டில் (சிங்கப்பூரில்) வெளிவந்தது, **"சிங்கை நேசன்"**. அங்கு தமிழ் எப்படியிருந்தது என்பதை "சிங்கை நேசன்" *27.6.1887* இதழ் காட்டுகிறது.

இப்பத்திரிகையின் நோக்கம்

சிங்கப்பூரிலே தமிழ்பாஷை பேசும் பல சாதியார் அனேகம் இருந்தும் மற்றைச் சாதியாரைப்போல நாம் ஒரு பத்திரிகை யில்லாதிருப்பது ஏன்?

முன்னர்ப் பத்திரிகைகள் வெளிப்பட்டும் மடிந்துபோயின. ஆகவே இதுவும் அப்படித்தானென்று சிலர் எண்ணுவார்கள். அவை மடிந்து போனதற்குக் காரணம் நம்முடைய விளம்பரத் தில் வெளிப்படுத்தியிருக்கிறோம்![5]

இம்முறை பொது நன்மைக்குரிய விஷயங்களைப் பற்றிப் பிரசுரிக்கிறதே யொழிய, தனித்தனி ஆட்களையிகழ்ந்தும் புகழ்ந்தும் வீண் காரியங்கள் வெளிப்படுத்தப்படா. படித்தவர் களும் படியாதவர்களும் வாசிக்க விளங்கத்தக்க பாஷையில் எழுதிவருவோம்.

---

1. அட்மினிஸ்டிரர்
2. இன்ஸ்பெக்டர்.
3. எழுத்துப்பிழை (பறிமுதல்)
4. கமிசனிடத்தில்
5. கையொப்பம் கேட்டு அனுப்பிய அஞ்சல்கள்



இரட்டைமலை
சீனிவாசன்
(பறையன்)



சீகன் பால்கு



சி.வை. தாமோதரன்
(தினவர்த்தமானி)



சே.பா. நரசிம்மலு
(சேலம் தேசாபிமானி)



கோ. நடேசன்
("தேச நேசன்")



சீ.இரா. ரெங்கநாதன்

எழுதிவருங்காரியங்கள் எவர்களையும் பிரியப்படுத்தவும், எழுப்பிவிடவும், முயற்சிப்பண்ணவும், சோம்பலினின்று விழிக்கவும் செய்யவே கூடியளவு பிரயாசப்படுவோம்.

வாசிப்பவர்கள் அருவருத்து வெறுக்கத்தக்கக் காரியங்களை நீக்கிவிடுவோம்.

இப்பத்திரிகைக்கு இரண்டு நோக்கமுண்டு:-

1. பத்திரிகை எழுதுகிறவர் நோக்கம் ஒன்று.

2. பத்திரிகைக்குக் கையொப்பராகி வாங்கி வாசிப்பவருடைய நோக்கம் மற்றொன்று.

பேனாவைப் பிடித்துப் பத்திரிகையெழுதுகிறவர் தம்முடைய மனசாட்சிக்குச் சற்றேனும் மாறாமல் பொது நன்மையை எப்போதும் நோக்கமாய்க் கொண்டிருக்கவேண்டும்.

பத்திரிகை வாசிப்போர் பலராகையால் அவர்கள் நோக்கமும் பலவிதமாயிருக்கும்.

ஒருவருக்கு கசப்பிலே பிரியம், ஒருவருக்கு இனிப்பிலே பிரியம், ஒருவருக்குப் புளிப்பிலே பிரியம், ஒருவருக்குக் காயிலே பிரியம், ஒருவருக்குப் பழத்திலே பிரியம். எவ்வஸ்துவிலே பிரியமாயிருப்பினும் அவ்வஸ்து அவரவர் இரைப்பைக்கு இணங்கியதாயும் சீரணிக்கத் தக்கதாயும் இருக்க வேண்டும்.

ஆகையால் வஸ்து எவ்வகை ருசியுடைத்தாயினும் சீரணிக்கத்தக்கதோ என்று மாத்திரங் கவனித்தல் வேண்டும். அதாவது ஒருவருக்கு விசேஷ நயங்கொடாவிடினும் பொதுவாய்ப் பார்க்கும்பொழுது பொதுநன்மைக்குக் காரணமாகாதாவென்று கவனித்தல் வேண்டும்.

அதே ஆண்டில் இலங்கையில் வெளிவந்த "சைபுல் இசுலாம்" இதழில் (1887 சூன்) வெளிவந்த ஓர் இசுலாமியத் தமிழ் –

"சர்வ உலகங்களைப் பிறப்பித்து அவைகளுக்கு உணவாக் ஜலத்தை ஆதாரமாக்கி வைத்தது போல் மனிதர்களைப் பிறப்பித்து அவனுடைய கல்புயெனும் ஹிருதயத்திற்கு ஈமானென்னும் உறுதியை ஆவியாகவும், இல்முயெனும் கல்வியையதற்கு ஆகாரமாகவும் உண்டுபண்ணி தன்னுடைய உண்மையை வெளிப்படுத்துகிறதற்காக விவேகத்தாலுகித்து நித்திய முணர்ந்து அநித்தியம் இகழ்ந்து நடக்கும் பொருட்டு பகுத்தறிவைக் கொடுத்து ஆக்க அழிக்க காக்க வல்லமையுஞ் சிறப்பும் மேன்மையும் பொருந்திக் கருணை நிறைந்த அல்லா எனும் உண்மையாகிய உள்ளமைக்குரிய நாயனைப் புகழ்ந்து அவனுடைய கிருபையைப் பெற்று சர்வ மனு முதலான உலகங்களை இரட்சிக்கவும் அவற்றுட் சேர்ந்திருக்கும் இருட்களை யொழிக்க எழும் வானுலக நக்ஷத்திரங்களின் பிரகாசங்

களுக்கோர் சூரியோதயம் போல சகலமத கண்டனையான புருக்கானென்னும் வேதாதிபதியாய் வஹதானென்னும் ஒருமைப் பொருளை வெளிப்படுத்தி இருமைப்பன்மை முதலிய விரோதங்களைச் சங்கரித்து இறந்துபோன இருதயங்களுக்கெல்லாம் ஜீவனைக் கொடுத்தும் மற்ற அவயவங்களையெல்லாம் எஜமானுக்கு பணிவிடை செய்ய தத்வ முயற்சியை யுடையவராய், உலகரக்ஷகராய், முடிவுநாளில் தனது தீன்வழி பிரஜைகளுக்கு பாபநிவாரணையென்னும் ஷபாஅத்து செய்யயெழுந்தருளிய எங்கண் நாயகண் முஹம்மதுநபி முஸ்தபா ஸல்லல்லா ஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரிலும் அவர்களின் பரிசுத்த வம்ஷமாகிய ஹாஷிமியீ முத்தலிபீயியெனும் இரு கிளைஎர்களின் பேரிலும் பின்னும் சங்கையாலும் வீரத்தாலும் பக்தியாலும் சிறந்து உலகத்திற்கு பிர்களைக் கடிந்து தீன் பயரேத்திய யெங்க ணாயகமாய், அந்நபியின் உயிர்த்துணைவராய் வேதப்பிரபல்யநீத சுருபராகிய அஸ்ஹாபிகள் பேரிலும் அவர்களைப் பின்பற்றி தீன்நெறி யொழுங்கு தவறாமலும் நித்தியமுறைநெறி யிகழாமலும் ஞானசுரூபராகிய தவபக்தி முயற்சிகள் அணுவேணுஞ் சோம்பலன்றியே முயன்ற தாபிஇ என்க".

அப்பொழுது தமிழ்நாட்டில் இதழ்த்தமிழ் எப்படியிருந்தது? அதே ஆண்டில் (1887) தமிழ் நாட்டில் வெளிவந்த "விவேக சுந்தரம்" இதழில் காணப்படும் ஒரு செய்தி –

பாலில்லாத குழந்தைகளைக் காப்பாற்றும் விதம்

தாய்க்குப் பாலில்லாததாலும், பால் கொடுக்கத் தாதியை ஏற்படுத்திக் கொள்ளச் சக்தியில்லாததினாலும், குழந்தைகளுக்குப் புகட்டுப்பால் கொடுத்து வளர்க்க வேண்டிவரும். ஆனால் நிர்வாகமில்லாத ஏழை ஜனங்கள் புகட்டுப்பால் வாங்கக்கூட அசக்தியுள்ளவர்களாய் இருக்கிறபடியால் நானாவிதமான நொய், மாவுகஞ்சி காய்ச்சிப் புகட்டுவார்கள். காரன்பளோர், அரொரூட், புழுங்கலரிசி கஞ்சி, கேழ்வரகு கஞ்சி முதலானவைகளைப் புகட்டுவார்கள். குழந்தைகளுக்கு மேற்சொன்னவையெல்லாம் சீரணிக்கிறவஸ்துகளல்ல. ஆதலால் இவற்றினால் அசீரணம், மாந்தம் முதலான துன்பங்கள் உண்டாகி இதனால் அநேகக் குழந்தைகள் இளைத்துப்போம். ஆகையால் சிறு குழந்தைகளுக்குப் பால் தவிர மற்ற ஆகாரங்கள் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் அநேகக் குழந்தைகள் வியாதியினால் இறந்துபோம். தாய்ப்பால், தாதிப்பால் இல்லாத குழந்தைகளுக்குப் பசுவின் பால் புகட்டலாம்.

இது அழகிய தமிழில் ஆற்றொழுக்காக எழுதப்பட்டிருக்கிறது. யார் படித்தாலும் புரியும். இன்றைய புட்டிப்பாலுக்கு அன்று "புகட்டுப்பால்" என்ற நல்ல தமிழ்ச்சொல் வழங்கியிருப்பதும் இதிலிருந்து தெரிகிறது.

நூற்றாண்டு விழா கண்டு இன்றும் (1992) வெளிவந்து கொண்டிருக்கும் "சேசுநாதருடைய திருஇருதயத்தூதன்" 1888 சனவரி இதழ் –

கோடியே முப்பது லக்ஷத்துக்கு அதிகமான செப

அப்போஸ்தல சபையாருக்கு வேதவிருத்தி சபைக்குத் தலைமையாயிருக்கும் மகாமகிமை பொருந்திய கர்தினாலால் நியமிக்கப்பட்டு அர்ச். பாப்பானவரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனவரி மாதத்தின் பொதுக்கருத்து.

அர்ச். பாப்பானவருக்குப் பணிந்து நடத்தல்

அர்ச். பாப்பானவர் குருவாய் அபிஷேகம் பெற்ற ஐம்பதாம் ஆண்டின் மகோற்சவ சுபநாளைத் தகுந்த சிறப்போடு கொண்டாடும்படி உலகாதியெங்கும் பரம்பியிருக்குங் கோடான கோடி கிறிஸ்துவர்களான சகலருமன்றி இன்னம் இவர்களோடு கூடத்திருச்சபைக்குப் புறம்பாயிருக்கும் இராஜாக்களும் பிரபுக்களும், முகமதியர், அஞ்ஞானிகள் முதலிய பிறமதஸ்தரும் ஒரே மனமாய் ஏகோபித்துச் சேசுநாதர் ஸ்தானத்திலிருந்து இப்போது திருச்சபையை ஆளும் 13 ஆம் லெயேசன் என்னும் நமது பரிசுத்தப் பிதாவை வாழ்த்திஸ்துத்தி...

அது சமய இதழ். செய்தி இதழான "இந்திய ஓசை"யில் 4.8.1888 அன்று வெளிவந்த ஒரு செய்தி –

சமாசாரக் குறிப்பு

"சில நாளைக்கு முன் மாயவரத்தில் ஓர் உபாத்தியாயருக்கும் அவ்விடத்திய கடைக்காரருக்கும் ஒரு வாக்குவாதம் உண்டாகி அதில் ஷை வாத்தியார் தனக்கு 5 ரூபாய் கொடுக்கிறதாக இருந்தால் ஓர் முழு பலாப்பழத்தை தான் கொஞ்சம்கூடவிடாமல் சாப்பிட்டுவிடுகிறதாகப் பந்தயம் போட்டுக் கொண்டார். கடைக்காரர்கள் ஒரு ரூபா பொறுமானமுள்ள பெரிய பலாப்பழமொன்றைக் கொண்டு வந்து உபாத்தியாயர் முன்னிலையில் வைத்தார்கள். அவர் தான் செய்து கொண்ட சபதப்படி அப்பலாப்பழம் முழுவதும் சாப்பிட்டுவிட்டு 5 ரூபா பந்தயத்தை கெலித்துக் கொண்டார். பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் இவருக்கு வயற்று வலி கண்டு வெகு தொந்தரவு பட்டு இறந்து போய்விட்டார். சொற்பத்திற்கு ஆசைப்பட்டு உயிரிழக்க வேண்டி வந்தது".

"மகாவிகட தூதன்" என்ற சிரிப்பு இதழில் 8.12.1888இல் வெளிவந்த ஒரு வேடிக்கைப் பாடல் –

நல்லமழையால் பயிர்களுக்குக் கொண்டாட்டம்
நலத்தைக் கெடுக்கக் கூடுவது குரங்காட்டம்
நல்லோர்களுக்குத் தர்மஞ் செய்வதில் நாட்டம்
நன்மைக்காகக் கூடுவது காங்கிரஸ் கூட்டம்.
தேமாவில் கோகிலங் கூ வுவது வூக்கம்
தேவாலய உச்சவம் இவ்வூரில் தூக்கம்
தேசாபிமானிகளுக்குச் சபைகூடுவதில் நோக்கம்
தேட்டாண்மையில்லாத செட்டிகளுக்கு ஏக்கம்
தேவையான பண்டம் விற்பவன் செட்டி



க. சுப்பிரமணியம்
(சுதேசமித்திரன்)




சா. பாக்கியநாதன்
(பாலியர்நேசன்)



ஜான் மர்டாக்



ஆ. முத்துத்தம்பி
(சத்தியாபிமானி)



உவாஷ் பர்ன்
(சத்தியவர்த்தமானி)



மு.சி. பூரணலிங்கம்
(ஞானபோதினி)

.தவடியாள் பறிப்பது தட்டி
தேடாமல் செலவு செய்வன் மட்டி
தேசாபிமான மற்றவன் எட்டி

— கோலாகலக் கூத்தன்

வால்மீகி இராமாயணம் தமிழில் உரைநடையாக மொழிபெயர்க்கப்பட்டு "ஸ்ரீ வால்மீகி இராமாயணம்" என்ற பெயரில் மாதம்தோறும் தொடர் இதழாக 1889 முதல் வெளியிடப்பட்டது. அதன் முதல் இதழில் –

பாலகாண்டம்

முதற்சருக்கம்

ஸ்ரீ ராமாயணக்கதைச் சுருக்கம்

சகல உலகங்களிலும் நிறைந்து இருக்கும் தேவ தேவனைத் தியானித்துக் கொண்டிருக்கிற வால்மீகி ரிஷியானவர், வேதங்களை ஓதி தவத்தில் சிறந்த பிரம்மஞானியான நாரத முனிவரைப் பார்த்துக் கேட்கிறார். ரிஷீசுவரரே! வீரம், தர்மம், சத்தியம், விரதானுஷ்டானம், குலாசார ஒழுக்கம், ஜீவ காருண்யம், அறிவு, அழகு, கோபமில்லாமை இந்த குணங்களெல்லாம் நிறைந்து சிறந்திருக்கிற மனிதன் இருப்பானா? இருந்தால் அவனைப் பற்றி எனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டார். நாரத முனிவர் சொல்லுகிறார்.

வால்மீகி முனிவரே! நீர் கேட்டபடி எல்லாக் குணங்களும் நிறைந்த மனிதன் கிடைப்பது அருமை. ஆனாலும் இவைகள் எல்லாம் உள்ளவர் ஒருவர் உண்டு. அவர் பெயர் இராமர். இக்ஷ்வாகு மஹாராஜன் வம்சத்தில் பிறந்தவர். மஹா பராக்கிரமசாலி, கீர்த்தியுள்ளவர், பகைவர்களை அடக்கியாளும் திறமையுள்ளவர், குலாசார ஒழுக்கம் தவறாதவர், அடுத்தவர்களை ஆதரிப்பவர், ஜீவகாருண்யம் நிறைந்தவர், ஏழைகளுக்கு கருணை செய்கிறவர், வருணாசிரம தருமங்கள் தவறாமல் பரிபாலிப்பவர்...

அதே ஆண்டில் (1889) காரைக்காலில் வெளிவந்த "இந்தியா விகடவிநோதன்" என்ற வார இதழில் வெளிவந்த ஒரு விளம்பரத்தில் அரிசி அரைக்கும் எந்திரத்துக்கு "நெற்குத்து யந்திரம்" என்ற நல்ல தமிழ் காணப்படுகிறது. அது

விளம்பரம்

நெற்குத்து யந்திரம்

இது சீர்மையில் நூதனமாய் கண்டு பிடிக்கப்பட்டது. தினம் ஒன்றுக்கு நாற்பது கலம் குத்தி தீட்டி நொறுங்காமல் நல்ல அரிசி தரக்கூடியது. இதற்கு உதவியாக இரண்டு பய்யனும் மூன்று ஸ்திரீயுமிருந்தால் போதுமானது. இதன் விலை ரூபாய் எழுநூற்றன்பது.

வேண்டியவர்கள் சென்னை பிறாட்வே தம்பி அன் கோவுக்கெழுதித் தருவித்துக் கொள்ளலாம்.

"இலஞ்சலாவண்யம்"[1] என்று இன்று இலாவணிபாடுகிறோம். 19 ஆம் நூற்றாண்டில் அது எந்த நிலையில் இருந்தது? 3.7.1890 **"சுதேசமித்திரன்"** தலையங்கம் சொல்லுகிறது –

> "இப்போது முன்சீப்புகளிலும் சப்-ஜட்ஜிகளிலும் கூடிய வரையில் லஞ்சம் வாங்குகிறவர்கள் கொஞ்சம் ஆனபோதிலும் அவர்களுக்குள் சிலர் செய்யக்கூடாத ஆகிருத்தியங்களைச் செய்து வருகிறார்கள். வக்கீல்கள் மூலமாகவும் அமீனாக்கள் மூலமாகவும் சிலர் பெருங்கொள்ளை அடித்து வருகிறார்கள்.
>
> ஹைகோர்ட்டார் நேர்விசாரணையின் கீழிருக்கும் ஜுடிஷியல் டிபார்ட்மெண்டிலேயே இப்படிப்பட்ட அக்கிரமங்கள் நடந்து வருமேயாகில் ரிவின்யூ டிபார்டுமெண்டில் லஞ்சம் வாங்கும் அப்பியாசம் அதிகப்பட்டிருக்கக் கேட்பானேன்? அந்த டிபார்டு மெண்டில் அனேகமாய் உத்தியோகம் செய்பவர்கள் புராதன பெருச்சாளிகள். எந்த மழைக்கும், எந்த நெருப்புக்கும் பயப் படாதவர்கள். அவர்களில் அனேகருக்கு எவ்வித தேசாபி மானமும் கிடையாது".

இப்பொழுது 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பத்துக்கு வந்திருக்கிறோம். 1891 இல் பெண்களுக்காக வெளிவந்த இதழ், **"பெண்மதிபோதினி"**. அதன் நவம்பர் இதழில் –

> இப்பத்திரிகையைப் பெற்றுக்கொண்ட நம்முடைய சகோதரி கள் தங்கள் சகோதரர்கள், நாயகர்கள் முதலானவர்களிடத்திற் காண்பித்து, ஆண்பிள்ளைகளாயிருக்கிற நீங்கள் மட்டும் சுருட்டு, சப்பாத்து, கைக்குச்சி, குடையின்னும் பலவிதமான வேடிக்கை முதலானவைகளில் பணத்தைச் செலவு செய்கிறீர்கள். எங்களையும் வர்த்தமானப்பத்திரிகைகள் படித்து, அறிவு விர்த்தியாகி முன்னுக்கு வரும்படி செய்யக்கூடாதா என்று வற்புறுத்திச் சொல்லுவார்களென்று நம்புகிறோம்.
>
> இப்பத்திரிகையைப் பார்க்கிற எழுதத் தெரிந்த நமது சகோதரிகள் தங்களாற் கூடுமான கதைகளாவது, அபிப்பி ராயங்களாவது, விடுகதைகளாவது நமக்கு எழுதியனுப்பினால், அதைப் பிரசுரிக்க மிக்க சந்தோஷமுடையவர்களாயிருப்போம்.
>
> நாம் இப்பொழுது, ஆங்கிலேய தேசத்திற்கு வர்ணப் படங்களுக்காகவும், தையல் வேலைப் படங்களுக்காகவும் எழுதியிருக்கிறோம்.

19 ஆம் நூற்றாண்டில் வெளிவந்த சிறந்த இதழ்களில் **"விவேக சிந்தாமணி"**யும் ஒன்று, அதன் முதல் இதழில் (1892 மே) முதல் வரியே **"அறிவு இன்றியமையாதது"** என்று தொடங்குகிறது. தொடர்ந்து –

> மரமும் செடியும் கொடியும் முளைத்துக் காடுபோற் கிடந்த

---

1. Lump Sum (ஒரு மொத்தத் தொகை) என்ற ஆங்கிலச் சொல்லே "இலஞ்சம்" என்று ஆயிற்று. இந்த வேலையை முடித்துக்கொடுத்தால் உனக்கு இவ்வளவு பணம் என்று மொத்தமாகப் பேசிக்கொள்வது.

விடத்தை, மனோகரமான "பீப்பிள்ஸ் பார்க்" ★ என்னுமிடமாக்கி இச்சென்னை வாசிகளுக்கு அளித்தவரும் 'வரும்படிவரி' இந்நாட்டிற்கு ஏலாதவரியென்று மேலதிகாரிகளோடு மிக்க போராடினவருமான "ஸர் சார்லஸ் ட்ரெவல்யன்" என்ற 'கவர்னர்' பிரபுவின் மனைவியுடன் பிறந்தோராய் "லார்ட் மெக்காலே" என்று ஒருவர் இருந்தார். அவர் இந்திய 'கவர்னர் ஜனரல்' ஆலோசனை சபையில் ஒரு காலத்து 'மெம்பர்' உத்தியோகம் வகித்திருந்தார். அவர் மிக்க கீர்த்திபெற்ற கல்விமான்; உலகம் திகைக்கும்படியான பேரறிவைப் பெற்றிருந்தார். அவருடைய அறிவு ஒரு புருடாயுளுள் அடைவதற்கு அஸாத்தியமென்று எண்ணத்தக்க அளவாயிருந்தது. இவ்வறிவை அவர் பிறவியிற் பெற்றவரல்லர். மிக்க புத்திக் கூர்மையும் ஞாபக சக்தியும் இயல்பிலுடையரேனும் இரவும் பகலும் விடாமல் மிக்க பொறுமையோடுழைத்தே அவர் பேரறிஞரானார்.

1893 இல் "மாதாந்த சட்டப்பத்திரிகை" என்று ஒரு சட்ட இதழ் வெளிவந்தது. அதன் முதல் இதழில் (பிப்ரவரி) "இந்திய லா ரிப்போர்ட்" பகுதியில் மதராசு (சென்னை) உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பான ஒரு வழக்கை, தமிழ் மட்டுமே அறிந்தவர்கள் புரிந்துகொள்ளும்படி விளக்கமாக வெளியிட்டிருந்தார்கள். அது –

1871 ளூ மார்ச்சு மாசத்தில் வீ என்பவன் என் என்பவனிடமிருந்து 10 ரூபாய்க்கு ஒரு துண்டு நிலத்தைக் கிரயம் வாங்கி கிரய தஸ்தாவேஜை ரிஜிஸ்தர் செய்து நிலத்தை அனுபவித்து வந்தான். 1869 ளூத்தில் என் என்பவன் அந்த நிலத்தை கே என்பவனுக்குக் கொதுவை [1] வைத்து பலான தேதிக்குள் துகை கொடுக்காவிட்டால் அதுவே நிராக்ஷேபமான கிரயமாய்விடுமென்று ஷரத்துக் கண்டு 100 ரூபாய்க்குக் குறைந்த ஒரு துகையை கே யிடமிருந்து கடனாக வாங்கியதாக ஒரு தஸ்தாவேஜை ஆதாரமாகக் கொண்டு கே என்பவன் என் என்பவன் பேரில் பிராது செய்து டிக்ரி பெற்றான். 1880 ளூத்தில் அந்த டிக்கிரியை நிறைவேற்றுகிற நிமித்தம் வீ என்பவனிடமிருந்து நிலத்தை பலவந்தமாய் தன் ஸ்வாதீனம் செய்து கொண்டான். ஹைகோர்ட்டார் வீ யினுடைய ரிஜீஸ்தர் செய்யப்பட்ட கிரய தஸ்தாவேஜை கே யினுடைய தஸ்தாவேஜைவிட மேலானது. ஆகச்சே வீ என்பவனுக்குத்தான் நிலம் சேரவேண்டுமென்பதாகச் சொல்லி கீழ்க்கோர்ட்டுகளில் நேர்ந்த சிலவுகளெல்லாம் கே ஒத்துக்கொள்ள வேணுமென்றும் தீர்ப்புச் செய்தார்கள். இ.லா.ரி.மத.6-153.

இந்து சமயத் தமிழ் எப்படியிருந்தது? இதோ "விவேகதிவாகரன்" 5.8.1894 இதழ் –

பாத்ம புராணத்தில் பார்வதி மகாதேவ ஸ்ம்வாதத்தில் "மாயாவாத மஸ்ச் சாஸ்திரம், ப்ரசன்னம் பௌத்தமேலச,

---

★ 'பார்க்' – உத்தியானவனம். (இதழிலேயே இருக்கும் அடிக்குறிப்பு இது)

1. ஒத்தி

மயைவசதி தற்தேவ, லௌப்ராம்ஹணரூபிணா, அபார்த்தம் சுருதி வாக்கியானாம், தர்வ்யயம் லோக கர்ஹிதம், கர்ம ஸ்யருபத்யாஜ்யத்வம், திரச்சபி ரதிபாத்தியதே, ஸர்வ கர்மபரிபிர்ம சான்னை ஷ்கர்மம் தரச்சோச்சயதே, பராத்ம ஜீவ யோரைக்கியம், மயாத்திர பிரதிபாத்தியதே, பிர்மஹணோஸ்ய பரம்ரூபர், நிற்குணந்தர் நிற்குணந்தர் சிதம்மலா, ஸர்வவஸ்யக தோப்பஸ்ய, நாச நார்த்தங்க லௌயுகே, வேதாந்தவன் மகாசாஸ்திரம், மாயாவாதமலைதிகம், மயைவகதி தந்தேவீ, ஜகதான்னா சகாரணாத" என்கிற வாக்கியத்தால் எது மறையாய் பௌத்த மதமேயாகின்றதோ? அந்த மாயாவாத பிரச்னை பௌத்த மென்னுஞ் சாஸ்திரத்தை ஹேதேவீ! கலியுகத்தில் பிராமண ரூப்த்தால் நானே சொன்னேன்.

போதுமா? சரி.

புதுவை அரசிதழான "சென்னல் அபீசியல்" 5.7.1895 இதழில் வெளிவந்த ஒரு விளம்பரம் –

அமானி இறைவரி விசாரணை செர்வீஸ்

விளம்பரம்

சகலவித அமானிபாபத்துகளுக்கு யேற்பட்டிருக்கும் யேலங்களுக்கு சம்பந்தப்பட்டதும் 1892ஆம் ஆ[1] அவு மீ 1 உ 1894 ஆ சூன் மீ 13 உப அவு மீ 18 உ திசம்பர் மீ 22 உ 27 உ இந்த தேதிகளில் தனி ஆலோசனை சங்கத்தில் ம-ள-ள டுவர்னே துரையவர்கள் யேந்துக் கொண்டதுமான ஏல வுடன்படிக்கை களின் நிபந்தனைகள் நிறைவேறும் பொருட்டு யிதனாலி யாவருக்குந் தெரிவிப்பது யாதெனில்,

குத்தகைக்காரர்கள் அவர்கள் ஜாமீன்தாரர்கள் தங்கள் குத்தகைகளுக்குக் கட்டவேண்டிய கெடுவில் வாயிதா கட்டாதபடியாலும் ஷ ஏலவுடன்படிக்கைகளிற் கண்டிருக் கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாதபடியாலும் போலான் ஷேரென்று மறு யேலம் போடப்படும்.

அது விளம்பரம். இது கட்டுரை. "புதுவை இந்து" 16.3.1896 இதழில் "தருமம்" என்ற தலைப்பில் வந்தது –

"தாங்களே நெடுங்காலம் வருந்தித்தேடிய பொருளைக் கொண்டு தருமஞ் செய்யாத உலோபிகள் படுந்துன்பங்கள் இவைகளேயாயின் நாம் தரிமஞ் செல்கின்றோமென்று சொல்லிப் போய் வேடங்கட்டி உலகத்தாரை வஞ்சித்து அவர் பொருளைப் பறித்துத் தருமஞ் செய்யாது விடுவோர்களும் தாங்கள் கூறியவாறே தருமஞ் செய்யப் புகுந்தும் அப்பொருளிலே அணுவளவாயினும் அபகரிப் பார்களும் தங்களைப் பிறர் நம்பி வந்தடுத்துத் தருமஞ் செய்யும் பொருட்டுத் தங்களிடத்து ஒப்பித்த பொருளைத் தருமஞ் செய்யாது அபகரிப் பவர்களும் பிறர் தருமஞ் செய்யும் பொழுது அதனைத் தடுப்பவர் களும் படும் துன்பங்களை ஐயையோ யாவர் சொல்ல வல்லவர்".

இதில் "தர்மம்" என்பது "தரிமம்" என்றும் "செய்கிறோமென்று" என்பது

1. ஆண்டு என்பதற்கு இந்தக் குறி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"செல்கிறோமென்று" எனவும், "பொய் வேடம்" என்பது "போய் வேடம்" என்றும் எழுத்துப்பிழையுடன் இருக்கின்றன.

"உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை" (21.6.1897) இதழில் தமிழ்த்தாத்தா உ.வே.சா.வைப் பற்றி எழுதப்பட்டிருப்பது -

> கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்கள் கல்லூரியில் தம் கடமையைக் கழித்த காலம் போக எஞ்சியவற்றில் ஒவ்வொரு நிமிஷத்தையும் பனை யோலைச் சுவடிக் குவியலில், முன் இறந்துபோன பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து கொண்டிருத்தலிலேயே கழித்துவரு கிறார்கள். அத்தகைய பனை யோலைப் பழஞ்சுவடிகளிற் றானும் வரிகள் குறைந்தும் வார்த்தைகள் பிறழ்ந்தும் செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப்புள்ளியில்லாச் சொற்களும், இவைகளினாலும் ஏடெழுதுவோராலும் நிகழ்ந்த சொற் குற்றம் பொருட் குற்றங்களும் தன்னகத்தில் நிறைந்து பாணவாய்ப் பட்ட சுவடிகளைத் திருத்துவதிலும் அவற்றின் குற்றங்களைக் கண்டு பிடித்துச் செம்மை செய்வதிலும் ஐயரவர்கள் படுங் கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. இத்தகைய அருஞ்செயல்களை முடிப்பதற்குரிய சிறந்த கருவிகளேனும் இருக்கின்றனவா? அந்தோ, அவையும் இல்லை. அவர்கள் காவிரிக் கரையிலுள்ள ஒரு சிறிய வீட்டின் மெத்தைமேல் தரையில் உட்கார்ந்து கொண்டு சுடுகாற்றுத் தம்மேல் எரிந்து வீச்சிறிய மேசை யொன்றின்மேல் கடிதங்களை வைத்துக்கொண்டெழுதுவார்கள். அவர்கள் திவ்ய தேகத்தின் மேல் எரிந்துவந்து வீசும் காற்றின் வன்மையைக் குறைக்கத் தக்க குளிர்ந்த பந்தல் அவர்கள் வீட்டு முகப்பில் இல்லை; க்ரோடன்ஸ் இல்லை; வெட்டிவேர்த் தட்டி களில்லை; குளிர்காற்று வீசும் பங்கா இல்லை. இவ்வாறாகவும் இத்தகைய துன்பங்களின் நடுவிலிருந்து கொண்டே பண்டித ரவர்கள் தமிழ்ச்சுவையறிந்து அச்சுவையை எல்லார்க்கும் நுகரக் கொடுக்க வேண்டுமென்னும் பொது நன்மையை நாடி அரிய பெரிய நூல்களை யாராய்ந்து அச்சிட்டு வெளியிட்டு வருகிறார்கள். இவர்கள் ஐரோப்பியராய் மட்டும் இருந்தால் அந்நாடுகளிலுள்ளோர் இவருக்குச் செய்யும் மரியாதையும், நன்கு மதிப்பும் இவ்வளவென்றெடுத்துரைக்க முடியாது; கவர்ன்மெண்டாரும் எத்தனையோ உயர்ந்த பட்டங்களும் உத்தியோகங்களும் கொடுத்துவிடுவார்கள். நம் காருண்ய கவர்ன்மெண்டார் தமது கல்லூரியில் பண்டிதர் அவர்களது நிலையை உயர்த்தி, இத்தகைய வேலைகளினின்றும் அவர் களைச் சிறிது இளைப்பாறச் செய்து பிரஜைகளுக்கும் மாணவர் களுக்கும் அவர்கள் நீடிய ஆயுள் பெற்றுப் பயன் விளைக்குமாறு உதவி செய்வார்களென்று நம்புகிறோம்.

பதினென் கீழ்க்கணக்கு நூற்களை "ஞானபோதினி" ஆராய்கிறது. அந்த ஆராய்ச்சியின் இடையே 1898 மார்ச்சு இதழில் -

> மேற்கூறியப்படி நச்சினார்க்கினியர் திருஞானசம்பந்தரை

அவருடைய பிள்ளைத்திருநாமங்கொண்டே குறித்திருப்பதுமன்றி கேவலம் ஒரு நிந்தையாய்க்கூடச் சொல்லியிருக்கின்றார். ஆனதனாலே திருஞான சம்பந்தர் காலத்துக்கு நச்சினார்க்கினியர் காலம் சமீபமாக அடுத்ததென்று தெளிவாகின்றது.

ஆறுமுக நாவலரிடம் தமிழ் கற்ற யாழ்ப்பாணம் சபாபதி நாவலர், 1899 இல் "திராவிடப் பிரகாசிகை" என்ற இதழை நடத்தினார். அதிலே சைவத் தமிழைக் காணலாம்.

இனி இவ்வகச் சமய முதலிய வனைத்திற்கும் மேலாய் விளக்கமுற்று, அவையெல்லாந் தன்கண் ஏகதேசமாய் அடங்கக்கொண்டு நிற்பது சித்தாந்த சைவம். அது வேதாகமமிரண்டாலுந்தலையான சன்மார்க்க மென்றெடுத்துப் புகழப்படுஞ் சுத்தாத்துவித சித்தாந்த சமயம். இனித் தமிழின் கண் அப்பொருளுள் போதிக்கும் உண்மை நூல்கள், தமிழ் வேதமாகிய திருமுறைகளும், திருக்குறளும், சிவஞான போதஞ், சிவஞானசித்தி, சிவப்பிரகாச முதலிய சித்தாந்த சாத்திரங்களுமாகும்.

புதுவை இதழ்களில் அரசியல் செய்திகள் மட்டுமே பிரெஞ்சுத் தமிழில் எழுதப்பட்டன. "புதுவை நேசன்" (17.11.1900) இதழில் அந்தப் பிரெஞ்சுத் தமிழைப் பார்க்க முடிகிறது. இதோ

கோன்சேயில் ழெனரால் கூட்டம்[1]

நாளது நவம்பர் மீ 8 உ காலை 9 மணிக்கு நமதூர் நகரமாளிகையில் வழக்கப்படி ழெனரால் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் மகா ள ள ஸ்ரீ குவர்னே[2] துரையவர்களை எதிர் கொண்டழைப்பதற்கு மகா ள ள ஸ்ரீ சேன் பூர்சேன் துரை லெரோக் சிங்காரவேலு நாயகர் ஆகிய மூவர்களை நியமிக்கப்பட்டு குவர்னேர் துரையவர்களை கேட்டு வாசற்படியினின்று நல்வரவு கூறி நகர மாளிகையில் கூட்டங்கூடும் சலோனுக்கு[3] அழைத்து வந்தார்கள். உடனே கவர்னரவர்கள் நம்மூருக்கு ஆகவேண்டிய நன்மை எவையோ அவைகளையெல்லாம் பகைமையில்லாமலும் வர்மமில்லாமலும் கக்ஷி பாராட்டாமல் ஏகோபித்து கூட்டத்தில் முகிவு செய்யும்படியாகவும் கூட்டத்தைச் சீக்கிரத்தில் காலத்தோடு முடிவுகட்டும் படியாகவும் கூட்டத்தவர்களுக்கு பிரசங்கித்து கூட்டம் கூடும்படியாக உத்தரவளித்து தன் பரிவாரங்களுடன் சென்றதன் பின்னதற்கு பிரசிதான்[4] முதலியவர்களை நியமிக்கும்படியாய் முறைமைப்படி வயது சென்றவராகிய சேன்பூர்சேன் துரை அக்கிராசனாதியாய் வீற்றிருந்தார். மேற்கண்ட பிரசிதான் வகையறாக்களுக்கு லெக்கியம்[5] நடந்தது. மேற்படி கூட்டத்தின் மாம்பர்களின்[6] எண் 28. ஆஜரானவர்கள் 23. கூட்டத்திற்கு வந்திருந்தும் மனம் பொறாமல் எழுந்து அப்புரம் சென்றவர்கள் 4. இன்னும் வந்து சேராதவர்கள் 5. வாக்குப்போட்டவர்கள் 19. அதில் வெண்மை

---

1. ஜெனரல் கவுன்சில் கூட்டம் 2. கவர்னர் 3. சலூன் (அன்று) 4. பிரசிடெண்டு 5. எலக்சன் 6. மெம்பர்கள்

யான சீட்டு 1. மற்ற 18 சீட்டும் முசியே கஸ்தோம் பியேர் துரைக்கு விழுந்தமையால் மேற்படியார் அக்கிராசனாதியாய் நியமிக்கப் பட்டார்.

ஊர் கூடித் தேர்தள்ளுவது போல, 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இதழ்கள் எல்லாம் சேர்ந்து தமிழை வளப்படுத்தின என்றாலும், அரசியல் தமிழ், சமயத் தமிழ், இலக்கியத் தமிழ் என்று புதிய துறைகளும் தோன்றியதை இந்த வளர்ச்சியின் இடையே காண முடிகிறது. மரம் வளரும் பொழுது கிளைகள் விரியத்தானே செய்யும்.

அரசியல் தமிழும் சென்னை மாநிலத்தில் ஆங்கிலத் தமிழாகவும் பிரெஞ்சு இந்தியாவில் பிரெஞ்சுத் தமிழாகவும் வளர்ந்தது. சமயத்தமிழும் சைவத்தமிழ், இந்து – இசுலாம் – கிறித்துவத் தமிழ் என்று தழைத்தது. இலக்கியத் தமிழும் செய்யுள் தமிழ் வேறாக, செய்தித்தமிழ் வேறாக வளர்ச்சியுற்றது. செய்தித் தமிழும் தனியே இதழ்த்தமிழாக வளர்ந்தது. கிளைகளில் கொப்புகள் பெருகுதல் இயற்கைதானே?

இவ்விதம், விழுதுவிட்டு விரிந்து பரந்த ஆலமரம் போல அன்னைத் தமிழை 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள் தழைக்கச் செய்து தலைநிமிர்ந்து நிற்க வைத்தன. காலம்காலமாக இருந்துவரும் "கன்னித் தமிழ்" என்ற கவின் சிறப்பைக் காப்பாற்றி, இருகை நீட்டி வந்த இருபதாம் நூற்றாண்டிடம் இனிதே சேர்த்து, 19 ஆம் நூற்றாண்டு விடைபெற்றுக் கொண்டது. *



அருள்திரு பேலீசு
(தேசோபகாரி)



மறைத்திரு புளூம்சுதிராண்டு
(அருணோதயம்)



ஜான் ரத்தினம்
(திராவிட பாண்டியன்)



பி.சி. ஜோசப்
(திருவாங்கூர் அபிமானி)
(உதவி: அற்புதம் போட்டோ சப்ளையர்ஸ், நாகர்கோவில்.)



காசுலு லெட்சுமி நரசு
(மதியம்)



இராமானுசலு

இணைப்பு 1

20 ஆம் நூற்றாண்டின் தொடக்க கால இதழ்கள்

1901 ஏப்ரல் 6 இல் தயாரிக்கப்பட்ட சொந்த மொழி இதழ்கள் அறிக்கையில் இடம்பெற்ற தமிழ் இதழ்களின் பட்டியல், இது.

20 ஆம் நூற்றாண்டின் முதலாண்டில் வெளிவந்து கொண்டிருந்த தமிழ் இதழ்களை அறிந்துகொள்ள இது உதவியாக இருக்கும். 20 ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து வெளிவந்த 19 ஆம் நூற்றாண்டு இதழ்களையும் தெரிந்து கொள்ளலாம். 20 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்களைப் பற்றி எழுத முனைபவருக்கு இது பிள்ளையார் சுழியாக அமையும்.

1901 சனவரி 5 ஆம் நாளும் இதேபோல ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்து கொண்டிருந்த இதழ்களே அதிகமாக இடம்பெற்றிருப்பதால், ஏப்ரல் 6 இல் தயாரிக்கப்பட்ட இப்பட்டியலை எடுத்துக் கொண்டேன். சனவரி 5க்குப் பிறகு தயாரிக்கப்பட்ட முதல் பட்டியல், இது. இவை அரசின் பார்வைக்கு வந்த செய்தி இதழ்கள் மட்டுமே. பட்டியலில் உள்ள வரிசைப்படியும், விவரங்களுடனும் அப்படியே தருகிறேன்.

மாத இதழ்கள்

விவேக சிந்தாமணி, சென்னை (விற்பனை 700 படிகள்)

ஞானபோதினி, சென்னை (200 படிகள்)

சென்னை மதுவிலக்குத் தூதன், சென்னை (300 படிகள்)

விவேக பாநு, தூத்துக்குடி (1000 படிகள்)

ஜனப்பிரியன், சென்னை (500 படிகள்)

மாதம் இருமுறை இதழ்கள்

சத்திய வர்த்தமானி, பசுமலை (600 படிகள்)

பிரம்மஞானபோதினி, பெங்களூர் (116 படிகள்)

கலாநிதி, கோவை (150 படிகள்)

சுகிர்த வர்த்தமானி, சென்னை (500 படிகள்)

வார இதழ்கள்

வெற்றிக்கொடியோன், சென்னை (200 படிகள்)

விகடதூதன், சென்னை (1500 படிகள்)

லோகோபகாரி, சென்னை (2400 படிகள்)

பிரபஞ்சமித்திரன், சென்னை (1200 படிகள்)

சென்னை தாரகை, சென்னை (700 படிகள்)

திருவாங்கூர் அபிமானி, நாகர்கோவில் (200 படிகள்)

நீலலோசினி, நாகை (250 படிகள்)

தேசாபிமானி, கடலூர் (290 படிகள்)

தட்சணதீபம், சேலம் (1211 படிகள்)

லோகவர்த்தமானி, சேலம் (250 படிகள்)

ஜனானுகூலன், தஞ்சை (2000 படிகள்)

யதார்த்தவசனி, தஞ்சை (375 படிகள்)

திருச்சி நேசன், *திருச்சி (120 படிகள்)*

விவேகதிவாகரன், *திருச்செங்கோடு (370 படிகள்)*

தென்னிந்திய மித்திரன், *திண்டுக்கல் (400 படிகள்)*

நாஞ்சில்நேசன், நாகர்கோவில் *(850 படிகள்)*

புதுவைமித்திரன், புதுவை (விற்பனை விவரம் இல்லை)

புதுவைநேசன், புதுவை (விற்பனை விவரம் இல்லை)

தென்னிந்தியா டைம்சு, கும்பகோணம் (300 படிகள்)

வாரம் இருமுறை

தமிழ் பிரதிநிதி, சென்னை (500 படிகள்)

பெங்களூர் தாரகை, பெங்களூர் (விற்பனை விவரம் இல்லை)

நாளிதழ்

சுதேசமித்திரன், சென்னை (1500 படிகள்)

இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள இதழ்களில் "சத்திய வர்த்தமானி" மட்டுமே இப்பொழுதும் (1992) வெளிவந்து கொண்டிருக்கிறது.

இப்பட்டியலில் இடம்பெறாத "நற்போதகம்", "அருணோதயம்", "ஏசு நாதரின் திருஇருதயத்தூதன்" "தேசோபகாரி", "பாலியர் நேசன்" ஆகிய இதழ்கள் 21 ஆம் நூற்றாண்டை நோக்கி வெற்றிநடை போட்டுக் கொண்டுள்ளன.

நூல் பதிவாளர் அறிக்கை

அந்த அறிக்கையில் செய்தி இதழ்கள் மட்டுமே இடம்பெற்றன. வேறுபல இதழ்கள் நூல் பதிவாளர் அறிக்கையில் இருக்கின்றன. சில பெயர்கள் இரு அறிக்கையிலும் உள்ளன. விற்பனை விவரத்திலும் வேறுபாடு காணப்படுகிறது. "கலாநிதி"யின் பருவமும் வேறுபடுகிறது. ('மாதம்' என்பதே சரி) 1901 சனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாதங்களுக்கான (முதல் காலாண்டு) நூல் பதிவாளர் அறிக்கை, 1901 மே 21 ஆம் நாளைய அரசிதழில் கூடுதல் இதழாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் காணப்படும் இதழ்கள் -

வால்மீகி இராமாயண வசனம் *(1901 சனவரி) - தொகுதி 5, இதழ் 26. தமிழ் - வடமொழி. ஆசிரியர் - சீனிவாச ராகவன், சென்னை. 50 பக்கம். 1000 படிகள். 6 அணா.*

உபநிசத் வித்யா - தொகுதி 3, இதழ் 5. மாதம். தமிழ் - வடமொழி, ஆசிரியர் - சீனிவாசன், நடுக்காவிரி, 76 பக்கம். 1000 படிகள். 8 அணா.

சிவார்ச்சன தீபிகை (சனவரி, 1901) - தொகுதி 1, இதழ் 8. தமிழ் - வடமொழி. ஆசிரியர் - சத்தியசதா சிவன், கும்பகோணம், 28 பக்கம். 500 படிகள். ஆண்டுக்கு ரூ. 3.

உபநிசத் அர்த்த தீபிகா (நவம்பர், 1900) - தொகுதி 3, இதழ் 1. தமிழ் - வடமொழி. ஆசிரியர் - சிவன், சென்னை. 32 பக்கம். 500 படிகள். ஆண்டுக்கு ரூ. 3-8-0.

ஐந்து வர்த்தமானசாரம் (டிசம்பர், 1900) – காலாண்டு. தொகுதி 1, இதழ் 1. ஆசிரியர் – திவான் பகதூர் கிருட்டினன். சென்னை. 18 பக்கம். 300 படிகள். ஆண்டுக்கு 12 அணா.

ஜனப்பிரியன் (சனவரி, 1901) – தொகுதி 1, இதழ் 7. ஆசிரியர் – கிருட்டின சாமி, சென்னை. 32 பக்கம். 150 படிகள். ஆண்டுக்கு ரூ. 1-4-0.

ஞானபோதினி (சனவரி 1901) – தொகுதி 4, இதழ் 6. மாதம். ஆசிரியர் – மு. சி. பூர்ணலிங்கம், சென்னை. 40 பக்கம். 300 படிகள். ஆண்டுக்கு ரூ. 2-8-0.

விவேக சிந்தாமணி (சனவரி, 1901) – தொகுதி 9, இதழ் 9. மாதம். ஆசிரியர் – சி.வி.சாமிநாதன், சென்னை. 36 பக்கம். 800 படிகள். 6 அணா.

அருணோதயம் (சனவரி, 1901) – தொகுதி 38, இதழ் 1. ஆசிரியர் – மறைத்திரு சாமுவேல், தரங்கம்பாடி. 20 பக்கம். 750 படிகள். 4 அணா.

மாதர் மனோரஞ்சனி (சனவரி, 1901) – தொகுதி 2, இதழ் 11. மாதம். ஆசிரியர் – இராமசாமி, சென்னை. 20 பக்கம். 400 படிகள். 2 அணா 6 பைசா.

சித்தாந்த தீபிகா – மாதம. தமிழ் – ஆங்கிலம். ஆசிரியர் – நாக ரத்தினம், சென்னை. 48 பக்கம். 400 படிகள். ஆண்டுக்கு ரூ. 4.

கோயமுத்தூர் கலாநிதி மாதாந்திர சஞ்சிகை. (சனவரி, 1901) – தமிழ் – ஆங்கிலம், தொகுதி 22, இதழ் 1. ஆசிரியர் – சே.ப.நர சிம்மலு. 28 பக்கம். 100 படிகள். 4 அணா.

பிரம்ம வித்யா பத்திரிகை – தமிழ் – வடமொழி. மாதம். ஆசிரியர் – சீனிவாசன், சிதம்பரம். 16 பக்கம். 500 படிகள். ஆண்டுக்கு ரூ. 3.

1901 ஆம் ஆண்டு முதல் நூல் பதிவாளர் அறிக்கைகளில் தமிழ் நூற்கள், இதழ்களின் பெயர்கள் ஆங்கிலத்துடன் தமிழிலும் தரப்பட்டிருக்கின்றன. பழைய அறிக்கைகளிலும் இம்முறை பின்பற்றப்பட்டிருந்தால், பல ஆங்கிலப் பெயர்களின் தமிழ் வடிவத்தை நாம் அறிந்திருக்க முடியும்.



அ. மா. சாமி
(ஆசிரியர்)



முனைவர் அ. அய்யூப்
(வெளியீட்டாளர்)

தமிழ் இதழியல் 190 ஆண்டு வரலாறு கொண்டது. ஆனால், முறையாக வரலாறு தொகுக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை.

பல புதிய உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன. பழைய தவறுகள் திருத்தப்பட்டிருக்கின்றன.

தமிழுக்குப் பெருமை சேர்க்கும் நூல்.